வரு. 75 இல. 44 ★

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.vaaramanjari.lk

24 பக்கங்கள் 100/-

# தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI

2023 நவம்பர் 5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை

November 05 Sunday, 2023

/ Thinakaran.lk / ThinakaranLK

கருணை இல்லம் கோகுலம்



ஆதரவற்ற சிறுவர்களுக்கு கல்வி, நல்வாழ்வு, சிறந்த எதிர்காலம் ஏற்படுத்திக்கொடுக்கும் கருணை இல்லம் கோகுலம், பிள்ளைச் செல்வங்களின் பிறந்த தினம், தங்கள் திருமண நாள், அன்புக்குரியவர்களின் நினைவு தினம் போன்ற எந்தவொரு விசேட நிகழ்வுகளுக்காகவும் இச்சிறியோரின் ஒரு நாளுக்கான பராமரிப்புச் செலவு தொகை 65,000 ரூபாவை வழங்கி உதவலாம்.

நிதியை வைப்பிலிட வங்கி விபரம்:

Commercial Bank A/C No : 1050669901 Office : Sri Sri Radhakirshna Temple.
A/C Name :- ISKCON,Shift Code CCEYLKLX No : 188, Newchetty Street, Colombo-13
Gokulam No : 607 A, Negombo Road Mabola, Wattala. Phone : 0112433325 , Email: iskcon@slt.lk

ஸ்ரீ ஸ்ரீ ராதாகிருஷ்ணா கட்டிட வேலைகள் இறுதிக்கட்டத்தில்



ஆலய திருப்பணிக்கு நிதியை பணமாகவோ காசோலையாகவோ வங்கிக் கணக்கிலோ செலுத்தலாம்

Commercial Bank - Colombo-13
A/C Name: ISKCON Temple Fund
A/C No:- 1120017042
Hatton National Bank - Colombo-13
A/C Name: ISKCON
A/C No- 207010000891

ஸ்ரீ ஸ்ரீ ராதாகிருஷ்ண (ஆலயம்)
188, புதுச்செட்டித்தெரு, கொழும்பு – 13, தொலைபேசி:–011–2433325
Fax:2471089, Email:iskcon@slt.lk Web: www.iskcon.lk



03 நேபாளத்தில் ஏன் அடிக்கடி நிலநடுக்கம் ஏற்படுகிறது?



05 அரசை சீர்குலைக்கும் அளவுக்கு உள்முரண்பாடுகள் கிடையாது!



10 ஷாப்டர் கொலையின் மர்மம் விலகியது!



24 களைய வேண்டிய குழப்பங்கள்

## தோட்டத் தொழிலாளர்களுக்கு 10,000 வீட்டுத்திட்டம் ஆரம்பம்



'நாம் 200' நிகழ்வின் போது கொட்டகலை, மவுன்டவுன் தோட்டத்தின் திம்புல கீழ்ப்பிரிவில் இந்தியாவின் நிதி உதவியில் ஆரம்பிக்கப்படவுள்ள 10,000 வீட்டுத்திட்டம், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் ஆகியோரால் நிகழ்நிலை முறைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அமைச்சர் ஜீவன் தொண்டமானும் இந்நிகழ்வில் கலந்துகொண்டார்.

# காசாவையும் இலங்கையையும் வெவ்வேறு கோணத்தில் பார்ப்பது நியாயமற்றது

## தூய்மையாக செயற்பட்டால் செப்டெம்பரில் உரிய பதில் - ஜனாதிபதி



காசா பகுதியின் மோதல் நிலைமையை ஒரு கோணத்திலும் ஐக்கிய நாடுகள் சபைக்குள் இலங்கையை வேறு கோணத்திலும் பார்ப்பதில் நியாயம் இல்லையெனத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அடுத்த செப்டெம்பர் மாதம் ஐ.நா. மனித உரிமை கூட்டத் தொடருக்கு தூய்மையான கரங்களுடன் வந்தால் மட்டுமே இலங்கை பதிலளிக்குமெனத் தெரிவித்தார். அவ்வாறு இல்லையெனில், இலங்கை அதற்கு பதிலளிக்க வேண்டுமா எனவும், ஜனாதிபதி கேள்வியெழுப்பினார்.

வெலிமடை புதிய நீதிமன்ற கட்டடத்தொகுதியை நேற்று முன்தினம் (03) திறந்து வைத்து 06

அரச அங்கீகாரம் பெற்ற அல் மனாஸிக் ட்ரவல்ஸ்
உம்றாஹ் யாத்திரை 2023/24
எமது சேவைகள்:
விமானப் பயணச்சீட்டு, உம்றாஹ் வீசா
சொகுசு போக்குவரத்து
ஹறம்களுக்கும் சமீபத்தில் ஹோட்டல்
மூவேளை புபே(f) அமைப்பில் இலங்கை உணவு, தேநீர்
அனுபவமிக்க வழிகாட்டி
இன்னும் பல...
அடுத்த குழு பயணம்:
(1) நவம்பர்: 15-11-2023
(2) டிசம்பர்: 20-12-2023
தொடர்புகொள்ள அழையுங்கள்:
மௌலவி அல்ஹாஜ்
MAM. மசூத் அஹ்மத் (ஹாஷிமி) JP
AL MANASIK TRAVELS & TOURS
AL MANASIK COMPLEX
# 170, Sir Razick Fareed Mawatha, Kattankudy-03.
077 9000115
Saudi No:00966569247910
070 5704031
அல்மனாஸிக்: ஹஜ், உம்றாஹ் வணக்க வழிபாடுகளின் நாமம்

# அரச வர்த்தமானியில் வெற்றிட விபரங்கள்

## வாரமஞ்சரியுடன் இலவச இணைப்பு



கொழும்பு, பதுளை, புத்தளம் ஆகிய மாவட்டங்களில் தமிழ், சிங்கள பிறப்பு இறப்பு, 06



06 கல்விக்காக பெருந்தொகை பணத்தை ஒதுக்க அரசு முடிவு

அடுத்த வருடம் நடைமுறைக்கு வரும்

## நுண்நிதி கடன்களை ஒழுங்குபடுத்த விரைவில் சுயாதீன அதிகாரசபை

# உரிமம் பெறாத நிதி பரிவர்த்தனைக்கு தடை

## மீறினால் 05 வருட சிறை, ரூ. 50 இலட்சம் அபராதம்

கிராமப்புறங்களிலும் நகர்ப்புறங்களிலும் பல்வேறு இன்னல்களால் அவதிப்படும் மக்களை கடன் பொறியில் சிக்க வைக்கும் நுண்கடன் வழங்கும் நிறுவனங்களை ஒழுங்குபடுத்துவதற்காக பரந்த அதிகாரங்களைக் கொண்ட சுயாதீன அதிகாரசபையை அமைப்பதற்கான சட்டமூலம் தற்போது வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கான அடுத்த கட்ட நடவடிக்கைகளை விரைந்து செயற்படுத்தி, எதிர்வரும் 2024ஆம் ஆண்டு முதல் அரை ஆண்டுக்குள் அதிகாரசபையை நிறுவ நிதி அமைச்சு செயற்பட்டு வருகிறது. இந்த அதிகாரசபை நிறுவப்பட்ட பின்னர், ஒரு நபர் உரிமம் இல்லாமல் பணம் கொடுக்கும் வணிகம் மற்றும் நுண்கடன் (Micro Finance) வணிகத்தை நடத்த முடியாதென்பதுடன், அவ்வாறு 06

இதுல் அமாத்யாம்ஷய
நிதி அமைச்சகம்
Ministry of Finance

**நாட்டிலுள்ள சுமார் 11,000 சட்டவிரோத நுண்நிதி கடன் நிறுவனங்களால் சுமார் 30 இலட்சம் பேர் பாதிப்பு**

## அமரர் டி.ஏ. ராஜபக்ஷவின் நினைவுதின நிகழ்வு



அமரர் டி.ஏ.ராஜபக்ஷவின் 56ஆவது வருட நினைவுதின நிகழ்வு நேற்று தங்கல்ல, கால்டன் இல்லத்தின் முன்னால் அமைக்கப்பட்டுள்ள அன்னாரின் உருவச்சிலைக்கு முன்பாக நடைபெற்றது. முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ, முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ, முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்த்தன, ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன, அமைச்சர் மஹிந்த அமரவீர, பாராளுமன்ற உறுப்பினர்களான நாமல் ராஜபக்ஷ, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ ஆகியோர் உட்பட பெருந்திரளானோர் நிகழ்வில் கலந்து கொண்டனர். (படம்: மெதமுலன குறூப் நிருபர்)

# டிசம். 22 முதல் பெப். 02 வரை பாடசாலைகளுக்கு விடுமுறை

## கல்வி அமைச்சர் சுசில் நேற்று அறிவிப்பு



2023ஆம் ஆண்டுக்கான மூன்றாம் தவணை பாடசாலை விடுமுறை எதிர்வரும் டிசம்பர் மாதம் 22ஆம் திகதி முதல் 2024ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 2ஆம் திகதிவரை வழங்கப்படவுள்ளதாக, கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார். இந்த ஆண்டுக்கான மூன்றாம் தவணை பாடசாலைக் 06

# நிலப்பரப்பு, கடல் பாதுகாப்பு மூலோபாய திட்ட அறிக்கை

## 06 மாதங்களில் சமர்ப்பிக்க சாகல பணிப்பு



நாட்டின் நிலப்பரப்பையும் சமுத்திரத்தையும் பாதுகாப்பதற்கான மூலோபாயத் திட்டம் தயாரிப்பதற்காக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட குழுவின் முதலாவது அறிக்கையை ஆறு மாதங்களினுள் வழங்குமாறு ஜனாதிபதியின் தலைமை அதிகாரியும் தேசிய பாதுகாப்பு ஆலோசகருமான 06

# வரவு–செலவுத்திட்ட விவாதம் நவம். 13 முதல் டிசம். 13வரை

## நாளைமறுதினம் 07 இல் சபை கூடுகிறது



பாராளுமன்றம் நாளை மறுதினம் 7ஆம் திகதி முதல் 10ஆம் திகதிவரை கூடவுள்ளதாக, பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்தார்.

2024ஆம் நிதியாண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (வரவு செலவுத் திட்டம்) எதிர்வரும் 13ஆம் திகதி நண்பகல் 12.00 மணியளவில் நிதி அமைச்சர் எனும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமெனவும், செயலாளர் நாயகம் 06

# லிட்ரோ Gas விலைகள் நேற்று முதல் அதிகரிப்பு

## 12.5Kg சிலிண்டர் ரூ. 95ஆல் அதிகரிப்பு



லிட்ரோ சமையல் எரிவாயு விலை நேற்று நள்ளிரவு முதல் அதிகரிக்கப்பட்டதாக, அந்நிறுவனத்தின் தலைவர் முதித்த பீரிஸ் தெரிவித்தார்.

12.5 கிலோகிராம் கொண்ட லிட்ரோ சமையல் எரிவாயு சிலிண்டரொன்றின் விலை 95 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 3,565 ரூபாவாகும். 05 கிலோகிராம் கொண்ட லிட்ரோ சமையல் எரிவாயு சிலிண்டரொன்றின் விலை 38 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் 06

## எங்கள் கருத்து...

# இரு நூற்றாண்டு அவலம் இன்னும் தொடரலாகாது!

பிரித்தானியரின் காலனித்துவ ஆட்சிக்காலத்தில் தென்னிந்தியாவிலிருந்து அழைத்துவரப்பட்ட தொழிலாளர் சமூகம் இலங்கையின் மலையகத்தில் குடியேற்றப்பட்டு இரு நூற்றாண்டு நிறைவு பெற்றுள்ளது. இந்திய வம்சாவளி சமூகத்தின் இரு நூற்றாண்டு நிறைவை நினைவுகூரும் வகையில் அம்மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பல்வேறு அமைப்புகளும் தற்போது நிகழ்வுகளை நடத்திக் கொண்டிருக்கின்றன.

மலையக இந்திய வம்சாவளி மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற மாபெரும் தொழிற்சங்கமான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உட்பட பல்வேறு அமைப்புகள் இது தொடர்பான நிகழ்வுகளை நடத்தி வருகின்றன. மலையக தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆதரவாக வடக்கு, கிழக்கிலும் இவ்வாறான வைபவங்கள் நடத்தப்பட்டிருக்கின்றன. இ.தொ.கா ஓரிரு தினங்களுக்கு முன்னர் பிரமாண்டமான வைபவமொன்றை நடத்தியிருந்தது.

இலங்கையில் காலடி பதித்த இந்திய மக்கள் சமூகம் இரு நூற்றாண்டு காலத்தைக் கடந்திருக்கும் இந்நிலையில், வாழ்க்கைத்தரத்தில் மற்றைய மக்கள் சமூகங்களுக்கு நிகராக முன்னேற்றமடைந்திருக்க வேண்டும். 06

# தரமற்ற மருந்துகளை இறக்குமதி செய்தால் அதிகபட்ச தண்டனை

## எவராயினும் தராதரம் பாராது தண்டிக்கப்படுவர் - ரமேஷ்



தரமற்ற மருந்துகளை இறக்குமதி செய்தமை தொடர்பாக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் மற்றும் சுகாதார அமைச்சினூடாக தற்போது இரண்டு விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதுடன், எதிர்காலத்தில் அவ்வாறானதொரு நிலைமை ஏற்பட இடமளிக்கப்படாதெனவும், சுகாதார அமைச்சர், வைத்தியக் கலாநிதி ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

இது தொடர்பாக அமைச்சர் மேலும் தெரிவித்த போது, குற்றவாளிகள் எந்தத் தராதரமும் பாராமல் தண்டிக்கப்படுவரெனவும் தெரிவித்தார்.

கடந்த காலத்தில் நாட்டில் ஏற்பட்ட நிதிப் 06

# சட்டவிரோத மின் இணைப்பால் 08 மாதங்களில் 08 கோடி ரூபா நட்டம்

## இலங்கை மின்சாரசபை தெரிவிப்பு

இந்த ஆண்டின் கடந்த 8 மாதங்களில் சட்டவிரோத மின்சாரம் இணைப்புக் காரணமாக சுமார் 8 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக, இலங்கை மின்சார சபை தெரிவித்தது.

சிலர் மின்மானியை மாற்றுதல் மற்றும் பல்வேறு சாதனங்களை பயன்படுத்தி சட்டவிரோதமாக மின்சாரத்தை பெற்றுக்கொண்டதாலேயே இந்த நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும், இலங்கை மின்சாரசபை தெரிவித்தது. இது தொடர்பாக 06

இலங்கை மின்சார சபை
CEYLON ELECTRICITY BOARD



மட்டக்களப்பு தனியார் பல்கலைக்கழகம் (Batti Campus) பல வருடங்களுக்கு பின்னர் மீண்டும் கிழக்கு மாகாணத்தின் முன்னாள் ஆளுநரும் மட்டக்களப்பு பல்கலைக்கழகத்தின் தவிசாளருமான எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ்விடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது. கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பிரதிநிதியாக நேற்று (04) வருகை தந்து, பல்கலைக்கழகக் கட்டடத்தின் திறவுகோலை கையளித்த போது பிடிக்கப்பட்ட படம். (சாசித்த பட்டபெந்திகே, ஆரையம்பதி தினகரன் நிருபர்)



06 நேபாளத்தில் பாரிய நிலநடுக்கம் பதிவு

இதுவரை 160 பேர்வரை பலி

# பாரம்பரியம் நிகழ்ச்சியில் பாவலர் பஸீல் காரியப்பர் நினைவுகள்





இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் முஸ்லிம் சேவையில் எதிர்வரும் 07 ஆம் திகதி செவ்வாய் (07.11.2023) இரவு 8.15 மணியளவில் ஒலிபரப்பாகும் "பாரம்பரியம்" நிகழ்ச்சித் தொடரில், முஸ்லிம் சேவைக்கு பங்களிப்பு செய்தோர் வரிசையில் மறைந்த முதுபெரும் தமிழ் இலக்கிய ஆளுமை கவிஞர் பாவலர் பஸீல் காரியப்பரின் எழுத்துகள், வானொலி பற்றிய நினைவுகள் பரிமாறப்பட இருக்கின்றன. இவரது நினைவுகளை இன்னுமொரு இலக்கிய ஆளுமை, கல்வியாளர், தென் கிழக்கு பல்கலைக்கழகத்தின் மொழித்துறைக்கான சிரேஷ்ட முதன்மை பேராசிரியர் ரமீஸ் அப்துல்லாஹ் நேயர்களோடு பகிர்ந்து கொள்கிறார். ஈழத்து இலக்கியப் பரப்பில் முத்திரை பதித்த ஒரு யதார்த்த கவிஞரே பாவலர் பஸீல் காரியப்பர். வாழ்வியல் தத்துவங்களை பாடுவதில் வல்லவர். பிறவியிலேயே சக மனித நேயம் மிக்கவராக இவர் இருந்ததாலேயே, இவரால் மனித தத்துவத்தின் மேன்மையைப் பாட முடிந்திருக்கிறது. இலங்கையிலும், இந்தியாவிலும் மிக பிரபலமாகி 1966 தொடக்கம் 78 வரை பாடலாசிரியர் யார் என்று அறியப் படாமல் 12 ஆண்டுகள் அவ்வப் போதுபிரபலஒலிபரப்பாளர் பரராஜசிங்கத்தின் இனிய குரலில் ஒலித்துக்கொண்டிருந்த "அழகான ஒரு சோடி கண்கள்" பாடலுக்குரிய சொந்தக்காரர் இவர்தான் என்பது பீ.எச். அப்துல் ஹமீத் உடனான செவ்வியிலேயே வெளிச்சத்துக்கு வந்தது. ஆர்ப்பாட்டமில்லாத அடக்கமான கவிஞர் இவர். சன்மார்க்க ஆர்வலரான இவர் அதிகமான சன்மார்க்க விழுமியங்களை தன் எழுத்துகளால், வாசகர் கண் முன்னே கொண்டு வந்தார். இவரது நினைவுகளை சுமந்து வரும் இந்நிகழ்ச்சியை எம்.எஸ்.எம். ஜின்னா தொகுத்தளிக்க முஸ்லிம் சேவைப் பணிப்பாளர் எம்.ஜே.பாத்திமா ரினூஸியா தயாரித்தளிக்கிறார்.




ஈவான் டாக்டர். ராஜேந்திரத்தின் 10ஆவது ஞாபகார்த்த தினம் (ஜீசஸ் லைவ்ஸ் இன்டர்நேஷனல் மினிஸ்ட்ரியின் நிறுவனர்) கொழும்பு ஜீசஸ் லிவ்ஸ் தேவாலயத்தில் அண்மையில் நடைபெற்றது. பல்வேறு நாடுகளில் இருந்தும், நாட்டின் பிற பகுதிகளில் இருந்தும் அனேக மக்கள் கலந்து கொண்டனர்.



ஸ்ரீமதி சிவானந்தி ஹரிதர்சனின் நிர்த்தனா நடனப்பள்ளியின் 48ஆவது ஆண்டு நிறைவையொட்டி நிர்த்தனா நடனப்பள்ளி மாணவியர் வழங்கும் 'நிருத்த நிருத்திய சங்கமம்' நிகழ்வு எதிர்வரும் 11ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வுக்கு ஸ்ரீமதி பாலசுந்தரி பிரார்த்தலிங்கம் சிறப்பு விருந்தினராக கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

# ஐம்பெரும் விழாவில் பல்வேறு நாட்டு தமிழ் வர்த்தக சங்கங்கள் பங்கேற்பு



ஜனவரி மாதம் 6 மற்றும் 7ஆம் திகதிகளில் சென்னையில் நடைபெறும் 'ஐம்பெரும் விழாவில்' பல்வேறு நாடுகளில் உள்ள சிறு குறுந்தொழில் வர்த்தக சங்கங்கள் பங்கேற்க உள்ளன. அந்நிகழ்வில் வளரும் தமிழகம் கண்காட்சி, மற்றும் தொழில் கருத்தரங்கம் போன்றவைகள் நடைபெற உள்ளன. தமிழர்களை தொழில் துறையில் மேன்மையுறச் செய்யவும், அவர்கள் வியாபாரத்தில் தன்னிறைவு அடைய வேண்டுமெனவும் உலகத் தமிழ் வர்த்தக சங்க ஏற்பாட்டில் இந்நிகழ்வு நடைபெற உள்ளது.

இந்நிகழ்வில் பல்வேறு நாடுகளின் பல்வேறு தொழில் துறைகளைச் சேர்ந்த முதன்மை செயல் அதிகாரிகள், நிறுவன முதலாளிகள் கலந்து கொள்ளவும், அதன் மூலம் தொழில் வாய்ப்புகள், ஏற்றுமதி இறக்குமதி வாய்ப்புகள், சந்தைப்படுத்தல், தொழில் முதலீட்டு கிளைகள் அமைத்தல், போன்ற நிகழ்வுகளும் அயல்நாட்டு தூதர்கள் கலந்து கொண்டு தங்கள் நாட்டின் தொழில் வாய்ப்புகளையும் முதலீடுகளையும் எப்படி ஈர்ப்பது எனவும் கருத்துரைக்க உள்ளனர். இந்நிகழ்வில் 50க்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்தும், இந்தியாவில் பல மாநிலங்களிலும் வசிக்கும் தமிழர்களும் கலந்து கொண்டு பயனடையுள்ளனர்.

இந்நிகழ்வில் தமிழகத்தில் உள்ள முக்கிய வர்த்தக சங்கங்களும் வெளிநாட்டில் உள்ள முக்கிய வர்த்தக சங்கங்களும் இணைந்து 'புரிந்துணர்வு ஒப்பந்தம்' செய்து, அதன் மூலம் தொழில் வாய்ப்புகள் தமிழர்களுக்கு ஏற்படுத்தப்பட உள்ளன.

இந்நிகழ்வில் பல நாடுகளில் உள்ள தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாநில மத்திய அமைச்சர்கள், மேயர்கள், முன்னால் முதலமைச்சர்கள், கவர்னர்கள், மேயர்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்ற உள்ளனர். இந்நிகழ்வில் கலந்து கொண்டு தொழில் வாய்ப்புகளை பெறவும் அரங்கம் அமைத்து, தாங்கள் உற்பத்தி செய்யும் பொருளைக் காட்சிப்படுத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என உலகத்தமிழ் வர்த்தக சங்கத் தலைவரும் நிகழ்ச்சி ஏற்பாட்டாளருமான செல்வகுமார் தெரிவித்தார். தொடர்புக்கு +60166167708

# தமிழ்நாட்டில் இராஜராஜ சோழன் விருது பெற்ற காயத்திரி விக்கிரமசிங்க



இலங்கையில் ஆன்மீக சமூக பணிகள் ஆற்றிவரும் கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினர் காயத்திரி விக்கிரமசிங்கவுக்கு இந்திய கர்நாடக மாநிலத்தில் செயல்பட்டுவரும் ருத்ராக்ஷா பவுன்டேஷன் கடந்த 31ம் திகதி தமிழகத்தின் அதிஉயர் "இராஜராஜ சோழன்" என்ற விருதினை வழங்கி கௌரவித்துள்ளது.

இந்திய பாராளுமன்ற உறுப்பினர் (தமிழ்நாடு) டாக்டர் எ.செல்வகுமார், தமிழ்நாடு எம்.ஜி.ஆர் பல்கலைகழக வேந்தர் எ.சி சண்முகம், சத்குரு ஜெயபிரகாஷ்குருஜி ஆகியோரால், சென்னை ராணி சீதைமகாலில் , காயத்திரி விக்கிரமசிங்கவிற்கு பொன்னாடை அணிவித்து விருது வழங்கப்பட்டது.

காயத்திரி விக்கிரமசிங்க கொழும்பு பல்கலைகழகத்தில் அரசறிவியல் கற்கைநெறியில் சிறப்பு இளமானிப் பட்டத்தையும், மதுரை காமராஜ் பல்கலைகழகத்தில் முதுமானிப் பட்டத்தையும் பெற்றவர். ஏற்கனவே மேற்கிந்திய தீவுகளில் ஒன்றான குவாடலுப்பில் வெளிநாட்டு வாழ் இந்தியர்களின் நலன் துறை முன்னாள் அமைச்சர் வயலார் ரவிஜியால் சர்வதேச கோபியோ மாநாட்டில் 'மகாத்மா காந்தி' விருது வழங்கப்பட்டது.



கொழும்பு 04 முஸ்லிம் மகளிர் கல்லூரியின் 77ஆவது ஸ்தாபகர் தின நிகழ்வும் மாணவத் தலைவிகளுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வும் புதன்கிழமை கல்லூரியின் ஹாஜரா மண்டபத்தில் இடம்பெற்றபோது, மாணவிகளுக்கு கல்லூரி அதிபர் திருமதி நஸ்ரியா முனாஸ் சின்னம் சூட்டுவதையும், கல்லூரியின் பழைய மாணவிகள் சங்க செயலாளர் திருமதி பெரோஸா முஸம்மில் உள்ளிட்ட உறுப்பினர்கள் கேக் வெட்டுவதையும் கலந்து கொண்ட ஆசிரியர்கள், பாடசாலை நலன்புரிச்சங்க உறுப்பினர்கள், பெற்றோர் மற்றும் மாணவர்களையும் காணலாம்.

# லேக்ஹவுஸ் முஸ்லிம் மஜ்லிஸ் ஊழியர்கள் கௌரவிப்பு




நீண்ட காலம் சேவையாற்றிய பின்னர் ஓய்வு பெற்றுச் செல்லும் சக ஊழியர்களை கௌரவிக்கும் நிகழ்வு லேக்ஹவுஸ் முஸ்லிம் மஜ்லிஸ் ஏற்பாட்டில் லேக்ஹவுஸ் வளாகத்தில் நடைபெற்றது. அமைப்பின் தலைவர் ஊடகவியலாளர் ஷம்ஸ் பாஹிமின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஓய்வு பெற்றுச் செல்லும் தினகரன் ஆசிரியர் பீடத்தை சேர்ந்த கே.எம்.எம். ஷபீக், விளம்பரப் பிரிவைச் சேர்ந்து எம்.எச். எம்.நளீம் மற்றும் ஏ.ஏ.ஏ. பர்ஹான் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர். அஸ்மா ரமீஸின் கிராஅத்துடன் நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டதோடு அமைப்பின் தலைவர் வரவேற்புரை நிகழ்த்தினார். அமைப்பின் பொருளாளர் நன்றியுரை நிகழ்த்தினார். ஓய்வு பெறும் சக ஊழியர்களுக்கான நினைவுச் சின்னங்களை அமைப்பின் தலைவர் ஷம்ஸ் பாஹிம், பொருளாளர் எம்.என்.எம்.றிஸ்வான், தினகரன் இணை ஆசிரியர் மர்லின் மரிக்கார் மற்றும் முன்னாள் தலைவர் மஹ்ரூப் ஆகியோர் வழங்கி வைத்தனர். எம்.எஸ்.எம்.அக்ரம் சார்பில் சக ஊழியர் றம்ஸீன் அவருக்கான விருதை பெற்றுக் கொண்டது குறிப்பிடத்தக்கது.அங்கத்தவர்கள் கௌரவிக்கப்படுவதையும் கலந்து கொண்டோரையும் படங்களில் காணலாம்.

படப்பிடிப்பு: நிசாந்த




தமிழருவி வானொலி மற்றும் ஜெர்மனி கவிஞர் முனைவர் ஆலத்தூர் கோ.மோகனரங்கன் தமிழியல் ஆய்வு மையம் (சென்னை) இணைந்து வெளியிட்ட திருமதி அன்னலட்சுமி இராஜதுரையின் "ஈழத்தின் கலை இலக்கிய ஆளுமைகள்"எனும் நூல் வெளியீட்டு விழா (3) வெள்ளிக்கிழமை மாலை கொழும்பு தமிழ் சங்க விநோதன் மண்டபத்தில் நடைபெற்ற போது நூலின் முதல் பிரதியை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் புரவலர் ஹாசிம் உமர், தமிழவேள்.தமிழருவி நயினை விஜயனிடமிருந்து பெறுவதையும் நிகழ்வுக்கு தலைமை வகித்த பேராசிரியர் சபா ஜெயராஜா, முனைவர் மோ.பாட்டழகன், ஆகியோர் இணைந்து வழங்குவதையும் அருகில் நூலாசிரியரையும் காணலாம்.



ஹாசிம் உமர் பவுண்டேசனினால் புரவலர் ஹாசிம் உமரின் வழிகாட்டலில் காத்தான்குடி இஸ்லாமிய இலக்கிய கழகத்தின் சமூக சேவைப் பிரிவினால் காத்தான்குடி மட்டக்களப்பு ஆரையம்பதி பிரதேச செயலக பிரிவுகளில் உள்ள வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் தேவையுடையோருக்கு கடந்த மாதம் 30ஆம் திகதியன்று உலருணவு பொதிகள் வழங்கப்பட்டன. காத்தான்குடி இஸ்லாமிய இலக்கிய கழக தலைவர் கவி மாமணி ரீ.எல். ஜவ்பர்கான் தலைமையில் காத்தான்குடி அல்ஹிறா மஹா வித்தியாலய மண்டபத்தில் இடம் பெற்ற நிகழ்வில் நிவாரண விநியோகம் இடம்பெற்றது.

# நேபாளத்தில் ஏன் அடிக்கடி நிலநடுக்கம் ஏற்படுகிறது?



நேபாளத்தில் நேற்றுமுன்தினம் இரவு ஏற்பட்ட சக்தி வாய்ந்த நிலநடுக்கத்தில் சிக்கி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 160ஆக அதிகரித்துள்ளது.

பூமிக்கடியில் இருக்கும் நிலத் தகடுகள் அதிகம் நகரும் இடத்தில் நேபாளம் இருப்பதால் அடிக்கடி இங்கு நிலநடுக்கம் ஏற்படுவது வழக்கம். கடந்த 2015ம்



ஆண்டு 7.8 ரிச்டர் அளவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் பதிவு செய்யப்பட்டது.



இதில் சுமார் 8000 பேர் உயிரிழந்தனர். அதேபோல 21 ஆயிரம் பேர் படுகாயமடைந்தனர். இதனையடுத்து தொடர்ந்து அவ்வப்போது லேசான நிலநடுக்கங்கள் ஏற்பட்டு வந்திருக்கின்றன. கடந்த ஒக்டோபர் மாதத்திலும் நிலநடுக்கம் பதிவாகியிருந்தது.

நேற்று முன்தினம் இரவும் 6.4 ரிச்டர் அளவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இதன் காரணமாக கட்டடங்கள் சில குலுங்கி சரிந்துள்ளன.

அதேபோல இரவு 11 மணிக்கு மேல் நிலநடுக்கம் உணரப்பட்டதால் வீடுகளில் உறங்கிக்கொண்டிருந்த மக்கள் சிலர் கட்டட இடிபாடுகளில் சிக்கியுள்ளனர். இவர்களை மீட்கும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. நேபாளம் சுமார் 80 ஆண்டுகளாக நிலநடுக்கங்களை சந்தித்து வருகிறது.

மிதமானது முதல் மிகக்கடும் பாதிப்பை ஏற்படுத்தும் நிலநடுக்கம் வரை ஏராளமான வகைகளையும் சந்தித்துள்ளது. ஆனால் ஏன் நேபாளத்தில் இத்தனை நிலநடுக்கங்கள் வருகின்றன?

பூமியின் மேலோடு பெரிய டெக்டோனிக் தகடுகளால் ஆனது. சில நேரங்களில் முழு கண்டங்களையும் உள்ளடக்கிய இந்த நிலப்பரப்புகள், தொடர்ந்து நகர்ந்து ஒன்றுடன் ஒன்று மோதிக்கொண்டிருக்கின்றன. ஒரு சில தகடுகள் சேரும். ஒரு சில தகடுகள் விலகும். இந்த இரண்டு செயலாலும் புவியியல் மாற்றங்கள் உண்டாகும்.

இமயமலை. இந்தியா, நேபாளம், சீனா, பாகிஸ்தான் நாடுகளில் பரவியிருக்கும் இந்த மலை புவியியலில் சொல்லப்படும் 2 டெக்டோனிக் தட்டுகளின் இணைவால் ஏற்படுகிறது. ஐரோப்பிய ஆசிய மற்றும் இந்திய தட்டு இணையும் இடத்தில் அதன் அழுத்தம் காரணமாக நிலம் மேல்நோக்கி வளர்ந்து வருகிறது.

2 தட்டுகளும் ஒன்றின் மேல் மற்றொன்று அழுத்தம் கொடுப்பதால் இந்த இணைவுப் பகுதியில் நிலம் நகர்வுகளுக்கு உட்படும். எரிமலை வெடிப்பு, நிலநடுக்கம் முதலானவை ஏற்படும். இந்த 2 தட்டுகள் இணையும் இடத்தில் நேபாளம் அமைந்துள்ளது. இந்த 2 தட்டுகளும் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 5 செமீ என்ற விகிதத்தில் ஒன்றுக்கொன்று எதிராகவும் கீழும் அழுத்திக்கொள்கின்றன.

இந்த டெகடோனிக் தட்டுகளின் அழுத்தத்தால் கீழ் அடுக்கில் உராய்வும் மோதலும் நடைபெறும். அதை மையம் என்று சொல்வர். அந்த மோதலின் தாக்கம் நிலத்தில் மேற்பரப்பை அடையும் போது நிலநடுக்கம் உணரப்படும். நிலம் உறுதியாக இருந்தால் பாதிப்பு குறைவாக இருக்கும். நேபாளம் மலை பிரதேசம் என்பதால் ஸ்திரத்தன்மை விரைவாக குலையும் தன்மை கொண்டதாக இருக்கிறது. நேபாளத்தில் அதிக மக்கள் தொகை கொண்ட காத்மாண்டு பள்ளத்தாக்கின் அடியில் 300 மீட்டர் ஆழமான களிமண் அடுக்கு உள்ளது. இது பள்ளத்தாக்குக்குள் நிலநடுக்கத்தின் நில அதிர்வு அலைகளை பிரதிபலிக்கிறது மற்றும் தீவிரப்படுத்துகிறது. இதன் விளைவாக மண் திரவமாக்கல் என்று அழைக்கப்படுகிறது. அதிர்வுகள் திடமான நிலத்தை புதைமணல் போன்றவற்றுக்கு மாறும் போது இது நிகழ்கிறது.

கீழடுக்கு முதல் மண் புரள்வதால் அது மேலே வரும் பொது பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது. நிலத்தில் விரிசல் ஏற்படுவது, கட்டடங்கள் வீழ்வது, கோபுரங்கள் சரிவது, புதிய பள்ளங்கள், மேடுகள் உருவாவது போன்றவற்றைப் பார்க்க முடியும்.

**அபி**

AUTOWHEEL
FAMILY RESTAURANT IS NOW OPEN
"Friday Special Buriyani
RS. 455/- PER PACK
During Weekends
Lamprais Available
Rs.865.00 per pack
Order Now.
AA CEYLON Estd. 1904
VISIT -
Automobile Association of Ceylon
40, Sir Mohomed Macan Marker Mawatha, Colombo 03
Tele. No: 0774369013 (Krishon)



Aiken (PVT) LTD.

வங்கித் துறையில் (ATM), இலெக்ட்ரோனிக் / தொழில் நுட்ப உபகரண சேவை வசதிகளை வழங்கும் முன்னோடி நிறுவனமான எய்கன் நிறுவனத்துடன் இணைந்து கொள்வதற்கு வாய்ப்பு.

சேவை இடங்கள்
ATM Technical Support Officer

காலி, திருகோணமலை, புத்தளம், அனுராதபுரம், யாழ்ப் பாணம், வவுனியா, கம்பஹா, கண்டி.

சேவை இடம்
Help Desk Support

கொழும்பு

உங்களின் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தை பின்வரும் முகவரிக்கு அல்லது மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்.
hr@aiken.com.lk

267, பொல்ஹேன்கொட வீதி, கொழும்பு - 05.
www.aiken.lk
0702 765 765

ATM Technical Support Officer/Help Desk Support
(தொழில்நுட்ப உதவி அதிகாரி)

பொறுப்புகூறல்
1. எமது நிறுவனத்தின் வங்கி முறைமையினுள் நிறுவப்பட்டுள்ள 3000 எண்ணிக்கைக்கும் மேற்பட்ட Cash Recycling ATM, Cash Counting, Shorting Machine மற்றும் ஏனைய உபகரணங்களின் திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்பு வேலைகளை நிர்ணயிக்கப்பட்ட காலத்தினுள் உட்படுத்தி வாடிக்கையாளர்களின் தேவைப்பாடுகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் நடாத்திக்கொண்டு செல்லல்
2. மேற்கூறப்பட்ட வங்கி துணைப்பாகங்களை நிறுவுவதல் (Installation) மற்றும் அவற்றின் வசதிகளை நாளது தரவேற்றம் (Re-Configuration) செய்தல்
3. பாவனையாளர் சேவை / துறைசார்ந்த அனுபவம் மேலதிக தகைமையாகும்.

தகைமைகள்
1. NVQ 04 அல்லது அதற்குச் சமமான இலத்திரனியல், மின்சாரம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான தொழில்சார் தகைமையைப் பெற்றிருத்தல்.
2. Widows OS / Antivirus / MS Office கருவிகள் மற்றும் வலையமைப்பு தொடர்பான அனுபவம் மேலதிக அனுகூலமாகும்.
3. நேர்மறையான சிந்தனை கொண்ட 20 - 45 வயதிற்கிடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

பண்புத் திறன்கள்
1. வினைத்திறன்மிக்க மற்றும் பெறுபேறு இலக்குகளை அடையக்கூடிய குழு உறுப்பினராகவிருத்தல்
2. பகுப்பாய்வு செய்தல் மற்றும் தொழில்நுட்ப சிக்கல்களை தீர்க்கும் திறமையைக் கொண்டவராகவிருத்தல்.
3. பயனுள்ள தொடர்பாடல் ஆற்றலைக் கொண்டவராகவிருத்தல்.

உங்களின் தகைமை மற்றும் அனுபவத்தைப் பொருத்து சம்பளத்தை பேசித் தீர்த்துக்கொள்ளலாம்.

ROMANIA VACANCIES
ருமேனியா
வேலைவாய்ப்பு

| No | Job Category | Salary USD | Qty | Government A. Charges Rs. |
|---|---|---|---|---|
| 01 | Shuttering Carpenter | 650 | 50 | 685,905 |
| 02 | Mason | 650 | 30 | 685,905 |
| 03 | Electrician | 650 | 40 | 685,905 |
| 04 | Welder | 700 | 50 | 732,631 |
| 05 | Plumber | 750 | 50 | 779,357 |

- OT மற்றும் மேலதிக கொடுப்பனவு வழங்கப்படும்
- 08 மணிநேர வேலை நேரம்

USD = 324 LKR
02 வருட ஒப்பந்தம்

நீங்கள் 20 - 45 வயதிற்கு உட்பட்ட நல்ல உடல் ஆரோக்கியமுடைய குறைந்தபட்சம் 02 வருட முன் அனுபவம் கொண்ட ஒருவராயின் இன்றே தொடர்புகொள்ளுங்கள்.

ருமேனியா செல்வதற்கான Ticket கட்டண செலவை நீங்கள் ஏற்பதுடன் 02 வருட ஒப்பந்த கால முடிவின் பின் நாடு திரும்புவதற்கான Ticket உங்களுக்கு பெற்றுக்கொடுக்கப்படும்.

இலவசம்: உணவு, தங்குமிடம், போக்குவரத்து மற்றும் மருத்துவ வசதி

உங்களது CV மற்றும் Passport இனை info@base1.lk ற்கு அனுப்பவும்.

தொடர்புகளுக்கு
011 2361 227
011 2361 222
076 8235 566

3178/ADVT/04/23
Job Order App. No AL/3178/0001/23

BASE 1 CONSULTANCY
License No 3178
BASE 1 CONSULTANCY (PVT) LTD
No. 03, Collingwood Place Wellawatte, Colombo 06.
Web : www.b1consultancy.com

22 கரட்டுக்கு
ரூ.115,000
அதிக அடகுத் தொகை



பான் ஏஷியா ரன் அத்தம
தேவைக்கு உதவும் தங்கமான சினேகிதம்
011 4 667 222

* நிபந்தனைகளுக்கு உட்பட்டது
பான் ஏஷியா பேங்கிங் கோபரேஷன் பி. எல். சி., இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் நடாத்தப்படும் ஓர் அனுமதிக்கப்பட்ட வர்த்தக வங்கியாகும். கம்பனி பதிவு இலக்கம் PQ48. ஃபிட்ச் ரேட்டிங் BBB-(LKA) Stable Outlook

பான் ஏஷியா வங்கி
உன்னதமான உள்நாட்டு வங்கி

# பரபரப்புக்கு மத்தியில் ரணில் – மஹிந்த சந்திப்பு

**2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டமானது நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் எதிர்வரும் 13ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து வரவு செலவுத் திட்டம் மீதான விவாதம் பாராளுமன்றத்தில் நடைபெறவுள்ளதுடன், வரவு செலவுத்திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு எதிர்வரும் டிசம்பர் மாதம் 13ம் திகதி இடம்பெறவுள்ளது.**

### ஆளுநர் ஒருவரைப் பற்றி ஜனாதிபதிக்கு முறைப்பாடு

அநுராதபுரத்திற்குத் தனிப்பட்ட விஜயத்தை மேற்கொண்டு ஜனாதிபதி ரணில் கடந்த சனிக்கிழமை புறப்பட்டுச் சென்றார். தனிப்பட்ட விஜயத்தின் போது ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் ரங்கே பண்டார ஏற்பாடு செய்திருந்த சர்வ மதத்தலைவர்களின் கூட்டத்திற்கு மாத்திரம் ஜனாதிபதி ஒரு சம்மதம் தெரிவித்திருந்தார். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி தேரர்கள் உள்ளிட்ட ஏனைய மதங்களின் தலைவர்களும் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த சந்திப்பில் கலந்து கொண்டிருந்தனர்.

குருந்தீவு விகாரையை மையப்படுத்தி ஏற்பட்டுள்ள பிரச்சினை மற்றும் மட்டக்களப்பில் ஏற்பட்டுள்ள பிரச்சினை தொடர்பிலும் இதன் போது தேரர்கள் உள்ளிட்ட மதத்தலைவர்கள் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டியிருந்தனர்.

இந்த அனைத்துப் பிரச்சினைகளும் அரசியல்வாதிகள் உள்ளிட்ட அப்பிரதேசங்களுக்கு வெளியிலிருந்து வந்தவர்களாலேயே ஏற்பட்டுள்ளது என வவுனியா பௌத்த விகாரையில் விகாராதிபதி சியம்பலாகஸ் வெவ விமலசார தேரர் பகிரங்கமாகவே கூறினார்.

இதன்போதே திருகோணமலை மதத் தலைவர்கள் கிழக்கு ஆளுநரின் விவகாரத்தையும் ஜனாதிபதியிடம் முறைப்பாடு செய்தனர். சகல விடயங்களையும் கவனமாக செவிமடுத்த ஜனாதிபதி ரணில் அவற்றிற்கு ஒவ்வொன்றாக பதிலளித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்திற்கு வரவுள்ள பல்கலைக் கழகம் தொடர்பிலும், மன்னார் பிரதேசத்தை சுற்றுலாப் பிரதேசமாக அபிவிருத்தி செய்யும் முறையையும், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் காடுகள் குறைவாக உள்ள இடங்களில் காடு வளர்ப்பை விரிவுபடுத்துவது குறித்தும் ஜனாதிபதி விளக்கினார்.

சம்பளத்தை அதிகரிக்கும் முறையை ஜனாதிபதி கூறினார்.

அனுராதபுரத்தில் தனது ஓய்வைக் கழித்த ஜனாதிபதி ரணில், திங்கட்கிழமை காலை கொழும்பு திரும்பினார். அன்று அலுவலகத்திற்குச் சென்ற ரணில் முதலில் ஊடக அதிகாரி குழுவைச் சந்தித்ததுடன், அதன் பின்னர் நிதியமைச்சின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்திலும் கலந்துகொண்டார்.

இதன் போது எதிர்வரும் 13ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு செலவுத் திட்ட ஆவணம் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது. அன்றைய தினம் மாலை இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், வரவு செலவுத் திட்டத்தின் மூலம் அரச ஊழியர்களின் சம்பளத்தை எவ்வாறு அதிகரிப்பது என்பது தொடர்பிலும் ஜனாதிபதி நீண்ட விளக்கமளித்தார். அத்துடன், இந்த சம்பள அதிகரிப்பு மேற்கொள்ளப்படுவது அரசியல் கட்சிகள் மற்றும் தொழிற்சங்கங்களின் கோரிக்கையின் அடிப்படையில் அல்ல எனத் தெரிவித்த ஜனாதிபதி ரணில், பொருட்களின் விலைகள் அதிகரிக்கும் போது அதற்குச் சமனாக வருமானத்தை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டதாகவேயாகும் எனவும் அமைச்சரவையின் கரகோஷங்களுக்கு மத்தியில் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதானிகள் மற்றும் இந்நாட்டின் நிதித்துறைத் தலைவர்களுக்கிடையில் இடம்பெறும் வட்டமேசை கலந்துரையாடலில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி ரணில் கடந்த செவ்வாய்க்கிழமை காலை கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலுக்குச் சென்றார். சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனம், ஆசிய அபிவிருத்தி வங்கி உள்ளிட்ட உலகில் ஏற்றுக் கொள்ளப்பட்ட 10 நிதி நிறுவனங்களின் தலைவர்களுடனான கலந்துரையாடலில் கலந்துகொண்ட ஜனாதிபதி, நெருக்கடியிலிருந்து மீள்வது மற்றும் நிலையான அபிவிருத்தி தொடர்பிலும் உரையாற்றினார்.

### ரணில் மஹிந்த சந்திப்பு

செவ்வாய்க்கிழமை இரவு ஜனாதிபதி ஷங்கரிலா ஹோட்டலில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சியெட்டயர் நிறுவனத்தின் 25வது வருட நிறைவு நிகழ்வில் கலந்து கொள்வதற்காகச் சென்றிருந்தார். இந்த நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் கலந்து கொண்டிருந்ததோடு, அவர்கள் இருவரும் ஒரே மேசையில் அமர்ந்திருந்ததால் அரசியல் சாராத பேச்சுக்களில் ஈடுபட்டிருந்தனர்.

சர்வதேச வீதிப் பாதுகாப்பு மாநாடு கடந்த புதன்கிழமை காலை ஜனாதிபதி பணிக்குழுவின் பிரதானி சாகல ரத்நாயக்க தலைமையில் நடைபெற்றது. வீதிப் பாதுகாப்பு தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்வதற்காக உயர்மட்ட குழு ஒன்றை அமைப்பதற்கு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளதாக இதன் போது ஜனாதிபதி பணிக்குழுவின் பிரதானி சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

வரவு செலவுத் திட்ட யோசனைகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் நாடு முகங்கொடுத்துள்ள பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக உள்நாட்டு வர்த்தகர்கள் உள்ளிட்ட தனியார் துறை தலைவர்கள் சிலருடன் ஜனாதிபதி ரணில் அன்றைய தினம் கலந்துரையாடினார்.



தொழிலதிபர்களுக்கு ஜனாதிபதி வழங்கிய வாக்குறுதி தேசிய கைத்தொழில் சிறப்பு விருதுகள் வழங்கும் நிகழ்வு ஜனாதிபதி தலைமையில் தாமரைத் தடாக அரங்கில் இடம்பெற்றது. அன்றைய தினம் எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தில் கைத்தொழில்துறையினருக்கு நிவாரணம் வழங்குவதாக ஜனாதிபதி உறுதியளித்தார். பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்காக தனியார் துறையின் முன்மொழிவுகளையும் உள்ளடக்குவது தொடர்பில் ஜனாதிபதியின் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதன்போது வரவு செலவுத் திட்டம் தொடர்பில் அமைச்சரவை மிகவும் கஷ்டமான தீர்மானங்களை மேற்கொண்டிருப்பதாகத் தெரிவித்த ஜனாதிபதி ரணில், இளம் அமைச்சரான ரமேஷ் பத்திரன போன்று அனைவரும் செயற்பட்டால் இந்த நெருக்கடியிலிருந்து மீள்வது கடினமல்ல என அவரைப் பார்த்து தெரிவித்தார்.

புதன்கிழமை மாலை வரவு செலவு திட்டம் தொடர்பாக தனியார் துறை குழுவுடன் மற்றுமொரு கலந்துரையாடல் இடம்பெற்றது. தனியார் துறை நிறுவனங்களின் பிரதானிகளோடு 2024ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் தொடர்பான கலந்துரையாடலானது அவர்களது கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளும் நோக்குடனேயே இடம்பெற்றது. கடந்த வாரம் முழுவதும் இதுபோன்ற பல கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

காலநிலை மாற்றம் தொடர்பாக மெலிண்டா கேட்ஸ் மன்றம் ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி ரணில் வியாழக்கிழமை காலை அலரி மாளிகையில் பிரதான மண்டபத்திற்குச் சென்றார். ஜனாதிபதி பணிக்குழுவின் பிரதானி சாகலவின் ஒருங்கிணைப்பில் மெலிண்டா கேட்ஸ் மன்றம் இந்நாட்டுடன் இணைந்து செயல்பட்டு வருகின்றது.

அதனை முடித்துக் கொண்டு அவர் திரும்பும் போது ஜனாதிபதி செயலகத்துக்கு அமைச்சர்கள் குழுவொன்று வாரத்தின் செயற்பாடுகள் மற்றும் வரவு செலவுத்திட்டம் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக வருகை தந்திருந்தனர்.

அவர்களது பிரதான தலைப்பு மொட்டுக் கட்சி ஜனாதிபதி ரணிலை விட்டு தூரமாவதற்கு மேற்கொள்ளும் முயற்சி தொடர்பானதாகவே இருந்தது.

"மொட்டுக் கட்சியின் செயலாளர் சாகல காரியவசம் இரண்டு தடவை ஜனாதிபதியை விமர்சித்தார். அவர் ஒரு தடவை அமைச்சு பதவிகள் பற்றி கூறினார். இப்போது இன்னொன்றைக் கூறுகின்றார்" எனக் கூறினார் பேராசிரியர் ஆஷு மாரசிங்க.

"ஜனாதிபதியை சுதந்திரமாகச் செயற்பட அனுமதிப்பதாகக் கூறியே அவர்கள் ஜனாதிபதி நியமனத்தை ஆதரித்தார்கள். அப்படி இருக்கும் போது அழுத்தங்களைச் செய்ய முடியாதே" என அதற்கு பதலளித்தார் வஜிர அபேவர்தன.

**வரவு செலவுத் திட்டம் தொடர்பில் அமைச்சரவை மிகவும் கஷ்டமான தீர்மானங்களை மேற்கொண்டிருப்பதாகத் தெரிவித்த ஜனாதிபதி ரணில், இளம் அமைச்சரான ரமேஷ் பத்திரன போன்று அனைவரும் செயற்பட்டால் இந்த நெருக்கடியிலிருந்து மீள்வது கடினமல்ல என அவரைப் பார்த்து தெரிவித்தார்.**

"தனியாகச் செல்வதானால் தனியாகச் செல்லச் சொல்லுங்கள். ஜனாதிபதி சுயாதீனமாகவே செயற்படுவார். வரவு செலவுத் திட்டம் தோல்வியடைந்தால் நாம் அதனை அந்த நேரத்தில் பார்த்துக் கொள்வோம்" என ஆவேசமாகக் கூறினார் நிமல் லான்சா.

இந்தப் பேச்சுக்களுடன் ஜனாதிபதி தொடர்பு படாத போதிலும் அங்கிருந்த அமைச்சர்கள் மொட்டுக்கட்சி ஜனாதிபதியிடமிருந்து தூர விலகியிருப்பதாகக் குசுகுசுத்துக் கொண்டனர்.

"ஊழல் மோசடிகளில் குற்றவாளிகளாகும் பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்களை வெளியேற்றுவதற்கான அதிகார சபையை உருவாக்குவது மிகவும் நல்ல விடயம். ஜனாதிபதி சொல்வதைச் செய்யும் தலைவர் என்ற வகையில், நாட்டின் இளைஞர்கள் கேட்கும் மாற்றங்களைச் செய்து வருகிறார். அவ்வாறில்லாமல் வாயால் வடை சுடுபவரல்ல" என்றவாறு பேச்சுடன் இணைந்து கொண்டார் அமைச்சர் பந்துல.

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் இந்நாட்டிற்கு விஜயம் செய்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்த பின்னர், கொழும்பு 07, விஜேராம மாவத்தையில் உள்ள உத்தியோகபூர்வ இல்லத்திற்குச் சென்றது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவரும், முன்னாள் பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷவை சந்திப்பதற்காகும்.

பகல் 11.00 மணியளவில் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்து நீண்ட நேரம் உரையாடிய இந்திய வெளிவிவகார அமைச்சர் அங்கு இரவு உணவு அருந்திவிட்டே அங்கிருந்து வெளியேறியமை விசேட அம்சமாகும்.

### மெதமுலனவில் கலந்துரையாடல்

ராஜபக்ஷ குடும்பத்தின் சகோதரர்களுக்கிடையிலான விசேட கலந்துரையாடல் ஒன்று கடந்த வாரத்தில் ஒரு நாள் மெதமுலனவில் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பசில் ராஜபக்ஷ ஆகியோருக்கிடையில் ராஜபக்ஷ குடும்ப உறுப்பினர் ஒருவரின் நினைவேந்தல் நிகழ்வில் கலந்து கொண்ட போது இந்த உரையாடல் இடம்பெற்றுள்ளது.

இதன்போது தற்போதைய அரசியல் நிலவரங்கள் மற்றும் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### லான்சாவுடன் அமைச்சர்கள் சிலர் என்ன பேசினார்கள்?

புதிய கூட்டணியின் வேலைத்திட்டத்திற்கு ஆதரவை வழங்கும் சட்டத்தரணிகள் சங்கத்தின் விசேட கலந்துரையாடல் ஒன்று அண்மையில் கொழும்பில் அமைந்துள்ள ஹோட்டல் ஒன்றில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா, சுகீஷ்வர பண்டார, சட்டத்தரணிகளான நளின் சமரக்கோன், ஹர்ஷான் பெரேரா, சாகர பண்டார, லக்ஷான் பெரேரா உள்ளிட்ட தரப்பினர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது கட்சியின் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு சட்ட ஆதரவை வழங்குவதற்கான விசேட வேலைத்திட்டம் ஒன்றை தயாரிக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா ஆலோசனை வழங்கினார். அத்துடன் அடுத்த வருடம் பெப்ரவரி மாதத்தில் தங்கள் கூட்டணியின் மாநாட்டை நடத்துவது குறித்தும் இதன் போது பேசப்பட்டது.

லான்சாவின் கதைக்கு அமரவீர என்ன கூறினார்?

"கடந்த வாரத்தில் லான்சாவின் கதையின் காரணமாக மொட்டு கட்சியினர் நன்றாகவே குழம்பிப் போயுள்ளார்கள். லான்சா அவ்வாறு பேசுவார் என அவர்கள் நினைத்திருக்கவில்லை" என அமரவீர பேச்சை ஆரம்பித்துக் கூறினார்.

"ஆம்... இருப்பதானால் வாயை மூடிக் கொண்டு ஜனாதிபதிக்கு ஆதரவை வழங்கிக் கொண்டிருக்க வேண்டும். இல்லாவிட்டால் எதிர்க்கட்சியில் அமர்ந்து கொண்டு ஜனாதிபதியை விமர்சிக்க வேண்டும். என்ன இது கேலிக்கூத்து? பாராளுமன்றத்தில் ஜனாதிபதிக்கு ஆதரவை வழங்கிவிட்டு வெளியில் வந்து ஏசுகிறார்கள்" என்றவாறு நளின் பெர்னாண்டோ பேச்சை ஆரம்பித்தார்.

### சித்தப்பா அமைச்சுப் பதவிகளை வழங்கும்போது எங்கே இருந்தீர்கள்?

"இல்லை, நான் தெளிவாகக் கேட்டது பெருந்தோட்டத்துறையை விவசாய அமைச்சுக்கு வழங்காமல், வேறு எந்தஅமைச்சை வழங்கப்போகின்றீர்கள் என்றுதான். ஜனாதிபதி சரியில்லையென்றால் எதிர்க்கட்சியில் போய் அமருங்கள் எனக் கூறினேன். சித்தப்பா நிறைய அமைச்சுப் பதவிகளை நீக்கிவிட்டு புதியவர்களுக்கு அமைச்சுப் பதவிகளை வழங்கும் போது எங்கே இருந்தீர்கள்? என நாமலிடம் கேட்டேன். அதேபோன்று வரவு செலவுத் திட்டத்தைத் தோற்கடிக்கப் போவதாகச் சத்தம் போடுகிறார்கள்தானே, முடியுமானால் தோற்கடித்துக் காட்டுங்கள் என நான் கூறினேன். இவற்றிற்குப் பதில் கூறாமல் மலுப்பல் பதில்களால் பலனில்லை" என லான்சா அங்கிருந்தவர்களைப் பார்த்துக் கூறினார்.

"இப்போது நாமலின் அடிவருடியாக இருப்பது புத்தளத்தின் ஒக்ஷிஜன் நிசாந்ததானே? லான்சா நாமலுக்கு கூறும் விடயங்களுக்கும் நிசாந்த பதில் கூறுவதைக் காண்கிறேன்" என துமிந்த பிரியங்கரவைப் பார்த்துக் கூறினார்.

---



# காசா மக்களுக்கான சவுதியின் மனிதநேயம்

## 24 மணிநேரத்தில் 240 மில்லியன் ரியால்

வரலாறு காணாத அளவில் துன்பங்களை அனுபவிக்கும் காசா மக்களுக்காக மக்கள் பெருந்தொகை பணத்தை அள்ளிக்கொட்டுகிறார்கள். காசா மக்களின் அவலங்களை பார்த்து கண் கலங்காத எந்தவொரு முஸ்லிமும் இருக்க முடியாது. சவுதி அரேபியா ஸாஹிம் எனும் மையத்தின் ஊடாக ஆரம்பித்து வைக்கப்பட்ட நிதி சேகரிப்பில் மக்கள் ஆர்வத்துடன் தமது பங்களிப்புக்களை வழங்கிக் கொண்டே இருக்கிறார்கள். காசா மக்களின் அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்யும் நோக்கில் இந் நிதி சேகரிப்பு ஆரம்பிக்கப்பட்டது. சவுதி மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் மற்றும் இளவரசர் முஹம்மத் பின் சல்மான் ஆகியோர் 50 மில்லியன் ரியால்களை நன்கொடையாக வழங்கி ஆரம்பிக்கப்பட்ட இந் நிதித் திரட்டல், 10 மணித்தியாலங்களில் 150 மில்லியன் ரியாலை தாண்டியது. பல நாடுகளிலும் இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதில் சவுதி அரேபியா கூடிய தொகையை குறுகிய நேரத்தில் திரட்டியது. தனிநபர், ஆட்சியாளர்கள் மற்றும் தொழிற்சாலைகள் மார்க்க அறிஞர்கள் என்ற வேறுபாடின்றி சகலரும் பங்களிப்பு செய்து கொண்டிருக்கின்றனர். இது ஒரு தொடர் நிதி திரட்டும் திட்டம் என நிவாரணத்துக்கும் மனித நேய உதவிகளுக்குமான மன்னர் ஸல்மான் நிலையம் தெரிவித்துள்ளது. காசா மக்களுக்காக உதவி செய்வது எமது கடமையாகும். அது ஒரு தனி நாட்டின் அல்லது ஒரு சாராரின் பிரச்சினை அல்ல.



மாறாக ஒட்டுமொத்த முஸ்லிம்களும் தம்மால் முடிந்த உதவிகளை இவ் இக்கட்டான சூழ்நிலையில் செய்வது கட்டாயமாகும். இந்த வகையில் சவுதி அரேபியா நிதியுதவி பெறும் நாடுகளில் பாலஸ்தீன் இரண்டாவது நாடாக பட்டியலிடப்பட்டுள்ளது.

ஸாஹிம் எனும் மையம் பாலஸ்தீனத்துக்காக மாத்திரம் உருவாக்கப்பட்ட ஒரு தளமாகும். யுத்த நிறுத்தத்துக்காக பல சர்வதேச நாடுகளுடன் தொடர்புகளை ஏற்படுத்த சவுதி அரேபியா முயற்சி செய்தது. இலங்கை உட்பட பல நாடுகளிலும் கண்டனங்கள், அறிக்கைகள் விடப்பட்ட நிலையில் காசாமக்கள் மீதான அநியாயங்களும் அத்துமீறல்களும் தொடர்ந்து கொண்டிருப்பது உலக முஸ்லிம்களை கவலையில் ஆழ்த்தியிருக்கிறது.

இவ் இக்கட்டான சூழ்நிலையில் காசா மக்களுக்கான அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்யும் விதத்தில் சவுதி அரேபியா மற்றும் பல நாடுகளும் நிதி சேகரிப்பை ஆரம்பித்துள்ளன.

**அஷ்ஷைக் M H பௌஸுல் அலவி (மதனி)**
**செயலாளர், தாருல் ஈமான் நிறுவனம்**

---

# பேராதனைப் பல்கலைக்கழக தமிழ் சங்கத்தின் "குறிஞ்சிச்சாரல் 2023"

பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கம் 'எட்டுத்திக்கும் எங்கள் கலை' என்ற தொனிப் பொருளில் நடத்தும் "குறிஞ்சிச்சாரல் 2023" நிகழ்வு கண்டி இந்து கலாசார மண்டபத்தில் இன்று 05.11.2023 ஞாயிற்றுக்கிழமை மாலை 3.01 மணிக்கு நடைபெறவுள்ளது.

பேராதனை பல்கலைக்கழக தமிழ்த்துறை தலைவரும், தமிழ்ச் சங்கத்தின் பெருந்தலைவருமான பேராசிரியர் எஸ். பிரசாந்தன், 97வது செயற்குழுத் தலைவர் மு. வினோ ஆகியோரது தலைமையில் நடைபெறவுள்ள இவ் வைபவத்தில் பிரதம அதிதியாக பேராதனைப் பல்கலைக்கழக பிரதம நூலகர் ஆர். மகேஸ்வரனும் கௌரவ அதிதிகளாக கண்டி மத்திய மாகாண இந்து மாமன்ற அறக்கட்டளையின் ஸ்தாபகர் தலைவர் துரைசாமி சிவசுப்ரமணியம், முன்னாள் புவியியற்றுறைத் தலைவர் பேராசிரியர் வை. நந்தகுமார், முன்னாள் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் துரை. மனோகரன், முன்னாள் முகாமைத்துவத் துறைத் தலைவர் வ. தர்மதாசன் ஆகியோரும் கலந்துக்கொள்ளவுள்ளார்.

வரவேற்பு நடனம், குழுப்பாடல், கிராமிய நடனம், ஐவகை நிலங்களைக் குறிக்கும் நடனம், நாடகம் ஆகிய தமிழ்ச் சங்க நிகழ்வுகளும், கண்டி மத்திய மாகாண இந்து மாமன்றத்தின் வீணைக் கச்சேரியும், கண்டி திருத்துவக் கல்லூரியின் வில்லுப்பாட்டு, விஹார மாகாதேவி கல்லூரியின் நடனம், மோப்ரே கல்லூரியின் கர்நாடக இசை ஆகிய கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. இந்நிகழ்வுக்கான அனுமதி இலவசம் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த காலங்களில் ஏற்பட்ட கொவிட்19 தொற்று காரணமான சில காலமாக இடைநிறுத்தப்பட்டிருந்த தமிழ்ச் சங்கத்தின் வெளிக்கள நிகழ்வுகள் மீண்டும் தொடங்கப்பட்டுள்ளன. குறிஞ்சிச் சாரல் நிகழ்வு முன்னர் ஹட்டன், கொழும்பு, யாழ்ப்பாணம், திருகோணமலை போன்ற மாநகரங்களில் நடத்தப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# அரசியல் அரங்கம்

அர்ஜுன்

'உள்ளக முரண்பாடுகளுக்கு முகம்கொடுக்காத ஒரு கட்சியை காண்பது முடியாத காரியம். இது ஜனநாயக அரசியலின் இயல்பாகும். அரசாங்கத்திற்குள்ளும் பல்வேறு கட்சிகளும் குழுக்களும் தமது இலட்சியங்களை வெளிப்படுத்தியுள்ள போதிலும், அரசாங்கத்தைச் சீர்குலைக்கும் அளவுக்கு உள்முரண்பாடுகள், மோதல்கள் கிடையாது. நாட்டில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளுக்கு உள்ளேயும் நெருக்கடிகள் தொடர்கதையாக இருந்து வருகின்றன' என்று கப்பல்துறை, துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி. சில்வா தெரிவித்தார்.



'நாட்டில் ஏற்பட்டுள்ள சாதகமான முன்னேற்றத்தைத் தக்கவைத்து மக்களுக்கு நிவாரணம் அளிக்கும் பொருளாதாரத்தையும், அபிருத்தியடைந்த தேசத்தையும் உருவாக்குவதில் அரசாங்கம் அர்ப்பணிப்புடன் உள்ளது என்றும் அமைச்சர் நிமல் சிறிபால டி. சில்வா தெரிவித்தார்.

அரசாங்கம் முன்னெடுத்துள்ள செயற்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து எமக்கு வழங்கிய பேட்டியிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

யாதது. உலகப் பொருளாதாரம், உலகச் சந்தை மற்றும் சர்வதேச வங்கி அமைப்பு ஆகியவற்றில் நமது ஒருங்கிணைப்புக்கு இந்த விதிமுறைகள் முக்கியமானவை. கடந்த காலங்களில் நிலவிய இக்கட்டான சூழல் தற்போது தணிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உறுதியான பொருளாதாரக் கொள்கைகளின் விளைவே நாம் இப்போது அனுபவிக்கும் சாதகமான பின்னணியாகும்.

## அரசை சீர்குலைக்கும் அளவுக்கு உள்முரண்பாடுகள் கிடையாது!

### 'உட்கட்சிப் பூசல்கள் இல்லாத கட்சிகளைக் காண்பதே முடியாத காரியம்' –அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவுடன் சந்திப்பு

**கே: சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாவது கடன் தவணைக்கான இணக்கப்பாடுகள் மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்துவதில் சீனாவின் அர்ப்பணிப்பு போன்றவற்றில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் பற்றிக் குறிப்பிட முடியுமா?**

பதில்: ஒரு தேசமாக, சவாலான காலகட்டத்தை சகித்துக் கொண்டிருக்கின்றோம். இப்போது நம்பிக்கை நிறைந்த ஒரு கட்டத்தில் நுழைகிறோம். எவ்வாறாயினும், இது நாட்டின் அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வைத் தரப்போவதில்லையென்பதையும் நாம் ஏற்றுக் கொள்வது அவசியம். முக்கியமாக, அரசாங்கம் என்ற ரீதியில் பிரபலமானவற்றைப் பின்தொடர்வதை விட உறுதியான அரசியல் முடிவுகளை எடுப்பதற்கு நாங்கள் முன்னுரிமை அளித்துள்ளோம். பெரும்பாலும் குறிப்பிடத்தக்க சவால்களை எதிர்கொள்கிறோம். இந்த முன்னேற்றத்தைத் தக்கவைத்து, நமது மக்களுக்கு நிவாரணம் அளிக்கும் பொருளாதாரத்தையும் தேசத்தையும் உருவாக்குவதே அரசாங்கத்தின் கடமையும் பொறுப்புமாகும். இந்த முயற்சியில் எங்கள் அரசாங்கம் முழுமையாக அர்ப்பணிப்புடன் உள்ளது.

**கே: எனினும், சர்வதேச நாணய நிதியத்தை ஒரு தீயசக்தியாக சித்தரிப்பதில் சில குழுக்கள் தொடர்ந்தும் செயற்படுகின்றன. இவற்றை நீங்கள்எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

பதில்: ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாரம்பரிய முறைகளில் இருந்து விலகி, தற்போதைய தேவைகளுக்கு ஏற்ப பல கொள்கைகள் மற்றும் வேலைத்திட்டங்களை அறிமுகப்படுத்தி, அவற்றுக்கு ஏற்ப உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். இந்தத்திட்டங்கள் தேசத்தின் நல்வாழ்வுக்கு அவசியமானவை என்பதை நாங்கள் புரிந்து கொள்கிறோம். இந்த உண்மையை பொதுமக்கள் மற்றும் அரசியல்வாதிகள் புரிந்து கொள்ள வேண்டியது அவசியம். ஆளும் அரசாங்கம் எதுவாக இருந்தாலும், சர்வதேச நாணய நிதியத்தால் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள விதிமுறைகளைக் கடைப்பிடிப்பது இன்றியமை

நமது உற்பத்திப் பொருளாதாரத்தை மேம்படுத்துதல், அந்நிய செலாவணி வருவாயை உயர்த்துதல், நமது டொலர் இருப்புக்களை வலுப்படுத்துதல் மற்றும் பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்துதல் ஆகியவற்றின் மூலம் இந்த நிலைமைகளை மேம்படுத்துவதில் நாம் கவனம் செலுத்தியிருக்கின்றோம். அவ்வாறு செய்வதன் மூலம், மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, வாழ்க்கையை மேலும் நிர்வகிக்க முடியும்.

**கே: சில தொழிற்சங்கங்கள் எச்சரித்திருக்கும் வேலைநிறுத்தங்களைத் தணிக்க அரசாங்கம் எவ்வாறு தயாராகிறது?**

பதில்: பொதுமக்கள் எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடிகளை அரசியல் கருவியாக பயன்படுத்த எதிர்க்கட்சிகள் தொடர்ந்து முயற்சித்து வருகின்றன. எவ்வாறாயினும், தற்போதைய அரசாங்கம் இந்த இக்கட்டான நிலைக்குப் பொறுப்பேற்கவில்லை, மாறாக கடந்தகால நிர்வாகங்கள் மற்றும் ஜனரஞ்சகக் கொள்கைகளை அவர்கள் கடைப்பிடித்ததன் ஒட்டுமொத்த விளைவுதான் இன்றைய நிலைமை என்பதை நாட்டின் பெரும்பான்மையான மக்கள் நன்கு உணர்ந்துள்ளனர்.

**கே: தற்போது நஷ்டத்தில் இயங்கும் அரசாங்க நிறுவனங்களை மறுசீரமைப்புச் செய்யும் அரசாங்கத்தின் திட்டத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் யாவை?**

பதில்: அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களை மறுசீரமைக்கும் போது, நஷ்டத்தில் இயங்கும் நிறுவனங்களை மட்டுமன்றி, சில இலாபம் ஈட்டும் நிறுவனங்களையும் மறுசீரமைக்கும் திட்டம் உள்ளது. இலாபகரமான நிறுவனங்களும் ஏன் மறுசீரமைப்புக்கு உட்படுத்தப்படுகின்றன என்று சிலர் கேள்வி எழுப்புகின்றனர். இந்த நடவடிக்கை அரசாங்கம் வணிக நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது என்ற அடிப்படைக் கொள்கையுடன் ஒத்துப்போகிறது. சட்டம் ஒழுங்கை பராமரிப்பதும், பொதுநிர்வாகத்தை மேற்பார்வையிடுவதும், தேசத்தின் குடிமக்களின் நல்வாழ்வைப் பாதுகாப்பதும் அரசாங்கத்தின் அடிப்படைக் கடமையாகும். சமகால உலகில், முன்னேறிய நாடுகளில் மட்டுமன்றி, தீவிர இடதுசாரி மற்றும் கம்யூனிஸ்ட் நாடுகளிலும் கூட, வணிக நடவடிக்கைகளில் தனியார் துறையினரை இணைத்துக் கொள்ளும் போக்குக் காணப்படுகிறது. இந்தத் தனியார் நிறுவனங்கள் இலாபம் ஈட்டும்போது, அவற்றுக்கு வரி விதிக்கப்பட்டு அரசாங்கத்தின் வரி வருமானம் அதிகரிக்கப்படும்.

தற்போது இலாபம் ஈட்டும் வணிகங்கள் உட்பட அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களை மறுசீரமைத்து, அவற்றின் செயற்பாடுகளை விரிவுபடுத்துவதன் மூலம், முழு தேசிய பொருளாதாரமும் வளர்ச்சியை அனுபவிக்க முடியும். இந்த விரிவாக்கம் ஒட்டுமொத்த உள்நாட்டு மொத்த உற்பத்தியில் அதிகரிப்புக்கு பங்களிக்கிறது, ஒரு நல்ல பொருளாதாரக் கொள்கையுடன் இணைந்துள்ளது.

**கே: ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் பங்குகளை விற்பனை செய்வதற்கு கேள்விப்பத்திரம் கோரப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. தற்போதைய நிலைமை என்ன? இந்த நடவடிக்கையானது நிறுவனத்தை இலாபகரமான நிலைக்கு இட்டுச் செல்லும் என்ற நம்பிக்கை உங்களுக்கு உள்ளதா?**

பதில்: இந்த முயற்சிக்கு அமைச்சர்களும் ஒத்துழைக்கிறார்கள் என்ற நம்பிக்கை பலரிடையே நிலவுகிறது. இருப்பினும், இது ஒரு விதிவிலக்கான வெளிப்படையான முன்முயற்சி என்பதை வலியுறுத்துவது முக்கியமானது. இந்தப் பரிவர்த்தனைக்கான ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலை வழங்க வெளிநாட்டு நிறுவனத்தால் நியமிக்கப்பட்ட அதிகாரிகள் மற்றும் நிபுணர்கள் அடங்கிய குழு, தேவையான கேள்விப்பத்திர ஆவணங்களை உருவாக்குவதற்கு பொறுப்பாகும். முன்மொழிவுகளைப் பெற்றவுடன், இந்தக் குழு அவற்றை மதிப்பீடு செய்து அதன் பரிந்துரைகளை அமைச்சரவைக்கு முன்வைக்கும். இதற்கு அமைய முன்மொழிவுகளுக்கான அழைப்பிதழ்கள் குறித்த விளம்பரங்கள் பகிரங்கமாக வெளியிடப்படும். ஆர்வமுள்ளவர்கள் 45 நாட்களுக்குள் விண்ணப்பிக்க முடியும்.

**கே: இந்த விமான சேவையின் விமானங்கள் தாமதம் அடைவது குறித்து அண்மைக் காலமாக செய்திகள் வெளியாகி வந்தன. இந்த நிலைமையை மாற்ற எவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன?**

பதில்: விமானிகள் மற்றும் பொறியியலாளர்கள் அவர்களின் பிரச்சினைகள் தொடர்பாக திடீர் தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபட்டமையால் இந்த நிலைமை ஏற்பட்டது. இது துரதிர்ஷ்டமானதாகும். விமானிகள் மற்றும் மற்றும் பொறியியலாளர்களின் பற்றாக்குறை நம் நாட்டுக்கு மட்டுமன்றி உலகளாவிய ரீதியில் சவாலாக உள்ளது. நாங்கள் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளோம், மேலும் நிலைமையை வெற்றிகரமாகத் தீர்த்துள்ளோம். ஒப்பீட்டளவில் சிறிய விமான நிறுவனமாக செயல்படுகிறோம் என்பதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

எங்கள் அதிகபட்ச விமானத்திறன் ஆரம்பத்தில் 26 ஆக நிர்ணயிக்கப்பட்டது, பின்னர் 21 விமானங்களாகக் குறைக்கப்பட்டுள்ளது. இந்தக் குறைப்பு மற்றும் டொலர் தட்டுப்பாடு போன்றவை விமான சேவையைப் பராமரிக்கும் திறனைத் தடுக்கின்றன. மேலும் கூடுதல் விமானங்களைத் தக்கவைக்க எங்களுக்கு நிதி ஆதாரங்கள் இல்லை. எங்கள் அணுகுமுறை விமானத்தை குத்தகைக்கு எடுப்பது, ஆனால் பொருத்தமான விநியோகஸ்தர்களைக் கண்டுபிடிப்பதில் நாங்கள் சவால்களை எதிர்கொண்டோம். மறுசீரமைப்புத் திட்டத்தின் மூலம் ஒரு பெரிய விமான நிறுவனத்துடன் ஒருங்கிணைத்து, ஒரு வலுவான கூட்டாண்மையை உருவாக்கி இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காண முடியும்.

**கே: அண்மையில் மேற்கொள்ளப்பட்ட அமைச்சரவை மாற்றம் தொடர்பில் பல விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. தங்கள் கருத்து என்ன?**

பதில்: எனது பார்வையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சரியான நேரத்தில் மாற்றங்களைச் செய்துள்ளார். அவர் ஒரு உறுப்பினரால் அமைச்சரவையின் அளவைக் குறைத்துள்ளார். சில அமைச்சுக்கள் பிரிக்கப்பட்டுள்ள நிலையில், இந்தப் பிரிவு முறையான முறையில் நடத்தப்பட்டுள்ளது. பொதுமக்களின் எதிர்பார்ப்பு அமைச்சரவை விரிவாக்கம் அல்ல, இந்த அமைச்சரவை மாற்றம் அந்தக் கவலையை நிவர்த்தி செய்கிறது. இந்த நடவடிக்கைகளால் நாட்டின் குடிமக்கள் திருப்தி அடைகிறார்கள் என்று நான் நம்புகிறேன்.

**கே: அரசாங்கத்தின் பங்காளிகளுக்கு இடையிலான முரண்பாடுகள் அரசாங்கத்தின் ஸ்திரத்தன்மைக்கு இடையூறாக இருப்பதாகக் கருதுவோர் உள்ளனர். நீங்கள் இதுபற்றி என்ன கருதுகிறீர்கள்?**

பதில்: நாட்டில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளிலும் நெருக்கடிகள் தொடர்கதையாக இருந்து வருகின்றன. உள்ளக எதிர்ப்புக்களுக்கு முகம்கொடுக்காத ஒரு கட்சியை அடையாளம் காண்பது சாத்தியமற்றது. இத்தகைய நிகழ்வுகள் ஜனநாயக அரசியலின் இயல்பாகும். அரசாங்கத்திற்குள் உள்ள பல்வேறு கட்சிகளும் குழுக்களும் தமது இலட்சியங்களை வெளிப்படுத்தியுள்ள போதிலும், அரசாங்கத்தை சீர்குலைக்கும் அளவிற்கு மோதல்கள் அதிகரிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**கே: இந்த ஆண்டு வரவுசெலவுத் திட்டம் மக்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்து அவர்களுக்கு அதிக நிவாரணங்களை வழங்குமா?**

பதில்: பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதே மக்களின் விருப்பம், அந்த இலக்கை அடைய வடிவமைக்கப்பட்ட வரவுசெலவுத் திட்டம் தாக்கல் செய்யப்படும். இருப்பினும், சிறிய சலுகைகளை கோருபவர்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்வது சவாலான கருத்தாகும்.



'மக்களுக்கு நிவாரணம் அளிக்கும் பொருளாதாரத்தையும், அபிருத்தியடைந்த தேசத்தையும் உருவாக்குவதில் அரசாங்கம் அர்ப்பணிப்பு

---

## ஆளும் பா.ஜ.கவுக்கு மிக முக்கியமானதாக அமையவிருக்கும் அடுத்த வருட தேர்தல்!

**இந்தியாவில் அடுத்த ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், அதிக மக்களவைத் தொகுதிகளைக் கைப்பற்றி யார் ஆட்சிக்கு வருவார் என்பது குறித்த எதிர்பார்ப்புகள் அதிகரித்து வருகின்றன. இது தொடர்பாக கருத்துக்கணிப்புகளும் அதிகம் நடத்தப்பட்டு வருகின்றன.**




2024 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் ஆளும் பா.ஜ.கவுக்கு மிகவும் முக்கியமானதாகும். இந்தத் தேர்தலில் வெற்றி பெற்றால் பா.ஜ.கவுக்கு இது சாதனை வெற்றியாகும். அதை விட முக்கியமாக முன்னாள் பிரதமர் நேருவுக்குப் பின்னர் தொடர்ச்சியாக மூன்று முறை பிரதமராக பதவியேற்கும் சாதனையை பிரதமர் நரேந்திர மோடி பெறுவார். அது மட்டுமல்லாது 2025 ஆம் ஆண்டு பா.ஜ.கவின் தாய் அமைப்பான ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் நூற்றாண்டு விழா கொண்டாடப்பட இருக்கிறது. இதைச் சிறப்பாகக் கொண்டாட வேண்டுமெனில் பா.ஜ.க ஆட்சி அதிகாரத்தில் இருப்பது அவசியமாகும். ஆகவே 2024 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் பா.ஜ.கவுக்கு மிகவும் முக்கியமானது.

மறுபுறம் காங்கிரஸ் கட்சியைப் பொறுத்த அளவில் 2024 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் 'வாழ்வா சாவா' என்ற போராட்டமாக இருக்கிறது. ஏனெனில் கடந்த 9 ஆண்டுகளாக காங்கிரஸ் ஆட்சியில் இல்லை. இந்தக் காலத்தில் ஏராளமான கசப்பான சம்பவங்கள் கட்சிக்குள்ளும் வெளியேயும் நடந்திருக்கின்றன. குலாம் நபி ஆசாத் போன்ற முக்கிய தலைவர்கள் கட்சியிலிருந்து வெளியேறியது, கப்டன் அம்ரீந்தர் சிங் போன்றோர் கட்சி தாவியது, பஞ்சாப்பிலும், டெல்லி உள்ளாட்சியிலும் ஆட்சியை இழந்தது, ராகுல் காந்தி மீதான அவதூறு வழக்கு, நெஷனல் ஹெறால்ட் வழக்கில் சோனியாவுக்கு நெருக்கடி என காங்கிரஸ் கட்சி படாதபாடு பட்டுக்கொண்டிருக்கிறது.

எனவே இந்தத் தேர்தலில் பா.ஜ.கவை எப்படியாவது வீழ்த்த வேண்டும் என்று பெரிய அளவில் கூட்டணி அமைத்திருக்கிறது காங்கிரஸ். இதற்கு முன்னர் தங்களுடன் முரண்பட்டிருந்த ஆம் ஆத்மி, திரிணாமுல் காங்கிரஸ் கட்சிகளைக் கூட சமாதானம் பேசி இந்தக் கூட்டணியில் இணைத்திருக்கிறது. இக்கூட்டணிக்கு 'இந்தியா' என்றும் பெயரிட்டு நாடாளுமன்றத் தேர்தலுக்கு முழுவீச்சில் களம் இறங்கியுள்ளது காங்கிரஸ்.

**கசப்பான சம்பவங்களுடன் தேர்தலைச் சந்திக்கவிருக்கும் காங்கிரஸுக்கு 'வாழ்வா சாவா?' என்ற போராட்டம்!**





இந்தக் கூட்டணியின் 3 கட்ட கூட்டங்கள் ஏற்கனவே நடந்து முடிந்துள்ள நிலையில், தற்போது தொகுதி பங்கீட்டில் கட்சி கவனம் செலுத்தி வருகிறது. இந்நிலையில் பல்வேறு மாநிலங்களில் பா.ஜ.கவும், காங்கிரஸும் எத்தனை இடங்களை வெல்லும் என்பது தொடர்பான கருத்துக் கணிப்புகள் வெளியாகியுள்ளன. இந்த வரிசையில் தற்போது உத்தரப் பிரதேசத்திற்கான கருத்துக்கணிப்புகள் வெளிவந்திருக்கின்றன. நாடாளுமன்றத் தேர்தலைப் பொறுத்த அளவில் உத்தரப் பிரதேச மாநிலம் மிகவும் முக்கியமானதாகும். இங்கு அதிகமான நாடாளுமன்றத் தொகுதிகள் இருப்பதால், தேர்தலில் பெரும்பான்மை வெற்றியைப் பெற காங்கிரஸும், பா.ஜ.கவும் மாறி மாறி இந்த மாநிலத்தை குறிவைத்து வருகின்றன.

இவ்வாறிருக்கையில், இந்தியா டி.வி. சி.என்.எக்ஸ் (India TVCNX) சார்பில் நடத்தப்பட்ட தேர்தலுக்கு முந்திய கருத்துக்கணிப்பின் முடிவுகள் தற்போது வெளியாகியுள்ளன. அதன்படி உத்தரப் பிரதேசத்தில் மொத்தம் உள்ள 80 நாடாளுமன்றத் தொகுதிகளில் பா.ஜ.கவுக்கு 70 இடங்களும், காங்கிரஸுக்கு 2 இடங்களும் கிடைக்குமென கருத்துக்கணிப்பு கூறுகின்றது. சமாஜ்வாடி கட்சி 4, உ.பியின் மாநில கட்சியான சுகல்தேவ் பாரதிய சமாஜ் கட்சிக்கு 1 இடம், இராஷ்டிரிய லோக் தளம் கட்சிக்கு 1 இடம், அப்னா தளம் கட்சிக்கு 2 இடங்கள் கிடைக்க வாய்ப்பிருக்கிறது என கருத்துக்கணிப்பு முடிவுகள் கூறுகின்றன.

பகுஜன் சமாஜ் கட்சிக்கு எந்த இடமும் கிடைக்காது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே இந்தியா டி.வி.சி. என்.எக்ஸ் மேற்கு வங்காளம், ஆந்திரா, தெலுங்கானா, ஒரிசா, ராஜஸ்தான், மத்திய பிரதேசம், சத்தீஸ்கர், தமிழ் நாடு, கர்நாடகா, கேரளா, அசாம், அருணாச்சல பிரதேசம், திரிபுரா, மணிப்பூர், மேகாலயா, சிக்கிம், நாகலாந்து மற்றும் மிசோராம் என 18 மாநிலங்களில் கருத்துக்கணிப்பை நடத்தியிருந்தது.

அதன்படி இந்த 18 மாநிலங்களில் மொத்தமுள்ள 282 எம்.பி தொகுதிகளில் 118 தொகுதிகளை பா.ஜ.கவும், 110 தொகுதிகளை இந்தியா கூட்டணியும் வெல்ல வாய்ப்பிருக்கிறது என்று கூறியிருந்தனர். தற்போது இதனைத் தொடர்ந்து உத்தரப் பிரதேச மாநிலத்தின் கருத்துக் கணிப்புகளும் வெளியாகியுள்ளன. ஒட்டுமொத்தமாக தேசிய அளவில், 543 எம்.பி தொகுதிகளில் பா.ஜ.கவின் தேசிய ஜனநாயக கூட்டணி 318 இடங்களையும், இந்தியா கூட்டணி 175 இடங்களிலும் மற்ற கட்சிகள் 50 இடங்களிலும் வெற்றி பெறும் என்று கருத்து கணிப்பின் முடிவுகள் தெரிவிக்கின்றன.

அதேவேளையில் 'இந்தியா' கூட்டணியில் இடம்பெற்றுள்ள தி.மு.க தமிழ்நாட்டில் 21 தொகுதிகளை வென்றெடுக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேபோல் மேற்கு வங்க மாநிலத்தில் மம்தா பானர்ஜியின் திரிணாமுல் காங்கிரஸ் கட்சி 30 தொகுதிகளிலும் வெல்லும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

7 வடகிழக்கு மாநிலங்களில் இந்தியா கூட்ணி 3 இடங்களில் வெல்லும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தவிர பாஜக, காங்கிரஸ் கூட்டணியில் இடம்பெறாத நிலையில் ஒரிசாவில் முதல்வர் நவீன் பட்நாயக் தலைமையிலான பிஜி ஜனதாதளம் 15 இடங்களிலும், ஆந்திராவில் முதல்வர் ஜெகன் மோகன் ரெட்டியின் ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் கட்சி 15 தொகுதகிளிலும், தெலங்கானாவில் முதல்வர் சந்திரசேகர ராவின் பி.ஆர்.எஸ் கட்சி 17 தொகுதிகளில் 8 இடங்களிலும் வெற்றி பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.




**பா.ஜ.கவின் தாய் அமைப்பான ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் நூற்றாண்டு விழா 2025 இல்; பா.ஜ.க ஆட்சியில் இருந்தாலேயே விழா சிறப்பாக அமையும்**

எஸ்.சாரங்கன்...

# கல்விக்காக பெருந்தொகை பணத்தை ஒதுக்க அரசு முடிவு

## அடுத்த வருடம் நடைமுறைக்குவரும் என்கிறார் சுரேன் ராகவன்



எதிர்வரும் 2024ஆம் ஆண்டில் ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலைக் கல்விக்காக 255 பில்லியன் ரூபாவும் உயர் கல்விக்காக 210 பில்லியன் ரூபாவும் ஒதுக்க எதிர்பார்ப்பதாக, உயர் கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று முன்தினம் (03) நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

அடுத்த வருட இறுதியினுள் அனைத்து பல்கலைக்கழகங்களினதும் உபவேந்தர்களுக்கு மேலதிகமாக, பிரதி உபவேந்தர்கள் நியமிக்கப்படவுள்ளதாகவும், இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

அத்துடன், இலங்கையின் கற்றல் மற்றும் கற்பித்தல் உள்ளிட்ட இரு துறைகளிலும் மாற்றம் செய்யப்பட வேண்டுமெனவும், இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இதன்போது மேலும் தெரிவித்த இராஜாங்க அமைச்சர்,

"இலங்கையில் முதன்முறையாக நுண்கலை, மனிதநேயம் மற்றும் சமூக அறிவியல் பாடங்கள் தொடர்பான பகுப்பாய்வு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த வருட இறுதியினுள் உரிய இலக்குகளை அடைய எதிர்பார்ப்பதுடன், இந்தத் திட்டத்தினூடாக கலைப்பட்டதை மேலும் வலுவானதாக மாற்றியமைக்கவும் எதிர்பார்க்கின்றோம்.

21ஆவது நூற்றாண்டின் மூன்றாம் காலாண்டிலிருக்கும் நாம், உயர் கல்விக்கான தேசிய ஆணைக்குழு அல்லது அதிகார சபையொன்றை உருவாக்க எதிர்பார்க்கின்றோம். அதனூடாக பல்வேறு பகுதிகளில் முடங்கிக் கிடக்கும் நிர்வாகச் செயற்பாடுகளை ஓர் இடத்திலிருந்து செயற்படுத்தவும் எதிர்பார்க்கின்றோம்.

அதேபோல், பிரஜைகளை வலுவூட்டும் வகையில் 2025ஆம் ஆண்டிலிருந்து அரசாங்க பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பை பெறும் மாணவர்களுக்கு அரசாங்கம் முதலீடு செய்யும் முழுத் தொகையையும் நேரடியாக புலைமைப்பரிசில் அடிப்படையில் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். இதனால் எந்தவொரு மாணவரும் தனக்கு விருப்பமான பல்கலைக்கழகங்களை தெரிவுசெய்ய முடியும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தெரிவுக்கமைய, இந்நாட்டு அரசாங்கப் பல்கலைக்கழங்களுக்குள் தீர்மானம் மிக்க மாற்றத்தை ஏற்படுத்த முடியும்" என தெரிவித்தார்.

### வரவு-செலவுத்திட்ட விவாதம்...

தெரிவித்தார். சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் (19) பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு கூடிய போதே, இது தொடர்பாக இணக்கம் காணப்பட்டது.

இதற்கமைய, நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை மு.ப. 9.30 மணி முதல் மு.ப. 10.30 மணிவரை வாய்மூல விடைக்கான வினாக்களுக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. அதனையடுத்து, மு.ப. 10.30 மணிக்கு தஸ்ஸனா பௌத்த சன்விதானய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் இரண்டாம் மதிப்பீட்டுக்காக முன்வைக்கப்படவுள்ளதுடன், மு.ப. 10.30 மணி முதல் பி.ப. 5.0 மணிவரை கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் (திருத்தச்) சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதம் நடைபெறவுள்ளது.

அதனையடுத்து, பி.ப. 5.00 மணி முதல் பி.ப. 5.30 மணிவரை சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான இரண்டு வினாக்களுக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

2023 நவம்பர் 8ஆம் திகதி (புதன்கிழமை) மு.ப. 9.30 மணி முதல் மு.ப. 10.30 மணிவரை வாய்மூல விடைக்கான வினாக்களுக்கு (08 வினாக்கள்) நேரம் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், மு.ப. 10.00 மணி முதல் மு.ப. 10.30 மணிவரை பிரதமரிடம் கேட்கப்படும் வினாக்களுக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அதனையடுத்து, மு.ப. 10.30 மணி முதல் பி.ப. 5.00 மணிவரை நீதிமன்றம், நியாயசபை அல்லது நிறுவனமொன்றை அவமதித்தல் சட்டமூலம் மற்றும் குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் ஆகியன இரண்டாம் மதிப்பீட்டுக்காக விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

அதனையடுத்து, பி.ப. 5.00 மணி முதல் பி.ப. 5.30 மணிவரை ஆளும் கட்சியால் கொண்டுவரப்படும் சபை ஒத்திவைப்புவேளையின் போதான பிரேரணை மீதான விவாதம் நடைபெறும்.

2023 நவம்பர் 9ஆம் திகதி (வியாழக்கிழமை) மு.ப. 9.30 மணி முதல் மு.ப. 10.30 மணிவரை வாய்மூல விடைக்கான வினாக்களை அடுத்து மு.ப. 10.30 மணி முதல் பி.ப. 5.00 மணிவரை இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் மற்றும் கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் என்பன விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன. அதனையடுத்து, 2023ஆம் நிதியாண்டுக்கான 231.5 பில்லியன் ரூபா அனுமதியை பெறுவதற்கு 1ஆம் இலக்க குறைநிரப்பு மதிப்பீடு முன்வக்கப்படவுள்ளது. அதனையடுத்து, பி.ப. 5.00 மணி முதல் பி.ப. 5.30 மணிவரை சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான இரண்டு வினாக்களுக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

2023 நவம்பர் 10ஆம் திகதி (வெள்ளிக்கிழமை) மு.ப. 9.30 மணி முதல் மு.ப. 10.30 மணிவரை வாய்மூல விடைக்கான வினாக்களை அடுத்து, தனியார் உறுப்பினர் சட்டமூலமான உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தல்) சட்டமூலம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. அதன் பின்னர், தனியார் உறுப்பினர் சட்டமூலங்களான பாராளுமன்றத் தோ்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் மற்றும் மாகாணசபைத் தோ்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் என்பன இரண்டாம் மதிப்பீடுக்காக முன்வைக்கப்படவுள்ளது.

அதனையடுத்து, மு.ப. 10.30 மணி முதல் பி.ப. 5.00 மணிவரை கலஹா பத்ரவதி தேசிய பிக்குமார் பராமரிப்பு நிலைய நம்பிக்கை பொறுப்பு சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதம் நடைபெறவுள்ளது. விவாதத்தை அடுத்து, பி.ப. 5.00 மணி முதல் பி.ப. 5.30 மணிவரை எதிர்க்கட்சியால் கொண்டுவரப்படும் சபை ஒத்திவைப்பு வேளையின் போதான பிரேரணை மீதான விவாதம் நடைபெறும். அத்துடன், 2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட உரை இம்மாதம் 13ஆம் திகதி (திங்கட்கிழமை ) நண்பகல் 12.00 மணிக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் நிகழ்த்தப்படவுள்ளது.

நவம்பர் 14ஆம் திகதி முதல் 21ஆம் திகதிவரை ஞாயிறு தினங்கள் தவிர்ந்து, 7 நாட்கள் ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் (வரவு செலவுத்திட்டம்) இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதம் நடைபெறவுள்ளதாக, செயலாளர் நாயகம் தெரிவித்தார். அத்துடன், வரவுசெலவுத்திட்ட இரண்டாம் மதிப்பீடு மீதான வாக்கெடுப்பு நவம்பர் 21ஆம் திகதி (செவ்வாய்க்கிழமை) பி.ப. 6.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

குழுநிலை விவாதம் நவம்பர் 22ஆம் திகதி (புதன்கிழமை) முதல் டிசம்பர் 13ஆம் திகதி (புதன்கிழமை) வரை ஞாயிறு தினம் தவிர்ந்து, 19 நாட்கள் இடம்பெறவுள்ளன .இதற்கமைய, 2024ஆம் நிதியாண்டுக்கான வரவு செலவுத்திட்ட மூன்றாம் மதிப்பீடு மீதான வாக்கெடுப்பு டிசம்பர் 13ஆம் திகதி (புதன்கிழமை) பி.ப. 6.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

வரவு செலவுத்திட்ட விவாதத்தின் போது, ஒவ்வொரு நாளும் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 6.00 மணிவரை விவாதம் நடைபெறவுள்ளது. வாக்கெடுப்பு நடைபெறும் நாட்கள் தவிர்ந்த ஏனைய நாட்களில் பி.ப. 6.00 மணி முதல் பி.ப. 6.30 மணிவரை சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான விவாதம் நடைபெறும்.

### நிலப்பரப்பு, கடல் பாதுகாப்பு...

சாகல ரத்நாயக்க பணிப்புரை விடுத்துள்ளார். ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற பாதுகாப்பு மீளாய்வுக் குழுக் கூட்டத்திலேயே அவர் இந்த பணிப்புரையை விடுத்துள்ளார்.

நாட்டின் எதிர்கால பாதுகாப்பை உறுதி செய்வதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை பரிந்துரைக்கும் பொறுப்பை வழங்கி, அமைச்சரவையின் ஒப்புதலுக்கு உட்பட்டு ஜனாதிபதியால் மேற்படி குழு நியமிக்கப்பட்டுள்ளது.

ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சன்ன குணதிலகவின் தலைமையில் இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளதுடன், முப்படைகளின் ஓய்வுபெற்ற தளபதிகள் மற்றும் வெளிவிவகார அமைச்சு, நிதி மற்றும் பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சின் ஆலோசகர்கள் உட்பட ஆறு உறுப்பினர்களைக் கொண்ட குழுவாக இது அமைக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பாதுகாப்பு, சமுத்திர பாதுகாப்பு மற்றும் புலனாய்வு அமைப்புகளின் அபிவிருத்தி தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக 2030ஆம் ஆண்டை இலக்காகக் கொண்ட மூலோபாயத் திட்டத்தை தயாரிப்பதற்கும் ஜனாதிபதி இந்தக் குழுவுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

ஜனாதிபதியின் தலைமை அதிகாரியும் தேசிய பாதுகாப்பு ஆலோசகருமான சாகல ரத்நாயக்க, குழுவின் முதலாவது கூட்டத்தில் கலந்து கொண்டார்.

# ரயில்வே பொது முகாமையாளராக HMKW பண்டார நியமனம்



அமைச்சர் பந்துல குணவர்தனவின் கோரிக்கைக்கமைய ரயில்வே பொது முகாமையாளராக பொறியியலாளர் எச்.எம்.கே.டபிள்யூ.பண்டார நியமிக்கப்பட்டதை தொடர்ந்து, அவர் தனது கடமையை நேற்று முன்தினம் (03) பொறுப்பேற்றுக்கொண்டார்.

நுகவெல மத்திய மகா வித்தியாலயம் மற்றும் மாத்தளை வித்தியாலயத்தில் அவர் கல்வி கற்று, பேராதனை பல்கலைக்கழகத்தில் பொறியியல் பட்டத்தையும் மொரட்டுவை பல்கலைக்கழகத்தில் முதுகலைப் பட்டத்தையும் பெற்றுக்கொண்டுள்ளார்.

1996ஆம் ஆண்டு இலங்கை ரயில்வே திணைக்களத்தில் உதவி மாவட்ட பொறியியலாளராக இணைந்து மாவட்ட பொறியியலாளராக, பிரதி பிரதம பொறியியலாளராக, பிரதம பொறியியலாளராக மற்றும் மேலதிக பொது முகாமையாளராக பணியாற்றி 27 வருட பொறியியல் துறையில் அனுபவம் வாய்ந்த நபராவார் அவர்.

### சட்டவிரோத மின் இணைப்பால்...

இலங்கை மின்சாரசபை மேலும் தெரிவித்த போது, "இந்த ஆண்டு ஜனவரி மற்றும் ஓகஸ்ட் மாதங்களுக்கு இடையில் இவ்வாறான மின்சார கொள்முதலால் சபைக்கு 7 கோடியே 90 இலட்சத்து 74 ஆயிரத்து 857 ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது.

கடந்த 8 மாதங்களில் மின்மானி மாற்றங்கள் தொடர்பாக 1,041 சோதனைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் இதனால் இலங்கைமின்சாரசபைக்கு 7 கோடியே 64 இலட்சத்து 27 ஆயிரத்து 649 ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது. இது மட்டுமின்றி, மின் கம்பிகளில் பல்வேறு சாதனங்கள் பொருத்தப்பட்டமை தொடர்பாக 81 சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் இதில் 26 இலட்சத்து 47 ஆயிரத்து 207 ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது. இது தொடர்பான நபர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய பின்னர் அவர்களிடமிருந்து 36 இலட்சத்து 95 ஆயிரத்து 500 ரூபா அறவிடப்பட்டுள்ளது" என மேலும் தெரிவித்தது.

### காசாவையும் இலங்கையையும்...

உரையாற்றிய போதே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

மனித உரிமைகள் தொடர்பான உலகளாவிய பிரகடனத்தை மேற்கோள் காட்டிய ஜனாதிபதி, உலக நாடுகள் அனைத்தும் அதற்கு இணங்கிச் செயற்பட வேண்டுமெனவும் வலியுறுத்தினார்.

ஒக்டோபர் 7ஆம் திகதி ஹமாஸ் அமைப்பு, இஸ்ரேல் மீது நடத்திய தாக்குதலுக்கு இலங்கை அரசாங்கம் கண்டனம் தெரிவித்திருந்ததாகவும், பயங்கரவாதத்தை எதிர்க்கும் அதே நேரம், பலஸ்தீன அரச இறைமை தொடர்பான நியதிகளுக்கான ஒத்துழைப்பையும் இலங்கை உறுதிப்படுத்தியிருப்பதாகவும் தெரிவித்தார். சர்வதேச சமூகத்தின் இந்தக் கண்டனமானது சர்வதேச சட்டங்கள் மற்றும் ஒழுங்கு முறைகளின் கட்டமைப்புக்குள் பதிலடி கொடுக்கும் உரிமையை இஸ்ரேலுக்கு வழங்கியதாகவும், ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

எவ்வாறாயினும், அத்தகைய நியதிகள் உலகளாவிய ரீதியில் நடைமுறையில் இல்லாதிருக்கின்றமைக்கு கவலை தெரிவித்த ஜனாதிபதி, ஐ.நா. முகவர் நிறுவனங்களுக்கமைய காசாவில் 10,000 க்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டமை தொடர்பாக சர்வதேச சமூகத்திடமிருந்து கிடைக்கும் பதில்கள் என்னவென்ற கேள்விக்குறியை தோற்றுவித்துள்ளது. மனித உரிமைகள் தொடர்பாக அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகள் இலங்கைக்கு எதிராக தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளதை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, இலங்கை மற்றும் காசா பகுதி தொடர்பாக இந்த நாடுகள் கடைப்பிடிக்கும் அணுகுமுறையில் எதற்காக வேறுபாடு காட்டப்படுவதாகவும் கேள்வியெழுப்பினார். எவ்வாறாயினும், இரு தரப்பினருக்கும் ஒரே மாதிரியான சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமெனவும், ஜனாதிபதி வலியுறுத்தினார்.

சர்வதேச சட்டத்தின்படி பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுவதற்காக எடுக்கப்படும் அடிப்படை சுதந்திரத்தைப் பாதுகாத்தல் உள்ளிட்ட நடவடிக்கைகள் சர்வதேச மனித உரிமைகள் சட்டதிட்டங்களுக்கு அமைவானதாக காணப்பட வேண்டுமென்று சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அவற்றை நடைமுறைப்படுத்தும் போது ஏற்படக்கூடிய முரண்பாடுகள் தொடர்பாகவும் கேள்வியெழுப்பினார்.

அதேபோல், காசா எல்லையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் மனித உரிமைகள் மீதான பாதிப்பு தொடர்பாக கவலை தெரிவித்த ஜனாதிபதி, உணவுப் பாதுகாப்பின்மை, எரிபொருளின்மை, அத்தியாவசிய மருந்துப்பொருளின்மை, உள்ளக வருமானம் குறைவடைதல் என்பன இலங்கை கடந்த வருடத்தில் முகங்கொடுத்த நெருக்கடியை விடவும் பாரதூரமானதெனவும் சுட்டிக்காட்டினார்.

மேற்குலக நாடுகள் இலங்கை மற்றும் காச எல்லை தொடர்பாக பின்பற்றும் நியதிகளின் வேறுபாடுகள் தொடர்பாக கேள்வியெழுப்பிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தூய்மையான கரங்களுடன் உலகளாவிய தேவைகளை முன்னெடுக்க வேண்டியது அவசியமெனவும் வலியுறுத்தினார்.

### உரிமம் பெறாத நிதி...

பதிவு செய்யாமல் பரிவர்த்தனைகள் நடத்தப்பட்டால், அவை சட்டவிரோதமான நிறுவனங்களாக கருதப்படும்.

இதுபோன்ற சட்டவிரோத பரிவர்த்தனைகளை நடத்தியதாக நிரூபிக்கப்பட்டால், ஐந்து ஆண்டுகளுக்கு மேல் சிறைத்தண்டனை மற்றும் ஐம்பது இலட்சம் ரூபா அபராதம் விதிக்கப்படும். இலங்கையில் மத்திய வங்கியில் தற்போது ஐந்து நுண்நிதி கடன் வழங்கும் நிறுவனங்கள் மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளன. எனினும், 11,000 நுண்நிதி கடன் வழங்கும் நிறுவனங்கள் சட்டவிரோதமாக நாடு முழுவதும் இயங்கி வருகின்றன. அந்த நுண்கடன் நிறுவனங்களால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை தற்போது சுமார் 30 இலட்சமென்று நுண்நிதி கடன் பாதிக்கப்பட்டவர்களின் தேசிய இயக்கத்தின் பேச்சாளர் தெரிவித்தார்.

அவர்களில் சுமார் 295 பேர் இதுவரை தமது உயிரை மாய்த்துக் கொண்டுள்ளதாகவும் அநாதரவாக்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை ஆயிரக்கணக்கில் இருப்பதாகவும், அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

சில நுண்நிதி நிறுவனங்கள் வசூலிக்கும் ஆண்டு வட்டி சுமார் 70 சதவீதம்வரை உள்ளது. புதிதாக நிறுவப்பட்ட நுண்நிதி கடன் ஒழுங்குமுறை அதிகாரசபைக்கு திறைசேரி, மத்திய வங்கி மற்றும் சமூக சேவைகள் திணைக்களத்தின் பிரதிநிதிகள் பதவியில் நியமிக்கப்படுவர். மேலும், நிதி அமைச்சர் மற்றும் மத்திய வங்கி ஆளுநர் ஆகியோர் தலா நான்கு பிரதிநிதிகளை நியமிக்க முடியுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### டிசம். 22 முதல் பெப். 02வரை...

கற்கைகள், எதிர்வரும் டிசம்பர் மாதம் 22ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளது. இந்நிலையில், எதிர்வரும் 2024ஆம் ஆண்டு முதலாம் தவணை பாடசாலை நடவடிக்கைகள் பெப்ரவரி மாதம் 2ஆம் திகதி மீள ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும், கல்வி அமைச்சு தெரிவித்தது.

இந்த ஆண்டின் மூன்றாம் தவணையின் இரண்டாம் கட்டத்துக்கான பாடசாலை நடவடிக்கைகள், 2023ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதலாம் திகதி மீள ஆரம்பிக்கப்பட்டதுடன், இரண்டாம் தவணை கடந்த வெள்ளிக்கிழமை (ஒக்டோபர் 27) நிறைவடைந்தமை குறிப்பிடத்தக்கது.

### லிட்ரோ Gas விலைகள்...

அதன் புதிய விலை 1,431 ரூபாவாகும். 2.3கிலோகிராம் கொண்ட லிட்ரோ சமையல் எரிவாயு சிலிண்டரொன்றின் விலை 18 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 668 ரூபாவாகுமெனவும், லிட்ரோ சமையல் எரிவாயு நிறுவனத்தின் தலைவர் முதித்த பீரிஸ் மேலும் தெரிவித்தார்.

# இரத்தினபுரி பஸார் பள்ளிவாசலில் மீண்டும் ஜும்ஆ தொழுகை ஆரம்பம்



இரத்தினபுரி பஸார் ஜும்ஆ பள்ளிவாசலில் 4 வருடங்களின் பின்னர் ஜும்ஆ தொழுகை மீண்டும் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலை அடுத்து இப்பள்ளிவாசலில் ஜும்ஆ தொழுகை இடைநிறுத்தப்பட்டிருந்த நிலையில், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு உறுப்பினருமான சபீக் ரஜாப்தீன், வக்பு சபையுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் பின்னர், ஜும்ஆ தொழுகை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் எம்.பி. சபீக் ரஜாப்தீன், புதிய நிர்வாக சபைத் தலைவர் எம்.ஏ.எச். சூபி செயலாளர் உள்ளிட்டோருக்குஅப்பிரதேசமக்கள் நன்றி தெரிவித்தனர்.

முதலாம் நாள் ஜும்ஆ தொழுகையில் சுமார் 400 பேர் கலந்துகொண்டதாக, பள்ளிவாசலின் செயலாளர் ஐ.என்.எம்.நிஸாம் தெரிவித்தார்.

# நேபாளத்தில் பாரிய நிலநடுக்கம் பதிவு

## இதுவரை 160 பேர்வரை பலி



மேற்கு நேபாளத்தில் நேற்று முன்தினம் (03) ஏற்பட்ட மிகவும் சக்தி வாய்ந்த நிலநடுக்கத்தில் சிக்கி சுமார் 160 பேர் உயிரிழந்துள்ளதுடன், நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர்.

மேற்கு காத்மண்டுவிலிருந்து 500 கிலோமீற்றர் தூரத்திலுள்ள West Rukum மற்றும் Jajarkot ஆகிய மாவட்டங்களிலேயே இந்த நிலநடுக்கம் ஏற்பட்டதுடன், இந்த நிலநடுக்கம் 5.6ஆக ரிச்டர் அளவுகோலில் பதிவாகியதாக, அமெரிக்க புவியியல் ஆய்வு நிலையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கத்தின் அதிர்வு நேபாளத் தலைநகர் காத்மண்டுவிலும் அயல் நாடான இந்தியாவின் புதுடில்லி உள்ளிட்ட நகரங்களிலும் உணரப்பட்டதுடன், நேபாளத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டு ஒரு மணித்தியாலத்தினுள் மேலும் மூன்று அதிர்வுகள் உணரப்பட்டதாகவும், வெளிநாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டு உயிரிழப்புகளும் சேதங்களும் ஏற்படலாமென்ற அச்சம் காரணமாக அங்குள்ள மக்கள் நேற்று முன்தினம் பொது வெளியில் தமது இரவுப்பொழுதை கழித்ததாகவும், அச்செய்திகள் தெரிவிக்கின்றன்.

இந்தச் சம்பவத்தை தொடர்ந்து Jajarkot மருத்துவமனை காயமடைந்தவர்களால் நிரம்பி வழிந்துள்ளது. நிலநடுக்கம் ஏற்பட்ட மாவட்டங்களில் மீட்புப் பணி நடவடிக்கைகளில் அந்நாட்டு பாதுகாப்புப் படையினர் மிகத் தீவிரமாக ஈடுபட்டு வருவதாகவும், வெளிநாட்டுச் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், நேபாளம் பிரதமர் Pushpa Kamal Dahal நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட இடங்களை நேற்று (04) சென்று பார்வையிட்டதுடன், நிலநடுக்கத்தால் உயிரிழந்தவர்களுக்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கும் தனது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக்கொண்டார்.

### அரச வர்த்தமானியில்...

திருமணப் பதிவாளர்களை இணைத்துக்கொள்வதற்கான விண்ணப்பப்படிவங்கள், ஆட்சேர்ப்பு தகவல்கள் இன்று வாரமஞ்சரியுடன் இலவச இணைப்பாக வரும் அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

### தரமற்ற...

பற்றாக்குறை காரணமாக மருந்துகள் மட்டுமல்லாமல் ஏனைய பொருட்களுக்கான கொள்வனவின் போது, தரப்படுத்தல் மற்றும் தரம் ஆகியவற்றில் சிக்கல்கள் இருந்தன. ஆனால், உட்கட்டமைப்பு பிரச்சினைகள் இருந்ததுடன் மற்றும் தனிநபர்களும் இதில் ஈடுபட்டுள்ளதாக சுட்டிக்காட்டிய அமைச்சர், எதிர்காலத்தில் அவ்வாறானதொரு நிலை ஏற்படாதிருக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதாகவும் தெரிவித்தார். இதுவரை இருந்த குறைபாடுகள் விரைவில் நிவர்த்தி செய்யப்பட்டு, மருந்து இறக்குமதி மோசடிக்காரர்களுக்கு தடை ஏற்படுத்தப்படுமெனவும், சுகாதார அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

Aminoglobin மருந்து தொடர்பாக மூன்று விதமான எதிர்வினைகள் மட்டுமே பதிவாகியுள்ளதுடன், கண் வைத்தியசாலைகளில் நடந்தது பாக்டீரியாவின் மூலம் மருந்தின் பாதுகாப்பை இழந்ததாகவும் சுட்டிக்காட்டிய அமைச்சர், அது தொடர்பாக இழப்பீடு வழங்க முடியுமெனவும் தெரிவித்தார்.

## எங்கள் கருத்து

# இரு நூற்றாண்டு அவலம் இன்னும் தொடரலாகாது!

ஆனால் அவ்வாறாக இல்லையென்பது வெளிப்படையான உண்மை!

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் கட்டப்பட்ட 'லயன்' காம்பிராக்களுக்குள்ளேயே வாழ்கின்ற குடும்பங்கள் மலையகத்தில் இன்றும் உள்ளதுதான் அதற்கான சான்று ஆகும். மலையக மக்களுக்கான வீடமைப்பு, கல்வி, சுகாதாரம், தொழில்வாய்ப்பு, அடிப்படை வசதிகள் ஆங்காங்கே ஏற்படுத்தப்படுகின்ற போதிலும், அங்கு வாழ்கின்ற மக்களில் பெரும்பாலானோரின் வாழ்க்கை அவலங்கள் இன்றும் தொடரவே செய்கின்றன.

இலங்கையில் வாழ்கின்ற ஏனைய மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்திருப்பதைப் போன்று மலையக இந்திய வம்சாவளி மக்களின் வாழ்க்கைத்தரம் வளர்ச்சியடையாததற்கு காரணங்கள் எவையென்பதை, வரலாற்றை நன்றாக ஆராய்ந்தால் எவரும் புரிந்து கொள்ளலாம். ஆனால் வரலாற்றுத் தவறுகளைச் சுட்டிக்காட்டி ஒருவர் மீது ஒருவர் குற்றம் கூறிக் கொண்டிருப்பதில் அர்த்தம் இல்லை.

பொதுவாக பண்டைக்காலத்தில் இருந்து வரலாற்றை ஆராய்ந்து பார்த்தோமானால், தமிழினத்திற்குள் ஒற்றுமையென்பதே இருந்ததில்லையென்ற உண்மையைக் கண்டறிவது இலகுவானது. பண்டைய தென்னிந்திய தமிழ் மன்னர்களின் ஆட்சிக்காலத்திலிருந்து இன்றைய ஜனநாயக ஆட்சிக்காலத்திலும் கூட இனஒற்றுமையென்பதை தமிழினத்துக்குள் காண முடியாதிருக்கின்றது.

தமிழினத்துக்குள் ஒரு சமூகம் நன்கு வளர்ச்சியடைந்திருப்பதற்கும், மற்றொரு சமூகம் இன்னும் தாழ்ந்த நிலையில் வாழ்வதற்கும் இனஒற்றுமையின்மையே அடிப்படைக் காரணம். இனஒற்றுமையைப் பேணாத எந்தவொரு சமூகமும் கல்வியிலோ அன்றி பொருளாதாரத்திலோ வளர்ச்சியடைவதற்கு வாய்ப்பே கிடையாது.

தமிழ்ச் சமூகமானது தனக்குள்ளேயே ஏற்படுத்திக் கொண்ட இனம், மதம், குலம், பிரதேசம் என்ற போலியான வரம்புகளை விட்டு வெளியே வருவது முதலில் முக்கியம். தமிழ்ச் சமூகமானது வேற்றுமைகளுக்குள் துண்டாடப்படலாகாது. ஒட்டுமொத்த தமிழ்ச் சமூகத்துக்குள் மலையக மக்களும் உள்வாங்கப்படுவதற்கான முயற்சிகளில் ஈடுபட வேண்டிய பொறுப்பு மலையகம், வடக்கு, கிழக்கு உட்பட நாடெங்கும் வாழ்கின்ற அனைத்து தமிழ் முக்கியஸ்தர்களுக்கும் உள்ளது.

# இஸ்லாத்தின் பார்வையில் 'பலஸ்தீன்'



பலஸ்தீன் இஸ்லாமிய வரலாற்றில் முத்திரை பதித்த மறக்க முடியாத மிகவும் மகத்துவம் வாய்ந்த ஒரு புனித தேசமாகும். அருள் நிறைந்த மிகவும் கண்ணியத்துக்குரிய 'மஸ்ஜிதுல் அக்ஸா' பலஸ்தீனில் அமைந்துள்ளது. இது முஸ்லிம்களின் முதல் கிப்லாவும் (தொழுகைக்கு முன்னோக்கும் இடம்) மூன்றாவது புனிதஸ்தலமுமாகும். மக்காவிலுள்ள மஸ்ஜிதுல் ஹரம் மதீனாவிலுள்ள மஸ்ஜிதுன் நபவியைத் தொடர்ந்து இது முக்கியத்துவம் பெறுகிறது. இப்பள்ளிவாசலைத் தரிசித்து வணக்க வழிபாடுகளில் ஈடுபடுவது நபிவழிமுறையாகும்.

முஸ்லிம்கள் புனித பயணம் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்ட மூன்று பள்ளிவாசல்களும் இவைதான். அல் அக்ஸா பள்ளிவாசலில் ஒரு ரக்அத் தொழுவது 500 ரக்அத்கள் தொழும் நன்மைகளைப் பெற்றுத்தரக் கூடியதாகும்.

ஒரு தடவை இறைதூதர் முஹம்மத் நபி (ஸல்), 'முஸ்லிம்கள் புனித பயணம் மூன்று பள்ளிவாசல்களுக்கே மேற்கொள்ள முடியும். அவை மஸ்ஜிதுல் ஹரம், எனது இந்தப் பள்ளிவாசல் (மஸ்ஜிதுன் நபவி) மஸ்ஜிதுல் அக்ஸா போன்றவையாகும். (ஆதாரம் புஹாரி, முஸ்லிம், இப்னுமாஜா, அபூநாவூத்)

நபி (ஸல்) அவர்கள் மக்காவில் இருக்கும் போது (மதீனாவுக்கு ஹிஜ்ரத்துக்கு முன்னர்) பைத்துல் முக்கதிஸை நோக்கி தொழுதார்கள். ஹிஜரத்தின் பின்னர் 16 மாதங்கள் பைத்துல் முக்கதிஸை நோக்கி தொழுதார்கள். பின்னர் கஃபாவை நோக்கி முகத்தை திருப்பினார்கள்.

பூமியில் முதலாவதாகத் தோன்றிய பள்ளிவாசல் எது? என்று நான் நபி (ஸல்) அவர்களிடம் கேட்டேன். அதற்கவர் 'மஸ்ஜிதுல் ஹரம்' என்றார்கள். அதன் பிறகு எது என்று நான் கேட்டபோது 'அல் மஸ்ஜிதுல் அக்ஸா' என்றார்கள்.

இதேவேளை அல் குர்ஆன், 'இது அருள்புரியப்பட்ட பூமி' என்று குறிப்பிடுகிறது. தனது அடியானை இரவில் மஸ்ஜிதுல் ஹரமிலிருந்து அருள் சூழப்பட்ட மஸ்ஜிதுல் அக்ஸாவுக்கு அழைத்துச் சென்றவன் மிகவும் தூய்மையானவன்' (அல்குர்ஆன்: இஸ்ரா – 01)

நாம் அவரையும் (இப்ராஹீம் (அலை) லூத் (அலை) அவர்களையும் அருள் செய்யப்பட்ட பூமியில் பாதுகாத்தோம். இது ஷாம் பூமியை குறிப்பதாக இமாம் இப்னு ஹஸீர் (ரஹ்) (அன்பியா: 7) குறிப்பிடுகிறார். இது பலஸ்தீனை குறித்துக் காட்டும் ஒரு வசனமாகும்.

மூஸா (அலை) தனது சமூகத்தர்களிடம் 'எனது சமூகத்தவர்களே! உங்களுக்கு அல்லாஹ் கடமையாக்கிய புனித பூமியில் நுழையுங்கள்' என்றார். (மாஇதா: 20) அந்த பூமி நபிமார்கள் முஃமின்கள் வாழ்ந்த பூமி என்பதனால்தான் புனித பூமி எனப்படுவதாக அறிஞர்கள் அபிப்பிராயம் தெரிவிக்கின்றார்கள். இது டமஸ்கஸ், பலஸ்தீன், ஜோர்தானின் ஒரு பகுதியை குறிப்பதாக இமாம் கல்பி கருதுகிறார். இமாம் கதாதாவின் கருத்துப்படி இது முழு ஷாம் பிரதேசத்தையும் குறிக்கும்.

பலஸ்தீன் என்பது நபிமார்கள் பலர் வாழ்ந்த பூமியாகும். இப்றாஹீம் (அலை), இஸ்மாஈல் (அலை), இஸ்ஹாக், யஃகூப், யூஸுப், லூத், தாவூக், ஸுலைமான், ஸாலிஹ், ஸகரிய்யா, யஹ்யா, ஈஸா (ரழி) போன்றோர் இப்பூமியை தரிசித்துள்ளதாக அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது.

(20ஆம் பக்கம் பார்க்க)

ஏ.எம்.முஹம்மத் ஸஃப்வான்,
சீனன்கோட்டை, பேருவளை

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## பிம்புத் பினான்ஸ் பிஎல்சியின் வைப்பாளர்களுக்கான அறிவித்தல்

2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதித் தொழிற் சட்டத்தின் 37வது பிரிவின் பிரகாரம், நிதித்தொழிலை மேற்கொள்வதற்கென பிம்புத் பினான்ஸ் பிஎல்சிக்கு (BFP) வழங்கப்பட்ட உரிமம் 01.09.2023 இல் இருந்து நடைமுறைக்குவரும் வகையில் இரத்து செய்யப்பட்டுள்ளது. இலங்கை மத்திய வங்கியானது 2021 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்ட (SLDILSS) ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளின் படி அனைத்து காப்பீடு செய்யப்பட்ட வைப்பாளர்களுக்கும் இழப்பீட்டைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கும்.

அனைத்து வைப்பாளர்களும் இழப்பீடு செலுத்துவதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு முறையாக பூர்த்தி செய்யப்பட்ட உரிமைகோரல் படிவங்களை அறிவுறுத்தல்களில் கொடுக்கப்பட்டுள்ளபடி தேவையான ஆவணங்களுடன் சமர்ப்பிக்குமாறு இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள். கூட்டு வைப்பாளர்கள் தனித்தனியான உரிமைகோரல் படிவங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றார்கள். வைப்பாளர்களுக்கான இழப்பீட்டுக் கொடுப்பனவுகள், இலங்கை வங்கிகளுக்கிடையேயான கொடுப்பனவு முறைமை மூலம் குறிப்பிட்ட வங்கிக் கணக்குகளுக்கு நேரடியாக வரவு வைக்கப்படும். இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்ட ஒழுங்குவிதிகளின் படி, பிம்புத் பினான்ஸ் பிஎல்சியின் காப்பீடு செய்யப்பட்ட வைப்பாளர்கள் 01.09.2023 இலிருந்து ஆரம்பித்து இரண்டு (02) ஆண்டுகளுக்குப் பிந்தாமலோ அல்லது ஒடுக்குதல் தொடர்பாக தகுதிவாய்ந்த நீதிமன்றத்தால் ஒழிப்போன் நியமிக்கப்பட முன்னரோ அதாவது இதில் ஏதேனும் முன்னதாக நிகழும் நிகழ்வொன்றுக்கு முன் அவர்களுடைய உரிமைகோரல்களை சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

உரிமைகோரல் படிவம் இலங்கை மத்திய வங்கியின் இணையத்தளமான - www.cbsl.gov.lk இல் கிடைப்பதோடு அவற்றின் பிரதிகள் இலங்கை மத்திய வங்கியின் தலைமை அலுவலகத்திலும் அனுராதபுரம், கிளிநொச்சி மாத்தளை, மாத்தறை, நுவரெலியா மற்றும் திருகோணமலை ஆகிய இடங்களிலுள்ள பிராந்திய அலுவலகங்களிலும் கிடைக்கும். முறையாக பூர்த்தி செய்யப்பட்ட உரிமைக்கோரல் படிவங்கள் வேண்டப்பட்ட ஆவணங்களுடன் சேர்த்து இலங்கை மத்திய வங்கியின் அஞ்சல் அறைக்கு ஒப்படைக்கப்படவோ அல்லது கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் முடிந்தவரை விரைவாக அனுப்பப்படவோ வேண்டும். கடிதஉறையின் மேல் இடது பக்க மூலையில் "BFP" எனக் குறிப்பிடவும். ஏதேனும் மேலதிக விபரங்களை கீழே கொடுக்கப்பட்டுள்ள தொலைபேசி இலக்கங்கள் மூலம் இலங்கை மத்திய வங்கியின் தலைமை அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

பணிப்பாளர்
தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
இல. 30, சனாதிபதி மாவத்தை
கொழும்பு 01.

மேலதிக விசாரணைகளுக்கு:
0112 - 477261
0112 - 477276

### பிம்புத் பினான்ஸ் பிஎல்சி
### பிரகடனத்துடனான உரிமைகோரல் படிவம்
### இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்டம்

உத்தியோகபூர்வ அடையாள இல:
(அலுவலகப் பயன்பாட்டுக்கு மட்டும்)

ஒவ்வொரு வைப்பாளரும் கூட்டுக் கணக்குகளின் விபரங்கள் உள்ளடங்கலான உரிமைகோரல் படிவங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். அத்தகைய கூட்டுக் கணக்கு வைத்திருப்பவர்கள் தனித்தனியான உரிமைகோரல் படிவங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். இந்தப் படிவத்தைப் பூர்த்தி செய்ய தயவுசெய்து கீழே தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பார்க்கவும். **(அனைத்து வெற்றிடங்களையும் பூர்த்தி செய்வது கட்டாயமாகும்)**

1. வைப்பாளரின் விபரங்கள்:

1.1 முழுப் பெயர்:......................................................

1.2 அடையாள இலக்கங்கள்: (தயவுசெய்து, கீழே இலக்கம் (I),(II) மற்றும் (III) இல் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை வாசிக்கவும்) (அடையாள ஆவணங்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்.)

அ. தேசிய அடையாள அட்டை இல./ வியாபாரப் பதிவு இல:......................ஆ. கடவுச் சீட்டு இல.:......................இ. ஒட்டுநர் உரிம இல. :......................

1.3 தற்போதைய முகவரி:......................................................

1.4 தொலை பேசி இலக்கங்கள்: நிலையான.............................. செல்லிட.............................. 1.5 மின் அஞ்சல் முகவரி:..............................

2. இழப்பீட்டுக் கொடுப்பனவைச் செலுத்துவதற்கான வைப்பாளரின் வங்கிக்கணக்கு விபரங்கள்:- (தயவுசெய்து, கீழே இலக்கம் (IV) இல் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை வாசிக்கவும்):

1.1 கணக்கு வைத்திருப்பவரின் பெயர்:..............................1.2 வங்கியின் பெயர்:.............................. 2.3 வங்கிக் கணக்கு இல:..............................

(2.3ல் குறிப்பிட்ட சேமிப்புப் புத்தகத்தின் முதல் பக்கத்தின் பிரதி அல்லது வங்கிக் கூற்றின் பிரதி ஒன்று இணைக்கப்பட வேண்டும்.)

1.3 கணக்கு வைத்திருக்கும் கிளையின் பெயர்:..............................

3. 01.09.2023 இல் உள்ளவாறான வைப்பு விபரங்கள் (ஒவ்வொரு வைப்புக்கும் தனித்தனியாக விபரங்கள் வழங்கப்பட வேண்டும், அத்தோடு மேலதிகமான விபரங்களுக்கு பிறிதொரு தாளைப் பயன்படுத்தவும்) (தயவுசெய்து, கீழே இலக்கம் (V) மற்றும் (VI) இல் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை வாசிக்கவும்):

| கணக்கு இல./வைப்புச் சான்றிதழ் இல./ சேமிப்புப் புத்தக இல.* | தொடர் இல. | வைப்பின் வகை சேமிப்பு/ நிலையான வைப்பு (தனி/கூட்டு) | வைப்புத் தொகை (ரூ.) |
|---|---|---|---|
| | | | |
| | | | |

* **அனைத்து மூல வைப்புச் சான்றிதழ்கள், சேமிப்புப் புத்தகங்கள் மற்றும் இறுதியான புதுப்பித்தற் கடிதங்கள் ஏதேனும் இருந்தால் வழங்கவும்.**

4. பிரகடனம் (தயவுசெய்து, கீழே இலக்கம் (VII) இல் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை வாசிக்கவும்):

.............................. (உரிமை கோருபவரின் முகவரி) ஐச் சேர்ந்த .............................. (உரிமை கோருபவரின்/ சட்டபூர்வ பயனாளியின் பெயர்) ஆகிய நான், இவ்வுரிமைகோரலானது, .............................. (வைப்பாளரின் பெயர்) சார்பில் செய்யப்படுகின்றது என்றும், சொல்லப்பட்ட வைப்பின் எந்தவொரு பகுதியும் கொடுப்பனவு செய்யப்படவில்லை என்றும், மேலே எடுத்துரைக்கப்பட்டவாறு சொல்லப்பட்ட நிறுவனத்துடன் அதில் அல்லது அதன் ஏதேனும் பாகத்தின் புறக்குறிப்பீடோ அல்லது சாட்டுதலோ செய்யப்படவில்லை என்றும் கூறுகின்றேன்.

நான், வைப்பு/ வைப்புக்கள் மீது இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்டதினால் மேற்கொள்ளப்படும் இழப்பீட்டுக் கொடுப்பனவின் பெறுகையின் மீது மூன்றாந்தரப்பினால் கோரப்படும் அல்லது உரிமைகோரப்படும் பொறுப்புக்கள், வட்டி, இழப்புக்கள், செலவுகள், கட்டணங்கள் என்பன உள்ளடங்கலாக, ஆயினும் இதற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படாத ஏதேனும் அல்லது அனைத்து உரிமைகோரல்களில் இருந்து/ எதிராக இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித்திட்டம், இலங்கை மத்திய வங்கியின் ஆளும் சபை மற்றும் அதன் எவரேனும் ஊழியர்கள், அலுவலர்கள், பிரதிநிதிகள் மற்றும் முகவர்களுக்கு இழப்பீட்டினை அளிப்பதற்கும் தீங்கின்றி இருப்பதற்கும் இத்தால் இணங்குகின்றேன்.

**உரிமை கோருபவரின் கையொப்பம்:**..............................

உரிமை கோருபவர் இதன் உள்ளடக்கங்களை வாசித்துப் புரிந்துகொண்டு................ இல்............திகதி.............மாதம்...................ஆண்டு என் முன்னால் பிரகடனப்படுத்திக் கையொப்பமிட்டார்.

**கையொப்பம்:**..............................
சத்தியப்பிரமாண ஆணையாளர்/ சமாதான நீதவான்
உத்தியோகபூர்வ முத்திரை:...................... முகவரி:.............................. திகதி:..............................

### உரிமைகோரல் படிவத்தைப் பூரணப்படுத்துவதற்கான பொதுவான அறிவுறுத்தல்கள்

இந்த உரிமைகோரல் படிவமானது 01.09.2023 அன்று நிதித் தொழில் உரிமம் இரத்து செய்யப்பட முன்னதாக பிம்புத் பினான்ஸ் பிஎல்சியால் இதுவரையில் மீளச் செலுத்தப்பட்டிராத வைப்பாளர்களுக்கு மட்டுமே ஏற்புடையதாகும்.

I. பின்வருவனவற்றைக் கருத்தில் கொண்டு தொடர்புடைய அனைத்து அடையாள விபரங்களும் பூரணப்படுத்தப்படல் வேண்டும்:
அ) தனிப்பட்ட கணக்குகள்- தேசிய அடையாள அட்டை/ கடவுச்சீட்டு/ ஓட்டுநர் உரிமம்.
ஆ) பராயமடையாதோர் கணக்குகள் - பாதுகாவலரின் அடையாள அட்டை/ கடவுச்சீட்டு/ ஓட்டுநர் உரிமம் மற்றும் பராயமடையாதவரின் பிறப்புச் சான்றிதழ்.
இ) தனியுடமை, பதிவுசெய்யப்படாத கழகம், சங்கம், பங்குடமை அல்லது வேறு ஏதேனும் கூட்டிணைக்கப்படாத நிறுவனம்- அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பதாரர்களின் அல்லது பங்காளர்களின் தேசிய அடையாள அட்டை/ கடவுச்சீட்டு/ ஓட்டுநர் உரிமத்தின் இலக்கம்.
ஈ) கம்பனிச் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாக இருக்குமிடத்து கூட்டிணைப்புச் சான்றிதழ், படிவம் 20 (அதாவது பணிப்பாளர்/செயலாளர் மாற்றம் அல்லது பணிப்பாளர்/ செயலாளரின் விபரங்கள்) மற்றும் கம்பனியின் நிலையில் ஏற்படும் மாற்றங்களின் அடிப்படையில் தேவைப்படுத்தக்கூடிய ஏனைய ஆவணங்கள் என்பன வழங்கப்படல் வேண்டும்.
உ) ஏனைய பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்கள்- பிரதேச/உள்ளூராட்சி மன்றங்களின் கீழ் பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்களாக இருக்குமிடத்து தொடர்பான அதிகாரசபையிடமிருந்தான பதிவுசெய்தல் சான்றிதழ்கள் வழங்கப்படல் வேண்டும்.

II. பிம்புத் பினானஸ் பிஎல்சியில் வைப்புகளைத் திறப்பதற்கு பயன்படுத்தப்பட்ட தொடர்புடைய அனைத்து அடையாள ஆவணங்களினதும் உறுதி செய்யப்பட்ட பிரதிகள் வழங்கப்பட வேண்டும். (சட்டத்தரணி/ பிரசித்த நொத்தாரிசு/ சத்தியப்பிரமாண ஆணையாளர்/ சமாதான நீதவான் ஒருவரால் அடையாள ஆவணங்களின் பிரதிகள் சான்றுப்படுத்தப்படல் வேண்டும்).

III. பிம்புத் பினானஸ் பிஎல்சியில் வைப்புச்சான்றிதழ்/ புத்தகம் மற்றும் கணக்கைத் திறப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட அடையாள ஆவணங்களிடையே (தேசிய அடையாள அட்டை/ கடவுச்சீட்டு/ ஓட்டுநர் உரிமம்) வைப்பாளரின் பெயரில் அல்லது அடையாள இலக்கத்தில் வேறுபாடுகள் இருப்பின் அத்தகைய வேறுபாடுகளுக்கான காரணங்களைக் குறிப்பிட்டு சத்தியப்பிரமாண ஆணையாளர்/ சமாதான நீதவானால் சான்றுப்படுத்தப்பட்ட சட்டரிதியான செல்லுபடியாகத்தக்க சத்தியக்கடதாசியொன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

IV. வைப்பாளர்களது வங்கிக் கணக்கு விபரங்கள் பின்வருவனவற்றால் துணைசெய்யப்படல் வேண்டும்:
அ) சேமிப்புக் கணக்கு- கணக்கு வைத்திருப்பவரின் விபரங்களை உள்ளடக்கிய சேமிப்புப் புத்தகத்தின் முதல் பக்கத்தின் பிரதியொன்று.
ஆ) நடைமுறைக் கணக்கு- கணக்கின் இறுதிக் கூற்று.

V. நிலையான வைப்பொன்றைப் பொறுத்தவரையில் "வைப்புத் தொகை" என்பது இறுதியாகப் புதுப்பிக்கப்பட்ட வைப்புப் பெறுமதியாக/ இல்லாவிட்டால் நிலையான வைப்புச் சான்றிதழின் முகப் பெறுமதியாக இருத்தல் வேண்டும்.

VI. உரிமைகோரப்படும் தொகை ஆவணச் சான்றுகளால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். எனவே, சமர்ப்பிக்கப்படும் உரிமைகோரல் படிவங்கள் பின்வருவனவற்றால் துணைசெய்யப்படல் வேண்டும்:
அ) நிலையான வைப்புக்கள்- அனைத்து நிலையான வைப்புச் சான்றிதழ்களின் மூலப்பிரதிகள், இறுதியான புதுப்பித்தல் கடிதங்கள்.
ஆ) சேமிப்புக் கணக்குகள்- அனைத்து சேமிப்பு மூலப் புத்தகங்கள்.
இ) வைப்புச்சான்றிதழ் ஏதேனும் - வைப்புக்களின் அனைத்து மூல சான்றிதழ்கள்.

VII. வைப்பாளர் தன்னுடைய சொந்த உரிமைகோரல் படிவத்தைச் சமர்ப்பிப்பதாயின் (கூட்டுக்கணக்கு வைப்பாளர் உட்பட) உரிமைகோரல் படிவத்தின் பிரகடனப்பகுதியில் உரிய வைப்பாளர் "வைப்பாளர், உரிமை கோருபவர்/ சட்டபூர்வப் பயனாளி" என்ற இரண்டின் கீழும் தனது பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும்.

**விசேட குறிப்பு:** தரப்பட்ட அறிவுறுத்தல்களின் படி முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் வேண்டப்பட்ட அனைத்து ஆவணங்களையும் சமர்ப்பித்த வைப்பாளர்கள்/சட்டபூர்வப் பயனாளிகளுக்கு மட்டுமே கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தயவுகூர்ந்து கவனிக்கவும்.

## இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம்
## கைத்தொழில் அமைச்சு
## கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடெட்
## கேள்வி அறிவித்தல்
## கஹடகஹ கிறபைட்டின் விற்பனை
## சர்வதேச போட்டி ரீதியான விலைமனு

**வீலைமனு குறிப்பு இல.: KGLL/MTC/01/2023**

இலங்கையின் கஹடகஹ சுரங்கத்தில் கிடைக்கப்பெறும் பின்வரும் கிறபைட் உற்பத்திகளை வாங்குவதில் ஆர்வம் காட்டும் தரப்புகளிடம் இருந்து கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடெட் சார்பில் அமைச்சு கேள்விக் குழுவின் தலைவரினால் சர்வதேச விலைமனுக்கள் கோரப்படுகின்றன. விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான தகைமை அளவுகோல்களைப் பெற்ற மற்றும் கிறபைட் உற்பத்திகளை வாங்குவதற்கு மற்றும் ஏற்றுமதி அல்லது அந்த உற்பத்திகளுக்கு மேலும் பெறுமதி சேர்ப்பதற்கு ஆர்வம் காட்டுகின்ற உள்ளூர் தரப்புகளுக்கும் தமது விலைமனுக்களை சமர்ப்பிக்க முடியும். ஆர்வமுடைய தரப்புகள் ஒன்லைன் மூலம் அல்லது கைகளால் விலைமனுக்களை சமர்ப்பிக்க முடியும்.

**கிறபைட் உற்பத்திகள் விற்பனை மற்றும் ஏனைய தொடர்புடைய விபரங்கள்**

| வரிசை இல. | கிறபைட் உற்பத்திகள் | விற்பனை அளவு (மெ.தொ.) | மெ.தொ. ஒன்றுக்கான விலைமனு பிணை (இ. ரூபா அல்லது அமெ. டொ.) | பொதிகள் மற்றும் விநியோகம் | விநியோக விதிமுறைகள் | விலைமனு சமர்ப்பித்தல் மற்றும் நிறைவு திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | 90-92 C% Graphite Chip (HS 25041090) | 1000 மெ.தொ. | 18 அமெ.டொ. அல்லது 6,014.48 இ.ரூபா | 1 மெ.தொ. ஜம்போ பை | Ex – works Kahatagaha Mine, Kurunegala FOB (Colombo Port) | 2023.11.27 அன்று மு.ப. 10.00 கொழும்பு, இலங்கை |
| 2. | 90-92 C% Graphite Powder (HS 25049010) | | 19 அமெ.டொ. அல்லது 6,348.62 இ.ரூபா | | | |
| 3. | 92-95 C% Graphite Chip (HS 25041090) | | 24 அமெ.டொ. அல்லது 8,019.31 இ. ரூபா | | | |
| 4. | 92-95 C% Graphite Powder (HS 25049010) | | 25 அமெ.டொ. அல்லது 8,353.45 இ.ரூபா | | | |
| 5. | 90-95 C% Graphite (HS 25041090) | | 16 அமெ.டொ. அல்லது 5,346.21 இ.ரூபா | | | |

*** குறிப்புகள்**

- 1000 மெ.தொ. அளவு வரம்புக்குள் மேலுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்ட எந்த ஒரு வகையான உபத்தியையும் கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடெட்டினால் தயாரிக்க முடியும். அதனால், விற்பனையில் உள்ள உற்பத்திகளின் எண்ணிக்கை மற்றும் 1000 மெ.தொ. கிடைக்கப்பெறும் அளவு அடிப்படையில் தமது தேவைக்கு அமைய எந்த ஒரு கிறபைட் உற்பத்தியையும் வாங்குவதற்கு விலைமனுதாரர்கள் விலைமனுக்களை சமர்ப்பிக்க முடியும்.
- வழங்க முடியுமான மொத்த கிறபைட் அளவு 1000 மெ.தொ. ஆகும். அதனால், கேள்வி மதிப்பீட்டின் போது அதிக விலையுள்ள உற்பத்தி முதல் குறைந்த விலை உற்பத்தி வரை அளவு பிரித்தல் பரிசீலிக்கப்படும். எவ்வாறாயினும், விற்பனை தொடர்பில் இறுதி முடிவு அமைச்சு கேள்விக் குழுவினால் எடுக்கப்படும்.
- கொள்வனவுக் கோரல் அளவு தனிப்பயனாக்கப்பட்டது மற்றும் ஒவ்வொரு மற்றும் அனைத்து கிறபைட் உற்பத்திக்காக குறைந்தது 20 மெ.தொ. ஆகும். ஆரம்பத்தில் வைக்கப்பட்ட விலைமனு பிணை மற்றும் விலைமனுதாரர்கள் மூலம் கோரப்பட்ட விலைமனு எடையளவுக்கு மேல் எந்த வழங்கலும் அனுமதிக்கப்படமாட்டாது.
- ஒவ்வொரு மற்றும் அனைத்து கிறபைட் உற்பத்தியின் எடையளவு ஒன்றுக்கான விலைமனுப் பிணை மேலுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. கொள்வனவாளர் மூலம் தேவைப்படும் அளவுக்கு அமைய விலைமனு பிணை கணக்கிடப்பட்டிருத்தல் வேண்டும்.
- powder plant மற்றும் chip plant இன் அதிகபட்ச கொள்ளளவு மாதம் ஒன்றுக்கு முறையே 100 தொன்கள் மற்றும் 300 தொன்களாகும். எனவே உற்பத்தி மற்றும் அளவுக்கு அமைய வழங்கல் கால அளவு மாறுபடும். மேலுள்ள குறிப்புகள் தொடர்பில் மேலதிக விபரங்களை பெறுவதற்கு +94706666850/ +94742024751 என்ற தொலைபேசி, infokgllbid@ gmail.com என்ற மின்னஞ்சலில் கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடெட், செயலாக்க நிர்வாகியை தொடர்புகொள்ளவும்.

அறிமுகம், விலைமனுக்களுக்கான அழைப்பு, உற்பத்திகளின் விபரக்குறிப்பு, விதிகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் விலைமனுப் படிவங்களைக் கொண்ட முழுமையான விலைமனு ஆவணம் www.industry.gov.lk மற்றும் www.https://kgraphite.lk/ ஆகிய உத்தியோகபூர்வ இணையதளங்களில் மற்றும் இலங்கைக்கான வெளிநாட்டு தூதரகங்களிலும் கிடைக்கப்பெறும். ஆர்வமுடைய தரப்புகள் அந்த இணையதளங்களுக்கு பிரவேசித்து கட்டணம் இன்றி விலைமனு ஆவணத்தை தரவிறக்கம் செய்ய முடியும். மேலும் 2023.11.23 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் infokgllbid@gmail.com மின்னஞ்சல் முகவரிக்கு உத்தியோகபூர்வ கோரிக்கை ஒன்றை சமர்ப்பிப்பதன் மூலம் மாற்றாக கட்டணம் இன்றி அமைச்சுக் கேள்விக் குழுவிடம் இருந்து விலைமனு ஆவணத்தை பெறலாம்.

விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு இலங்கை, காலி வீதி, இல. 73/1, கைத்தொழில் அமைச்சின் கேட்போர்கூடத்தில் 2023.11.13 ஆம் திகதி இலங்கையின் கொழும்பு நேரத்தில் மு.ப. 10.00 இற்கு நடத்த திட்டமிடப்பட்டிருப்பதோடு அந்தத் திகதியில் நேரடியாக மற்றும் மெய்நிகர் தளத்தில் நடத்தப்படும். விலைமனுதாரர்கள் 2023.11.12 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் infokgllbid@gmail. com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு கோரிக்கை ஒன்றை அனுப்புவதன் மூலம் தொடர்புடைய தகவல் மற்றும் இணைப்பை பெற முடியும்.

பிரிவு 01 இன் கீழ் விலைமனுக்களின் தயாரிப்பு, உறுப்புரை 4.6 இன் 4.6.7 உப உறுப்புரையில் குறிப்பிடப்பட்ட ஆவணங்கள் மற்றும் மேலுள்ள விற்பனை உற்பத்திகளுக்கு எதிராக குறிப்பிடப்பட்டிருக்கும் தொகையை கொண்ட விலைமனு பிணையை விலைமனு கொண்டிருத்தல் வேண்டும். அந்த விலைமனு பிணை விற்பவரால் அங்கீகரிக்கக் கூடிய ஒரு புகழ்பெற்ற வாங்குபவரின் மதிப்பிடப்பட்ட வங்கியின் எதிர் உத்தரவாதத்திற்கு எதிராக இலங்கையில் உள்ள உரிமம் பெற்ற வர்த்தக வங்கி மூலம் வழங்கப்பட்ட வங்கி உத்தரவாத வடிவத்தில் அல்லது நிதிப் பரிமாற்றம்/ தந்தி பரிமாற்றம் மூலம் ரொக்கப்பணத்தில் இருத்தல் வேண்டும்.

ரொக்கப்பணத்திலான விலைமனு பிணையானது விலைமனு ஆவணத்தின் உறுப்புரை 4.6 இன் 4.6.7 உப உறுப்புரையில் குறிப்பிடப்பட்ட விற்பவரின் வங்கிக் கணக்கிற்கு செலுத்தி வரவு வைப்பது மற்றும் விற்பவரின் வங்கியினால் வங்கி உத்தரவாதத்தை உறுதி செய்வதன் மூலம் மாத்திரமே அங்கீகரிக்கப்படும்.

2023.11.27 ஆம் திகதி இலங்கை, கொழும்பில் மு.ப. 10.00க்கு திறக்கப்படுவதற்கு விலைமனுதாரர் மூலம் பாதுகாக்கப்பட்ட மேற்கூறிய ஆதார ஆவணங்களை சேர்த்து கையொப்பமிட்டவரால் முறையாக நிரப்பப்பட்டு மற்றும் கையொப்பமிட்ட விலைமனு படிவம் அல்லது விலைமனுவை திறப்பதற்கான சொந்த கடவுச்சொல்லை பெற்று 2023.11.27 ஆம் திகதி இலங்கை, கொழும்பில் மு.ப. 10.00 அல்லது அதற்கு முன்னர் கிடைப்பதற்கு kgllgraphitebid@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்படும் கட்டாய பிரதி ஒன்றுடன் icbp_kahatagaha@ industry.gov.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு விலைமனுவுடன் தயாரிக்கப்பட்ட ஒற்றை PDF ஒன்றை அனுப்ப வேண்டும். உயர் பாதுகாப்பு தகவல் விதிகளுக்கு அமைவாக விலைமனுதாரர் மின்னஞ்சலுக்கு செல்லுபடியான டொமைன் ஒன்றை பயன்படுத்த வேண்டும்.

தமது சொந்த கடவுச்சொல்லை பாதுகாத்து விலைமனுவை சமர்ப்பித்துள்ள விலைமனுதாரர், 2023.11.27 ஆம் திகதி இலங்கை, கொழும்பு நேரப்படி மு.ப. 10.00 - மு.ப. 10.15 இற்குள் kgllgraphitebid@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு கட்டாயப் பிரதியுடன் icbp_kahatagaha@industry.gov.lk என்ற அதே மின்னஞ்சல் முகவரிக்கு தமது கடவுச்சொல்லை அனுப்புதல் வேண்டும்.

தமது விலைமனுக்களை கைகளால் சமர்ப்பிக்க விரும்பும் விலைமனுதாரர்கள், பரிந்துரைக்கும் விலைமனு படிவங்கள் மற்றும் தேவையான ஆவணங்களுடன் முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விலைமனு ஒன்றை கடித உறையில் இட்டு பின்னர், அதனை பொருத்தமான மற்றொரு கடித உறையில் இட்டு முத்திரையிட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "கஹடகஹ கிறபைட்டின் விற்பனை" மற்றும் கேள்வி இலக்கம் "KGLL/MTC/01/2023" என்று குறிப்பிட்டு 2023.11.27 ஆம் திகதி இலங்கை, கொழும்பு நேரப்படி மு.ப. 10.00 அல்லது அதற்கு முன்னர் கிடைப்பதற்கு தலைவர், அமைச்சு கேள்விக் குழு, கைத்தொழில் அமைச்சு, தபால் பெட்டி 570, இல.: 73/1, காலி வீதி, கொழும்பு-03, இலங்கை என்ற முகவரிக்கு பதிவுத் தபால், விரைதூதர் மூலம் அனுப்புவது அல்லது மேலுள்ள அமைச்சின் மறுசீரமைப்பு பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் கைகளால் சேர்த்தல் வேண்டும்.

மேலுள்ள அறிவுறுத்தல்களை பின்பற்றாத விலைமனுக்கள் மற்றும் தாமதிக்கும் விலைமனுக்கள் மற்றும் 2023.11.27 ஆம் திகதி இலங்கை, கொழும்பு நேரப்படி மு.ப. 10.00 - மு.ப. 10.15க்குள் கடவுச்சொல் இல்லாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படுவதோடு மதிப்பீட்டுக்காக கருத்தில்கொள்ளப்படமாட்டாது. அதனால், விலைமனுதாரர்கள் சரியான நேரத்தில் கடவுச்சொல்லுடன் மற்றும் தமது விலைமனுக்களை சரியான முறையில் அனுப்புவதற்கு நன்கு தெரிந்திருத்தல் வேண்டும்.

2023.11.27 ஆம் திகதி இலங்கை கொழும்பு நேரப்படி மு.ப. 10.15க்கு இலங்கை, கொழும்பு 03, காலி வீதி, இல. 73/1, கைத்தொழில் அமைச்சின் கேட்போர்கூடத்தில் விலைமனு திறக்கும் குழுவினால் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கும் சந்தர்ப்பத்தில் பங்கேற்பதற்கு விரும்பும் விலைமனுதாரர் அல்லது அவர்தம் அங்கீகாரம்பெற்ற பிரதிநிதிக்கு அமைச்சு கேள்விக் குழு மூலம் அனுமதி அளிக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்பட்ட உடனேயே, விலைமனுதாரர்களுக்கு விலைமனு கிடைத்ததை அமைச்சு கேள்விக் குழு ஒப்புக்கொள்ளும்.

விலைமனுக்களை சமர்ப்பிப்பது தொடர்பில் மேலதிக விபரம் மற்றும் தெளிவை பெறுவதற்கு, infokgllbid@gmail.com என்ற மின்னஞ்சல் மற்றும் +94112432705 என்ற தொலைபேசி இலக்கத்தில் கைத்தொழில் அமைச்சின் மறுசீரமைப்பு பிரிவு பிரதிப் பணிப்பாளரை தொடர்புகொள்ளவும் மற்றும் விலைமனு ஆவணத்தின் தொழில்நுட்ப விடயங்கள் தொடர்பில் மேலும் விபரம் மற்றும் தெளிவை பெறுவதற்கு kgllbid@gmail.com என்ற மின்னஞ்சல் மற்றும் +94706666850 அல்லது +94742024751 என்ற தொலைபேசி இலக்கங்களில் கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடெட், செயலாக்க நிர்வாகியை தொடர்புகொள்ளவும்.

**தலைவர்,
அமைச்சு கேள்விக் குழு,
கைத்தொழில் அமைச்சு,
தபால் பெட்டி 570,
இல. 73/1, காலி வீதி,
கொழும்பு 03,
இலங்கை.**

# தமிழரசுக் கட்சிக்குள் உருவெடுத்துள்ள பூசல்!

## இரா. சம்பந்தனின் தலைமைத்துவம் குறித்து எதிரும்புதிருமான வாதப்பிரதிவாதங்கள்!

**இலங்கையைப் பொறுத்த வரையில் 2024ஆம் ஆண்டு தேர்தல் ஆண்டாகும் என்பது ஓரளவு உறுதியாகியிருக்கும் நிலையில், ஜனாதிபதித் தேர்தலா அல்லது பொதுத்தேர்தலா முதலில் வரும் என்பதே இன்னமும் அறியப்படாதுள்ளது.**

இருந்தபோதும் அரசியல் கட்சிகள் தேர்தல் களத்தைச் சந்திப்பதற்கான முன்னாயத்தங்களை ஏற்கனவே ஆரம்பித்து விட்டன. கூட்டணி அமைப்பது, தொகுதி ரீதியாக கட்சிகளைப் பலப்படுத்துவது என முன்னாயத்தப் பணிகளில் கட்சிகள் இறங்கி விட்டன.

தேர்தலை நோக்காகக் கொண்டு அரசியல்வாதிகளால் முன்வைக்கப்படும் கூற்றுக்களும் பரபரப்பாகப் பேசப்பட்டு வருகின்றன. இந்த வரிசையில் தமிழ் அரசியல் தரப்பில் சிரேஷ்ட தலைவராகக் கருதப்படும் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் தொடர்பில் முன்வைக்கப்பட்ட கருத்தொன்று தமிழ் மக்கள் மத்தியில் அதிகம் பரபரப்பாகப் பேசப்பட்டு வருகிறது.

பல தசாப்த கால அரசியல் அனுபவம் கொண்ட இரா. சம்பந்தன் அவர்கள் பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலக வேண்டும் என்ற கருத்தே இவ்வாறு அரசியல் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் ஊடகமொன்றில் நடைபெற்ற கலந்துரையாடல் நிகழ்வில் கருத்துத் தெரிவித்தபோது, சம்பந்தன் பதவி விலக வேண்டும் என்ற விடயத்தை வலியுறுத்தியிருந்தார்.

"சம்பந்தனின் முதுமை காரணமாக அவர் தொடர்ச்சியாக பாராளுமன்றத்துக்கு வருகை தரமுடியாதிருக்கின்றமை தொடர்பில் நாங்கள் கரிசனை கொண்டிருக்கின்றோம். விசேடமாக நான் அந்த விடயத்தில் கரிசனைகளைக் கொண்டிருக்கின்றேன்.

அந்த வகையில் நான் ஒருவிடயத்தினை இந்தச் சந்தர்ப்பத்தில் பகிரங்கமாகத் தெரிவிக்க விரும்புகின்றேன். சில ஆண்டுகளுக்கு முன்னதாக அவரால் பாராளுமன்றத்துக்குச் சமுகமளிக்க முடியாத நிலைமைகள் ஏற்பட ஆரம்பித்த சந்தர்ப்பத்தில் நான் சம்பந்தனிடத்திலேயே நேரடியாக பதவி விலகுமாறு கோரினேன். அதன்போது சம்பந்தன் அதனை நிராகரித்திருந்தார்.

அத்துடன், அவர் அதற்கான காரணத்தினையும் தெளிவுபடுத்தினார்.

'2020 ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலின் போது திருகோணமலை மக்கள் தன்னை அந்த மாவட்டத்தின் முதலாம் நபராக தெரிவு செய்திருக்கின்றார்கள். அவர்கள் எனது உடல் நிலைமைகளை அறிந்தே தெரிவு செய்திருக்கின்றார்கள்' என இரா. சம்பந்தன் கூறியிருந்தார்".

இவ்வாறு சுமந்திரன் எம்.பி அந்த ஊடகக் கலந்துரையாடலில் தெரிவித்திருந்தார்.





**பல தசாப்தகால முதிர்ந்த அரசியல் அனுபவமும், சர்வதேச செல்வாக்கும் கொண்ட தமிழ் அரசியல் தலைவர் ஒருவர் பதவி விலகுவது தமிழ் மக்களுக்குப் பாதிப்பாகும் என்பது பலரது கருத்து!**

சுமந்திரன் எம்.பியின் இந்தக் கருத்து தமிழ் அரசியல் அரங்கத்தில் பேசுபொருளாகியுள்ளது. இரா.சம்பந்தன் முதுமை நிலையை அடைந்திருப்பதால் செயற்பாட்டு அரசியலில் தீவிரமாக ஈடுபட முடியாது என்பது யதார்த்தமான உண்மையாக இருந்தாலும், தமிழ் அரசியலில் அவருடைய வகிபாகம் முக்கியமானதாகப் பார்க்கப்படுகிறது.

ஒரு சில தசாப்தங்கள் பின்னோக்கிச் சென்றால் 'தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு' என்ற அரசியல் கட்சியை உருவாக்க எல்.ரி.ரி.ஈயினர் பின்புலத்தில் முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர்.

அதன் போது அக்கூட்டமைப்பின் தலைவராக சம்பந்தனை நியமித்திருந்தனர். அந்தக் காலகட்டத்தில் ஆனந்தசங்கரி உள்ளிட்ட சிரேஷ்ட தலைவர்கள் இருந்தாலும் சம்பந்தன் மாத்திரம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் உள்வாங்கப்பட்டிருந்ததுடன், ஆனந்தசங்கரி ஓரங்கட்டப்பட்டார்.

பல்வேறு தமிழ்க் கட்சிகள் குறிப்பாக முன்னாள் ஆயுதக் குழுக்களாக இருந்து பின்னர் ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்து கொண்ட கட்சிகளைக் கொண்டதாகவே கூட்டமைப்பு உதயமானது. எல்.ரி.ரி.ஈயினர் பலமாக இருந்த காலத்தில் வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கான ஆதரவைப் பெருமளவில் வழங்கியிருந்தனர்.

அதன் பின்னர், படிப்படியாக தமிழ்க் கூட்டமைப்பின் மீதான மக்கள் நம்பிக்கை குறையத் தொடங்கியது என்று கூறலாம். குறிப்பாக யுத்தம் முடிவடைந்த பின்னர் மக்களின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்படத் தொடங்கியது. இலங்கைத் தமிழரசுக் கட்சி எடுக்கும் முடிவுகளுடன் கூட்டமைப்பின் ஏனைய பங்காளிக் கட்சிகள் இணங்கிப் போகும் நிலைமை குறையத் தொடங்கியது.

கூட்டமைப்பின் தலைவர்கள் மத்தியில் மாற்றுக் கருத்துக்கள் நிலவி வருவதுடன், கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் பதிவு செய்யும் நடவடிக்கையிலும் இதுவரை வெற்றிகாண முடியாதுள்ளது. அது மாத்திரமன்றி, கடந்த சில சந்தர்ப்பங்களில் தமிழ்க் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளில் இலங்கைத் தமிழரசுக் கட்சி தனியான வழியிலும், ஏனைய பங்காளிக் கட்சிகள் தனியான வழியிலும் பயணிப்பதையும் காணக் கூடியதாகவிருந்தது.

குறிப்பாக இலங்கை விவகாரம் தொடர்பில் சர்வதேசத்துக்கு அழுத்தம் கொடுக்கும் விடயத்தில் தமிழரசுக் கட்சி தனியாகச் செயற்பட்டமையும் நாம் அனைவரும் அறிந்த விடயம். இருந்தபோதும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் முரண்பாடுகள் ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் அதனை ஒற்றுமையாக தக்கவைத்துக் கொள்வதில் சிரேஷ்ட தலைவர் இரா.சம்பந்தனின் வகிபாகம் சிறப்பானதாகும்.

அது மாத்திரமன்றி, சர்வதேச மட்டத்தில் இரா.சம்பந்தனுக்குக் காணப்படும் அங்கீகாரம் பெரியதாகும். இலங்கைக்கு வரும் வெளிநாட்டுத் தூதுவர்கள் உள்ளிட்ட பிரதிநிதிகள் சம்பந்தன் தலைமையிலான தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களையே சந்திக்கின்றனர். அத்துடன், தமிழ்க் கூட்டமைப்பைப் பிரியாமல் இணைக்கும் பாலமாகவும் சம்பந்தன் காணப்படுகின்றார்.

அவருக்குக் காணப்படும் கௌரவம் காரணமாக தமிழ்க் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் முரண்பாடுகளை ஒரு புறம் வைத்துவிட்டு, இணைந்து செயற்பட்டு வருகின்றனர். இவ்வாறான பின்னணியில் இரா.சம்பந்தன் பாராளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறந்து அவ்விடத்துக்கு வேறொருவர் கொண்டுவரப்படுவாராயின், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் எதிர்கால ஒற்றுமை குறித்த சந்தேகம் காணப்படுகிறது.

இது இவ்விதமிருக்க, இரா சம்பந்தன் தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள கருத்துக்கு ஆதரவாகவும், எதிராகவும் தற்போது விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

'தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் வடக்கு – கிழக்கு தமிழ் மக்களின் ஓர் அடையாளம். அந்த அடையாளத்தை வெளியேற்றினால், அவரது இடத்துக்கு வரக்கூடியவர்கள் எவரும் இல்லை' என்று தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் சி.வி. விக்கினேஸ்வரன் ஆதரவாகக் கருத்துக் கூறியுள்ளார்.

'சம்பந்தன் பதவி விலகத் தேவையுமில்லை, அவரைக் கட்டாயப்படுத்த வேண்டிய அவசியமும் இல்லை. சம்பந்தனின் பாராளுமன்றக் காலம் 2025 வரை என்று இருந்தாலும் பாராளுமன்றம் அதற்கு முன்னர் கலைக்கப்படக் கூடிய சந்தர்ப்பங்களே அதிகம்.

வடக்கு – கிழக்குத் தமிழ் பாராளுமன்ற அங்கத்தவர்கள் பாராளுமன்றத்தில் தமது குரலையும், உடலையும் வெளிக்காட்டுவதுதான் அவர்களின் கடமையென்று நினைப்பது தவறு. தமிழ் மக்களின் வருங்காலம், பாராளுமன்றத்தின் பெரும்பான்மை விருப்புடன் சுமுகமாக நிர்ணயிக்கப்படப் போவதில்லை. ஊரறிய, உலகறிய எமது அவலங்களை வெளிநாடுகளுக்குத் தெரியப்படுத்தினால்தான் ஏதாவது நடக்கும். தமிழ் மக்களின் தற்போதைய நிலையை சர்வதேசம் அறிந்து கொள்வதற்கு வெளிநாட்டுத் தூதரகங்களை நாடிய முக்கிய நபர் எமது இரா.சம்பந்தனே' என விக்னேஸ்வரன் கூறியுள்ளார்.

மறுபக்கத்தில், இளைய தலைமுறையினருக்கு வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும் என்ற கோணத்தில் பார்க்கும்போது தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல்வாதிகளும் இளமையான துடிப்புள்ள சிந்தனை உள்ளவர்களாக மாற வேண்டும் என்ற கருத்தும் முன்வைக்கப்படுகிறது.

அதேநேரம், எதிர்வரும் தேர்தலை இலக்கு வைத்து நடத்தப்படும் காய் நகர்த்தலாகவும் இதனை அரசியல் அவதானிகள் நோக்குகின்றனர்.

பி.ஹர்ஷன்...

---

# ஹமாஸ் இயக்கத்துக்கு எதிரான யுத்தத்தால் அப்பாவி மக்கள் பலிக்கடாவாகுவது நீதியல்ல!

**'இஸ்ரேல் – ஹமாஸ் மோதல் சாதாரண பலஸ்தீன மக்களை பலிக்கடாவாக்கி விடக்கூடாது' என்று இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.**

'இப்பிரச்சினையைத் தீர்த்து அந்தப் பிரதேசங்களில் அமைதியை ஏற்படுத்துவதற்கான ஐக்கிய நாடுகள் சபை பொதுச்செயலாளரின் செயற்பாடுகளுக்கு, எமது பூரண ஆதரவை வழங்குவோம்' என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேசிய வைபவமொன்றில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போது இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார் இலங்கை ஜனாதிபதி.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இலங்கையின் ஜனாதிபதியும் 193 நாடுகள் அங்கம் வகிக்கும் ஐக்கிய நாடுகள் சபையில் அங்கம் வகிக்கும் நாடொன்றின் தலைவருமாவார். அத்தோடு இஸ்ரேலுடனும் பலஸ்தீனுடனும் இராஜதந்திர உறவைப் பேணிவரும் நாடொன்றின் தலைவராகவும் அவர் இருக்கின்றார். அத்தோடு இஸ்ரேல் காஸா யுத்தம் மனிதாபிமான அடிப்படையில் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபையில் கொண்டு வரப்பட்ட தீர்மானத்திற்கு ஆதரவளித்த120 நாடுகளில் ஒன்றின் தலைவராகவும் ஜனாதிபதி இருந்து கொண்டிருக்கின்றார்.

இவை மாத்திரமல்லாமல் இலட்சக்கணக்கான இலங்கைக் குடிமக்கள் தற்போது யுத்தம் இடம்பெற்றுவரும் இஸ்ரேல், லெபனான் உள்ளிட்ட மத்திய கிழக்கு நாடுகளில் பணியாளர்களாகத் தொழில் புரிந்து வருகின்றனர்.

இவ்வாறான நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இஸ்ரேல் ஹமாஸ் யுத்தம் சாதாரண பலஸ்தீன மக்களை பலிக்கடாவாக்கி விடக்கூடாது என்று கேட்டுக் கொண்டிருக்கின்றார்.

சாதாரண மக்களின் நலன்களை முன்வைத்தே அவர் இக்கோரிக்கையை முன்வைத்திருக்கிறார் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

யுத்தம் நிறுத்தப்பட வேண்டுமென்பதே உண்மையான அமைதி, சமாதானத்தை விரும்பும் அனைவரதும் விருப்பமும் எதிர்பார்ப்பும் ஆகும்.

அதனால்தான் ஐ.நா. சபை உள்ளிட்ட உலகத் தலைவர்கள் காஸாவில் உடனடி யுத்தநிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்து வருகின்றனர். ஒக்டோபர் 07 ஆம் திகதி முதல் இடம்பெற்றுவரும் இந்த யுத்தம் ஏற்படுத்திவரும் இழப்புகளும் அழிவுகளும் மனித சமுதாயத்தை பேரதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளன. இன்றைய நவீன அறிவியல் யுகத்தில் இவ்வாறு அழிவுகளை ஏற்படுத்த இடமளிக்கப்பட்டிருப்பது மனித சமூகத்தையே வெட்கித் தலைகுனியச் செய்திருக்கிறது.

இது ஹமாஸுக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான யுத்தமான போதிலும் காஸாவில் இடம்பெறும் அழிவுகள் வரலாற்றில் கறைபடிந்த அத்தியாயமாகப் பதிவாகின்றன.

ஹமாஸ் இஸ்ரேலில் மேற்கொண்ட தாக்குதலில் 1400 பேர் கொல்லப்பட்டதோடு பலர் காயமடைந்தனர். 200 மேற்பட்டோர் பணயக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டுள்ளனர். இதனைத் தொடர்ந்து 23 இலட்சம் பலஸ்தீன மக்கள் வாழும் காஸா மீது முழு அளவிலான போரை இஸ்ரேல் ஆரம்பித்தது. காஸாவுக்கான மின்சாரம், தண்ணீர், மருந்து விநியோகம், உணவு விநியோகம் அனைத்தையும் தடுத்து நிறுத்தி விட்டு இஸ்ரேல் இந்த யுத்தத்தை முன்னெடுத்துள்ளது. சுமார் மூன்றரை இலட்சம் படைவீரர்கள் காஸாவை சுற்றி வளைத்து முன்னெடுத்துள்ள இந்த யுத்தத்தில் அதிநவீன ஆயுதங்களும் பயன்படுத்தப்படுகின்றன.

இக்குரூர யுத்தத்தை நிறுத்தி அமைதி வழிக்குத் திரும்புமாறு ஐ.நா. உள்ளிட்ட எல்லா நாடுகளும் முன்வைத்து வருகின்ற கோரிக்கைகள் ஆரம்பம் முதல் நிராகரிக்கப்பட்டு வருகின்றன. நீடித்துவரும் இந்த யுத்தம் காரணமாக காஸாவில் 9000க்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களில் 3700 க்கும் மேற்பட்டவர்கள் குழந்தைகளாவர். இந்த யுத்தத்தினால் குழந்தைகளும் பெண்களும் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

பொதுக்கட்டடங்கள், பள்ளிவாசல்கள், குடியிருப்புக்கள், அகதி முகாம்கள், தொடர் மாடிக்கட்டடங்கள் என்பன மாத்திரமல்லாமல் உட்கட்டமைப்பு வசதிகள் அனைத்தும் வான்வழித்தாக்குதல்கள் மூலம் அழித்து நிர்மூலமாக்கப்படுகின்றன.

ஹமாஸ் இயக்கத்தினர் மேற்கொண்ட தாக்குதலுக்காக பலஸ்தீனின் காஸா மக்கள் மீதான தாக்குதல்களை நியாயப்படுத்த முடியாது என்பதுதான் ஐ.நா. செயலாளர் நாயகம் உள்ளிட்ட உலகத் தலைவர்களின் கருத்தாகும்.

காஸா என்பது பலஸ்தீனின் மத்திய தரைக் கடலோரப் பிரதேசம். 41 கிலோ மீற்றர் (25 மைல்கள்) நீளமும் 6 முதல் 12 கிலோ மீற்றர் அகலமும் (3.7 மைல் முதல் 7.5 மைல்) கொண்ட 365 சதுர கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்ட பிரதேசமாகும். இங்கு 23 இலட்சம் மக்கள் வாழ்கின்றனர்.

இவ்வாறான சிறிய பிரதேசமொன்றின் மீது முன்னெடுக்கப்பட்டுவரும் கடும் தாக்குதல்கள் காரணமாக காஸா உருக்குலைந்து வருகின்றது. ஆனால் யுத்தம் நிறுத்தப்பட்டு அமைதி ஏற்படும் போது அந்த மக்களுக்கு அத்தனை வசதிகளையும் மீண்டும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அதற்காக மில்லியன் கணக்கான டொலர்களை செலவிட்டாக வேண்டும்.

இது இஸ்ரேல் பலஸ்தீன் பொருளாதாரத்தில் மாத்திரமல்லாமல் பிராந்திய மற்றும் உலகளாவிய பொருளாதாரத்திலும் பாரிய தாக்கங்களையும் பாதிப்புக்களையும் நிச்சயம் ஏற்படுத்தவே செய்யும்.

ஏற்கனவே உக்ரைன் ரஷ்ய போர் காரணமாக அந்நாடுகளது பொருளாதாரத்தில் மாத்திரமல்லாமல் உலகளாவிய பொருளாதாரத்திலும் தாக்கங்கள் ஏற்பட்டுள்ளன. இதனால் வறிய மற்றும் மூன்றாம் மண்டல நாடுகள் பலவிதமான நெருக்கடிகளுக்கும் அழுத்தங்களுக்கும் முகம்கொடுத்துள்ளன. அதனால்தான் இந்த யுத்தம் ஆரம்பமானதும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்த நெருக்கடி நிலைமை உலகளாவிய எரிபொருள் விலையில் ஏற்படுத்தக்கூடிய கடுமையான தாக்கத்தை சுட்டிக்காட்டி, ஆபிரிக்க ஒன்றியத்தின் பரிந்துரையின்படி, இந்த மோதலை உடனடியாக நிறுத்துமாறு கோரிக்கை விடுத்தார். அத்தோடு இம்மோதல்கள் காரணமாக எரிபொருளின் விலையில் நீண்டகால அதிகரிப்பு ஏற்படுவதற்கான சாத்தியம் காணப்படுவதாகவும், இது இலங்கை உள்ளிட்ட அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் பொருளாதாரத்தில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும்' எனவும் சுட்டிக்காட்டினார்.





**மனிதநேயத்துக்கு எதிரான தாக்குதல்கள் உடனடியாக முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டுமென்பதே இலங்கை உட்பட உலகநாடுகளின் பொதுவான வேண்டுகோள்!**

யுத்தத்தினால் அழிக்கப்படும் குடியிருப்புகளையும் கட்டடங்களையும் உட்கட்டமைப்பு வசதிகளையும் மீளக்கட்டியெழுப்பவே வேண்டும். அதற்காக கோடிக்கணக்கில் செலவிடவே வேண்டும். இது வளர்முக மற்றும் மூன்றாம் மண்டல நாடுகளுக்கு நிச்சயம் தாக்கமாகவும் அழுத்தமாகவும் இருக்கவே செய்யும்.

இந்த யுத்தம் ஆரம்பமான பின்னர் எரிபொருளின் விலை உலக சந்தையில் 3 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. அதன் தாக்கத்தை ஒவ்வொரு நாட்டின் பொருளாதாரமும் உணரவே செய்கிறது. அதிலும் குறிப்பாக இஸ்ரேல் உள்ளிட்ட மத்திய கிழக்கு நாடுகளில் பணியாளர்களாக தொழில்புரிபவர்கள் அனுப்பி வைக்கும் அந்நிய செலாவணி குறைவடையக்கூடிய ஆபத்தும் உள்ளது.

இந்த யுத்தத்தின் விளைவாக இஸ்ரேலில் பணிப்பெண்ணாக பணிபுரிந்த இலங்கைப் பெண்ணொருவர் அண்மையில் கொல்லப்பட்டார். அவரது பிரேதம் அண்மையில் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டது. இதேபோன்று லெபனானில் பணிபுரிந்த பெண்மணியொருவரும் இந்த யுத்தத்தின் விளைவாக கொல்லப்பட்டுள்ளார்.

இதன் விளைவாக இந்த நாடுகளுக்கு தொழிலுக்கு செல்வதற்கும் பணியாளர்கள் அஞ்சுகின்றனர்.

ஆகவே காஸாவிலுள்ள பலஸ்தீன மக்களின் நலன்களை மாத்திரமல்லாமல் உலகளாவிய மக்களின் பொருளாதார நலன்களையும் கருத்தில் கொண்டு இந்த யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்காக அனைத்து தரப்பினரும் உழைக்க வேண்டும். அது பலஸ்தீன மக்களுக்கு மாத்திரமல்லாமல் உலக மக்களுக்கும் ஆற்றும் பாரிய சேவையாகும். அதுவே அமைதி சமாதானத்தை விரும்பும் அனைத்து தரப்பினரதும் எதிர்பார்ப்பாகும்.



மர்லின் மரிக்கார்...

# பொருளாதார நெருக்கடி நிலவுகின்ற வேளையிலும் அரச ஊழியர் சம்பள உயர்வில் ஜனாதிபதி கரிசனை!

வார இறுதி
அரசியல் குறிப்பேடு
சம்யுக்தன்

**அரச ஊழியர்களின் கோரிக்கைக்கு தாமதமின்றி சாதகமான பதில்!**

**எதிர்வரும் 2024 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு அரசாங்கம் ஆயத்தமாகி வரும் நிலையில், பட்ஜட் ஊடாகக் கிடைக்கக் கூடிய நிவாரணங்கள் குறித்து மக்கள் மத்தியில் பல்வேறு எதிர்பார்ப்புக்கள் காணப்படுகின்றன.**

நாடு பொருளாதார நெருக்கடியைச் சந்தித்து சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவியைப் பெற்றிருக்கும் பின்னணியில் பாரிய நிவாரணங்களுக்கான சாத்தியங்கள் மிகவும் குறைவானதாக இருப்பதற்கே வாய்ப்புக்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. இருந்தபோதும் அரசாங்க ஊழியர்கள் தொடர்பில் கடந்த அமைச்சரவையில் எடுக்கப்பட்டுள்ள தீர்மானம் தற்போது பரபரப்பாகப் பேசப்பட்டு வருகிறது.

இறுதியாக நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கான முன்மொழிவை நிதி அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்வைத்திருந்தார். அதிகரித்துள்ள வாழ்க்கைச் செலவுக்கு ஏற்ற வகையில் அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்க வேண்டும் என்பது அரசாங்கத்தின் கொள்கையாகும். அதேபோல, தனியார் துறையினரும் தமது ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் ஜனாதிபதி முன்வைத்திருந்தார்.

ஜனாதிபதியின் இந்த அறிவிப்பை நாட்டு மக்களில் பெரும்பாலானோர் சாதகமாகப் பார்க்கின்றனர். கொவிட் தொற்றுநோய், அதன் பின்னரான பொருளாதார நெருக்கடி போன்றவற்றால் கடந்த சில வருடங்களாக சம்பள அதிகரிப்பு என்பது கடினமானதொன்றாகவே அரச மற்றும் தனியார் துறைகளால் பார்க்கப்பட்டது.

கொவிட் தொற்றுநோயின் உச்சத்தில் பல வணிகங்களும், தொழில்முயற்சிகளும் மூடப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டன. பல நிறுவனங்கள் ஆட்குறைப்புக்களைச் செய்ததுடன், ஊழியர்களுக்கு எவ்வித சலுகைகளையும் வழங்கவில்லை. தனியார் துறையில் மேலதிக கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டன, செலவுச்சுருக்கங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இருந்தபோதும் இக்கட்டான சூழ்நிலையிலும் கூட அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தில் எவ்வித குறைப்பும் மேற்கொள்ளப்படவில்லை. இதனால் அரசாங்க ஊழியர்கள் அதிர்ஷ்டசாலிகளாகப் பார்க்கப்படுகின்றனர்.அதேவேளை கொவிட் தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி வேளைகளிலும் அரச ஊழியர்களின் மாதாந்தச் சம்பளம் தாமதமின்றியே வழங்கப்பட்டு வந்தது.

இருந்தபோதும், உண்மையில் அரசாங்கத் துறையில் உள்ளவர்களை எடுத்துக் கொண்டால் பொருளாதார நெருக்கடி போன்றவற்றினால் கடினமாகப் பாதிக்கப்பட்ட தரப்பினர் என்று அவர்களைக் கூற முடியும்.

ஏனெனில், விலைவாசி அதிகரித்து வாழ்க்கைச் செலவு பலமடங்கு அதிகரிக்கப்பட்டுள்ள போதும், வருமானத்தில் எவ்வித அதிகரிப்பும் ஏற்படாமை அவர்களுக்குப் பெரும் பாதிப்பாக இருந்தது.

உற்பத்தியாளர்கள் மற்றும் வியாபாரிகள் என பலதரப்பட்டவர்களும் தமது அதிகரித்த செலவினங்களை பொருட்களின் விலைகளை அதிகரிப்பதன் ஊடாக ஈடுசெய்து கொண்டனர். இதுபோன்று பல்வேறு துறையைச் சேர்ந்தவர்கள் தமது செலவினங்களுக்கான அதிகரிப்பை ஏதோ ஒருபக்கத்தில் ஈடுசெய்யத் தொடங்கினர். இருந்தபோதும் அரசாங்க ஊழியர்களின் வருமானத்தில் எவ்வித அதிகரிப்பும் ஏற்படவில்லை. இவ்வாறான சூழ்நிலையிலேயே ஜனாதிபதி சம்பள அதிகரிப்பொன்று பற்றி தற்போது பேசியுள்ளார்.

அதேநேரம், அரசாங்கம் முன்வைக்கவுள்ள 2024 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டமானது மிகவும் நெருக்கடியான பொருளாதார சூழ்நிலையில் முன்வைக்கப்படும் ஒன்று என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. குறிப்பாக சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு வழங்கியுள்ள நீடிக்கப்பட்ட நிதி உதவியின் இரண்டாவது கட்டத்தைப் பெறுவதற்கான பேச்சுக்கள் நடைபெற்றுவரும் நிலையில், பாரிய மறுசீரமைப்புகள் இலங்கையிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன.

பொருளாதா ரீதியில் நாட்டைச் சரியான பாதைக்குக் கொண்டு வருவதற்கு சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்ட சர்வதேச நிறுவனங்களால் பல்வேறு மறுசீரமைப்புக்களுக்கான முன்மொழிவுகள் வழங்கப்பட்டுள்ளன. சுருக்கமாகச் சொல்வதாயின் சர்வதேச நாணய நிதியத்தின் கடன்களை முழுமையாகப் பெற்றுக் கொள்வதாயின் அதன் நிபந்தனைகள் நிறைவேற்றப்பட வேண்டும். வரி வருவாயை அதிகரித்தல், ஊழல் மோசடிகளைக் கட்டுப்படுத்தல், வெளிப்படைத்தன்மையை அதிகரித்தல் உள்ளிட்ட விடயங்களே அதன் நிபந்தனைகளாக முன்வைக்கப்பட்டுள்ளன.

இவற்றில் சிலவற்றை அரசாங்கம் ஏற்கனவே நிறைவேற்றியுள்ளது. குறிப்பாகச் சொல்வதாயின் இலங்கை மத்திய வங்கியை சுயாதீன நிறுவனமாக இயங்கச் செய்வதற்கான சட்டம், ஊழல் மோசடியைத் தடுப்பதற்கான சட்டம் போன்ற சட்டரீதியான மறுசீரமைப்புக்களைக் கூறமுடியும்.

அது மாத்திரமன்றி, சமூகத்தில் பாதிக்கப்படக் கூடியவர்களைப் பாதுகாக்கும் வலையமைப்புக்களையும் பலப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. இதன் ஒரு அங்கமாக 'அஸ்வெசும' போன்ற நலன்புரித் திட்டங்களும் வெளிப்படைத் தன்மையுடன் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இவ்வாறு நாட்டைச் சரியான பாதையில் கொண்டு செல்ல அரசாங்கம் கடுமையான பிரயத்தனங்களை முன்னெடுத்து வரும் அதேநேரத்திலேயே, அரசாங்க ஊழியர்களுக்கான சம்பள உயர்வுக்கும் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த நிலையில், சம்பள உயர்வை அரசாங்கம் வழங்க வேண்டும் எனக் கோரி அரசாங்க ஊழியர்களின் பல்வேறு தொழிற்சங்கங்கள் கடந்த சில நாட்களாகப் போராட்டங்களை நடத்தி வருகின்றன. அரசாங்கம் சம்பள உயர்வொன்றுக்குத் தயாராகியிருக்கும் நிலையில் தமது போராட்டங்களின் காரணமாகத்தான் சம்பள உயர்வைப் பெற்றுக் கொடுக்க முடிந்தது எனக் காண்பிக்கும் நோக்கிலேயே, இந்தத் தொழிற்சங்கங்கள் செயற்படுகின்றன என்பது நன்றாகவே தெரிகின்றது.

இது அடிப்படையற்ற செயற்பாடு என ஜனாதிபதியும் கூறியிருந்தார். உண்மையில் அரசாங்கம் எவ்வாறானதொரு பொருளாதாரச் சூழ்நிலையின் மத்தியில் சம்பள உயர்வொன்றை வழங்குவதற்குத் தயாராக உள்ளது என்பதை அரசாங்க ஊழியர்கள் மனதில் கொள்வது அவசியமாகும். நெருக்கடிக்கு உள்ளான பொருளாதாரம் முழுமையாக மீட்சி பெறாத போதிலும், அரச ஊழியர்களது கோரிக்கைக்கு உடனடியாகவே சாதகமான பதில் அளிக்கப்பட்டிருக்கிறது.






**அரசாங்க ஊழியர்களின் சம்பள உயர்வைப் போன்று தனியார் துறையினரின் சம்பளமும் அதிகரிக்கப்பட வேண்டுமென்பதில் ஜனாதிபதி விசேட அக்கறை!**

எனவே, தொழிற்சங்கங்கள் நாட்டின் முன்னேற்றத்தில் ஒத்துழைப்பு வழங்க முன்வர வேண்டும். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தமது சொந்த விருப்பு வெறுப்புக்களை நிறைவேற்றிக் கொள்வது நியாயமானது அல்ல. விசேடமாக நெருக்கடி காலத்தில் நாட்டில் உள்ள சகல தரப்பு மக்களும் ஏதாவது அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்தே இருக்கின்றனர்.

இந்த நிலையில் அவர்களை மேலும் சிக்கல்களுக்குள் தள்ளும் வகையில் தொழிற்சங்கங்கள் நடந்து கொள்வது நியாமானது அல்ல. ஒரு சில தொழிற்சங்கங்கள் மக்களுக்கு ஏற்படும் சிரமங்கள் குறித்துக் கவனத்தில் கொள்வதாகத் தெரியவில்லை. இதற்குச் சிறந்த உதாரணமாக உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களைத் திருத்தும் பணிகளில் ஈடுபடாது ஆசிரியர்கள் மேற்கொண்ட பணிப்புறக்கணிப்பைக் குறிப்பிட முடியும்.




**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த காலத்தில் ஆட்சி அதிகாரத்தில் அமர்ந்திருந்த காலத்திலேயே அரசாங்க ஊழியர்களுக்கு அதிகரித்த சம்பள உயர்வுகள்!**



அவர்களின் இந்த தொழிற்சங்கப் போராட்டத்தால் ஒட்டுமொத்த மாணவர் சமூகத்தின் கல்வியும் காலதாமதமாகியுள்ளது. கொவிட் தொற்றுநோயினால் பாதிக்கப்பட்ட கல்விச் செயற்பாடுகளை குறிப்பாக பாடசாலைக் கல்வியை மீண்டும் சரியான பாதைக்குக் கொண்டுவர முடியாமலிருக்கிறது. பொருளாதார நெருக்கடியும் இதற்குக் கரணமாகியிருந்தாலும், தொழிற்சங்கப் போராட்டமும் காலதாமதத்துக்கு வழிகோலியிருந்தது. எனவே, இதுபோன்று மக்களை மீண்டும் மீண்டும் சுமைக்குள் தள்ளும் செயற்பாடுகளை தொழிற்சங்கங்கள் இனிமேலாவது கைவிட வேண்டும்.

அரசாங்க ஊழியர்களின் சம்பள உயர்வைப் பொறுத்தவரையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்ட நடவடிக்கைகள் பாராட்டத்தக்கவையாகும். அவர் கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் பிரதமராகப் பதவி வகித்த போது அரச ஊழியர்களின் சம்பளத்தை பத்தாயிரம் ரூபாவினால் அதிகரிக்க நடவடிக்கை எடுத்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

நாட்டின் பொருளாதார நிலைமை கடந்த காலங்களைப் போன்ற நிலையில் இல்லாத சூழலிலும் அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்றால் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் அரச ஊழியர்களின் நலன்களில் எவ்வளவு தூரம் அக்கறையோடு செயற்படுகிறது என்பது தெளிவாகிறது.

அரசாங்க ஊழியர்களின் சம்பள உயர்வைப் போன்று தனியார் துறையினரின் சம்பளங்களும் அதிகரிக்கப்பட வேண்டிய அவசியம் காணப்படுகிறது. அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் தனியார் துறையினரின் சம்பளத்தை அதிகரிப்பதற்கான எவ்வித கடப்பாடுகளையும் அரசு கொண்டிருக்கவில்லை. இது தொடர்பில் சட்ட ஏற்பாடுகளும் அரசாங்கத்திடம் இல்லை. இருந்தபோதும் கடந்த காலங்களிலும் தனியார் துறையின் சம்பள அதிகரிப்புக் குறித்த கோரிக்கைகள் அரசாங்கத்தினால் விடுக்கப்பட்டிருந்தது. மக்களுக்கு பல்வேறு சிரமங்கள் இருக்கும்போதும் தனியார் துறையின் சம்பள உயர்வையும் வலியுறுத்தப் போவதாக ஜனாதிபதி கூறியுள்ளார். இது பற்றித் தனியார் துறையினரும் கவனம் செலுத்த வேண்டும். பொருளாதார நெருக்கடி என்பது ஒட்டுமொத்த சமூகங்களையும் பாதித்திருப்பதால் இவ்விடயத்தை மனிதாபிமான நோக்கத்தில் அணுகுவது சிறந்ததாகும்.

நாட்டை முன்னேற்றிச் செல்வதில் தனியார் துறையினரின் பங்களிப்பையும் பெற்றுக் கொள்வதற்கான பேச்சுவார்த்தையொன்றை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடத்தியிருந்தார். தனியார் துறை நிறுவனங்களின் பிரதானிகளுடன் ஜனாதிபதி அலுவலகத்தில் வரவு செலவுத் திட்டத்திற்கான முன்னோடிப் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடியிலிருந்து மீட்சி பெற்று, வளர்ச்சிப் பாதையில் பயணிப்பதை நோக்காகக் கொண்ட மறுசீரமைப்பு வேலைத்திட்டம் குறித்து விளக்கமளிக்கப்பட்டது.

அரச வருமானம் மற்றும் செயல்திறனைப் பலப்படுத்தல், முதலீட்டாளர்களை ஈர்த்தல், சுற்றுலாத் துறை, ஆடைக் கைத்தொழில் உள்ளிட்ட பல்வேறு துறைகளையும் ஊக்குவிக்கும் யோசனைகளை தனியார் நிறுவன பிரதானிகள் ஜனாதிபதியிடம் கையளித்திருந்தனர். தற்போதுள்ள பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்ட பின்னர் முன்னெடுக்கும் திட்டங்கள், பல்வேறு துறைகளிலுள்ள பிரச்சினைகளுக்கான தீர்வுகள் ஆகியன குறித்தும் இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் கவனம் செலுத்துமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

தனியார் துறையினர் முன்வைத்த யோசனைகள் தொடர்பில் கவனம் செலுத்துவதாகவும், எதிர்வரும் நாட்களில் ஒவ்வொரு துறை தொடர்பிலும் தனித்தனியே கலந்துரையாட எதிர்பார்த்திருப்பதாகவும் ஜனாதிபதி உறுதியளித்தார்.

பொருளாதார ஸ்திரதன்மையை ஏற்படுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்துள்ள வேலைத் திட்டங்களுக்கு தனியார் துறை நிறுவன பிரதானிகள் பாராட்டுத் தெரிவித்தனர். இவ்வாறான பின்னணியில் ஜனாதிபதியின் கோரிக்கைக்கு அமைய தனியார் துறையின் சம்பள அதிகரிப்புக் குறித்தும் அவர்கள் கவனம் செலுத்துவது காலத்தின் தேவையாகப் பார்க்கப்படுகிறது.

**தங்களது போராட்டத்தின் காரணமாகவே சம்பள உயர்வு கிடைப்பதாக அரச ஊழியர்களுக்குக் காண்பிக்கும் நோக்கில் போலி நாடகமாடும் சில தொழிற்சங்கங்கள்!**



# ஷாப்டர் கொலையின் மர்மம் விலகியது!



பிரபல தொழிலதிபர் தினேஷ் ஷாப்டரின் மரணத்தை தற்கொலையென மூடிமறைப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட சதிமுயற்சி அண்மையில் வெளியான நீதிமன்ற தீர்ப்பையடுத்து தோற்கடிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் டிசம்பர் மாதம் 15ஆம் திகதி இடம்பெற்ற தினேஷ் ஷாப்டரின் மர்ம மரணம் தொடர்பில் ஆரம்பத்தில் பொரளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டிருந்தாலும் துரித விசாரணைகள் இடம்பெற வேண்டும் என்ற காரணத்தினால் இவ்வழக்கு பொலிஸ் மா அதிபர் சி.டி. விக்கிரமரத்னவினால் குற்றப்புலனாய்வு திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

எனினும் கடந்த வருடம் டிசம்பர் 15ஆம் திகதி இடம்பெற்ற தினேஷ் ஷாப்டரின் மரணம் எத்தகையது என்பதைக் கூட குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தால் தெளிவுபடுத்த முடியவில்லை. ஆரம்பத்தில் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் மனித படுகொலை மற்றும் திட்டமிடப்பட்ட குற்றச்செயல்களுக்கு பொறுப்பான விசாரணைப் பிரிவினர் ஷாப்டரின் மரணம் கொலை என்ற கோணத்தில் விசாரணைகளை முன்னெடுத்திருந்தாலும் எவரும் எதிர்பாராத வகையில் இது ஒரு தற்கொலை சம்பவமாக இருப்பதற்கான வாய்ப்புகள் காணப்படுவதாக நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டுவந்தனர். அதுமட்டுமின்றி மரணத்துக்கான காரணமும் பிரேத பரிசோதனை அறிக்கையில் நொடிக்கு நொடி மாறிக்கொண்டே சென்றது. எனினும் இத்தகைய குழப்பகரமான சூழ்நிலைக்கு மத்தியிலும் தன்னுடைய மகனுக்கு நீதி வேண்டும் என்பதற்காக ஷாப்டரின் தந்தை சந்திரா ஷாப்டர் போராடினார். அதற்காக அவர், அனுஷ பிரேமரத்தன மற்றும் சாலிய பீரிஸ் என்ற பிரபல்யமான திறமையான சட்டத்தரணிகளின் உதவியை நாடினார். அவர்கள் ஊடாக பிரேத பரிசோதனை அறிக்கைகளில் காணப்பட்ட வேறுபாடுகளை நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டுவந்தார். அதற்கமையவே இத்தகைய குழப்பங்களுக்கு தீர்வு காணும் முகமாக ஷாப்டரின் மரணத்துக்கான காரணத்தைக் கண்டறியும் வகையில் நீதிமன்றால் மருத்துவ குழுவொன்று நியமிக்கப்பட்டது. அந்தக் குழுவில் பேராசிரியர் அசேல மெண்டிஸ், பேராசிரியர் டி.சி.ஆர். பெரேரா, பேராசிரியர் டி.என்.பி. பெர்னாண்டோ, கலாநிதி சிவசுப்பிரமணியம் மற்றும் கலாநிதி ரொஹான் ருவன்புர ஆகியோர் செயற்பட்டனர்.





ஷாஃப்டரின் மரணம் தொடர்பான விசாரணைகள் மற்றும் பிரேத பரிசோதனை அறிக்கைகள் என்பவற்றின் நீண்ட ஆய்வுக்குப் பின்னர் பொரளை பொதுமயானத்தில் அடக்கம் செய்யப்பட்டிருந்த தினேஷ் ஷாப்டரின் சடலம் கடந்த மே மாதம் 25ஆம் திகதி மீண்டும் தோண்டியெடுக்கப்பட்டது.

காலி, கராப்பிட்டிய போதனா வைத்தியசாலை பிரேத அறைக்கு கொண்டு செல்லப்பட்டு சடலம் தடயவியல் ஆய்வின் நவீன முறைகளின்படி ஸ்கேன் செய்யப்பட்டு பிரேத பரிசோதனைக்குட்படுத்தப்பட்டது. அதன்படி கடந்த நவம்பர் முதலாம் திகதி பிரேத பரிசோதனை அறிக்கை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இதன்மூலம் தற்கொலையென பேசப்பட்டு வந்த தினேஷ் ஷாப்டரின் மரணம், திட்டமிட்ட மனித படுகொலையென நிரூபிக்கப்பட்டதுடன் குற்றவாளியை கைதுசெய்து நீதிமன்றத்தில் ஒப்படைக்குமாறு குற்றப்புலனாய்வு பிரிவினருக்கு கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவும் இட்டுள்ளது.

தினேஷ் ஷாப்டரின் மரணத்தின் பின்னர் 24 மணி நேரத்துக்குள் பெறப்பட்ட பிரேத பரிசோதனை அறிக்கையில் கூறப்பட்ட மரணத்துக்கான காரணம் இரண்டாவது பிரேத பரிசோதனை அறிக்கையில் தலைகீழாக மாறியது. முதல் பரிசோதனை அறிக்கையில் அவர் கழுத்து நெரிக்கப்பட்டமையால் உயிரிழந்துள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. அதன்பின்னர் அதே சட்ட வைத்திய அதிகாரியினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் கழுத்தை தானே நெரித்து தற்கொலை செய்துகொண்டிருக்கலாம் என்று கூறப்பட்டது. மூன்றாவது தடவையாக வெளியிடப்பட்ட அறிக்கையில் உணவில் சயனைட் கலக்கப்பட்டிருந்ததாகவும் கூறப்பட்டது.

> **கொலை என உறுதிப்படுத்திய மருத்துவ குழுவின் அறிக்கை கொலையாளியை சட்டத்தின் முன் நிறுத்துவது CIDயின் கடமை**

அதுமட்டுமின்றி குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் மனிதப் படுகொலை மற்றும் திட்டமிட்ட குற்றச்செயல்கள் விசாரணைப் பிரிவினர் ஆரம்பம் முதல் இதுவொரு தற்கொலை என்ற கோணத்திலேயே சாட்சியங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பித்தனர். அதுமட்டுமின்றி தினேஷ் ஷாப்டரின் மரணம் தற்கொலை என்ற கருத்தை சமூகத்தில் விதைக்கும் முயற்சியில் சிலர் ஈடுபட்டும் வந்தனர்.

இதுதொடர்பில் கருத்து தெரிவித்த விசேட மருத்துவ குழுவில் பணியாற்றிய பேராசிரியர் அசேல மெண்டிஸ், 'எங்களுக்கு பழைய நீதிமன்ற அறிக்கைகள் கிடைத்தன. பொலிஸாரிடமிருந்தும் தகவல்களை பெற்றுக்கொண்டோம். எனினும் அவற்றில் பரஸ்பர வேறுபாடுகள் காணப்பட்டன.

அதனாலேயே சடலத்தை தோண்டியெடுத்து பிரேத பரிசோதனைக்குட்படுத்த தீர்மானித்தோம். இந்த மரணம் சயனைட் உடலில் கலந்தமையால், ஏற்பட்டது எனக் கூறப்பட்டது. எனினும் ஷாப்டரை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் போதே இதயம் செயலிழந்துள்ளது. அதனால் அப்போது அவருக்கு இரத்தத்திலுள்ள அமிலத்தன்மை, ஒட்சிசன் அளவு என்பன பரிசோதிக்கப்பட்டுள்ளன. அதுதான் முதல் அறிக்கை. அதுதான் எங்களுக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியது.

மறுபுறம் பிரேத பரிசோதனை அறிக்கையில் இரத்தத்தில் சயனைட் இருந்ததாகவும் மற்றும் வயிற்றில் உணவு இருந்ததாகவும் கூறப்பட்டது. அதனை நாங்கள் நிராகரிக்கின்றோம். ஐந்து மாதங்களுக்குப் பிறகு, சடலத்தை வெளியே எடுத்து ஆய்வு செய்யும் போது வெளிப்புற காயங்களைக் கண்டுபிடிப்பது கடினம். எனவே, காயத்தின் சந்தேகத்துக்குரிய பகுதிகளில் திசுக்களை ஆய்வு செய்ய முடிவு செய்தோம். இதன்போதே காயங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. குறிப்பாக கழுத்து மூச்சுக்குழாயுடன் தொடர்புபட்ட திசுக்களில் இரத்தக் கசிவு ஏற்பட்டுள்ளது.

அதன்படியே குற்றவாளி கழுத்தில் அழுத்தத்தை பிரயோகித்து இதயத்தை செயலிழக்கச் செய்திருக்கக்கூடுமென்ற தீர்மானத்துக்கு வந்தோம். உடலில் சயனைட் இருந்ததாக கூறப்பட்டாலும் அது மரணத்தை எவ்வாறு பாதித்தது என்பதைக் கண்டறிவது கடினம். ஐந்து மாதங்களுக்குப் பிறகு சயனைட்டை பரிசோதிப்பதில் அர்த்தமில்லை. இரத்தத்தில் சயனைட் இருந்தால், அது வாய் வழியாக உடலுக்குள் சென்றது உறுதி செய்யப்படவேண்டும். ஆனால் அது எப்படி நடந்தது என்று சொல்ல முடியாது. மற்றொன்று இரண்டு இரத்த மாதிரிகள் இருந்தன. ஆனால் தொண்டைக் குழியிலிருந்து எடுக்கப்பட்ட இரத்த மாதிரியிலுள்ள அளவை நாங்கள் கணக்கில் எடுத்துக்கொள்ளவில்லை. ஏனெனில் தொண்டைக் குழியிலுள்ள இரத்தத்தில் இருந்து எடுக்கப்படும் சயனைட்டில் சரியான அளவில் விஷம் இருக்காது. ஏனெனில் இது விஷம் வயிற்றின் ஏனைய பகுதிகளுடன் கலந்து அதிகரிக்கலாம். எனவே, கால் நரம்பில் இருந்து எடுக்கப்பட்ட மாதிரியே சோதனை செய்யப்பட்டது.

எனினும் ஒருவர் மரணமடையத் தேவையான அளவிலும் பார்க்கக் குறைவான அளவிலேயே அங்கு சயனைட் காணப்பட்டது. இது இயற்கை மரணமோ விபத்தோ இல்லை. தற்கொலை அல்லது கொலையாக இருக்கவே வாய்ப்பு காணப்படுகின்றது. எனினும்

தனது கழுத்தை தானே நெரித்து கொண்டு இறப்பதற்கு நடைமுறையொன்று இருக்கவேண்டும். சடலம் கண்டெடுக்கப்பட்ட போது அவ்வாறே இருந்திருக்கவேண்டும். எனினும் சாட்சியங்கள், உடலிலிருந்த காயங்களில் அதற்கான ஆதாரங்கள் எதுவுமில்லை. எனவே வேறொரு நபரொருவரால் கழுத்து அழுத்தமாக நெரிக்கப்பட்டுள்ளமை அறிக்கைகள் மூலம் புலப்படுகிறது" என்றும் அவர் தெரிவித்தார். எனவே குற்றவாளியை கண்டுபிடிக்கும் மிக முக்கிய பொறுப்பு குற்றப்புலனாய்வு பிரிவினரிடம் உள்ளது.

தினேஷ் ஷாப்டரின் கொலை வழக்கில் பிரதான சாட்சியாளர் பொரளை பொது மயானத்தில் வேலைசெய்யும் நபர்,

தினேஷ் ஷாப்டரின் கார் அருகே உயரமான மெல்லிய தோற்றத்தையுடைய காற்சட்டையும் மேற்சட்டையும் அணிந்திருந்த நபரொருவர் நின்றுகொண்டு மயானத்தின் பின்புறமாகவுள்ள சுடுகாட்டை நோக்கி வேகமாக நடந்து செல்வதை அவதானித்ததாகவும் மீண்டும் ஒருமுறை அவரை கண்டால் அடையாளம் காட்ட முடியுமெனவும் வாக்குமூலம் அளித்திருந்தார். எனினும் இதுவரை அந்த நபர் தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்களத்தினர் எந்தவித விசாரணைகளையும் மேற்கொண்டதாக தெரியவில்லை.



அடுத்ததாக தினேஷ் ஷாப்டரின் கழுத்தில் கட்டப்பட்ட கம்பி, கைகளை கட்டியிருந்த டை போன்றவற்றில் செய்யப்பட்ட டி.என்.ஏ பரிசோதனையில் இரண்டு உயிரியல் மாதிரிகள் கண்டுபிடிக்கப்பட்டதாக கூறப்பட்டது. அப்படியெனில் உயிரியல் மாதிரிகளும் யாருடையவை? என்ற கேள்வி எழுந்துள்ளது.

எனவே இவ்வளவு காலமும் தலைமறைவான குற்றவாளி சட்டத்தின் முன் நிறுத்தப்படுவது குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கொலை மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் காட்டும் ஆர்வம் மற்றும் அர்ப்பணிப்பிலேயே தங்கியுங்கியுள்ளது.



**வசந்தா அருள்ரட்ணம்**





உலக முத்தமிழ்க் கூட்டமைப்பு சார்பாக அதன் நிறுவனர் முனைவர் தாழை இரா. உதயநேசன், பேராசிரியர் இரா. குறிஞ்சிவேந்தன் ஆகியோரது ஏற்பாட்டில் முத்தமிழ் மாநாடும், கலைஞர்களுக்கான பாராட்டு விழாவும் கடந்த வாரம் றம்பொடையில் தொண்டமான் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக கலந்துக்கொண்ட இ.தொ.கா தலைவரும் கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமான், மலையக மக்கள் முன்னணியின் சிரேஷ்ட உப தலைவர் முனைவர் சதீஷ்குமார் சிவலிங்கம் ஆகியோர், ஏற்பாட்டாளர்களால் கௌரவிக்கப்பட்டனர்.

## 'அசோக வதனா' வின் பிரதியை காங்கிரஸ் எம்.பி சசி தரூருக்கு வழங்கினார் மிலிந்தமொரகொட



இந்திய காங்கிரஸ் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும் எழுத்தாளருமான சசி தரூரிடம் தான் எழுதிய 'அசோக வதனா'வின் பிரதியை மிலிந்த மொரகொட அண்மையில் கொழும்பில் வழங்கினார். மொரகொட இந்தியாவுக்கான உயர் ஸ்தானிகராக பதவி வகித்த காலத்தில் ஞாயிறு லங்காதீபவில் வெளியான பத்தியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டுரைகள் புத்தகத்தில் உள்ளன.

இலங்கையின் சூழலில் பொருளாதாரம், அறிவியல், சமூகம் மற்றும் அரசியல் ஆகிய துறைகளில் இந்தியாவின் அனுபவத்தை முன்வைப்பதே கட்டுரையின் நோக்கமாகும். இந்தக் காலக்கட்டத்தில் ஞாயிறு தினகரனில் இந்தப் பத்தியின் தமிழ் மொழிபெயர்ப்பும் ஒரே நேரத்தில் வெளியிடப்பட்டது. இந்தக் கட்டுரைகளின் தமிழ் பதிப்பு விரைவில் வெளிவரும்.





இரத்மலானை இந்துக் கல்லூரியின் புதிய கணனி வகுப்பறை கடந்த 3ஆம் திகதி வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது. வைபவத்தில் கலந்துகொண்ட இரத்மலானை கொமர்ஷல் வங்கி முகாமையாளர் கட்டடத்தைத் திறந்து வைத்தார். கொமர்ஷல் வங்கி 48 இலட்சம் ரூபாய் பெறுமதியான 20 கணனிகளை தனது பாடசாலை நலன்புரித் திட்டத்தின் கீழ் இப்பாடசாலைக்கு வழங்கியுள்ளது. வங்கி அதிகாரி, பாடசாலை அதிபர் சி. யோகேஸ்வரன் மற்றும் உப அதிபர் திருமதி ராதிகா விஜயேந்திரன், கணனி அறை மற்றும் பயிலும் மாணவர்களையும் படங்களில் காணலாம்.

## கொழும்பு மஸ்ஜிதுகளின் சம்மேளன கருத்தரங்கு

கொழும்பு மாவட்ட மஸ்ஜிதுகளின் சம்மேளனமானது, அம்மாவட்டத்திலுள்ள பள்ளிவாசல்களின் நம்பிக்கையாளர்களுக்காக ஏற்பாடு செய்துள்ள கருத்தரங்கு எதிர்வரும் 12ஆம் திகதி விளையாட்டு அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இதில் 150 மஸ்ஜிதுகளின் சார்பாக 450 நம்பிக்கையாளர்கள் கலந்து கொள்ளவுள்ளதாக மேற்படி சம்மேளனத் தலைவர், சிரேஷ்ட சட்டத்தரணி சிராஸ் நூர்தீன் தெரிவித்தார்.

இந்தக் கருத்தரங்கின் ஓரங்கமாக பலஸ்தீனின் இன்றைய நிலை தொடர்பாக ஆராயப்படும்.

இதில் பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார், பலஸ்தீன தூதுவர் ஹம்தல்லாஸ் ஹைத், ஜாமியா நளீமியா பணிப்பாளர் அஷ்ஷேக் அகார் முஹம்மத், சண்டே டைம்ஸ் ஊடகவியலாளர் அமீன் இஸ்ஸதீன் உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.



தினகரன் வாரமஞ்சரி

# சிறு விளம்பரங்கள்

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

## வர்த்தகம்

### 207 வியாபார ஸ்தலம் விற்பனைக்கு

**0777438169**
ஹந்தான ஹாரகம வத்தேகம மாத்தளை 5 ஏக்கர் முதல் அதற்கு மேல் வருமானம் பெறும் பல தோட்டங்கள் விற்பனைக்கு. 20 மில்லியன் முதல் அதற்கு மேல் 0777282147. 068548



## வேலைவாய்ப்பு

### 301 வேலை வாய்ப்பு
வேலை வாய்ப்புகள்/சேவைகள்

முறையாக சாரதி பயிற்சி உங்கள் வீட்டிற்கு சேவை நிலையத்திற்கு வருகை தந்து சாரதி பயிற்சி. பெண்களுக்கு பெண் ஆலோசகர்கள். அசலா லர்னர்ஸ் ராஜகிரிய. 0763721212, 0712219198. 070679

### 319 வெற்றிடங்கள்
வீட்டு வேலையாளர்கள்

கிருலப்பனை எப்பார்ட்மன்ட்ஸ் COMPLEXஇல் உள்ள ஒரு சிறிய குடும்பம் வசிக்கும் வீடொன்றில் தங்கி வேலை செய்வதற்கு அனுபவமுள்ள பெண் ஊழியர் ஒருவர் தேவை. மேலதிக தொடர்புகளுக்கு 0777313478. 071251

கொழும்பில் உள்ள வீடொன்றில் தங்கியிருந்து, வயோதிபர் ஒருவரை பராமரிப்பதுடன் சமையல் மற்றும் வீட்டை சுத்தம் செய்யக்கூடிய தமிழ் பணிப்பெண் தேவை. வயது 30 45 க்கு உட்பட்டவர் விரும்பத்தக்கது ரூபா. 30, 000/ = சம்பளம் வழங்கப்படும். தொடர்புக்கு 0777362495 070708

### 320 வெற்றிடங்கள்
ஹோட்டல்கள், பேக்கரிகள்

கொள்ளுப்பிட்டியில் உள்ள உணவகத்திற்கு கிச்சன் ஹெல்பர் தேவை. தொ.பே. 0770089449. 071279

adz.lk
It's what you want
The Trusted Market place for Buying & Selling

### 325 தொழில்துறை
பொது

கிருலப்பனை எப்பார்ட்மன்ட்ஸ் Buildingஇல் Cleaning வேலை செய்வதற்கு ஊழியர் ஒருவர் தேவை. கிருலப்பனை, நுகேகொடை அருகாமையில் உள்ள வர்கள் விரும்பத்தக்கது. மேலதிக தொடர்புகளுக்கு 0777313478. 071255

### 327 வேலை தேவை

கனரக வாகன ஆலோசகர் அனுமதிப் பத்திரம் கொண்ட சாரதி ஆலோசகர்களாக இணைத்து சேவைக்கு சாரதி பாடசாலை ஒன்றைத் தேடுகிறார். 0712219198, 0763721212. 070672

## காணி/தோட்டம்

### 616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு

அத்துருகிரிய மிலேனியம் சிட்டி அருகில் 8.8 பேர்ச் இருமாடி வீடு காசுத் தேவைக்காக விற்பனைக்கு 0757766600 068521

நாரஹேன்பிட்ட, எல்விட்டிகல மாவத்த 30 பேர்ச் நேஷன் டிரஸ்ட் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட இரு மாடி கட்டிடம் விற்பனைக்கு. விலை விசாரணைகள் 2023.11.19 இற்கு முன்பு விசேட சொத்துக்கள் முகாமைத்துவப் பிரிவு 242, யூனியன் பிளேஸ், கொழும்பு 02 என்ற முகவரிக்கு குறைந்தபட்ச கோரிக்கை 300 மில்லியன் 077 3427535 071342

ரத்மலானையில்15.30 பேர்ச் நிலத்துடன் கூடிய இரண்டு மாடி வீடு விற்பனைக்கு. Bank Loan உண்டு. (Old House) 0777568349 071464

ராஜகிரியவில் வீடு விற்பனைக்கு. 13 பேர்ச் சதுர வடிவ காணி 6 படுக்கைகள், 3 குளியலறைகள். வர்த்தக பிரதேசம் . 40 அடி பிரதான வீதிக்கு முகப்பாக. 58 மில்லியன். பேசித் தீர்க்கலாம். 070 1286857. 071086

### 620 வீடு சொத்து புத்தளம் மாவட்டம் விற்பனைக்கு

வென்னப்புவ 71.5 பேர்ச் நேஷன் டிரஸ்ட் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட வீட்டுடன் காணி விற்பனைக்கு. விலை விசாரணைகள் 2023.11.19 இற்கு முன் விசேட சொத்துக்கள் முகாமைத்துவப் பிரிவு 242, யூனியன் பிளேஸ், கொழும்பு 02 என்ற முகவரிக்கு குறைந்தபட்ச கோரிக்கைக்கு 35.8 மில்லியன் 077 3427535 071346

### 621 வீடு சொத்து கண்டி மாவட்டம் விற்பனைக்கு

கண்டி ஹுலுகங்க 157.7 பேர்ச் நேஷன் டிரஸ்ட் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட வீடு விற்பனைக்கு. விலை விசாரணை 2023.11.19 இற்கு முன் விசேட சொத்துக்கள் முகாமைத்துவப் பிரிவு 242, யூனியன் பிளேஸ், கொழும்பு 02 என்ற முகவரிக்கு குறைந்தபட்ச கோரிக்கை 13.5 மில்லியன் 077 3427535 071359

07772 82147 கண்டி நகரிற்கு 4 km - 5km. தூரத்தில் சகல வசதிகளுடைய வவீடுகள் 10 விற்பனைக்கு 20 30 மில்லியனுக்கு இடையில் 0777438169 068529




### 623 வீடு சொத்து நுவரெலியா மாவட்டம் விற்பனைக்கு

மனங்கவரும் இயற்கைக் காட்சிகள் நிறைந்த குளிரான மலைநாட்டின் சுகத்தினை அனுபவிக்க விரும்பும் உங்களுக்கு ஹட்டன் கொழும்பு பிரதான வீதிக்கு முகப்பாக பெறுமதியுள்ள வியாபார மற்றும் குடியிருக்க உகந்த காணித்துண்டுகள் 100. ஒரு காணித்துண்டு 235 இலட்சம். விசேட விலைக் குறைப்புடன் வட்டியற்று இலகு பணக் கொடுப்பனவு முறைமை. அழைக்கவும். சிறிபால லாண்ட்ஸ் 0702484848 071424

ஹட்டன் நகருக்கு அண்மையில் 10 பேர்ச் காணித்துண்டுகள் 100 விற்பனைக்கு. குழாய் நீர் மற்றும் முன்று முதன் நிலை மின்சாரம். முழுக் காணித்துண்டும் 35 லட்சம் முதல். இலகு பணக் கொடுப்பனவு முறைமை மற்றும் விசேட விலைக் குறைப்புடன் உங்களது காணித்துண்டை இன்றே ஒதுக்கிக் கொள்ள அழைக்கவும். சிறிபால லாண்ஸ் 0702484848 071427

### 628 வீடு சொத்து கேகாலை மாவட்டம் விற்பனைக்கு

தரணியகல, 434 பேர்ச் நேஷன் டிரஸ்ட் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட காணி விற்பனைக்கு. விலை விசாரணை 2023.11.19 இற்கு முன் விசேட சொத்துக்கள் முகாமைத்துவப் பிரிவு 242, யூனியன் பிளேஸ்,கொழும்பு 02 என்ற முகவரிக்கு குறைந்தபட்ச கோரிக்கை 4.7 மில்லியன் 077 3427535 071348

### 629 வீடு சொத்து இரத்தினபுரி மாவட்டம் விற்பனைக்கு

எம்பிலிபிட்டிய 300 பேர்ச் நேஷன் டிரஸ்ட் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட காணி விற்பனைக்கு. விலை விசாரணைகள் 2023.11.19 இற்கு முன்னர் விசேட சொத்துக்கள் முகாமைத்துவப் பிரிவு 242, யூனியன் பிளேஸ் , கொழும்பு 02 என்ற முகவரி க்கு குறைந்தபட்ச கோரிக்கை 26.2 மில்லியன் 077 3427535 071355

### 632 வீடு சொத்து ஹம்பாந்தோட்ட மாவட்டம் விற்பனைக்கு

திஸ்ஸமஹாராம, கதிர்காமம் வீதி 17 1 பேர்ச் நேஷன் டிரஸ்ட் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட காணி விற்பனைக்கு விலை விசாரணைகள் 2023.11.19 இற்கு முன் விசேட சொத்துக்கள் முகாமைத்துவப் பிரிவு 242, யூனியன் பிளேஸ், கொழும்பு 02 என்ற முகவரிக்கு குறைந்தபட்ச கோரிக்கைக்கு 34.2 மில்லியன் 077 3427535 071352

வாரமஞ்சரி
சிறு விளம்பரங்கள்
முதல் 15 சொற்களுக்கு
330/- ரூபா
ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 20 ரூபா
E-Mail :- classified@lakehouse.lk
011 2 429 383 / 011 2 429 347












































# ஹிஸ்புல்லாஹ்வின் வருகை மாற்றத்தை ஏற்படுத்துமா?

## தீவிரமடையும் ஹமாஸ் – இஸ்ரேல் போர்



பேராசிரியர்
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

இஸ்ரேல் – ஹமாஸ் போர் மனித அவலத்தை அதிகரித்துள்ளது. ஏறக்குறைய 10 ஆயிரத்திற்கு மேற்பட்ட பாலஸ்தீன மக்கள் கொல்லப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. அதில் சிறுவர்களும் (3600) பெண்களுமே அதிகம் என்ற கணிப்பீடு உள்ளது. காசாவின் உட்கட்டமைப்பு முழுமையாக அழிவடைந்துள்ளது. சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களும் மனித உரிமைகளும் முழுமையாக கலாவதியாகும் போராக விளங்கும் ஹமாஸ், இஸ்ரேல் போர் புதிய வடிவத்தை எடுத்து வருகிறது. போரும் அதன் உத்திகளும் அதன் நீட்சியை வெளிப்படுத்துவதோடு முடிவற்ற நிலைக்கு இட்டுச் செல்வதாகவே தெரிகிறது. தற்போது புதிதாக ஹிஸ்புல்லா அமைப்பின் முழுமையான போர் பற்றிய எண்ணத்தை அதன் தலைவர் ஹசன் நஸ்ரால்ல லெபனானின் தலைநகர் பெய்றூட்டிலிருந்து (03.11.2023) வெளியிட்டுள்ளார். இக்கட்டுரையும் ஹமாஸ், இஸ்ரேல் போரின் பிந்திய நிலையை தேடுவதாக அமையவுள்ளது.

ஹசன் நஸ்ரால்ல ஹமாஸ், இஸ்ரேல் போர் தொடங்கிய பின்னர் முதல் தடவையாக அமெரிக்க, இஸ்ரேல் ஆக்கிரமிப்பு சக்திகளுக்கு எச்சரிக்கை செய்ததுடன் காசா மீதான ஆக்கிரமிப்பை உடனடியாக நிறுத்துமாறும் பிராந்திய போராக மாறுவதற்கான நடவடிக்கைகளை கைவிடுமாறும் கோரியுள்ளார். அமெரிக்கர்களால் காசா மீதான ஆக்கிரமிப்பை நிறுத்தமுடியும். காரணம், இது அமெரிக்கரது போர். லெபனானில் எல்லையில் நிகழ்த்தப்படும் போரை நிறுத்தாவிட்டால் இப்போர் விரிவடையும் எனவும் எச்சரித்துள்ளார். இது போரின் விரிவாக்கத்துக்கு வழிவகுக்கக் கூடியதாகவே தெரிகிறது. அனைத்து வல்லரசுகளும் போரை இஸ்ரேல், காசா எல்லைக்குள் மட்டுப்படுத்த முயலுகின்ற போது ஹிஸ்புல்லா அமைப்பு பிராந்திய தளத்திற்கு விஸ்தரிக்க முனைவதாகவே தெரிகிறது. ஹிஸ்புல்லாத் தரப்பின் பிரதான இலக்காக அமெரிக்கா என்பதையே கோடிட்டுக் காட்டியுள்ளார். அனைத்து மேற்கு நாடுகளும், இஸ்ரேலும், ஹிஸ்புல்லா போரில் ஈடுபடுவதை தவிர்க்கவே விரும்புகின்றன. காரணம் ஹிஸ்புல்லாவிடம் உள்ள இராணுவ பலமே, பாரியளவான ஆயுத தளபாடங்களையும் போர் உத்திகளையும் கொண்டுள்ள அமைப்பாக இது உள்ளது. ஏறக்குறைய இரண்டு இலட்சத்துக்கு மேற்பட்ட ஏவுகணைகளை மட்டும் கொண்டுள்ளதாக சில புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன. இது ஹமாஸின் பலத்தை அதிகரித்துவிடும் என்ற எச்சரிக்கை இஸ்ரேல், அமெரிக்க கூட்டிடம் காணப்படுகிறது. ஹிஸ்புல்லா தலைமையின் உரையும் அமெரிக்கப் போர்க் கப்பல்களும் அமெரிக்கப் படைகள் மீதுமே அதிக கவனம் கொண்டிருப்பதனால் போர் வேறு திசையை நோக்கி நகர வாய்ப்புள்ளதாகவே தெரிகிறது. ஹிஸ்புல்லா தலைமை குறிப்பிடுவது போல் அமெரிக்காவே இஸ்ரேல், ஹமாஸ் போரை நிகழ்த்துவது வெளிப்படையாக தெரிகிறது. தற்போது அமெரிக்கத் தரைப்படையும் இஸ்ரேலில் தரையிறக்கப்பட்டுள்ளன. ஆயுத தளபாடங்கள் விமானங்கள் மற்றும் புலனாய்வு செயல்பாடுகள் என ஏற்கனவே அதிகளவான இராணுவ ஒத்துழைப்பினை வழங்கிவரும் அமெரிக்கா படைகளையும் இறக்கியுள்ளமை அமெரிக்க, ஹமாஸ் போராகவே உள்ளதென்பது உணரக்கூடியதாக உள்ளது.

ஹமாஸ் – இஸ்ரேல் போர் ஆரம்பித்த பின் இரண்டாவது தடவையாக அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் அன்டனி பிளிங்டன் இஸ்ரேலுக்கு (03.11.2023) விஜயம் செய்துள்ளார். அவரது வருகை போர் நிறுத்தத்தை கொண்டு வருவதற்கான முயற்சியாக தெரியவில்லை. மாறாக பொது மக்களது படுகொலையை குறைக்குமாறு இஸ்ரேலை கோரியதோடு இஸ்ரேல் தன்னை தற்காத்துக் கொள்ள முடியுமென மீளவும் மேற்குலகம் குறிப்பிடுவது போலவும் பிளிங்டன் தெரிவித்துள்ளார். தராண்மைவாதத்தின் அசல் முகத்திலுள்ள அராஜகத்தை பிளிங்டன் மீளவும் வெளிப்படுத்தியுள்ளதாக, புரிந்து கொள்ளப்படலாம். போரை நிறுத்தி பொது மக்களை பாதுகாப்பதற்கு பதிலாக படுகொலையின் அளவை குறைக்குமாறு கோரியுள்ளமை மூலம் மேற்குலகத்தின் ஆக்கிரமிப்பின் கோர முகம் தெரியவருகிறது. மனித உரிமைகளையும் மனிதாபிமானச் சட்டங்களையும் காசா மண்ணில் மட்டும் அமெரிக்கா புதைக்கவில்லை. உலகளாவிய அளவில் அத்தகைய செயலை கடந்த காலங்களில் மேற்கொண்டுள்ளது. இதுவே மேற்குலகத்தின் நவ தாராண்மைவாத முகமாகும்.



இது நாகரீகத்தின் வளர்ச்சி கிடையாது. அநாகரிகத்தினதும் ஆக்கிரமிப்பினதும் வடிவமாகவே உள்ளது. இது மேற்குலகத்தினது காட்டுமிராண்டித் தனமாகவே தெரிகிறது. அமெரிக்கா இஸ்ரேலுக்கு வழங்கும் ஆதரவு, கொலைக் கலாசாரத்தை வெளிப்படையாக அங்கீகரிப்பதாகவே உள்ளது. இதில் மேற்குலகம் மட்டுமல்ல இந்தியாவும் பங்கெடுத்துள்ளது என்பதே கவனத்தில் கொள்ளப்பட வேண்டியது.

இதேநேரம் பிளிங்டனின் இரண்டாவது இஸ்ரேல் விஜயம் இரசாயன வாயுவை ஹமாஸ் படைகள் மீது பிரயோகிப்பதற்கான முடிவுகளை முன்னெடுக்கவும், அரபு நாடுகளை இப்போரில் ஈடுபடுத்தாது கையாளுவதற்காவுமே. பென்டகன் ஏற்கனவே இரசாயன வாயுக்களை ஹமாஸின் பதுங்கு குழிகளுக்குள் செலுத்துவது பற்றி உரையாடியுள்ளது.

அதற்கான அனுமதியை இஸ்ரேலுக்கு வழங்குவது பற்றி இரு நாட்டுத் தலைவர்களும் படைத்தரப்பும் உரையாடியுள்ளதாக தகவல்கள் உண்டு. ஆனால் இத்தகைய நகர்வுக்கு ஹமாஸால் கைதுசெய்யப்பட்ட இஸ்ரேலிய பணயக் கைதிகள் பெரும் தடையாக உள்ளனர். பணயக்கைதிகளே ஹமாஸின் போரியல் பலத்தை அதிகரிக்க உதவியுள்ளதாக தெரிகிறது.

இப் பணயக் கைதிகளில் இஸ்ரேலிய படைத்தரப்பும் உள்ளதாக தெரியவருகிறது. அதனால் இரசாயன வாயுக்களை பிரயோகிப்பதில் அமெரிக்க, இஸ்ரேலியத் தரப்பு குழப்பமடைந்துள்ளதை உணரக்கூடியதாக உள்ளது. ஆனால் போரின் எல்லைக்குள் தமது சொந்த மக்களை பலிகொடுப்பது அமெரிக்காவுக்கோ இஸ்ரேலுக்கோ புதியதல்ல. அது மேற்குலக ஆட்சியாளரின் அரசியல் வடிவமேயாகும். இதனால் ஒரு எல்லைக்கு அப்பால் இரசாயன வாயுப் பிரயோகம் காசாவுக்குள் அதிலும் பதுங்குகுழிகளுக்குள் மேற்கொள்ள வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளன.

மறுபக்கத்தில் போரின் எல்லை இரு தரப்பினையும் நேரடியாக பாதிப்புக்கு உள்ளாக்க ஆரம்பித்துள்ளது. ஹமாஸின் போர், இஸ்ரேலிய இராணுவத்தை நெருக்கடிக்கு உள்ளாக்கியுள்ளதாகவே தெரிகிறது.

குறிப்பாக இஸ்ரேலிய இராணுவம் கொல்லப்படுவதற்கு அப்பால், இஸ்ரேலிய படைத்தளபாடங்கள் ஹமாஸ் இராணுவத்தால் கைப்பற்றப்படுவதும் டாங்கிகள் அழிக்கப்படுவதும் நிகழ்வதாக செய்திகள் உறுதிப்படுத்துகின்றன. அதேநேரம் ஹமாஸ் பதுங்கு குழிகளை தாக்கத் தொடங்கியுள்ளதாகவும் காசா நகரை சுற்றிவளைத்துள்ளதாகவும் இஸ்ரேலிய தரப்பு செய்தி தந்துள்ளது.

இதனால் போர் இரு தரப்பிலும் பாரிய இழப்புக்களை ஏற்படுத்தும் நிலையைத் தொட்டுள்ளதாகவே தெரிகிறது. இந்திய, இஸ்ரேலிய கூட்டமைப்பின் தலைமையதிகாரி நெத்தன் குரோசஸ், போர் பற்றிய நிலைமையை விளக்கும்போது அடுத்த மூன்று மாதகாலத்துக்கு போரின் முதல் கட்டம் நிறைவு பெறும் என்கிறார். அக்காலத்தில் ஹமாஸின் போர் வலிமையை இஸ்ரேல் அழித்துவிடும் என்றும் அடுத்துவரும் காலப்பகுதியில் ஹமாஸின் பதுங்கு குழிகளை அழித்துவிடும் எனவும் தெரிவித்துள்ளார். அவரது பார்வையில் ஹமாஸ் முழுமையாக அழிக்கப்பட வேண்டும் எனவும் காசாவை விட்டு ஹமாஸ் முழுமையாக வெளியேற வேண்டும் எனவும் குறிப்பிடுகின்றார்.

இஸ்ரேலியப் பிரதமரும் காசா மக்களை முழுமையாக எகிப்துக்கு நகர்த்துவதாகவும் அதற்காகவே காசா எகிப்து எல்லையான ராபா திறக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. ஆனால் ராபா வழியே வெளிநாட்டவரும், இரட்டைக் குடியுரிமை உடையவரும் காயப்பட்ட பாலஸ்தீனர்களுமே வெளியேறலாம் என எகிப்து அறிவித்துள்ளது.

இதேநேரம் காசாவில் உணவு, தண்ணீர் தட்டுப்பாடு அதிகரித்துள்ளது. போருக்கு முன்னர் 500க்கும் மேற்பட்ட பாரஊர்திகளில் ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் அத்தியாவசிய பொருட்கள் சென்றதாகவும் போருக்கு பின்னர் அது 42 பார ஊர்திகளாக குறைந்துள்ளதாகவும் ஐ.நா.வின் பாலஸ்தீன பிரதிநிதி ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

மக்கள் உப்புநீரை அருந்துவதாகவும் அது அதிக சுகாதார சீர்கேட்டை ஏற்படுத்துமெனவும் உணவுக்காக வரிசையில் காத்திருக்கும் போது எறிகணை மற்றும் விமானத் தாக்குதல் நிகழ்த்தப்படுவதாகவும் செய்திகள் உண்டு.

ஏறக்குறைய முள்ளிவாய்க்கால் நிலவரத்தை காசா தற்போது எதிர்கொண்டுள்ளது. மீளவும் ஒரு முள்ளிவாய்க்காலை உலகம் உருவாக்கியுள்ளது. ஆனால் இதில் அராபிய நாடுகளும் ரஷ்யாவும் சீனாவும் மறைமுகமாக ஹமாஸ் அமைப்பை ஆதரிப்பதாகவும் உள்ளது.

குறிப்பாக 26.10.2023 ஹமாஸ் மற்றும் ஈரானிய பிரதி வெளியுறவு அமைச்சர் இணைந்து ரஷ்யாவுக்கு மேற்கொண்ட விஜயம் அதிக குழப்பத்தை இஸ்ரேலுக்கு ஏற்படுத்தியிருந்தது.

உடனடியாக மொஸ்கோவை விட்டு அவர்களை வெளியேற்றுமாறு இஸ்ரேலிய வெளியுறவுத் துறை ரஷ்யாவை கோரியிருந்தது. இதில் பணயக்கைதிகள் விடுவிப்பது, மனிதாபிமான உதவிகளை காசாவுக்குள் அனுப்புவது மற்றும் போர் நிறுத்தத்தை உருவாக்கும் அமைதிப் பேச்சுக்களை ஆரம்பிப்பது என பலவிடயங்கள் கலந்துரையாடப்பட்டதாக தெரியவருகிறது. (20ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கையின் SWOT பகுப்பாய்வு



AGS. சுவாமிநாதன் சர்மா
பட்டயக்கணக்காளர், வரி &
முகாமைத்துவ ஆலோசகர்

இலங்கை வளமான வரலாறு, கலாசாரம் மற்றும் பல்வேறு பொருளாதாரம் கொண்ட நாடு. இருப்பினும் அதிக கடன் அளவுகள், இறக்குமதியை நம்பியிருத்தல், காலநிலை மாற்றத்தின் பாதிப்பு மற்றும் பொருளாதார ஸ்திரமின்மை உள்ளிட்ட பல சவால்களை எதிர்கொள்கின்றது. இந்த சவால்கள் இருந்தபோதிலும், இலங்கை தனது இலக்குகள் மற்றும் நோக்கங்களை அடைவதற்கு பல்வேறு வகையான பலங்களைக் கொண்டுள்ளது. பலவீனங்கள் மற்றும் அச்சுறுத்தல்களை நிவர்த்தி செய்வதற்கு அதன் பலங்கள் மற்றும் வாய்ப்புகளை பயன்படுத்துவதன் மூலம், இலங்கையை மிகவும் வளமான மற்றும் நிலையான பொருளாதாரம் கொண்ட நாடாக மாற்ற முடியும். அதன் பலம், பலவீனங்கள், வாய்ப்புகள் மற்றும் அச்சுறுத்தல்களைக் கண்டறிந்து நிவர்த்தி செய்வதன் மூலம் நிலையான பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்திக்காக இலங்கை தன்னை நிலைநிறுத்திக் கொள்ள முடியும்.

SWOT பகுப்பாய்வு என்பது பலம், பலவீனம், வாய்ப்புகள் மற்றும் அச்சுறுத்தல்களை அடையாளம் காணும் ஒரு மூலோபாய திட்டமிடல் கருவியாகும்.

***பலம் | Strengths***

இந்தியப் பெருங்கடலில் மூலோபாய இடமாகவும் முக்கியமான கப்பல் பாதைகளின் குறுக்கு வழியில் இலங்கை உள்ளது.

கடற்கரைகள், மழைக்காடுகள் மற்றும் மலைகள் உள்ளிட்ட வளமான இயற்கை வளங்களைக் கொண்டுள்ளது. பல்லுயிர் கொண்ட சுற்றுச்சூழல் அமைப்பு, பலவகையான தாவரங்கள் மற்றும் விலங்குகள் என்பன காணப்படுகின்றது.

மக்களையும் கலாசாரத்தையும் வரவேற்பது, படித்த மற்றும் திறமையான பணியாளர்கள்

குறைந்த தொழிலாளர் செலவுகள், பல்வகைப்பட்ட பொருளாதாரம், வளர்ந்து வரும் சேவைத் துறை.

***பலவீனங்கள் | Weaknesses***

அதிக அளவிலான கடன்

மட்டுப்படுத்தப்பட்ட உட்கட்டமைப்பு

அரசியல் ஸ்திரமின்மை

ஊழல்

சுற்றுலா மற்றும் வெளிநாட்டில் வேலை செய்வோர் பணம் அனுப்புவதை கூடுதலாக நம்பியிருத்தல்

காலநிலை மாற்றத்தின் பாதிப்பு

***வாய்ப்புகள் | Opportunities***

சுற்றுலாத்துறைக்கான கேள்வி மற்றும் அதன் வளர்ச்சி

புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வளர்ச்சி

அதிக கேள்வியுள்ள மற்றும் மதிப்புள்ள பொருட்கள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதி

உட்கட்டமைப்பு வசதி மற்றும் உற்பத்தியில் முதலீடு

பிராந்திய ஒருங்கிணைப்பு

***அச்சுறுத்தல்கள் | Threats***

உலகளாவிய பொருளாதார வீழ்ச்சி

பிராந்தியத்தில் அரசியல் ஸ்திரமின்மை

பருவநிலை மாற்றம்

அதிகரித்து வரும் பணவீக்கம்

மற்ற நாடுகளில் இருந்து ஏற்படுத்தப்படும் போட்டி

**பெற்றோலிய வளத்தின் பற்றாக்குறை**

இலங்கை அதன் பலம் மற்றும் வாய்ப்புகளைப் பயன்படுத்தி அதன் பலவீனங்கள் மற்றும் அச்சுறுத்தல்களைத் தீர்க்க முடியும். எடுத்துக்காட்டாக, அரசாங்கம் உட்கட்டமைப்பு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியில் முதலீடு செய்யலாம், மேலும் நாட்டின் இறக்குமதியை நம்பியிருப்பதைக் குறைத்து முதலீட்டாளர்களை ஈர்க்கும். அரசியல் ஸ்திரத்தன்மையை மேம்படுத்துவதற்கும் ஊழலைக் குறைப்பதற்கும் சாதகமான வணிகச் சூழலை உருவாக்குவதற்கு அரசாங்கம் பணியாற்ற முடியும்.

இலங்கை அதன் பலவீனங்கள் மற்றும் அச்சுறுத்தல்களை நிவர்த்தி செய்வதற்கு அதன் பலத்தை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதற்கான சில குறிப்பிட்ட எடுத்துக்காட்டுகள் இங்கே:

மூலோபாய இடம்

பலம்: மூலோபாய இடம்

பலவீனம்: அதிக அளவு கடன்

வாய்ப்பு: சுற்றுலா வளர்ச்சி

அச்சுறுத்தல்: பிராந்தியத்தில் அரசியல் ஸ்திரமின்மை

சுற்றுலாவை மேம்படுத்துவதற்கும் வெளிநாட்டு முதலீட்டை ஈர்ப்பதற்கும் இலங்கை தனது மூலோபாய இடத்தைப் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

இது நாட்டின் கடன் அளவைக் குறைக்கவும், பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தவும் உதவும்.

வர்த்தகம் மற்றும் தளபாடங்களுக்கான பிராந்திய மையமாக மாறுவதற்கு இலங்கை தனது மூலோபாய இருப்பிடத்தையும் பயன்படுத்தலாம்.

2. நன்கு படித்த மற்றும் திறமையான பணியாளர்கள்

பலம்: நன்கு படித்த பணியாளர்கள்

பலவீனம்: உட்கட்டமைப்பு இடைவெளிகள்/ பற்றாக்குறை

வாய்ப்பு: புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வளர்ச்சி

அச்சுறுத்தல்: காலநிலை மாற்றம்

புதுப்பிக்கத்தக்க ஆற்றல் போன்ற புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் கைத்தொழில்களை அபிவிருத்தி செய்வதற்கு இலங்கை தனது நன்கு படித்த பணியாளர்களை பயன்படுத்த முடியும். இது வேலைவாய்ப்புகளை உருவாக்கவும், நாட்டின் இறக்குமதியை நம்பியிருப்பதை குறைக்கவும், பருவநிலை மாற்றத்தின் விளைவுகளை குறைக்கவும் உதவும். அறிவுப் பொருளாதாரத்தை உருவாக்க அதன் படித்த பணியாளர்களைப் பயன்படுத்தவும் முடியும். இது ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டில் முதலீடு செய்வதையும், திறமையான தொழிலாளர்களை ஈர்க்கும் மற்றும் தக்கவைத்துக்கொள்ளும் சூழலை உருவாக்குவதையும் உள்ளடக்கும். ஏற்றுமதி செய்யக்கூடிய புதிய தொழில்கள் மற்றும் தயாரிப்புகளை அபிவிருத்தி செய்வதற்கும், இறக்குமதியில் தங்கியிருப்பதை குறைப்பதற்கும் மற்றும் வெளிநாட்டு நாணயத்தை உருவாக்குவதற்கும் இலங்கை தனது படித்த பணியாளர்களை பயன்படுத்த முடியும்.




3. பல்வகைப்பட்ட பொருளாதாரம்

பலம்: பல்வகைப்பட்ட பொருளாதாரம்

பலவீனம்: சுற்றுலா மற்றும் பணம் அனுப்புதல் மீது நம்பிக்கை

வாய்ப்பு: அதிக மதிப்புள்ள பொருட்கள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதி

அச்சுறுத்தல்: உலகளாவிய பொருளாதார வீழ்ச்சி

தேயிலை, இறப்பர் மற்றும் தகவல் தொழில்நுட்ப சேவைகள் போன்ற உயர் பெறுமதியான பொருட்கள் மற்றும் சேவைகளை ஏற்றுமதி செய்வதன் மூலம் இலங்கை தனது பொருளாதாரத்தை பல்வகைப்படுத்த முடியும். இது சுற்றுலா மற்றும் பணம் அனுப்பும் நாட்டின் மீதுள்ள நம்பிக்கையைக் குறைப்பதற்கும், உலகப் பொருளாதாரச் சரிவுகளுக்கு அதை மேலும் தாங்கக்கூடியதாக மாற்றுவதற்கும் உதவும்.

4. பலம்: வளமான கலாசார பாரம்பரியம்

சுற்றுலாவை மேம்படுத்துவதற்கும் வெளிநாட்டு முதலீட்டை ஈர்ப்பதற்கும் இலங்கை தனது வளமான கலாசார பாரம்பரியத்தை பயன்படுத்த முடியும். உதாரணமாக, இலங்கை கலாசார சுற்றுலாப் பொதிகளை உருவாக்கலாம் அல்லது பாரம்பரிய ஹோட்டல்களை உருவாக்கலாம்.

அதன் பலவீனங்கள் மற்றும் அச்சுறுத்தல்களை நிவர்த்தி செய்வதற்கு இலங்கை பின்வரும் முறைமையினை செயற்படுத்தலாம்:

அத்தியாவசியப் பொருட்களின் உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிப்பதன் மூலம் அதன் இறக்குமதியை நம்பியிருப்பதைக் குறைக்க முடியும். இதற்கு வணிகர்கள் மற்றும் விவசாயிகளுக்கு அரசின் ஆதரவு தேவைப்படும்.




காலநிலை மாற்றம் தழுவல் மற்றும் தணிப்பு நடவடிக்கைகளில் முதலீடு செய்தல் வேண்டும். இது காலநிலை மாற்றத்தை எதிர்க்கக்கூடிய உட்கட்டமைப்பை உருவாக்குதல் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களை உருவாக்குதல் ஆகியவற்றை உள்ளடக்கும்.

சிறந்த நிதி மற்றும் பணவியல் கொள்கைகளை செயல்படுத்துவதன் மூலம் அதன் கடன் அளவைக் குறைத்தல். இதற்கு அரசாங்கம் தனது செலவினங்களைக் குறைக்க வேண்டும் மற்றும்/அல்லது வரிகளை அதிகரிக்க வேண்டும்.

பல்வேறு இனக்குழுக்களுக்கு இடையே அமைதி மற்றும் நல்லிணக்கத்தை மேம்படுத்துதல். இது பொருளாதார வளர்ச்சி மற்றும் வளர்ச்சிக்கு மிகவும் நிலையான சூழலை உருவாக்கும்.

இலங்கையின் பலவீனங்கள் மற்றும் அச்சுறுத்தல்களை நிவர்த்தி செய்வதற்கு அரசாங்கம், தனியார் துறை மற்றும் சிவில் சமூகம் உட்பட அனைத்து பங்குதாரர்களிடமிருந்தும் ஒருங்கிணைந்த முயற்சி தேவைப்படும் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். எல்லாவற்றுக்கும் ஒரே மாதிரியான தீர்வு இல்லை என்பதையும், குறிப்பிட்ட சூழ்நிலைகளைப் பொறுத்து சிறந்த அணுகுமுறை மாறுபடும் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். இலங்கை வர்த்தக சமூகம் அதன் பலவீனங்கள் மற்றும் அச்சுறுத்தல்களை நிவர்த்தி செய்வதற்கு தமது பலத்தை எவ்வாறு பயன்படுத்த முடியும் என்பதற்கான சில குறிப்பிட்ட எடுத்துக்காட்டுகள் பின்வருமாறு;

***Strengths: பலம்:***

தொழில் முனைவோர் மனப்பான்மை: இலங்கை தொழில்முனைவோர் அவர்களின் புத்தி கூர்மை மற்றும் நெகிழ்ச்சிக்கு பெயர் பெற்றவர்கள். சவாலான பொருளாதார சூழலில் இது ஒரு மதிப்புமிக்க சொத்து.

வலுவான குடும்ப உறவுகள்: இலங்கை வணிகங்கள் பெரும்பாலும் வலுவான குடும்ப உறவுகளைக் கொண்டிருக்கின்றன, இது ஆதரவு மற்றும் ஸ்திரத்தன்மைக்கான ஆதாரத்தை வழங்க முடியும்.

புலம்பெயர் வலையமைப்பு: இலங்கை புலம்பெயர் சமூகம் பெரியது மற்றும் நன்கு இணைக்கப்பட்டுள்ளது. புதிய சந்தைகளை விரிவுபடுத்த அல்லது வெளிநாட்டு முதலீட்டை ஈர்க்க விரும்பும் வணிகங்களுக்கு இது ஒரு மதிப்புமிக்க ஆதாரமாக இருக்கும்.

*Weaknesses: பலவீனங்கள்:*

நிதியுதவிக்கான அணுகல்: இலங்கையில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு (SMEs) பெரும்பாலும் நிதியை அணுகுவதில் சிரமம் உள்ளது. இது அவர்களின் வளர்ச்சி மற்றும் விரிவாக்கத்திற்கு சவாலாக அமையும்.

உட்கட்டமைப்பு: இலங்கையின் உட்கட்டமைப்பு மேம்படுத்தப்பட வேண்டும். காணப்படும் உட்கட்டமைப்பின் குறைபாட்டினால் வியாபாரம் செய்வதில் சிரமம் மற்றும் செலவு ஏற்படும்.

போட்டி: இலங்கை வணிகங்கள் வெளிநாட்டு நிறுவனங்களிடமிருந்து அதிகரித்து வரும் போட்டியை எதிர்கொள்கின்றன. இது உலக சந்தையில் போட்டியிடுவதற்கு அவர்களுக்கு கடினமாக உள்ளது.

***Threats: அச்சுறுத்தல்கள்:***

பொருளாதார ஸ்திரமின்மை: இலங்கை அண்மைய ஆண்டுகளில் பொருளாதார ஸ்திரமின்மையை எதிர்கொண்டுள்ளது. இது எதிர்காலத்தை திட்டமிடுவதற்கும், வளர்ச்சியில் முதலீடு செய்வதற்கும் வணிகங்களுக்கு கடினமாக உள்ளது.

(20ஆம் பக்கம் பார்க்க)

# 'நாம் 200' தேசிய நிகழ்வின் நிழல்கள்
















இந்திய வம்சாவளி மலையக மக்கள் பாரதத்தில் இருந்து இலங்கைக்கு அழைத்துவரப்பட்டதன் 200 ஆண்டுகள் பூர்த்தியினை முன்னிட்டு கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் கடந்த வியாழனன்று நீர்வழங்கல், பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டில் நடைபெற்ற ''நாம் 200'' எனும் தேசிய நிகழ்வின் போது பிடிக்கப்பட்ட படங்கள்.
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்த்தன ஆகியோர் பங்கேற்ற இந்த தேசிய நிகழ்வின் சிறப்பு அதிதியாக இந்திய மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், பாரதீய ஜனதா கட்சியின் தமிழ்நாட்டு மாநிலத் தலைவர் அண்ணாமலை குப்புசாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

## தமிழ் ஆராய்ச்சி மாநாடு 2023 – கோலாலம்பூர்

அருணாசலம் லெட்சுமணன் – 11

# காமனை வழிபட்ட கிரேக்கர்கள்

தமிழர்களின் வாழ்வியலோடு பின்னிப் பிணைந்த தன்மையை முருக வழிபாடு சூளுரைப்பதைக் காணலாம். தமிழர்களின் மொழியோடும் முருக வழிபாடு தொடர்புபடுவதை சங்க இலக்கியங்களில் இருந்தே அவதானிக்கலாம். இயற்கையுடன் இரண்டற கலந்த தமிழர்களின் வாழ்வியலோடும், வரலாற்றோடும் நெருங்கிய தொடர்பிற்குட்பட்டதாகவே முருக வழிபாடு செல்வாக்கு பெற்று வந்துள்ளது. சங்க இலக்கியங்களில் முருகனின் செல்வாக்கிற்கு உட்பட்ட இலக்கிய வடிவங்களையே ஆராதிக்க முடிகிறது. ஆற்றுப்படை நூல்கள் தனித்துவமாக முருகனிஸத்தின் அடையாளமாகத் திகழ்கின்றன.

உலக சிறுவர் இலக்கியத்தின் பொதுமைப்பாட்டில் தமிழின் வகிபங்கு தொடர்பில் பார்க்கின்ற போது தமிழில் சிறுவர் இலக்கியத்தின் தோற்றுவாயாக முருகனோடு தொடர்புபட்ட இலக்கிய வடிவங்கள் திகழ்வதையும் காணலாம். தமிழுக்கு ஔவையார் ஆற்றியுள்ள பணிகளில் சிறுவர் இலக்கியத்தின் பண்புகளையே உணர முடிகிறது. ஆத்திசூடி, கொன்றைவேந்தன் எனத் தொடரும் படைப்புகள் தமிழில் சிறுவர் இலக்கியத்தின் தோற்றப்பாடுகளை புலப்படுத்துவதைக் காணலாம். அறிவார்ந்த சிந்தனைக்குரிய பிள்ளைகளின் அடையாளமாகத் திகழும் முருகன் பிள்ளைகளில் முன் மாதிரியாகவும், நுட்பமான வளர்ச்சியின் தேவையை உணர்த்தும் பாத்திரமாகவும் நோக்கப்பட வேண்டியது அவசியமாகிறது.

இயற்கை நியமத்தின் படி உயிரின் உற்பத்திக்கு ஏற்ற சூழல் குறிஞ்சி நிலத்தில் அமையப்பெற்றுள்ளமை கவனிக்கத்தக்கது. அதன் தோற்றுவாயில் முருகன் மூலத்தில் இருந்து மனிதர்களால் கைக்கொள்ளப்படுவதை அறியலாம். அதன் அடிப்படையில் இந்திய நாகரிக மரபில் நீண்ட நாட்கள் முருக வழிபாடு நிலைபெற்றுள்ளமையும் தக்க சான்றாக விளங்குகிறது.

இயற்கையின் நெறிமுறையோடு நேசிக்கப்பட்ட கடவுளர் என்ற வகையில் முருகன் மீதான குறிஞ்சி நில மக்களின் அணுகுமுறை கவனிக்கத்தக்கது. மனித குல விருத்தியில் சூழல் தந்த படிப்பினை அனுபவங்களோடு ஏற்பட்ட குழுமங்களின் தலைமகன் என்ற அடிப்படையில் முருகன் கைக்கொள்ளப்பட்டு வந்துள்ள நெறிமுறையும் நோக்கத்தக்கது. இந்த வகையில் தமிழர்களின் ஏகனாக நோக்கப்படுகின்ற மரபும் அக் குழுமத்தினரிடையே இருந்து வந்த படிமுறை வளர்ச்சிப்போக்கும் குறிப்பிடத்தக்கது. தமிழர் சமூகம் தங்கள் இனக் குழுமத்திற்கு அழகு, வலிமை, கம்பீரம் கொண்ட தலைவனின் உருவாக்கத்தில் "முருகன்" என்ற நாமத்தோடு தன்னிறைவு காண்கிறார்கள். அதன் வழிவந்த வகையில் கட்டியெழுப்பப்படுகின்ற கடவுளர் கோட்பாட்டுடன் முருகனை நோக்கும் மரபும் கவனிக்கத்தக்கது.



எல்லாவற்றுக்கும் மேலாக இயற்கை நெறிமுறையின் மீதான பிடிப்புடன் இந்துக் கடவுள்களின் உருவாக்கம் பற்றிய சிந்தனை நோக்கத்தக்கது. உலகில் முலையூட்டிகளின் ஆதிக்கமே இந்த யுகத்தில் நிலைபெற்றுள்ளதை அறியலாம். அதில் மனித குலத்தின் நாகரிக போக்கு, கைக்கொள்ளப்படும் பண்பாட்டு நெறிமுறை என்பன விருத்தி பெற்ற குழுமமாக மனித குலம் கட்டியெழுப்பப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. முலையூட்டிகளின் விருத்தியின் மூலங்கள் ஆண், பெண் குறிகளாகின்றன. அந்த குறிகளை அடையாளப்படுத்துவதும் அவற்றை ஆராதித்து வழிபடுவதுமே இந்துக்களின் வழிபாட்டு மரபில் நிலையான இடத்தை பெற்று வந்துள்ளது. உயிரின உற்பத்தியின் இயங்கு அடையாளங்கள் லிங்கம், யோனி என்றாலும் வாரிசு உருவாக்கத்தின் தேவையான பதார்த்தம் விந்து ஆகிறது. ஆண், பெண் கூடலில் பெண்குறி நோக்கிய ஆண் குறியில் இருந்தான விந்து கருக்கட்டலில் முக்கிய இடம் வகிக்கிறது. இந்த விந்தணுவின் அடையாளமாகவே முருகன் இந்துக்களிடையே நோக்கப்படுவதன் பின்னணியில் பொதிந்திருக்கும் அறிவியல் தக்க சான்றாகும். முருகனின் ஆயுதமாக போற்றப்படுகின்ற வேல், முருக வழிபாட்டில் மிக முக்கிய இடத்தை வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. ஆண், பெண் புணர்வில் உச்ச நிலையில் பரிமாறப்படும் விந்தணுவின் வடிவத்தை ஒத்ததாகவே இந்த வேல் வடிவம் உருவமைக்கப்பட்டமை கவனிக்கத்தக்கது. விந்து விந்து மயிலோன் விந்து – முந்து முந்து முருகவேல் முந்து என்பார்கள். காதல், காமம் இணைந்த லௌகீக வாழ்க்கையின் இயற்கை நெறிமுறையினை வலியுறுத்துவதையே முருக வழிபாடு குறித்து நிற்கிறது எனலாம்.

முறையாக காமம் கைக்கொள்ளப்படல் வேண்டும் என்ற பண்பாடு முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையில் காளிதாசரின் ஸ்கந்தப்புராண எழுத்துருவாக்கம் புலப்படுமாற்றை காணலாம். இயற்கைத் தோற்றப்பாட்டுடன் இந்திய மரபின் பண்பாட்டு உருவாக்கத்தின் தோற்றுவாய் குறித்த அவரின் நிதர்சன பார்வை கவனிக்கதக்கது. இந்த மரபின் அடிப்படையில்தான் பாமர மக்களிடையே காமன் வழிபாடு கட்டமைக்கப்பட்டு வந்துள்ளது. அதன் தொடர்ச்சி நிலையில் தமிழர்களிடமும் இவ் வழிபாட்டு முறை கைக்கொள்ளப்பட்டு வந்துள்ளமையை நோக்கலாம். கிரேக்க நாகரீகத்திலும் காமன் வழிபாடு நிலைபெற்றிருந்தமையை அறியலாம். தென்னிந்திய மரபோடு தொடர்புபட்ட இலங்கையில் மலையகத் தமிழர்கள் இவ் வழிபாட்டு முறையை பயில் நிலைக்குரிய கலையாகவும், வழிபாட்டு மரபாகவும் காத்து வருகின்றமை கவனிக்கத்தக்கது. இதன் பின்னணியிலேயே மலையக மக்களின் நேசிப்பிற்குறிய கலையாக காமன் கூத்து விளங்குகிறது.



இலங்கையில் இருநூறு வருட வாழ்வியலில் மலையக மக்களால் மிக நேசிப்பிற்குரிய கலை வடிவமாக அனுஷ்டிக்கப்படுவதை அறியலாம். வாழ்வை சீரான வகையில் ஒழுங்கமைக்கும் ஒழுக்க நெறிக்கான பாடத்திட்டமாகவே அமையுமாற்றை உற்று நோக்கலாம். ஒழுக்கத்தை போதிக்கும் வகையில் புராண, இதிகாச கதைப் போக்குகள் மேற்கோள் காட்டப்படுகின்றமை சிறப்பம்சமாகிறது. உள்ளார்ந்து காமன் கூத்தின் அம்சங்களை உற்று நோக்குகின்ற போது அறிவியல் பூர்வமாக வாழ்வியலை அணுக வேண்டிய நுட்பத்தை போதிப்பதை தலையான நோக்கமாகக் கொண்டமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. 2012ம் ஆண்டு கொழும்புத் தமிழ்ச் சங்கம் நடத்திய உலகத் தமிழ் இலக்கிய மாநாட்டில் "பன்முக நோக்கில் காமன் கூத்து ஓர் ஆய்வு எனும் தலைப்பில் என்னால் முன் வைக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை இத்துறை ஆய்வாளர்களின் கவனத்தை வெகுவாக கவர்ந்தமை குறிப்பிடத்தக்கது. வார இதழ் ஒன்றில் "காமன் கூத்து கலையறிவோம்" எனும் தலைப்பில் எழுதிய தொடர் நூலுருவாக்கத்திற்கான பூர்வாங்க பணிகள் இடம் பெறுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

(17ஆம் பக்கம் பார்க்க...)




# மணக்கும் வாழ்வு...

எப்.அலி தர்கா நகர்

பூக்களின் தேசம்
புன்னகை வாசம்
மலருமே நேசம்
மறக்குமே சோகம்...
உயிர்வரை பாசம்
தொடருமே பந்தம்
இனிக்குமே சொந்தம்
குளிருமே சித்தம்...
வீணையின் சந்தம்
மனமதின் சாந்தம்
ரசனைகள் மாறும்
காவியம் பாடும்...
சுற்றமும் தெளியும்
சிந்தனை கிளரும்
கற்பனை துளிரும்
கவிகளும் பிறக்கும்...
வாழ்வினில் சோகம்
துடைபடும் பாவம்
பொறுமையில் தேற்றம்
ஒழியுமே வாட்டம்...
காலங்கள் மாறும்
காயங்கள் ஆறும்
அனுபவம் கூடும்
படிப்பினை கூறும்
பற்பல
சங்கதிகளும் கூறும்!!!





# இது எங்களின் தேசம்

ஏ எம் கஸ்புள்ளா

வலியே வலியாகும் வார்த்தை
வழிதேடும் வாழ்க்கை
அழியாத நினைவாய்
கலிகாலமாகி கரைகின்ற
கண்களின் நீரை
நிலம் தேடிச் செல்லும்
இது பிரியாத பாசம்
நானான நீயும்
நீயான நானும்
நிலமெந்தன் உறவு
உயிரான கனவு
பிறந்திங்கு தவழ்ந்தேன்.
வளர்ந்திங்கு நிமிர்ந்தேன்
தாய் தந்தை தொடராய்
உடன் பிறந்தோறும்
பிறந்த பூமியில்
அழித்தல் என்பது
அராஜகம்
இழந்திட்ட உயிர்கள்
இனி இழக்கின்ற உயிர்கள்
மண்தாங்கிக் கொள்ளும்
இது எங்களின் தேசம்.
எழுதப் படாத
விதிகளில் உங்களது சந்தோஷம்
நிலைப்பதில்லை
எங்களுக்கென எழுதப்பட்ட
நிலத்தில் கறை படிந்த
உங்கள் பாதங்கள்
படுமானால்
சுத்தப் படுத்துகின்ற
மண்ணாக இறுதிவரை
நாமிருப்போம்.

# புன்னகை என்ன விலை?

Dr ஜலீலா முஸம்மில்
ஏறாவூர்

புன்னகையே புதுநகை
பூண்டிடலாம் பேருவகை
பீறிடுமே புத்துணர்ச்சி
பூத்திடுமே கண்குளிர்ச்சி
சிரித்தால் போதும்
சிறகுகள் விரியும்
பறவைகள் போலே
பண்ணிசை மேவும்
மனதின் சிறைக்குள்
மகிழ்ச்சி பரவும்
சினமும் குறைந்து
சிந்தையும் சீர்பெறும்
புன்னகையில் முகமும்
பூவாய் மலரும்
புதியதோர் அழகைப்
பதியமிட்டுச் செல்லும்
நம்பிக்கை அளிக்கும்
நலவில் முடியும்
மனநிலை மேம்படுத்தி
நிம்மதியைக் கொடுக்கும்
அழுத்தம் குறைக்கும்
அமைதியைத் தரும்
எதிர்ப்புசக்தி கூட்டி
இன்பம் பெருக்கும்
வலி நிவாரணி
வாழ்வின் பூரணி
வளமான சிகிச்சை
வழிந்திடும் புன்னகை
இதழ்கள் அணிந்திடும்
இனிய ஆபரணம்
இறவாத நேர்மறை
எண்ணங்கள் வளர்த்திடும்
தசைகளைத் தளர்த்தும்
தணிவான நிலைவரும்
தெம்பை வளர்த்து
துன்பம் துடைக்கும்
மிருகங்களுக்கும் நமக்கும்
மிகப்பெரும் வித்தியாசம்
மின்னிடும் புன்னகையில்
மிருதுவாகும் உலகம்



# மரணமே வாழ்க்கை

மூதூர் றிஸ்வின்

பலஸ்தீனியர்களின்
கைகளிலும்
கால்களிலும்
பெயர்கள்
எழுதப்படுகின்றன.
ஏன்?
மரணம் நிச்சயம்.
கூம்புக் கூர்கள்
துளைக்கும்.
அங்கங்கள்
உருக்குலையலாம்.
கருகிய
கரித்துண்டாகலாம்.
தலை பறந்து
முண்டமாகலாம்.
அடையாளம் காணத்தான்
பெயர்கள்
எழுதப்படுகின்றன.
வல்லரசுகளின்
தாக்குதலில்
மழலை மொழி
மல்லிகைகள்
செவ்வரத்தம் பூக்களே!
ஆறடிகளுக்கே
அரையடி
நிச்சயம் இல்லை.
இரண்டடிகளுக்கு
இரண்டு
இஞ்சிகள் கிடைப்பது
பாக்கியமே!
குழந்தைகளுக்கு
பெயர்
எழுதவும்
எழுதப்படவும்
மரண வெக்கையில்
மன உறுதியின்
வலிமையின்
கம்பீரமே!



# விலை பெறுமதியானது

ரோஷான் ஏ.ஜிப்ரி

குர்ஆனியப் பூக்களின்
குருதிக்கான விலையை
நீ விளங்கும்போது...
அவற்றின் அதிஉச்ச
பெறுமதிகள்
வானிலிருந்து
உன் ஆதிக்கத்தின் மேல்
ஒவ்வொன்றும்
இனி..இப்படியே
இடியாய் இறங்கும்
தலைக்கனம் பிடித்த
உனக்கு இனிமேல்
கிலி "க்" கனம் பிடிக்கும்
இருப்பை தக்கவைக்க
இறப்பை தள்ளி வைக்க
உன்னை நீயே
கடித்து உண்பாய்
நீதியை எத்தனை
காலத்திற்கு
சிறைக்குள்
வைப்பது..?
நெருப்பை
மூட்டிக்கொண்டிருந்தாய்
இன்று உன்னை சுடுகிறது
தலை,கால் புரியாமல்
அலையும் நீ...
காலத்தின்
அலைவரிசையில்
நிலையக் கோளாறு
ஒத்தியில் இருந்ததை
ஒப்புக் கொள்ளாமல்
இடம்,பொருள் தேடினாய்
இனி.. கடன்
அருள் கேட்டு
கையேந்த வரும்
பந்தாடலாமென வந்தாய்
விக்கட்டுகள் விழுகின்ற
ஆட்டத்தின்
களநிலவரம் பார்த்து
இனி..
பயந்தோடுவாய் பார்
தன் நாட்டை கேட்ட
குழந்தைகளுக்கு
கபன் பொன்னாடை
போர்த்துகிறாய்
எவனாடையும்
கிடையாமல் நீ..
நிர்வாணமாய்
நீ நிற்கவரும்
நினைவில் கொள்
பிஞ்சுகள்
பூக்களென
வேரறுக்கலாம் என
எண்ணினாய்
இப்போது நீ
கருவறுக்கப்படுகிறாய்
கூட்டிக்
கழித்துப்பார் புரியும்
விலை எவ்வளவு
பெறுமதியானதென்று!

# அன்பு

கவிச்சுடர் சிவரமணி
திருகோணமலை

அன்பெனும் மந்திரம்
எனக்குள் இருக்கு
ஆசையின் தேடல்
அதிலும் இருக்கு
கொஞ்சம் வலி
மிஞ்சும் வேளை
தஞ்சம் புக அன்பே
நெஞ்சம் வேண்டும்
நெஞ்சணைய
நீயணைய
நெக்குருகி நான் மறுக
காற்றுக்கும் வழி கேட்டு
வானவில்லும்
வசமாகிடுமே
பொய்மறந்து மெய்யுருக
போதும் போதுமென
இன்பச்சாகரத்தில்
இனிய உலா
வஞ்சிநான் காணவேண்டும்
கவிபடைத்து கனியமுது
கரமேந்த வைப்பதேனோ
தேனுண்ட வண்டாட்டம்
தேடுகிறேன்
உனைநானும்



# வாழ்ந்திடலாம்

நிலாவெளியூர் கெஜதர்மா.
நிலாவெளி 02.

வெறுமையாய்
நிலத்தினை
வைக்காதீர்கள்
வேளாண்மை
அதனைச்
செய்திடுங்கள்.

பொறுமையாய்
அதனைப் பேணுங்கள்
பொற்கால மொன்று
பிறந்திடுமே.

வறுமையு
மெமைவிட்டுப்
போயிடுமே
வளமாக நம்நாடும்
வளர்ந்திடுமே.

அறுசுவை
உணவினை
உண்டிடலாம்
அகமிக மகிழ்ந்தே
வாழ்ந்திடலாம்.



# நாளைய சமூகம்..!

ஏரூர் கவிமாமணி
எம்.ரி.எம்.அன்ஸார்.

கெட்டதை நீயும்
தூக்கியே எறிந்திடு
கேட்டதை நன்றாய்
அலசியே அறிந்திடு
தொட்டதை முடிக்கவே
தேனீயாய் விரைந்திடு
விட்டதைத் தொடர்ந் தே
வீரியத்தில் சிறந்திடு
போதையைத் தொடாது
காத்திடு மனிதம்
பாதையை சரியாக்கிட
நிறைந்திடும் புனிதம்
பேதையை மதித்திட
துலங்கிடும் உள்ளம்
வதையை நிறுத்திடு
உனக்கது நல்லம்
வறுமையை விரட்டிட
இன்றே புறப்படு
பொறுமைக்குள் நீயும்
தயங்காது சிறைப்படு
வெறுமையை விலக்கி
சேர்ந்திடு உறவோடு
நிறைவை அழகாக்கு
எதிர்காலம் உன்னோடு
அனாதைகளை ஆதரிக்க
மறந்திடாதே நீயும்
விதவைகளை மதித்தே
நடந்திடு நாளும்
விதையாய் விழுந்தே
விருட்சமாய் மீளும்
நிறைவாய் அன்பும்
உன்னை ஆளும்
கண்ணீர் வடித்தே
தோல்வியில் துவளாதே
உன்னைச் செதுக்கிடு
நம்பிக்கை உளியாலே
விண்ணையும் தொடலாம்
முயற்சி கொண்டாலே
மண்ணையும் வெல்லலாம்
சோர்வைக் களைந்தாலே
உயரம் தொடவே
இலக்கை நாடிடு
துயரம் களைந்தே
இன்பத்தில் கூடிடு
புலரும் பொழுதில்
நன்மையைத் தேடிடு
நாளைய சமூகம்
உன்னைப் போற்றும்



# என் நாட்குறிப்பில் ஒக்டோபர் 1990

இக்ராம் முஸ்தபா
மயக்க மருத்துவ
விசேட வைத்திய நிபுணர்

யானை மிதித்த
சோளக் காடானதே
எங்கள் பூர்வீகம்..
கறுப்பு ஜூலையும்
கறைபடிந்த
ஒக்டோபரும்
எங்கள் கலன்டரின்
கறுப்புப் புள்ளிகள்
எங்கள் தொப்புள்
கொடிகள்
இன்னுமொருமுறை
துண்டாடப்பட்ட நாள்
கண்விழிக்கு முன்னே
எங்கள் தெருக்கள்
களவாடப்பட்ட நாள்
எங்கள் பாட்டனும்
பூட்டனும்
விதைக்கப்பட்ட பூமி
சிறைபிடிக்கப்பட்ட
சோக வரலாற்றின்
முதற் பாகம்.....
எங்கள் இதயங்களை
கழற்றி வைத்து விட்டு
கண்ணீர் ஆற்றில்
மிதந்து கரைசேர்ந்த
பாவம் ஆறிய
அப்பாவிகள் நாங்கள்....
தரையில்
தத்தளித்த சனங்களை
கடல் அலைகள்
அரவணைத்தது
காகங்கள் கூட
சோகத்தில்
மாலையில்
கரைந்தன....
ஒவ்வொரு வீடும்
சவங்கள் இல்லா
மரண வீடானது



கிரோசிமா நாகசாகிக்கு பின்
ஓர் அணுகுண்டின்
உஷ்ணம்
எங்கள் மூச்சில் படிந்தது
தென்னை மரங்களும்
பனைமரங்களும்
ஓலையில் சாசனம்
எழுதின
கால்கள் இருந்தால்
உங்களோடு நாங்களும்
கரைசேர்வோம் என...
அன்று ஒலித்த
பாடசாலை மணி
கடைசியாய்
கேட்ட பள்ளி
பாங்கு எல்லாம்
அந்த மரண ஊர்வலத்தின்
இறுதிச் சடங்குகள்...
தூரத்துப் பயண
ஜன்னல் ஒரக் காட்சிகளாய்
நான் நடை பழகிய
திண்ணை
சைக்கள் ஒட்டிய சாலை
பின்னேர காசில்
அங்காடி தின்ற தெரு
நிலக்கடலை விற்கும் ஆச்சா...
என் வீட்டுப் படலையை
இழுத்து விட்ட
என் தாயின்
கண்களில் இறுதியாய்
சொட்டிய கண்ணீர்....
கவலையை
மறைக்க முயன்று
தோற்றுப்போன என்
தந்தை....
வெள்ளத்தில்
அடிபட்ட சறுகுகளாய்
நாங்கள்
கரையொதுங்கியது என்னவோ
பாலைவனத்தில்.....
சத்தியாமாய்
தெரியவில்லை
இன்றுவரை எமக்கு
நாம் செய்த
குற்றம் என்னவென்று....



# காதல்

மெய்யன் நடராஜ்

பெற்றோர் பேச்சைக் கேட்காதல்
பிழையா சரியா பார்க்காதல்
கற்றோர் வழிநின் றொழுகாதல்
கற்கச் சொன்னால் பிடிக்காதல்
உற்றார் உறவை மதிக்காதல்
உயரும் எண்ணம் வளர்க்காதல்
முற்றும் திருந்த நினைக்காதல்
முடிவாய் எதையும் ஏற்காதல்
கூடா நண்பர் தவிர்க்காதல்
குடியும் புகையும் மறக்காதல்
ஆடா திருக்க ஆகாதல்
அவமா னத்தை துடைக்காதல்
காடாம் தாடி மழிக்காதல்
கவனக் குறைவை தடுக்காதல்
தேடாத் தீமை வெறுக்காதல்
திமிராய்த் திரிய மறுக்காதல்
நகத்தைக் கூட நறுக்காதல்
நாளைக் கென்று ஒதுக்காதல்
முகநூல் மூடி வைக்காதல்
முடியை அளவாய் குறைக்காதல்
அகந்தை தன்னை நீக்காதல்
அழுக்குத் துணியைத் துவைக்காதல்
உகந்த தெதையும் ஏற்காதல்
ஒவ்வொரு நாளும் ஒருகாதல்
வீட்டுச் சமையல் பிடிக்காதல்
வெளியில் உண்ண மறக்காதல்
நாட்டு நடப்பைப் பார்க்காதல்
நல்லவர் பேச்சை எடுக்காதல்
கூட்டா ளிமாரைக் குறைக்காதல்
குடும்பத் தாரை நினைக்காதல்
ஏட்டை எடுத்துப் படிக்காதல்
எதற்கும் முயற்சி எடுக்காதல்
இல்லாதார் கண்டு இரங்காதல்
இருகண்ணால் கூடப் பார்க்காதல்
பொல்லாதார் கண்டு ஒதுங்காதல்
புரியாத தறிய விரும்பாதல்
உல்லாசப் பயணம் தவிர்க்காதல்
உடும்பெனப் பிடியை மறக்காதல்
எல்லாமே கொண்ட இக்கால
இளசுகள் கொள்ளும் இடர்காதல்

# புரட்சிகர வில்லைகளின் தொகுப்பை வெளியிட்டது எஸ்சிலர் லங்கா

Essilor இன் இலங்கைப் பிரிவான Essilor Lanka, வில்லைகளில் உலகின் முதல் தர மற்றும் புதுமைக்கான தனது உறுதிப்பாட்டை மேம்படுத்தப்பட்ட ஆய்வுகூடத்தை உருவாக்கியதன் மூலம் வெளிப்படுத்தியுள்ளது. மேம்பட்ட இயந்திரங்கள் மற்றும் தொழில்நுட்பத்துக்கான இந்த முதலீடு, அதன் வாடிக்கையாளர்களுக்கு உயர்ந்த தரமான தயாரிப்புகளை வழங்குவதற்கான Essilor Lanka இன் உறுதியான அர்ப்பணிப்புடன் இயைந்து செல்கின்றது. மேம்படுத்தப்பட்ட வசதி தற்போது சர்வதேச உற்பத்தித் தரங்களுக்கு இணையாக இயங்கி வருவதால், நிறுவனம் கண் பராமரிப்புத் துறையில் சிறந்து விளங்குவதற்கான புதிய அளவுகோலை வகுத்துள்ளது.

ஒரு தசாப்த கால செயல்பாடுகளைக் கொண்டாடும் வகையில், Essilor Lanka தனது சமீபத்திய Crizal வில்லைகள் மற்றும் Presbyopes Varilux Comfort Max வில்லைகளின் அண்மைய வரிசையை அறிமுகப்படுத்தியது. Essilor Lanka இந்த 2 கண்டுபிடிப்புகள் மூலம் அனைத்து வயதினருக்கும் மேம்பட்ட பார்வைத் திருத்தம் மற்றும் பாதுகாப்பை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.



1849ஆம் ஆண்டில் பாரிஸில் ஒரு கைவினைத் தொழிலாக கண்ணாடி தயாரிக்கத் தொடங்கிய Essilor குழுமம், புதுமையான வணிக மாதிரிகள் மூலம் உயர்தர தயாரிப்புகள் மற்றும் சேவைகளை வடிவமைத்து, தயாரித்து விநியோகிப்பதற்கான நிபுணத்துவத்தைக் கொண்டுள்ளது. . இன்று, Essilor 70 நாடுகளில் பரவியுள்ள 67,000 பணியாளர்களை வேலைக்கு அமர்த்தும் அதே வேளையில், உலகில் உள்ள 7.4 பில்லியன் மக்களின் பார்வை ஆரோக்கியத்தை சரிசெய்து பாதுகாப்பதற்கான தீர்வுகளை வழங்குகிறது.

# நுகர்வோருக்கான Eco-Bag திட்டம் ஹேமாஸால் அறிமுகம்

சுற்றாடலை பேணும் செயற்பாட்டின் முக்கிய நகர்வாக, லங்கா சதொச நிறுவனத்துடன் ஹேமாஸ் கைகோர்த்துள்ளது. அதனூடாக சமூகத்தில் அதிகரித்துச் செல்லும் பிளாஸ்ரிக் மாசுக்கு தீர்வு காண்பதுடன், நிலைபேறான வாழ்க்கை முறையை ஊக்குவிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

ஹேமாஸ் கன்சியுமர் பிராண்ட்ஸ் விற்பனை அணியினால் முன்னெடுக்கப்படும் இந்தத் திட்டத்தினூடாக, லங்கா சதொசவில் ஹேமாஸ் தயாரிப்புகளை கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு மீளப் பயன்படுத்தக்கூடிய இலவச பை வழங்கப்படும். முதற் கட்டமாக, சூழலுக்கு நட்பான 40,000 பைகள் நாடு முழுவதிலும் காணப்படும் 440 லங்கா சதொச விற்பனையகங்களில் விநியோகிக்கப்படும்.

விற்பனை நிலையங்களின் வாடிக்கையாளர்கள் சமூகமளிப்புக்கமைய இந்த Eco பைகள் பகிர்ந்தளிக்கப்படுவதுடன், இந்த பைகள் பிரத்தியேகமான குறியீட்டு கட்டமைப்பை கொண்டிருக்கும்.



அதனூடாக தொடர்ச்சியாக இவற்றை பயன்படுத்துகையில், அவற்றை மீளப் பயன்படுத்துவதை ஊக்குவிக்கும் வகையில் வாடிக்கையாளர்களுக்கு விலைக்கழிவுகள் வழங்கப்படும். அதனூடாக சமூகத்தாரிடையே நிலைபேறான பழக்கங்களை ஊக்குவிக்க எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும், பொறுப்பு வாய்ந்த பிளாஸ்ரிக் கழிவு அகற்றலை ஊக்குவிக்கும் வகையில், ஹேமாஸ் மற்றும் லங்கா சதொச ஆகியன, சதொச விற்பனை நிலையங்களில் பிரத்தியேகமான பிளாஸ்ரிக் கழிவு சேகரிப்பு பகுதிகளை நிறுவியுள்ளன.

# சணச லைஃப் இன்சூரன்ஸ் யாழ்ப்பாணத்தில்

இலங்கையில் வேகமாக வளர்ந்து வரும் காப்புறுதி நிறுவனமான சணச லைஃப் இன்சூரன்ஸ் பீ.எல்.சி தனது புதிய கிளையை யாழ்ப்பாண நகரில் இல. 237, ஸ்ரான்லி வீதி எனும் முகவரியில் திறந்து வைத்துள்ளது.



நாட்டின் சம்பிரதாயங்களுக்கு முதலிடம் கொடுத்து இடம்பெற்ற இத் திறப்பு விழா நிகழ்வில் சணச குழுமத்தின் தலைவரான பி.கஜேந்திரா, பணிப்பாளர் எஸ்.எஸ்.மாறன் பிரதான நிறைவேற்று அதிகாரி, ஐவன் நிகலஸ் மற்றும் பிரதான வணிக அதிகாரி, கெனடி ஜே.மைகல், ஆகியோர் தலைமையில் நடைபெற்றதுடன் சணச லைஃப் இன்சூரன்சின் நிர்வாக இயக்குனர் குழுமம் மற்றும் உயர் மட்ட முகாமையாளர்கள் ஆகியோரும் இந்நிகழ்வில் பங்குபற்றினர்.

யாழ்ப்பாண கிளையை தெரிவு செய்யும்போது யாழ்ப்பாணத்தின் பாரம்பரிய முறைமைகள் பாதுகாக்கப்படும் வகையில் அனைத்து சமய நடவடிக்கைகளும் நிகழ்த்தப்பட்டதுடன், யாழ்ப்பாணத்தின் புராதன சம்பிரதாயங்களை பின்பற்றி கிளையின் நடவடிக்கைகளை செயற்படுத்தியமை இதன் மூலமாக தெளிவாகின்றது. அதிகளவான வர்த்தகங்கள், உயர் கல்வி நிலையங்கள், நிதி நிறுவனங்கள் என்பன அண்மைக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் நிர்மாணிக்கப்படுவதுடன் யாழ் நகர மக்களுக்கு மேலும் சிறந்த வசதிகளையும், இலகுவான முறையில் தமது காப்பீட்டு தேவைகளை பூர்த்தி செய்வதற்காகவும் நாடு முழுவதும் கிளைகளைக் கொண்டுள்ள எமது நிறுவனமானது, தனது இன்னும் ஒரு புதிய ஆரம்பமாக யாழ்ப்பாணக் கிளையை ஆரம்பித்துள்ளது.

உலக நீரிழிவு மாதம்

# Suwa Diviyaவின் இலவச வேலைத்திட்டம்

ஆரோக்கியமான வாழ்க்கை முறை மற்றும் நீரிழிவு விழிப்புணர்வுக்காக அர்ப்பணிக்கப்பட்ட இலாப நோக்கற்ற நிறுவனமான Suwa Diviya, உலக நீரிழிவு மாதத்தை முன்னிட்டு நேற்று 2023 நவம்பர் 4ஆம் திகதி விசேட நிகழ்ச்சியொன்றை இலங்கை மன்றக் கல்லூரியில் ஏற்பாடு செய்தது.

"Unmask Diabetes" எனும் தொனிப்பொருளின் கீழ் இந்த நிகழ்ச்சி நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்த திட்டத்தின் நோக்கம் நீரிழிவு நோய், அதன் தடுப்பு மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கையின் சமூக நோக்கம் ஆகியவற்றில் கவனம் செலுத்துவதாகும். அன்றைய தினம் காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணி வரை பொதுமக்களுக்காக இந்த இந்த நிகழ்ச்சி நடைபெற்றது.

அன்றைய நிகழ்ச்சியானது நீரிழிவு நோய்த் தடுப்பு பற்றிய ஒரு கவர்ந்திழுக்கக் கூடிய விளக்கக்காட்சியுடன் தொடங்கியது, இதில் பங்கேற்பாளர்கள் நீரிழிவு அபாயத்தைக் குறைக்க எடுக்கக்கூடிய நடைமுறைகள் குறித்த மதிப்புமிக்க நுண்ணறிவைப் பெற்றுக்கொண்டனர். இந்நிகழ்ச்சியில் பிரசித்தி பெற்ற உட்சுரப்பியல் நிபுணரான திருமதி. திமுத்து முத்துகுட அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றினார். நீரிழிவு நோய் குறித்த விரிவான விழிப்புணர்வு அமர்வை அவர் நடத்தினார். இந்த நாட்பட்ட நிலையின் சிக்கல்களை மருத்துவர் முழுமையாக விளக்கி, பங்கேற்பவர்களுக்கு அதைப் பற்றிய சிறந்த புரிதலை வழங்கினார்.



இந்த திட்டத்தில் ஒரு கண் மருத்துவ நிபுணர், சிறுநீரக மருத்துவ நிபுணர், குடும்ப மருத்துவ நிபுணர், ஊட்டச்சத்து நிபுணர் ஆகியோர் அடங்குனர்.

# SLT டிஜிட்டல் சேர்விசஸ் உடன் ஏசியன் ஹார்ட்வெயார் (Pte) Ltd கைகோர்ப்பு

இலங்கையின் இலத்திரனியல் வணிக கட்டமைப்பில் புதிய மைல்கல் சாதனையை நிறுவும் வகையில், ஏசியன் ஹார்ட்வெயார் (Pte) Ltd, SLT டிஜிட்டல் சேர்விசஸ் (பிரைவட்) லிமிடெட் உடன் கைகோர்த்துள்ளது. இந்த பங்காண்மையினூடாக, ஹார்ட்வெயார் விற்பனைத்துறையில் ஏசியன் ஹார்ட்வெயார் (Pte) Ltd கொண்டுள்ள நிபுணத்துவமும், புத்தாக்கமான டிஜிட்டல் தீர்வுகளை வழங்குவதற்கான SLT டிஜிட்டல் சேர்விசஸ் கொண்டுள்ள தொழில்நுட்ப நிபுணத்துவமும் இணைக்கப்பட்டுள்ளது.



ஏசியன் ஹார்ட்வெயார் (Pte) Ltd இன் முகாமைத்துவ பணிப்பாளர் ஏ.ஆர்.எம். யஷீர் கருத்துத் தெரிவிக்கையில், "வியாபாரங்கள் இயங்கும் முறையில் தொழில்நுட்பம் செல்வாக்கு செலுத்தும் காலகட்டத்தில், இந்த கைகோர்ப்பினூடாக, எமது வாடிக்கையாளர்களுக்கு முன்னரை விட மேலும் சிறந்த மற்றும் சௌகரியமான சேவைகளை பெற்றுக் கொடுக்க வலுவூட்டுவதாக இருக்கும் என நம்புகின்றோம்." என்றார்.

வியாபார வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமான டிஜிட்டல் தீர்வுகளை தயாரித்து நடைமுறைப்படுத்துவதில் SLT டிஜிட்டல் சேர்விசஸ் பெருமளவு அனுபவத்தைக் கொண்டுள்ளது.

புத்தாக்கம் மற்றும் வாடிக்கையாளர் வெற்றிகரமான செயற்பாடுகள் போன்றவற்றுக்கான அவர்களின் அர்ப்பணிப்புகள், ஏசியன் ஹார்ட்வெயார் (Pte) Ltd இன் இலக்குகளுடன் மிகவும் பொருந்துவதாக அமைந்துள்ளதுடன், ஒப்பற்ற மற்றும் வாடிக்கையாளர்களை மையப்படுத்திய இலத்திரனியல் வணிக கட்டமைப்பை உருவாக்க ஏதுவாக அமையும்.

# 'இலங்கையின் மிகச் சிறந்த மொபைல் வங்கி' செயலியாக 'கொம்பேங்க் டிஜிட்டல்'

கொமர்ஷல் வங்கியின் omnichannel டிஜிட்டல் வங்கி மேடையான 'கொம்பேங்க் டிஜிட்டல்' இலங்கையின் 'மிகச் சிறந்த நடமாடும் வங்கி' செயலியாக குளோபல் பினான்ஸ் சஞ்சிகையால் தெரிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி சஞ்சிகையின் 2023ம் ஆண்டுக்கான லண்டனில் இடம்பெற்ற உலகின் மிகச் சிறந்த டிஜிட்டல் வங்கிச் சேவைகளுக்கான விருது வழங்கும் நிகழ்விலேயே இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையின் முதலிடத்தில் உள்ள டிஜிட்டல் வங்கி சேவை அதிக பாவனை மற்றும் வாடிக்கையாளர் ஊடுருவல் என்பனவற்றை உள்ளடக்கியதாகும். கொம்பேங்க் டிஜிட்டல் என்பது கொமர்ஷல் வங்கியின் இணையவழி வங்கி அலைவரிசைகள் அனைத்தையும் உள்ளடக்கியதாகும். எல்லா இணையவழி செயற்பாடுகள் மூலமாகவும், தனியார் கணனிகள், மடிக்கணனிகள், டெப்லட்கள், ஸ்மார்ட் தொலைபேசிகள் என எல்லா கருவிகள் மூலமாகவும் இந்தச் சேவைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.



கொமர்ஷல் வங்கியின் டிஜிட்டல் வங்கிப்பிரிவு உதவி பொது முகாமையாளர் பிரதீப் பந்துவன்ஸ வங்கியின் சார்பாக இந்த விருதை ஏற்றுக் கொண்டு பேசும் போது "இந்த விருது மிகவும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். காரணம் இலகுவான அணுகும் வசதி, பண்புகள் மற்றும் செயற்பாடுகள், இலகுவான பாவனை, வித்தியாசமான தளங்கள் மற்றும் செயற்பாட்டு முறைகள் ஊடான பாவனை, வெளிப் பங்காளிகளுடனான ஒருங்கிணைப்பு, உள்ளடக்கம், பொறுப்பான வடிவமைப்பு மற்றும் இதர பண்புகள் என எல்லா அம்சங்களையும் பரிசோதித்த பின் கிடைப்பதாகும்." என்றார்.

# இலங்கையின் முன்னணி தகவல் தொழில்நுட்ப கேந்திரநிலையமாக யூனிற்றி பிளாஸா

கொழும்பு நகர மத்தியில் அமைந்துள்ள யுனிற்றி பிளாஸா கட்டடமானது இலங்கையின் அனைத்து தகவல் தொழில்நுட்பத் தீர்வுகளும் ஒரே கூரையின் கீழ்க் கிடைக்கக்கூடிய நிலையமாக மாறியுள்ளது. யூனிற்றி பிளாஸாவின் 51 சதவீத பங்குகளை 2020ஆம் ஆண்டில் கொள்வனவு செய்த Realty Investments PLC, ஆனது யூனிற்றி பிளாஸாவை புனரமைத்து அதற்கு புதியதொரு முகத்தைக் கொடுத்துள்ளது. அதனால் தற்போது யூனிற்றி பிளாஸாவானது இலங்கையின் தகவல் தொழில்நுட்ப கேந்திரநிலையமாக நிமிர்ந்து நிற்கின்றது.



Realty Investments PLC இன் நிறைவேற்று செயற்பாட்டு பணிப்பாளர் தர்ஷினி சர்வேஸ்வரனுடன், ஆர்ச்சி வோர்மன் மற்றும் ஹார்டி ஜமால்தீன் ஆகியோர் இம்முயற்சியில் பக்கபலமாக இருந்துள்ளனர்.

# மதிப்புமிக்க சான்றிதழை வென்றுள்ள Healthguard Distribution

இலங்கையில், மருந்து வகைகளின் சீரான விநியோகம் தொடர்பான அர்ப்பணிப்பினை மேலும் வலுவூட்டுகின்றது. Sunshine Holdings PLC இன் சகல விதமருந்து வகைகளின் முழு அளவிலான விநியோகப் பிரிவான Healthguard Distribution ஆனது அண்மையில் சிறந்த விநியோக நடைமுறைகளுக்கான (GDP) சான்றிதழினைத் தனதாக்கிக் கொண்டது.

Bureau Veritas India இனால் வழங்கப்பட்ட இம்மதிப்புமிக்க சான்றிதழானது Healthguard Distribution இன் சிறந்த இறக்குமதித் தரம், களஞ்சியப்படுத்துதல் மற்றும் விநியோக செயற்பாடுகள் தொடர்பான முகாமைத்துவக் கடப்பாட்டிற்குக் கிடைத்த உயரிய சான்றாகும்.

GDP சான்றிதழானது மருந்து வகைகளின் விநியோகச் சங்கிலி தொடர்பான விதிமுறை வழுவாத தரநிர்ணயத்தினை நிலைநாட்டுவதில் Healthguard Distrubution இன் அர்ப்பணிப்பினைக் குறிக்கின்றது.

Bureau Veritas India, ஆனது சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்களை வழங்கும் ஓர் ஆணைக்குழுவாகும். இது வர்த்தகத் தொழில்துறையின் சிறந்த நடைமுறைகள் மற்றும் ஒழுங்குமுறை தொடர்பான தேவைகளுக்கு இணங்கிச் செல்வதனை உறுதி செய்வதற்காக Healthguard Distrbution இன் செயல்முறைகள், உள்கட்டமைப்பு மற்றும் நடைமுறைகள் தொடர்பாக மிகுந்த உன்னிப்பான மதிப்பீடுகளை மேற்கொண்டுள்ளது.



இச்சாதனையானது, Healthguard Distrbution ஆனது கையாளும் ஒவ்வொரு மருந்துப் பொருட்களின் பாதுகாப்பு, செயல்திறன் மற்றும் ஒருமைப்பாட்டிற்கான அர்ப்பணிப்பினை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றது. தர முகாமைத்துவமானது இந்நிறுவனத்தின் முக்கிய கடப்பாடாகக் கருதப்படுகின்றது.

# வனிதாபிமான "Around Sri Lanka Parade"

NDB வங்கி மற்றும் News 1st இணைந்து நான்காவது வருடமாக ஏற்பாடு செய்த இலங்கை வனிதாபிமான விருதுகள், இலங்கைப் பெண்களைவலுவூட்டுவதற்கும்கௌரவிப்பதற்கும் வழங்கப்படுகிறது.இந்த ஆண்டு விழா ஊடக மாநாட்டுடன் தொடங்கியது. அதனைத் தொடர்ந்து ஒக்டோபர் 13ஆம் திகதி நவம் மாவத்தையில் உள்ள NDB தலைமையகத்தில் இருந்து 'The Around Sri Lanka parade ' அணிவகுப்புடன் நிகழ்ச்சி கோலாகலமாக ஆரம்பம் ஆனது. வனிதாபிமானா 4வது அத்தியாயத்தின் ஒரு பகுதியாக நடைபெறும் இந்த வாகன அணிவகுப்பு,ஒட்டுமொத்த இலங்கையையும் உள்ளடக்கியதாகவும், வனிதாபிமான விருதுகள் திட்டம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

மேலும் பெண்கள் தங்கள் விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதன் மூலம் பங்கேற்கவும் ஊக்குவிக்கிறது. 'The Around Sri Lanka parade' என்பது வெறும் வாகன அணிவகுப்பு மட்டும் அல்லாமல், எங்கள் மதிப்புமிக்க வாடிக்கையாளர்களுடனும் சமூகத்துடனும் பெருமளவில் ஈடுபடுவதற்கான ஒரு செயல்திட்டமாகும்.

இது 30 நாட்களுக்கு நாடு முழுவதும் உள்ள 25 மாவட்டங்களையும் கடந்து, இலங்கை முழுவதும் உள்ள 60 NDB கிளைகளுக்குச் செல்லும். இந்த ஒரு தனித்துவமான பயணம், இதில் பங்குபற்ற ஆர்வமுள்ளவர்களுக்கு பல்வேறு பொழுதுபோக்கு மற்றும் ஈடுபாடுமிக்க செயல்பாடுகளுடன் கூடிய ஒரு அழகான சூழல் அங்கே உருவாக்கப்படுகிறது, அத்துடன் கணக்குகளை அந்த இடத்திலேயே திறக்க வசதிகளும், இலங்கையின் மிகவும் பிரபலமான பெண் விருதுக்காக விண்ணப்பம் மூலம் பரிந்துரைக்கும் வாய்ப்பு கிடைக்கிறது.

# தடுமாற்றம்

சின்னஞ்சிறு வயதிலே இர்பாத் அனைத்து சுகங்களையும் அனுபவித்தான். அவனது தந்தை ஒரு வியாபாரி. நடுத்தர குடும்பமாக இருந்தாலும் வசதியில் குறைவிருக்கவில்லை. மூன்று பிள்ளைகளில் மூத்தவனான அவன் மானிறமானவன். வட்டவடிவமான களையான முகம் அவனுக்கு.

காலம் கடந்தது... இர்பாத் ஐந்தாம் வகுப்புக்குள் நுழைந்தான். பாடசாலைக் கல்வியோடு, பிரத்தியேக வகுப்புக்களுக்கும் சென்று வந்தான். புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி எய்த வேண்டும் என்பது அவனது சின்ன வயதுக் கனவாகியது. நினைத்தது போலவே அவன் பரீட்சையில் சித்தி பெற்றான்.

அவனது சந்தோசத்துக்கு அளவேயில்லை. பெற்றோரும் பேரானந்தம் அடைந்தனர். இர்பாதுக்கு ஒரு சைக்கிளை வாங்கிப் பரிசளித்தார் அவரது தந்தை. இர்பாதின் மகிழ்ச்சி இரட்டிப்பாகியது. தனது சின்னச் சின்ன பயணங்களையெல்லாம் சைக்கிளில் செல்ல ஆரம்பித்தான். நீல நிற சொப்பர் சைக்கிளை கண்ணும் கருத்துமாக பாவித்தான். அடிக்கடி துடைத்து சுத்தம் செய்து, மழையில் நனையாமல் வீட்டின் உள்ளே வைத்துப் பாதுகாத்தான். அவனது வீடு ஓரளவு சிறியதாக இருந்தாலும் கூட, அவனது சைக்கிளை நிறுத்தி வைக்க அங்கே ஒரு தனியிடம் தேவைப்பட்டது.

கடைக்குச் சென்று பொருட்களை வாங்கி வருமாறு தாய் சொன்னதும், தாய் சொல்லைத் தட்டாது பாய்ந்து செல்வதும், குடும்ப உறவினர்களின் வீடுகளுக்குச் சென்று வருவதும் அவனுக்கு அலாதி பிரியத்தைக் கொடுத்தது. இவ்வாறே நாட்கள் நகர்ந்தன. ஆறாம் ஆண்டுக்குள் காலடி எடுத்து வைத்தான் இர்பாத். "உம்மா நான் ஸ்கூலுக்கு பைக்ல போகவா" தாயிடம் அன்பாக தனது கோரிக்கையை முன்வைத்தான். அதுவரை நாளும் முச்சக்கர வண்டியில் பாடசாலைக்குச் சென்று வருவதை வழமையாகக் கொண்டிருந்தான். முச்சக்கர வண்டிக்கான மாதாந்த கொடுப்பனவை அவனது தந்தை தவறாது செலுத்தி வந்தார்.

இளம் கன்று பயமறியாது என்பது அந்தத் தாய்க்கு தெரியாமல் இல்லை. மகனை எவ்வாறு அணுக வேண்டும் என்பதையும் அத்தாய் நன்கு அறிந்து வைத்திருந்தாள். அந்தத் தாயும் உயர்தரம் வரை படித்தவள். அமைதியான சுபாவமும், பக்குவமும் அவளிடம் காணப்பட்டது. "வேணாம் மகன். ரோட்ல வாகனம் போற. கவனமாக போக வேணும். அடுத்து நீங்க இன்னும் சின்ன புள்ள. பொறகு பாக்கலாம்." என அன்பாகக் கூறி மறுத்தாள் தாய். என்றாலும் இர்பாதின் மனம் அதற்கு இணங்கவில்லை. தந்தை வீட்டிற்கு வந்ததும் அவரிடம் அனுமதியைக் கேட்டு, சைக்கிளில் பாடசாலை செல்ல வேண்டும் என அவனது உள்மனம் சொல்லியது.

அன்றிரவு தந்தை வீட்டுக்கு வர சற்று தாமதமாகியது. தந்தை வரும்வரை தூங்காமல் காத்து நின்றான் இர்பாத். "வாப்பா நான் ஸ்கூலுக்கு பைக்ல போகவா?" தந்தை வந்த உடனே கோரிக்கையை முன்வைத்தான். "ஏன் நீங்க பைக்ல போகோனும். த்ரீவீல்ல போகேலும் தானே" என தந்தை அவரது பக்க கேள்வியைக் கேட்டுக்கொண்டே மகனின் பதிலை எதிர்ப்பார்க்காமல் குளியலறைக்குச் சென்றார். இர்பாத் விடுவதாக இல்லை. தந்தை குளியலறையில் இருந்து வரும் வரை காத்திருந்து "வாப்பா மிச்சம் பேரு பைக்ல வார. நானும் போகவா?" என தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினான். "மகன் நீங்க இப்ப ஆட்டோல போங்க. பொறகு நான் செல்றன். அதுக்குப் பொறகு போக ஏலும். இப்ப பெய்த்துப் படுங்கோ" எனச் சொல்லி தனது மகனை தூங்க வைத்தார்.

அவனோடு அவனது தம்பியும், தங்கையும் அதே முச்சக்கர வண்டியில் தான் பாடசாலைக்குச் சென்று வந்தனர். காலச் சக்கரம் மெல்ல மெல்ல சுழன்றது. எட்டு மாதங்கள் சென்றிருக்கும். இர்பாதின் தந்தைக்கு வியாபாரத்தில் போதிய வருமானம் கிடைக்கவில்லை. மனம் தளர்ந்தார். மூன்று பிள்ளைகளுக்கு முச்சக்கர வண்டிக்கான பணத்தைக் கொடுக்க முடியாது சஞ்சலப்பட்டார்.

ஒரு நாள் இரவு, பிள்ளைகள் தூங்கச் சென்றதன் பின் தனது மனைவியை அழைத்து "இர்பாத பைக்ல ஸ்கூலுக்கு அனுப்புவோமா?" என்று வேதனை கலந்த குரலில் கேட்டார். ஒரு நாளும் இல்லாத வகையில் தன் கணவர் ஏன் இவ்வாறு கேட்கிறார். ஏதாவது பொருளாதாரப் பிரச்சினையாக இருக்குமோ? என நினைத்துக் கொண்டே "ஏன்.. என்ன பிரச்சின. யாவாரத்துல ஏதாவது....?" என இழுத்தாள். "ஓ... கொஞ்ச நாளா யாவாரத்துல வாசி (இலாபம்) இல்ல. என்ன செய்வதெண்டு வெளங்கேல்ல" கணவன் மனைவியிடம் தனது மனக்கவலையை வெளிப்படுத்தினான். மனைவிக்கோ உலகம் சுக்கு நூறாக வெடித்து சிதறியது போலிருந்தது.

அவள் மனக்கண் பல விடயங்கள் வந்து போயின. பிள்ளைகளின் பிரத்தியேக வகுப்புக்களுக்கான மாதாந்த கொடுப்பனவு, மின்சாரக் கட்டணம், அன்றாட வாழ்க்கைச் செலவுக்கான பணம் இன்னும் எத்தனையோ விடயங்கள் அவள் கண்முன்னே. கணவனின் வியாபாரத்துக்கு துணை போக முடியாது என்பது அவளுக்குத் தெரியாமலில்லை. ஆனால்......கணவனின் பொருளாதார நெருக்கடிக்கு துணை நிற்க வேண்டும் என அவள் தீர்மானித்தாள். என்ன செய்வது என மனதிற்குள் போராடினாள்.

அதிகாலையில் எழுந்து, தஹஜ்ஜத் தொழுது, இறைவனிடம் இரு கரம் ஏந்தி பிரார்த்தித்தாள். "யா அல்லாஹ். எனது கணவருக்கு வியாபாரத்தில் முன்னேற்றத்தை வழங்குவாயாக. எனது குடும்பத்தை பட்டினியில் வாட வைக்காதே. எமக்கு கஷ்டத்தை தந்து சோதனை செய்யாதே. கஷ்டமும், நஷ்டமும், சோதனையும் மனிதனுக்குத்தான். என்றாலும் உனது கருணையை அகற்றி விடாதே." உருக்கமாக துஆ கேட்ட அவள் எழுந்து, குர்ஆனை ஓதிக் கொண்டிருக்கும்போது தொழுகைக்கான அதான் ஒலிக்கிறது. அதே இடத்தில் சுபஹ் தொழுகையையும் நிறைவேற்றிவிட்டு, எழுந்து சென்று கதிரையில் அமர்ந்து சற்று யோசிக்கலானாள்.

பள்ளி சென்று வந்த கணவனை அணுகி "இர்பாத பைக்குல ஸ்கூலுக்கு போகச் செல்லோம். மத்த ரெண்டு பேரையும் நீங்க மோட்ட பைக்ல கூட்டிக் கொண்டு போங்கோ. ஆட்டோவ நிப்பாட்டுவோம். எங்களுக்கு ஒரு கணக்கு சல்லி மீயும். இன்னமொரு யோசனையும் இருக்கு. அத நான் பொறகு செல்றன்" என்று பேசி முடித்தாள். அத்தோடு அவள் ஒரு பெருமூச்சும் விட்டாள். "பார்க்கலாம்" என ஒரு வார்த்தையில் பதிலளித்து விட்டு நேராக இர்பாத் உறங்கிக் கொண்டிருந்த அறைக்குச் சென்று அவனை எழுப்பிவிட்டு சுபஹ் தொழுமாறு அன்புக் கட்டளையிட்டார்.

இர்பாத் தொழுது விட்டு, அல்குர்ஆனையும் சற்று ஓதினான். இது வழமையாக நடைபெறும் நிகழ்வுதான். தந்தையின் பொருளாதார சிக்கல் என்ன என்பது இர்பாதுக்குத் தெரியாது. அவனை அவளது தாய் நெருங்கி, "இன்டேலீந்து நீங்க ஸ்கூலுக்கு பைக்ல போங்கோ. நான் வாப்பாவோட பேசிக் கொள்றன்" என நிதானமாகச் சொன்னாள். இர்பாதுக்கோ மட்டற்ற மகிழ்ச்சி. அதிகாலையிலேயே இரை தேடிச் செல்லும் பறவை போல் உற்சாகமாக பாடசாலை செல்ல ஆயத்தமானான். தம்பியிடமும், தங்கையிடமும் தான் சைக்கிள் செல்ல போகும் செய்தியை சந்தோசத்தோடு சொல்லி முடித்தான்.



குறிப்பிட்ட நேரத்துக்கு ஆட்டோவும் வந்தது. இர்பாதின் தம்பியும், தங்கையும் ஆட்டோவில் ஏறிக் கொண்டானர். அவனது தாய் ஆட்டோ சாரதியை நெருங்கி "எங்கட மூத்தவரு பைக்ல போறார். நீங்க இவங்க ரெண்டு பேரையும் கூட்டிக் கொண்டு போங்கோ." என லாவகமாகச் சொன்னாள். மூவரையும் ஒரேயடியாக நிறுத்தி விட முடியாது. அவ்வாறு நிறுத்திவிட்டால் தன் குடும்பத்தின் கஷ்டம் வெளியில் தெரிந்துவிடும் என உள்ளுக்குள் அஞ்சினாள். அடுத்த மாதத்தில் இருந்து அவர்களையும் நிறுத்தி விட வேண்டும் என்பது அவளது திட்டம்.

பிள்ளைகள் பாடசாலை சென்றதன் பின்னர் இர்பாதின் தந்தை அவரது மனைவியை நோக்கி "நீங்க இன்னமொரு விசயம் இருக்கெண்டு சொன்னீங்க. அது என்ன?" என்று கேட்டார். தன் கணவனின் கேள்வி அவளை சற்று அமைதியாக்கியது. அந்த அமைதிக்கு நடுவே மெல்லிய குரலில் அவள் பேசத் தொடங்கினாள். "நான்... நான்.." என்று சற்று இழுத்துவிட்டு, நான் இடியாப்பம் சுட்டு கடைக்கு போடப் போறன்" ஒரேயடியாக சொல்லி முடித்தாள். அங்கே அமைதி நிலவியது.

அவளது கணவன் தன் மனைவியை நினைத்து பெருமிதம் கொண்டான். நான் அவளிடம் எதுவுமே சொல்லாமல் எனது கஷ்டத்தில் பங்கெடுக்கிறாளே. அல்லாஹ் எனக்குக் கொடுத்த வரம் இது. என மனதுக்குள்ளேயே சொல்லிக்கொண்டு, அவளுக்காக பிரார்த்தனை செய்தான்.

"இடியாப்பத்த சுட்ட. என்ன செய்யப்போற" மனைவியின் பதிலை எதிர்பார்த்தவனாக அங்கே நிலவிய அமைதியை கலைத்து கணவன் பேசத் தொடங்கினான். "இடியாப்பத்த சுட்டு, சந்தில இருக்கிற கடைக்கு போட ஏலும். இர்பாதுட்ட குடுத்தனுப்ப ஏலும். ஊட்டு காணில தேங்கா இருக்குத்தானே. அதால தேங்கா சுண்டல் ஒண்டும் வெக்க ஏலும். நீங்க ஒண்டும் யோசிக்க வேணாம்" என மனைவி தான் ஏற்கனவே நினைத்த வைத்த விடயங்களை வெளிப்படையாகத் தெரிவித்தாள்.

பாடசாலை முடித்து இர்பாத் தனது சைக்கிளில் வீடு வந்து சேர்ந்தான். வெள்ளை ஆடைகளைக் களைந்து வேறு ஆடைகளுக்கு மாறிய அவன், பெற்றோரின் வழிகாட்டலின் பிரகாரம் ளுஹர் தொழுகையை வீட்டிலேயே நிறைவேற்றினான். தாய் பகிர்ந்து வைத்திருந்த உணவை உண்டுகொண்டிருக்கும் போதே, அவனை நெருங்கினாள் அவனது தாய். தம்பியும் தங்கையும் ஏற்கனவே வந்து விட்டார்கள். அவர்கள் பள்ளிக்கூடம் (மத்ரஸா) செல்ல ஆயத்தமாகிக் கொண்டிருந்தனர்.

"மகன், சந்தீல இருக்கிற கடைல காலையில் இடியாப்பம் சுட்டு பார்ஸல் செஞ்சி தர ஏலுமாண்டு கேளுங்க. ஒங்களுக்கு வெளனேக்கி பைக்ல போய்க் குடுக்கேலுமா" என்று கேட்டாள். அவளது குரல் தழும்பியிருந்தது.

கஷ்டம் என்பதை மகன் தெரிந்து கொள்ளக் கூடாது என்பதற்காக பொய் சொல்ல வேண்டிய நிலைக்கு ஆளாகி விட்டோமே என அவளது உள்மனம் அழுதது. தாயின் அன்பான கட்டளையை இர்பாத் மறுக்கவில்லை. தினந்தோறும் சுபஹ் தொழுகைக்காக எழும் அவனுக்கு அது ஒரு பெரிய விடயமாகத் தெரியவில்லை. அது மட்டுமல்லாது சைக்கிளில் சென்று வருவது அவனுக்கு விருப்பமாகவும் இருந்தது.

அன்று மாலை இர்பாதின் தாய், அடுத்த நாள் காலைக்கு தேவையான இடியப்பத்தை தயார் செய்வதற்கான வேலைகளில் ஈடுபட்டாள். தேங்காய் சம்பலுக்குத் தேவையான தேங்காய்களை துருவி, குளிர்சாதனப் பெட்டியில் எடுத்து வைத்தாள்.

அடுத்த நாள் அதிகாலை 3.30 மணிக்கு எழுந்து தஹஜ்ஜத் தொழுகையை தொழுதுவிட்டு, இறைவனைப் பிரார்த்தித்து தனது அலுவல்களை ஆரம்பித்தாள். இடையில் சுபஹ் தொழுகைக்கான அதான் ஒலித்ததும், தனது வேலைகளை சற்று நிறுத்தியவள் மீண்டும் வுழூச் செய்து கொண்டு தொழுகையை நிறைவேற்றினாள். அதன்பின் தன் கணவனையும், மகனையும் எழுப்பிவிட்டு மீண்டும் இடியப்பம் சுடும் வேலையை தொடர்ந்தாள். இர்பாதும் அவனது தந்தையும் பள்ளிவாசலுக்கு சென்று தொழுது விட்டு வரும்போது தேவையான அளவு இடியப்பங்களைச் சுட்டு முடித்திருந்தாள். ஒரு பார்சலுக்கு பன்னிரண்டு இடியப்பங்களும், ஓரளவு தேங்காய் சம்பலும் என 25 பார்ஸல்களை தயார் செய்து தனது மகனிடம் கொடுத்தனுப்பினாள்.

சந்தியில் உள்ள கடைக்குச் சென்ற இர்பாத், தாய் கொடுத்தனுப்பிய பார்சல்களை கடை உரிமையாளரிடம் கொடுத்ததும் "அந்திக்கு வாங்கோ மகன், அந்த டய்முக்கு சல்லி தாரண்டு செல்லி உம்மாட்ட செல்லுங்கோ" என அவர் சொல்லியனுப்பினார். அன்று மாலை இர்பாத் கடைக்குச் சென்றதும் கடையுரிமையாளர் இடியப்பத்துக்கான பணத்தை கொடுத்துவிட்டு "நாளைக்கு முப்பது பார்சல் தரச் செல்லுங்கோ" எனச் சொல்லியனுப்பினார்.

படிப்படியாக இடியப்ப வியாபாரத்தின் அளவு அதிகரித்தது. குறிப்பிட்ட ஒரு கடைக்கு மாத்திரம் என்றிருந்த வியாபாரம் இன்னும் சில கடைகளுக்கு வியாபித்தது.

மறுபுறத்தில் இர்பாதின் தந்தை அடுத்த ஊரிலிருந்த ஒரு கடையில் வேலைக்குச் சேர்ந்தார். அவருடைய வீட்டுக்கும் அந்தக் கடைக்கும் இடையில் மூன்று கிலோமீட்டர் தூரமே இருந்தது. இர்பாதின் தம்பியையும், தங்கையையும் மோட்டார் சைக்கிளில் சென்று பாடசாலையில் விட்டபின் கடைக்குச் செல்வதையும் பகல் சாப்பாட்டிற்காக வீட்டிற்கு வரும்போது திரும்ப கூட்டி வருவதையும் வழக்கமாக்கிக் கொண்டார்.

வாழ்க்கைச் செலவில் தடுமாறிய அக்குடும்பதில் மாற்றம் நிகழத் தொடங்கியது. பல புதிய கடைகளிலும் இடியப்பத்தின் கேள்வி அதிகரித்துக் கொண்டே சென்றது. இர்பாதின் தாய் இயந்திரமாகினாள். பல புதிய கடைகளுக்கு இடியப்பத்தை அவரது கணவரே எடுத்துச் சென்றார். இப்போது பொருளாதாரத்தில் ஓரளவு மாற்றம் நிகழத் தொடங்கியது. இர்பாதின் தந்தையின் முகத்தில் மகிழ்ச்சி. அவரது மனைவின் முகத்திலும் சந்தோசம்.

என்றாலும் தினந்தோறும் இயந்திரமாக உழைத்த இர்பாதின் தாயின் கைகள் மரத்துப்போயிருந்தன. இதனால் அவரது கணவன் கவலையற்ற நிலையில் யோசிக்கத் தொடங்கினார். உண்மையில் இர்பாதின் தாய் உடல் சோர்வாலும், உளச் சோர்வாலும் பாதிக்கப்பட்டாள். முன்புபோல் நிறைய குர்ஆன் ஓத முடியவில்லையே என்ற மனக்குறை அவளை வாட்டியது.

எல்லாத் தேவைகளையும் நிறைவேற்ற பணம் முக்கியமானதுதான். அதற்காக மனைவியை நோயாளியாக்குவதா? என்ன செய்வதென யோசிக்கலானார் இர்பாதின் தந்தை. இடியப்ப வியாபாரத்தை நிறுத்திவிடலாம் என முடிவெடுத்து தன் மனைவியை அணுகி கலந்துரையாடினார். "இப்ப முந்தி மாதிரி ஒங்களுக்கும் ஏலா. போகப் போக நீங்களும் நோயாளியாகி விட்டீர்கள். அதனால இடியாப்பம் சுடுவதை நிறுத்தலாமென்று நான் நினைக்கிறேன். நீங்க என்ன செல்கிறீர்கள்" அவரது மனைவி சற்று அமைதியாகி நிதானமாக தன் கணவரிடம் கேட்டார் "நிப்பாட்டுக்கு என்ன செய்வது?. இப்போது பிள்ளைகளும் பெரிதாக வளர்ந்து விட்டார்கள். க்ளாஸ் பீஸுகளும் முந்திமாதிரி இல்ல. எப்பிடிக் கட்டுவது?. நீங்க என்ன யோசினை செய்தீர்கள்?" என்று கேட்டாள். "எல்லாத்தையும் அல்லாஹ் பாத்துக் கொள்வான். அதுக்காக நீங்க இத சுட்டு கஷ்டப்பட ஏலுமா" கணவர் திரும்ப கேட்டார்.

அவரது மனைவி அப்போது அதற்கான பதிலை வழங்கவில்லை. "கொஞ்சம் யோசிப்போம். அதுக்குப் பெறகு முடிவு செய்வோம்." என்று கூறிவிட்டு தனது அன்றாட வேலைகளில் ஈடுபட்டாள். பின் இரண்டு ரக்அத் தொழுதுவிட்டு இறைவனிடம் கையேந்தி தன் இக்கட்டான சூழ்நிலையை சொல்லிச் சொல்லி அழுதழுது பிரார்த்தித்தாள். அதன் பின்னர் அவளது மன பாரம் சற்றே குறைந்ததாக உணர்ந்தாள். சற்று நேரம் கழித்து தனது கணவரை அழைத்து, "எனக்கொரு யோசின வந்திச்சு. எங்கட ஊட்டுக்கிட்டால ஒரு அக்காவொண்டு போற. அவவ பேசிக்கொள்வோமா. இடியாப்பம் சுடறத்துக்கு" என்று தன் யோசனையை முன்வைத்தாள். அதற்கு கணவனும் ஆம் என்பது போல் தலையசைத்து அனுமதி வழங்கினார். அடுத்த நாள் குறிப்பிட்ட அந்த பெண்மணியை வேலைக்கு அழைத்தாள் இர்பாதின் தாய். தகுந்த கூலியும் பேசி முடிக்கப்பட்டது. மாலை நேரத்தில் வந்து தேங்காய்களைத் துருவித் தர வேண்டும். அதிகாலையிலேயே வந்து இடியப்பத்தை சுட்டுத்தர வேண்டும் என பேசித் தீர்க்கப்பட்டது.

ஒரு சிறு பணத்தொகையை மீதப்படுத்தினார் இர்பாதின் தந்தை. சில வருடங்கள் கழித்து மீண்டும் தனது பழைய தொழிலைச் செய்ய ஆரம்பித்தார். இர்பாத் தற்போது உயர்தரப் பரீட்சையை எதிர்நோக்கியிருக்கின்ற வாலிபன். வியாபாரத்தை முன்னேற்ற என்னென்ன வழிவகைகளை மேற்கொள்ளலாம் என தந்தைக்கு யோசனை சொல்லக்கூடிய அளவுக்கு அவனது அறிவு முதிர்ச்சியடைந்திருந்தது. தன்னுடைய யோசனைகளையும் மகனின் யோசனைகளையும் ஒருமித்து நிறைவேற்றி தனது தொழிலில் மறுமலர்ச்சி கண்டார் இர்பாதின் தந்தை. இர்பாதின் யோசனையின் பிரகாரம் ஒவ்வொரு மாதமும் மீதப்படுத்தி வந்த பணத்தில் வருடமொன்றுக்கு ஒரு தங்க ஆபரணங்களை வாங்கி சேமித்து வைக்கலானார் அவனது தந்தை.

நான்கு வருடங்களின் பின்னர் சேமித்த நகைகளில் சிலதை விற்று இர்பாதின் தந்தையும் தாயும் புனித ஹஜ் கடமையை நிறைவேற்ற மக்கமா நகர் சென்றனர். அவர்கள் மக்காவிலிருந்த ஒரு மாத காலமும் வியாபாரத்தையும், வீட்டு வேலைகளையும் இர்பாத் கவனித்துக் கொண்டான். இப்போது அக் குடும்பம் மீண்டும் பழைய நிலையை விட சிறப்பானதாக மாறியிருந்தது. தடுமாற்றத்தில் தடுக்கி விழாமல், தடம்புரண்டு விடாமல், தன் நம்பிக்கையோடும், இறை நம்பிக்கையோடும் செயற்பட்ட இர்பாதின் பெற்றோர்கள் தற்போது வயோதிபத்தை அடைந்திருந்தாலும் உள்ளத்தால் இளமையாக பிரகாசித்துக் கொண்டிருக்கிறார்கள்.

**சினன்கோட்டை இஸ்பஹான் ஸாபிர்**
**(ஊடக ஆய்வு அதிகாரி)**
**அரசாங்க தகவல் திணைக்களம்**

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி
இல: 94




திரு/திருமதி.செல்வி ..............................
(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)
முகவரி ..............................
..............................
..............................
திகதி கையொப்பம்

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி
போட்டி இல. 94
த.பெ.இல.834. கொழும்பு

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 94

**இடமிருந்து வலம்**

1. வளமும் வளர்ச்சியும் அமைந்த நிலை
4. பழந்தமிழக் கவிஞர் இவர்
6. உடலிலிருந்து தோல் ஊடாக வெளியேறுவது (குழம்பியுள்ளது)
8. குதிரை
10. ஒரு பெரும் விருட்சம்
11. நிலத்தில் வளரும் இது கால்நடைகளின் உணவு (திரும்பியுள்ளது)
12. மகிழ்ச்சி (குழம்பியுள்ளது)
13. திறப்பு
15. உயரமான இடத்தை அடைவதற்கு உதவுவது (திரும்பியுள்ளது)
16. முகம் திரும்பிவிட்டது.
18. நான்கு பக்கமும் ஒரே அளவையுடையது
20. ஒன்றை நிரூபிப்பதற்கான ஆதாரம் (திரும்பியுள்ளது)
22. முன்னாள் இந்திய ஜனாதிபதி ஒருவரின் பெயரின் ஒரு பகுதி இது. (திரும்பியுள்ளது)
23. பாரம்

**மேலிருந்து கீழ்**

1. ஒரு உலோகம்
2. ஆச்சரியம் அல்லது அதிசய உணர்வு (குழம்பியுள்ளது)
3. பூமி
4. உருவப் பொம்மை
5. கலக்கம் அல்லது அச்ச உணர்வு
7. உப்புத்தன்மை (தலைகீழ்)
9. கை. கால்களுடன் இணைந்தது
10. ஒரு தமிழ் மாதம்
13. வீரதீரச் செயல்
14. செல்வம்
16. கை (தலைகீழ்)
17. ஏழ்மை நிலை
19. கிணற்றுடன் இணைந்தது இப்போது இதன் பாவனை குறைந்து விட்டது.
21. உயிரிழப்பு

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 93

### விடைகள்

**இடமிருந்துவலம்**

1. வழிகாட்டி
4. தோணி
6. கல்
7. கயல்
8. சிவிகை
10. குந்தகம்
13. கறை
14. கடை
15. சனி
16. பால்
17. சிங்கம்
19. விடுதி
20. குண்டு

**மேலிருந்து கீழ்**

1. வணிகம்
2. காவல்
3. ஆடி
4. தோல்வி
5. கணிகை
8. சினம்
9. மோதகம்
10. குறைபாடு
11. கடைசி
12. பனி
13. கல்வி
15. சங்கு
16. கண்

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 93

### பரிசு பெறுவோர் விபரம்

| முதலாம் பரிசு ரூ 500.00 | இரண்டாம் பரிசு ரூ 350.00 | மூன்றாம் பரிசு ரூ 150.00 |
|---|---|---|
| **என். சிவசீலன்** | எஸ்.எம்.மஹ்சூன் | **அயனா மஸீர்,** |
| நீர்வேலி வடக்கு | இல 124/16 மன்ன | அலபாது மவத்தை, |
| நீர்வேலி | ம்பொட. உக்குவளை | பண்டாரகொஸ்வத்தை |

### பாராட்டு பெறுவோர்

1. **எஸ். பாக்கியநாதன்,** காரைதீவு
2. **பி. குணசேகரன்** களுதாவளை
3. **என். கே. வேணி** பலாங்கொடை
4. **ஞா. ஜனகன்** திருகோணமலை
5. **எஸ். செல்வராஜா** பதுளை
6. **மல்லிகாதேவி பத்மநாதன்** பசறை
7. **வி. ஜருஷி** கிண்ணியா
8. **எம்.எச்.சி.என் ஹாபியா** வெலிகம
9. **ஏ. சுவாதி** மானிப்பாய்
10. **சி. ரம்யா** ஹட்டன்

# குடிசை குடியிருப்புகளில் வாழும் பொருளாதார முதுகெலும்புகள்!

ஆங்கிலேயரின் ஆட்சிக்காலத்தில் கோப்பி பயிர்ச்செய்கைக்காக 1823இல் இந்தியாவின் மலைப்பாங்கான பிரதேசங்களிலிருந்து நம் நாட்டுக்கு அழைத்துவரப்பட்டவர்கள் மலையகத்தவர்கள். அந்நியச்செலாவணி உழைப்புக்காக அழைத்து வரப்பட்ட இவர்களை வந்தேறுகுடிகளென வர்ணிக்க முடியாது.

கோப்பிச் செய்கை கைகொடுக்காததால் 1864இல் தேயிலைச் செய்கைக்காக இம்மக்கள் பயன்படலாயினர். தேயிலையின் அடியில் தங்கம் இருப்பதாகவும் அந்நியச்செலாவணியில் அரைப் பங்கைத் தருவதாகவும் ஆசை காட்டித்தான் இம்மக்கள் இலங்கைக்கு அழைத்துவரப்பட்டனர்.

ஆங்கிலேயரின் ஆட்சியின் கீழிருந்த இந்தியா, மலேசியா உள்ளிட்ட கிழக்காசிய நாடுகளிலிருந்து இவர்கள் கொண்டுவரப்பட்டதாக வரலாறு விரிகிறது. இந்நாடுகளின், நிர்வாகங்களை கண்காணிக்கத்தானே கிழக்கிந்திய கம்பனியே நிறுவப்பட்டது. சொந்த தேசத்திலிருந்து இன்னுமொரு நாட்டுக்கு உழைப்புக்காக கொண்டுவரப்பட்ட இம்மக்கள், இந்த இருநூறு வருடங்களில் எதிர்கொண்டவைகளே தனியொரு தேசத்தினராக இவர்களை அடையாளப்படுத்தியுள்ளது.

இலங்கை இந்திய காங்கிரஸ் சார்பாக 1948இல் போட்டியிட்டு, எட்டு பிரதிநிதிகளை வெல்லுமளவுக்கு இம்மக்களிடம் அரசியல் விழிப்பிருந்தது. இதன் விபரீதங்களில் விழித்தெழுந்த அன்றைய ஆட்சியாளர்கள் இந்திய வம்சாவளியினரின் குடியுரிமையைப் பறித்தனர். அன்று நாடற்றவர்களாகியதிலிருந்து தொடங்கிய சவால்கள் இருநூறு வருடங்களாகியும் நிலைக்கின்றன.

இச்சவால்களை வெல்லும் நோக்கம் தனித்துவ அரசியலுக்கான தேவையை உணர்த்தியதாலேயே, 1977 தேர்தலில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் போட்டியிட்டது. ஒற்றுமையிருந்திருந்தால் உருப்பட்டிருக்கலாம். மூன்றுக்கும் அதிகமாக அரசியல் கட்சிகள் முளைத்ததால், திண்டாடுகிறது மலையகம். இங்கு மட்டுமல்ல எல்லா சமூகங்களிலும் இதுதான் நிலைமை. கட்சிகள் அதிகரிப்பதால் ஒன்றுபடல்கள் சிதைவடைவதை தடுக்கவே முடியாதுள்ளது.



சொத்து தேடுவதற்கு வருவதாக நினைத்த இவர்கள், செத்துப் பிழைக்கும் நிலைமைக்கு மலையக நிலை செல்லக் காரணம் என்ன? நாட்டின் பொருளாதாரத்தை நிமிர்த்த வந்த முதுகெலும்புகள், இன்று குனிந்து நிமிர முடியாத குடிசைகளுக்குள் வாழ நேரிட்டுள்ளது. இதை நினைத்து இருநூறு வருடங்கள் அழுதாலும் தீராது இந்தத் துயரம். கல்வி, சுகாதாரம், தொழில்வாய்ப்புக்கள் மற்றும் வாழிடங்களுக்காக வாழ்நாள் முழுவதும் அழவேண்டிய சமூகத்தவராக ஆக்கப்பட்டுள்ளனர் இம்மக்கள். அலைக்கழிதல்கள், ஏமாற்றங்கள் என இவர்கள் எதிர்கொள்பவை அனைத்தும் சவால்களே.



முதலாளித்துவத்தின் பிடியிலிருந்து ஒரு அடியேனும் நகர முடியாதளவுக்கு முடக்கப்பட்ட சமூகம் இது. தோட்டக் கம்பனிகள், கங்காணிமார்கள், துரைமார்கள் மற்றும் கிராம உத்தியோகத்தர்கள் என சகல அதிகாரங்களும் இவர்களின் உழைப்பை உறிஞ்சி எஞ்சியதே ஊதியமாகக் கிடைக்கிறது.

மனிதக் காலடிகளே படாத மலையின் உச்சியில் சென்று உழைப்பவர்கள் இந்தத் தொழிலாளர்கள். காடுகள், புதர்களுக்குள் பதுங்கியுள்ள கரடிகள், சிறுத்தைகள் இன்னும் கொடூர விலங்குகளின் அச்சுறுத்தல்களுக்குள்ளும் கடமையில் கடினம் எதிர்பார்க்கப்படுகிறது. வெயில், பனி, குளிர், மழை போன்ற இயற்கை சீதோஷ்ணங்களுக்கு மரத்துப் போன மானிடப்பிறவிகள் மலையகத்தவர்கள்.

இங்கு வந்து வருடங்கள் கடந்துள்ள இவர்களுக்கு இப்போது புது நம்பிக்கையூட்டப்படுகிறது. பத்தாயிரம் வீட்டுத்திட்டம், மலையகப் பல்கலைக்கழகம், தொழில் வாய்ப்புக்களுக்கு உத்தரவாதம் வழங்கப்பட்டுள்ளது. இந்தியாவின் நேரடித் தலையீடுகள் இல்லாவிடினும் உணர்வுகள் இணைந்திருப்பது அமைச்சர் சீதாராமனின் வருகையில் உணரப்படுகிறது. இதனால், இம்முறை வழங்கப்பட்டுள்ள வாக்குறுதிகள் நிறைவேற்றப்படும் என இம்மக்கள் நம்புகின்றனர்.

இன்னொரு வகையில், மலையகத்தவர் மீதான இந்தியாவின் அக்கறை எதிர்காலத்தில் அழுத்தங்களாக மாறாதிருப்பது அவசியம். இந்திய கடனுதவிகளும் மலையகம் மீதான பாரதத்தின் பார்வைகளும் இந்திய, இலங்கை இராஜதந்திர உறவுகளை எந்தளவு உயர்த்துமோ?

**சுஐப் எம். காசிம்**

## காமனை... (13ஆம் பக்க தொடர்)

தமிழர்களின் வாழ்வியலோடு மிக நேசமிக்க தொடர்பு முருகக் கடவுளர் மீது கட்டமைக்கப்பட்டு வந்துள்ளது. சமூக அசைவியக்கத்துடன் சமூகமயம், சமூக ஒன்றிப்பு, சமூக கட்டமைப்பு, சமூக கட்டுக்கோப்பு, சமூக வழிப்படுத்தல் போன்றவாறு சமூகவியல் பண்புகளோடு ஒப்பிட்டு நோக்க வேண்டியது அவசியமாகிறது. தமிழர்கள் எங்கெல்லாம் வாழ்கிறார்களோ அங்கெல்லாம் முருகன் வழிபாடும், முருகன் வழிபாட்டு இடங்களும் தவிர்க்க முடியாத அம்சங்களாகின்றன. இலங்கையில் இயக்கர், நாகர் காலந்தொட்டே முருகன் வழிபாட்டு மரபு காணப்படுவதை அறியலாம். இலங்கையின் பூர்வீகக் குடிகள் வேடுவர் என்பதும் அவ் வேடுவ இனத்தினரோடு திருமண பந்தம் வரையில் முருகன் சித்தரிக்கப்படுகிறான். பூர்வீக இலங்கையில் தென்னிந்திய தமிழர்களின் பெருந்தோட்டத் தொழிற்துறையின் வருகைக்கு முன்னர் நாட்டுக்கோட்டை நகரத்தாரின் வருகை இடம்பெற்றது. நாட்டுக்கோட்டை நகரத்தார் என அழைக்கப்படும் செட்டிமார்கள் வர்த்தக நடவடிக்கைகளுக்காக கடல்கடந்த நாடுகளுக்கு சென்று வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. அவ்வாறு வர்த்தக நோக்கம் கருதிய புலம்பெயர்வில் முருகக் கடவுளையும் தங்களது பங்காளராக இணைத்துக்கொண்டு இலாபத்தின் ஓர் பங்கை முருகனுக்காக ஒதுக்கியுள்ளார்கள். அவ்வாறு திரட்டிய சொத்துக்களின் ஊடாக முருகன் ஆலயங்களையும், ஆலயத்தோடு சேர்த்து ஏனைய வளங்களையும் அமைத்தார்கள். செட்டிமார்களின் முருகன் மீதான நம்பிக்கையை "செட்டி கப்பலுக்கு செந்தூரன் துணை" என வரையறுப்பார்கள்.

அழகின் உருவமாகவும் வீரத்தின் வடிவமாகவும் விளங்கிய முருகன் தைரியத்தையும், பாதுகாப்பையும் தருவதான நம்பிக்கை தமிழர்களிடத்தே நிலைப்பெற்று வந்துள்ளது. போர்த் தெய்வமான கொற்றவையின் வாரிசாகவும் முருகன் சித்தரிக்கப்படுகிறான். அழகு, வீரம், விவேகம் கொண்ட சமநிலை ஆளுமையாகவே முருகன் நோக்கப்படுகிறான். முருகன் சிலைகளும், வேல் உருவங்களும் முருகனை முழுமுதற் கடவுளாக கொண்டவர்களின் நம்பிக்கையின் அடையாளமாகின்றன.

தமிழர்களின் ஏகனாக விளங்கும் முருகன் உயரத்தில் வைத்தே நோக்கப்படுகிறான். உயரமாகவும் அமைத்து பார்வைக்கு உள்ளாக்கப்படுகிறான். 146 அடி உயரம் கொண்ட சிலையே இது வரையில் மிக உயரமான முருகன் சிலையாக அமையப் பெற்றுள்ளது. சேலம் புத்திகொண்ட பாளையத்திலேயே இச் சிலை அமைக்கப்பட்டுள்ளது. கோபுரங்களை அமைப்பதில் போட்டி நிலை தொடர்வதை அறிகிறோம். மார்க்க வழிகளில் அடையாளப்படுத்தப்படும் கடவுளர்களும் உலக சாதனை நோக்கிய முனைப்பில் அவர்களைச் சார்ந்தவர்களின் ஆவேசங்களும் கவனிக்கத்தக்கது. இலங்கையில் ஏக்கித்த, வத்தளை முருகன் ஆலயத்தின் 32 அடி உயரத்தை முறியடித்து 60 அடி உயரத்தில் நிற்கும் இராகலை நகர் சுப்ரமணிய ஆலய முருகன் சிலை முன்னணி வகிப்பதைக் காணலாம். இது உலகத் தரப்படுத்தலில் உலகிலுள்ள மூன்றாவது உயரமான முருகன் சிலையாக விளங்குகிறது. ஆம் நாம் உலகின் இரண்டாவது உயரமான சிலை அமையப்பெற்றுள்ள வளாகம் நோக்கி விரையப் போகிறோம். "கந்தப் புராணத்தில் இல்லாதது எந்தப் புராணத்திலும் இல்லை" என்பார்கள். பயணம்

**தொடரும்...**






## பெறுகை அறிவித்தல்

### 2024ம் ஆண்டிற்காக ஹிங்குரக்கொட வாரசந்தை மற்றும் வாடகை வாகன நிறுத்துமிடத்தை குத்தகைக்கு விடல்

### ஹிங்குரக்கொட பிரதேச சபை

ஹிங்குரக்கொட பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்திற்குள் அமைந்துள்ள ஹிங்குரக்கொட பிரதேச சபைக்கு சொந்தமான ஹிங்குரக்கொட வாரசந்தை மற்றும் வாடகை வாகன நிறுத்தமிடத்தை 2024.01.01 முதல் 2024.12.31 வரை ஒருவருட காலத்திற்கு குத்தகைக்கு விடுவதற்கு ஹிங்குரக்கொட பிரதேச சபையினால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

02. இதற்காக பெறுகைப் படிவங்கள் விநியோகித்தல் 2023.10.23 முதல் 2023.11.14 வரை நாட்கள் நீடிக்கப்பட்டுள்ளதுடன் வாரத்தின் வேலை நாட்களில் மு.ப 8.30 முதல் பி.ப 2.00 வரை
   i. ஹிங்குரக்கொட வாரச்சந்தைக்கு மீளளிக்கபடாத ரூ. 1000.00 பெறுகைப் படிவக் கட்டணம் மற்றும் மீளளிக்கப்படாத ரூ. 15000.00 பெறுகை பிணை வைப்புத் தொகையை செலுத்தி ஹிங்குரக்கொட தலைமையகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
   ii. ஹிங்குரக்கொட வாடகை வாகன நிறுத்துமிடத்திற்காக மீளளிக்கப்படாத ரூ. 1000.00 பெறுகைப் படிவக் கட்டணம் மற்றும் மீளளிக்கப்படும் ரூ. 10,000.00 பெறுகை பிணை வைப்புத் தொகையைச் செலுத்தி ஹிங்குரக்கொட பிரதேச சபை தலமையகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

03. குறித்தவாறு பூர்த்தி செய்யப்பட்ட பொறியிடப்பட்ட உங்களது விலைமனுக்களை 2023.11.15 மு.ப 9.30 இற்கு முன்பு செயலாளர் ஹிங்குரக்கொட பிரதேச சபை, ஹிங்குரக்கொட என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது அலுவலக பெறுகைப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

04. 2023.11.15 மு.ப 10.00 இற்கு விலைமனுக்கள் திறக்கப்படும்.

05. இதற்காக மேலதிக விபரங்கள் தேவையாயின் அலுவலக நேரத்தில் 027 - 2246275 ஐ அழைத்து அல்லது வருகை தந்து பெற்றுக் கொள்ளலாம்.

**கவனிக்கவும் :**

பெறுகைப் படிவங்களைப் பெற்றுக் கொள்வதற்கு வருகை தரும்போது தேசிய அடையாள அட்டை மூலம் ஆளடையாளத்தை உறுதிசெய்தல் கட்டாயமாகும். பெறுகைப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளும் போது நிபந்தனைப் பத்திரம் மற்றும் அட்டவணை வழங்கப்படுவதுடன் அந்நிபந்தனைப் பத்திரம் மற்றும் அட்டவணை இப் பெறுகை அறிவித்தலுடன் பெறப்படும்.

**செயலாளர்,**
**ஹிங்குரக்கொட பிரதேச சபை,**
**ஹிங்குரக்கொட.**

## வரையறுக்கப்பட்ட இலங்கை மின்சார (தனியார்) நிறுவனம்

### மின்கம்ப முற்றவெளிக்காக காணியொன்று வாடகைக்கு அல்லது குத்தகைக்குத் தேவை – அலுத்கம

LECO

**விலைக்கோரல் இல. LECO/23/NCB/PR4/245**

பேருவளை மற்றும் அலுத்கம பிரதேசங்களுக்கிடையில் பிரதான வீதிக்கு முகப்பாக அல்லது அண்மையில் கனரக வாகனம் (Pole Trucks) செல்லக்கூடிய 20 அடிக்குக் குறையாத அகலப் பாதை சகிதம் மின்கம்ப முற்றவெளியாகப் பயன்படுத்துவதற்குப் பொருத்தமான சுமார் 25 பேர்ச் பரப்பளவுள்ள காணியொன்று வாடகைக்கு / குத்தகைக்குத் தேவை.

உத்தேச வாடகை அல்லது குத்தகைக் காலம் 02 வருடங்களாகும்.

முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் 2023-11-21ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். விலைமனுக்கள் திறக்கப்படுவதானது, விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்ட உடனடுத்து இடம்பெறும். இந்தப் பெறுகைக்கு இயைபான விலைமனு ஆவணங்களிலுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம் விலைமனுதாரர்கள் விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

**விலைமனுக்களுடன் முழுமையான தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும்.**

- விலைக்கோரல் ஆவணத்தில் (கேள்விப் படிவத்தில்) வேண்டப்பட்டுள்ள சகல விபரங்கள்
- எதிர்பார்க்கும் மாதாந்த வாடகை / குத்தகை தொகை
- விதிகள் மற்றும் நிபந்தனைகள் சகிதம் காணியின் உறுதி, கட்டிடத்தின் விபரங்கள் மற்றும் காணி வரைபடத்தின் பிரதியொன்று

இந்தப் பெறுகைக்கான விலைமனு ஆவணங்களை www.leco.lk ("Tender Notice" Section) இணையதளத்திற்குப் பிரவேசித்து அல்லது www.promise.lk எனும் இணையதளத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம் அல்லது LECO பெறுகைப் பிரிவை 011-2371637 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக தொடர்புகொண்டு இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

விலைமனுக்களை பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் (விலைமனுக்களை ஏற்றுக்கொள்வதற்கான இறுதி திகதி மற்றும் நேரத்திற்கு இலங்கை மின்சார நிறுவனத்திற்கு கிடைக்கச் செய்தல் வேண்டும்) அல்லது நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இறுதி திகதி மற்றும் நேரத்திற்கு முன் உள்ளிடலாம்.

இடப்பரப்பின் உரிமையாளர் மட்டும் தமது விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பெறுகையின் தலைப்பு மற்றும் விலைக்கோரல் இலக்கத்தைக் குறிப்பிடுதல் வேண்டும்.

மேலதிக விபரங்கள் தேவையானால் தயவு செய்து 011-2371600 என்ற தொலைபேசி எண்ணினூடாக மனித வளங்கள் மற்றும் நிர்வாகத்திற்கான மேலதிக பொது முகாமையாளருடன் தொடர்பு கொள்ளவும்.

PROCUREMENT NOTICE
www.leco.lk

பொது முகாமையாளர்,
வ/ப இலங்கை மின்சார (தனியார்) நிறுவனம்,
ஈ.எச். குரே கட்டிடம்,
411, காலி வீதி, கொழும்பு-03.

LECO

## வெற்றிடங்கள்

### வரையறுக்கப்பட்ட GSMB தொழில்நுட்ப சேவைகள் (தனியார்) நிறுவனம்

### (புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகத்தின் இணை நிறுவனம்)

**எமது நிறுவனத்தில் பின்வரும் பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்காக தகைமை வாய்ந்த வெளிவாரி மற்றும் உள்வாரி விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

**சிரேஷ்ட புவியியலாளர் (Senior Geologist)**

**வெளிவாரி மற்றும் உள்வாரி விண்ணப்பதாரர்கள் (பின்வரும் 1 அல்லது 2)**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட விஞ்ஞான இளமானிப் பட்டம்.

   மற்றும்

2. முகாமைத்துவ வகுதியில் (MM 1-1 IIஆம் வகுப்பு) பதவியில் குறைந்தபட்சம் எட்டு (08) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.
   - **சம்பள அளவு**
     MM 1-1 IIஆம் வகுப்பு
     ரூ. 68,835.00 (15x1,910 - 95,575) மற்றும் நிறுவனத்தால் வழங்கப்படும் ஏனைய கொடுப்பனவுகள்
   - **வயதெல்லை**
     35 வயதுக்கு குறையாமலும் 55 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**பதவிக்குரித்தான பொதுவான நிபந்தனைகள்**

- ஒரு வருடகால தகுதிகாண் காலத்தைப் பூர்த்தி செய்ததன் பின் நியமனம் நிரந்தரமாக்கப்படும்.
- தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் சம்பளத்தின் 8% ஊழியர் சேமலாப நிதிக்கு வழங்குதல் வேண்டும். நிறுவனத்தினால் 12% மற்றும் மேலதிகமாக ஊ.ந.பொ. நிதியத்திற்கு 3% மும் பங்களிப்புச் செய்யப்படும்.
- அரசாங்க சேவை / நியதிகள் சட்டச் சபை விண்ணப்பதாரர்கள் தமது நிறுவனத்தின் தலைமையின் ஊடாக விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.
- விண்ணப்பதாரர் தொடர்பாக உறுதிசெய்து கொள்வதற்காக உறவினரல்லாத இருவரின் முகவரி அல்லது தொலைபேசி இலக்கத்தை விண்ணப்பப் படிவத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
- கல்வித் தகைமைகள், அனுவம், தொழில்சார் தகைமைகள் மற்றும் ஏனைய இயைபுடைய சான்றிதழ்களின் புகைப்படப் பிரதியை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட்டு சுயதரவுகளுடனான தமது விண்ணப்பப் படிவத்தை பின்வரும் முகவரிக்கு 2023-11-13ஆம் திகதிக்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

குறும்பட்டியலிடப்பட்ட விண்ணப்பதாரர்கள் மட்டுமே நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவார்கள்.

**பிரதம நிறைவேற்று அதிகாரி,**
**வரையறுக்கப்பட்ட GSMB தொழில்நுட்ப சேவைகள் (தனியார்) நிறுவனம்,**
**இல. 569, எப்பிட்டமுல்ல வீதி,**
**பிட்டகோட்டே.**

SMIB

# அரச ஈட்டு முதலீட்டு வங்கி

## கேள்வி அறிவித்தல்

Software-as-a-Service (SaaS) Model Solution மனிதவள தகவல் அமைப்பை ஸ்தாபிப்பதற்காக நம்பகமான தகைமையுள்ள வழங்குநர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்களை அரச ஈட்டு முதலீட்டு வங்கி அழைக்கின்றது.

| பெறுகையின் பெயர் மற்றும் விபரம் | விலைமனுப் பிணைத் தொகை (LKR) | மீளளிக்கப்படாத வைப்பு (LKR) | மூடப்படும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|
| Implementation of Human Resource Information System (HRIS) Solution in Software-as-a-Service (SaaS) Model. SMIB/TD/2023/11/01 | 200,000.00 | 5,000.00 | 28/11/2023 at 3.00 PM |

ஒரு மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்துவதன் பேரில் கொழும்பு-03, காலி வீதி, இல. 269, அரச ஈட்டு முதலீட்டு வங்கி, 4ம் மாடி, பிரதம முகாமையாளர் (மனிதவளம் மற்றும் லொஜிஸ்டிக்ஸ்) இற்கு ஒரு எழுத்துமூல வேண்டுதலை சமர்ப்பிப்பதன் பேரில் ஆங்கில மொழியிலான ஒரு முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியை ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் பெற்றுக்கொள்ளலாம். எனினும் மேலே குறிப்பிடப்பட்ட அமைவிடத்தில் இலவசமாக விலைமனு ஆவணங்களைப் பரீட்சிக்கலாம்.

எந்த காரணமும் கூறாமலேயே எந்த அல்லது எல்லா விலைமனுவையும் நிராகரிக்கும் மற்றும் ஒரு விலைமனுவின் எந்தப் பாகத்தையும் ஏற்றுக்கொள்ளும் உரிமையை வங்கி கொண்டுள்ளது.

மேலதிக தகவல்களுக்கு 011-7722879/ 011-7722876

**பெறுகைக்குழு**
**அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி**
**இல. 269, காலி வீதி,**
**கொழும்பு-03.**

# கேள்விகோரல்

**துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு**
**வணிகக் கப்பற்துறைச் செயலகம்**
**02 பாஸ்போர்ட் அச்சு இயந்திரங்கள் மற்றும் 20000 லெமினேட்டிங் பத்திரங்களை கொள்வனவு செய்தல்**

வணிகக் கப்பற்துறை செயலகத்திற்கு கீழ்க்காணும் சேவைகளை பெற்றுக்கொள்வதற்காக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிலிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

01. பாஸ்போர்ட் அச்சு இயந்திரங்கள் 02 ஐ கொன்வனவு செய்தல் (Passport Printer)
02. பாதுகாப்பு முறைமையுடனான லெமினேட்டிங் பத்திரங்கள் 20000 ஐ கொள்வனவு செய்தல் (Security features) இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்கள் 2023 நவம்பர் 06 முதல் 27 வரை அரச வேலை நாட்களில் கீழ்க்காணும் முகவரிக்கு வருகைதந்து கேள்விகோரல் ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக தகவல்கள் தேவைப்படின் 011-2105714 தொலைபேசி இலக்கத்தை அழையுங்கள்.

**வணிகக் கப்பற்துறைச் செயலகம்,**
**இல. 79,**
**டெக்னிக்கல் சந்தி,**
**மருதானை வீதி,**
**கொழும்பு - 10**

# பெறுகை அறிவித்தல்

## இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம் மிஹிந்தலை

இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின், திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரால் இப் பல்கலைக்கழகத்தின் கீழ்க்காணும் உணவகம்/பாற்சாலையை நடத்திச் செல்லல் (காலை/பகல்/இரவு உணவு வழங்கக் கூடிய ஆற்றலுடைய) பற்றிய குறைந்தபட்சம் மூன்று வருடம் அனுபவமுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

01. பேராசிரியர் பிரிவு உணவகம் - மருத்துவ மற்றும் சமமான கல்விக் கூடங்கள் - அநுராதபுர வளாகம்
02. விவசாயபீடம் பேராசிரியர் என்.எச். உபசேன உணவகம் - புளியங்குளம் வளாகம்
03. விவசாயபீடம் மாணவர் நிலைய உணவகம் - புளியங்குளம் வளாகம்
04. சங்கமித்தா விடுதி உணவகம் - மிஹிந்தலை வளாகம்
05. விஹாரமாதேவி விடுதி உணவகம் - மிஹிந்தலை வளாகம்
06. தொழில்நுட்ப பீட பாற்சாலை - மிஹிந்தலை வளாகம்

மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் ரூபா 5000/- தொகையை மற்றும் மீளளிக்கப்படும் கேள்விக் கட்டணம் ரூ. 3000/- தொகையை செலுத்தி 2023.11.06 முதல் சாதாரண அலுவலக நாட்களில் பல்கலைக்கழகத்தின் மாணவர் சேவைப் பிரிவில் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம். விலைமனுக்களை சமர்ப்பிக்கும் உருப்படியை தெளிவாக உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். அனுபவத்தை உறுதி செய்வதற்கு தேவையான ஆவணங்கள் மற்றும் கேள்வி விண்ணப்பதாரியின் புகைப்படமொன்றை சமர்ப்பித்தல் கட்டாயமாகும்.

பொறியிடப்பட்ட கேள்விகளை பதிவாளர், இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம், மிஹிந்தலை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது பதிவாளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

2023.11.20 பிற்பகல் 2.00 இற்கு முன்பு கேள்விப் பத்திரங்களை கிடைக்கச் செய்ய வேண்டியதுடன் பிற்பகல் 2.00 இற்குப் பின்பு சமர்ப்பிக்கப்படும் கேள்விப்பத்திரங்கள் எதுவும் ஏற்கப்படமாட்டாது. மிஹிந்தலை இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் பதிவாளர் அலுவலகத்தில் 2023.11.20 பிற்பகல் 2.15 மணிக்கு கேள்விகள் திறக்கப்படுவதுடன் கேள்விதாரர்களுக்கு அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு அவ்வேளையில் சமுகமளிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு அல்லது விடயங்களை தெளிவுபடுத்துவதற்கு தேவைப்படின் இப் பல்கலைக்கழகத்தின் மாணவர் சேவைப் பிரிவில் உதவிப் பதிவாளர் (மாணவர் சேவை) இடம் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்தின் மூலம் விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம். (தொலைபேசி இலக்கம் : 025 - 2266577) இவ்விடயம் சம்பந்தமாக பல்கலைக்கழகத்தின் பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

**பதிவாளர்,**
**இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம் , மிஹிந்தலை.**
**2023.10.31**

SUNDAY OBSERVER
Marriage Proposals
Best way to fulfil your Future Dreams
Affordable & Attractive Packages for YOU.
Pay online & Save your precious time
Acc. No. 000000377 Corporate Branch
077 7 278 948 / 011 2 429 343/ 342 / 011 2 429 383
E-mail - classified@lakehouse.lk

කෘෂි නවීකරණ ව්‍යාපෘතිය
விவசாய நவீனமயமாக்கல் திட்டம்
Agriculture Modernization Project

THE WORLD BANK
IBRD - IDA | WORLD BANK GROUP

කෘෂිකර්ම අමාත්‍යාංශය
கமத்தொழில் அமைச்சு
Ministry of Agriculture

# இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு

## விவசாயத் துறையை நவீனமயமாக்கும் செயற்றிட்டம்

## கமத்தொழில் அமைச்சு

IDA Credit No. : 5873 LK

## பெறுகை அறிவித்தல்

## மஹா இலுப்பள்ளம, வயற்பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்திலுள்ள தர மேம்படுத்தல் அலகின் புதுப்பித்தல் வேலைகள்

**ஒப்பந்த இல. LK-MOA-PMU-260248-CW-RFB**

1. இலங்கை சனநாயக சோசலிச குடியரசானது சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து (IDA) கமத்தொழில் அமைச்சின் விவசாயத் துறையை மேம்படுத்தும் செயற்றிட்டத்தின் கிரயத்திற்காக 58.630 மில்லியன் அ.ஐ.டொலருக்கு நிகரான தொகையை பலவகையான நாணய அலகுகளில் கடனாக பெற்றுள்ளதுடன் இக்கடன் பெறுகைகளின் பகுதியொன்றை கீழேயுள்ள அட்டவணையிலுள்ள தகுதியுள்ள கொடுப்பனவுகளுக்காக செலவு செய்வதற்கு உத்தேசித்துள்ளது.
2. பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறான பின்வரும் வேலைகளுக்கான தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து கமத்தொழில் அமைச்சின் விவசாயத் துறையை நவீனமயமாக்கும் செயற்றிட்டத்தின் செயற்றிட்ட பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார்.

| ஒப்பந்த இல. | வேலைகளின் விளக்கம் | பெசேவ நீங்கலாக மதிப்பீடப்பட்ட கிரயச் செலவு (மில். ரூ.) | ஒப்பந்தக் காலப் பகுதி | தேவையான தரம் | விலைமனுப் பிணைத் தொகை (ரூபா) | பிணை முறி செல்லுபடி யாகும் காலப் பகுதி | மீளளிக்கப் படாத பண வைப்பு ரூபா |
|---|---|---|---|---|---|---|---|
| LK-MOA-PMU-260248-CW-RFB | மஹா இலுப்பள்ளம, வயற்பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தில் (FCRDI) தற்போதுள்ள 01ஆம் இலக்க தர மேம்படுத்தல் அலகின் புதுப்பித்தல் வேலைகள் | 29.7 | 3 மாதங்கள் | C6 அல்லது அதற்கு மேல் கட்டிட நிர்மாணம் | 360,000.00 | 2024 ஏப்ரல் 23ஆம் திகதி வரை | 8,000.00 |

3. விலைமனுதாரர் விலைமனுக்கோரல் ஆவணத்தில் குறிப்பிட்டவாறு மேலேயுள்ள வேலைக்காக 2024 மார்ச் 26ஆம் திகதி வரை செல்லுபடியாகும் விலைமனுப்பிணையுடன் சமர்ப்பிப்பதற்கு அனுமதிக்கப்படுவர். ஒரு விலைமனுதாரர் ஒரு ஒப்பந்தத்திற்கு ஒரு விலைமனுக்கோரலை மாத்திரமே சமர்ப்பிப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளார். ஒப்பந்தத்தை கையளிக்கப் பெறுவதற்கு தகுதியாக சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் மேலேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு கட்டிட நிர்மாணத்திற்கான தரத்தில் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு பெற்றவராகவுமிருத்தல் வேண்டும்.
4. விலைமனுக்கோரலானது உலக வங்கியினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட தேசிய போட்டி ரீதியிலான (NCB) விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் மேற்கொள்ளப்படும்.
5. தகைமைத் தேவைப்பாடுகள் விலைமனுக்கோரல் ஆவணத்தின் 4ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ளன. மேலதிக விபரங்கள் விலைமனுக்கோரல் ஆவணத்தின் அட்டவணையில் (5ஆம் பிரிவு) வழங்கப்பட்டுள்ளன.
6. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை கமத்தொழில் துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம், செயற்றிட்டப் பணிப்பாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: 0112073044 / 0714961603 / 0714881265 தொலைநகல் இல: 0112 877546) (மின்னஞ்சல்- procurementspasmp@hotmail.com) மற்றும் 2023-11-06ஆம் திகதி முதல் 2023-11-28ஆம் திகதி வரையான எந்தவொரு வேலை நாட்களிலும் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை அதே இடத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம்.
7. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2023 நவம்பர் 14ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு பத்தரமுல்ல, பன்னிபிட்டிய வீதி, 123/2ஆம் இலக்கத்திலுள்ள கமத்தொழில் துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம், செயற்றிட்ட முகாமைத்துவ அலகில் இடம்பெறும்.
8. விலைமனுக்கள் 2024 மார்ச் 26ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.
9. அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள தகவலின் பிரகாரம் விலைமனுக்களுடன் விலைமனுப்பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
10. மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தி பின்வரும் முகவரிக்கு எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் 2023-11-06ஆம் திகதி முதல் 2023-11-28ஆம் திகதி வரை ஆங்கில மொழியிலான விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகளை ரொக்கப் பணத்திலேயே மேற்கொள்ளல் வேண்டும்.
11. விலைமனுக்களை 2023-11-28ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும். இலத்திரனியல் மூலமான விலைமனுக்கோரல் அனுமதிக்கப்பட மாட்டாது. தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. பின்வரும் முகவரியில் நேரடியாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரரின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டதன் பின் உடனடியாகத் திறக்கப்படும்.
12. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என இரு பிரதிகளில் வெவ்வேறாகச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என்பன வெவ்வேறாக 'மூலப்பிரதி' மற்றும் 'நகல்பிரதி' எனக் குறிப்பிடப்பட்டு முத்திரைக் குறியிடப்பட்ட தபாலுறைகளில் உள்ளடக்கப்பட்டு பின் அவ்விரு தபாலுறைகளையும் வேறொரு தபாலுறையில் இடப்பட்டு, முத்திரைக் குறியிடப்பட்டு, ஒப்பந்த இலக்கம் மற்றும் ஒப்பந்தப் பெயர் என்பவற்றை தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும்.

**தலைவர்,**
**செயற்றிட்ட பெறுகைக் குழு,**
**கமத்தொழில் துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம்,**
**123/2, பன்னிபிட்டிய வீதி,**
**பத்தரமுல்ல.**
**2023 நவம்பர் 06ஆம் திகதி.**

කෘෂි නවීකරණ ව්‍යාපෘතිය
விவசாய நவீனமயமாக்கல் திட்டம்
Agriculture Modernization Project

THE WORLD BANK
IBRD - IDA | WORLD BANK GROUP

කෘෂිකර්ම අමාත්‍යාංශය
கமத்தொழில் அமைச்சு
Ministry of Agriculture

# இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு

## விவசாயத் துறையை நவீனமயமாக்கும் செயற்றிட்டம்

## கமத்தொழில் அமைச்சு

IDA Credit No. : 5873 LK

## பெறுகை அறிவித்தல்

## மஹா இலுப்பள்ளமயில் உள்ள வயற்பயிர்கள் ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனத்திற்கு (FCRDI) குளிர் அறை களஞ்சிய வசதி மற்றும் ஆய்வுகூட உபகரணங்களை வழங்குதல், விநியோகித்தல் மற்றும் நிறுவுதல்

1. கமத்தொழில் அமைச்சின் விவசாயத் துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட (ASMP) கிரயச் செலவிற்காக 58.63 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலருக்கு நிகரான தொகையை பலவிதமான பணத்தொகைகளில் கடனொன்றை சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து (IDA) இலங்கை சனநாயக சோசலிச குடியரசானது பெற்றுள்ளதுடன் இக்கடனின் பெறுகைகளின் பகுதியொன்றை மஹா இலுப்பள்ளமயில் உள்ள வயற்பயிர்கள் ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனத்திற்கு (FCRDI) குளிர் அறை களஞ்சிய வசதி மற்றும் ஆய்வுகூட உபகரணங்களை வழங்குதல், விநியோகித்தல் மற்றும் நிறுவுதல் எனும் ஒப்பந்தத்தின் கீழுள்ள தகுதியுள்ள பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிடுவதற்கு உத்தேசித்துள்ளது.
2. மஹா இலுப்பள்ளமயில் உள்ள வயற்பயிர்கள் ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனத்திற்கு (FCRDI) குளிர் அறை களஞ்சிய வசதி மற்றும் ஆய்வுகூட உபகரணங்களை வழங்குதல், விநியோகித்தல் மற்றும் நிறுவுதல் எனும் பெறுகைக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறியிடப்பட்ட விலைமனுக்களை கமத்தொழில் அமைச்சின் விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டத்தின், செயற்றிட்ட பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கிறார்.

| விபரங்கள் | ஒப்பந்த இலக்கம் | விலைமனுப் பிணை முறியின் பெறுமதி (ரூபா) | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|
| மஹா இலுப்பள்ளமயில் உள்ள வயற்பயிர்கள் ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனத்திலுள்ள (FCRDI) விதைகள் களஞ்சியசாலைக்கான 01 எண்ணிக்கை குளிர் அறை களஞ்சியசாலை வசதிகள் | LK-MOA-PMU-278053 -GO-RFB | 220,000.00 | 5,000.00 |
| வட மாகாணம், கிளிநொச்சி, வயற்பயிர்கள் ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனத்திலுள்ள (RARADC) ஆய்வுகூட வசதிகள் மற்றும் ஆராய்ச்சி வசதிகளை வலுப்படுத்துவதற்கான ஆய்வுகூட உபகரணங்கள் மற்றும் இரசாயனங்கள் | LK-MOA-PMU-258974 -GO-RFB | 250,000.00 | 5,000.00 |

3. விலைமனுக்கோரலானது உலக வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
4. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை கமத்தொழில் அமைச்சு, விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட, பெறுகை திணைக்களத்தின் பெறுகைப் பிரிவிலிருந்து 0777419521 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் 2023-11-06ஆம் திகதியிலிருந்து 2023-11-27ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 2.00 மணி வரையில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. பத்தரமுல்ல, இல. 123/2, பன்னிபிட்டிய வீதி, விவசாயத் துறையை நவீனமயப்படுத்தும் செயற்றிட்டத்தில் 2023 நவம்பர் 15ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் இடம்பெறும்.
6. மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திய பின்னர், பின்வரும் முகவரிக்கு எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம். பணக்கொடுப்பனவானது செயற்றிட்டத்தின் நிதியிடல் முகாமையாளருக்கு ரொக்கப் பணத்தில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
7. 2023-11-27ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். இலத்திரனியல் விலைமனுக்கள் அனுமதிக்கப்படமாட்டாது. தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. 2023-11-27ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு பின்வரும் முகவரியில் தாமாக வருகை தந்துள்ள விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
8. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை இரு பிரதிகளில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என்பன தனித்தனியான உறைகளில் இடப்பட்டு 'மூலப்பிரதி' மற்றும் 'நகல்பிரதி' என தபாலுறைகளில் குறிக்கப்படல் வேண்டும். அதன் பின்னர் இவ்விரண்டு தபாலுறைகளும் வேறொரு தபாலுறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து அதன் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்த இலக்கம் மற்றும் விபரங்களை (இயைபுடைய விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள) குறிப்பிடுதல் வேண்டும்.
9. மேற்குறிப்பிடப்பட்ட முகவரியானது:

தலைவர்,
செயற்றிட்ட பெறுகைக் குழு,
விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம்,
இல. 123/2, பன்னிபிட்டிய வீதி,
பத்தரமுல்ல.

தொலைபேசி: 0112696086 அல்லது 0777419521
திகதி: 2023-11-05.

adz.lk
It's what you want
The Trusted Market place for Buying & Selling

# ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை

## வெற்றிடங்கள்

## உயிரியல் மருத்துவ பொறியியலாளர் பதவி

**(POST OF BIO MEDICAL ENGINEER)**

பின்வரும் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமைகள்** : பத்து (10) வருட கால அனுபவம் மற்றும் தொழில்சார் தகைமைகள் சகிதம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் / நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொண்ட விஞ்ஞான இளமாணிப் பட்டம் (B.sc.) அல்லது நிகராக தகைமை (மின்சாரம் / இலத்திரனியல் / பொறிமுறை)

**அல்லது**

12 வருட கால அனுபவம் சகிதம் பட்டத்திற்குச் சமமான பல்கலைகழகத்தினால் அங்கீகரிக்கப்படும் வேறு ஏதாவது தொடர்புடைய தொழில்சார் தகைமைகள்

விண்ணப்பதாரர் பின்வருவனவற்றில் அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

- வைத்தியசாலையின் மருத்துவ உபகரணங்களைப் பராமரித்தல்
- அளவுப் பத்திரங்களைத் (BOQ) தயாரித்தல்
- அத்தியாவசிய உதிரிப்பாகங்களின் முறையான பராமரிப்பு
- ஏனைய கீழ்நிலை தொழில்நுட்பவியலாளர்களை பயிற்றுவித்தல்

**வயது** : 25 வயதிற்குக் குறையாமலும் 40 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவு** : SL 1 தரம் III - ரூபா 64,280 - 10x1800 - ரூபா 82,280.00

**வேலைவாய்ப்பின் நியதிகள்** : நிரந்தரம் மற்றும் சேமநல நிதி அடிப்படையில்.

அரச சேவையில் உள்ள ஊழியர்கள் விண்ணப்பங்களை தமது நிறுவனத் தலைமையினூடாக அனுப்புதல் வேண்டும். அதன் பிரதியை நேரடியாக அனுப்பலாம்.

விண்ணப்பதாரர் இப்பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டால் அவரை விடுவிக்க முடியும் என நிறுவனத் தலைமையினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றையும் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

நியமனத்தை வழங்கும் / வழங்காமல் விடும் உரிமையை ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை சபை தன்னகத்தே கொண்டுள்ளது. கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் கட்டாயம் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பதாரர்கள் 2023 நவம்பர் 20ஆம் திகதி அல்லது அதற்கு முன் தமது முழுமையான சுய தரவுகள் மற்றும் உறவினரல்லாத இரண்டு (02) சான்று பகர்வோரின் பெயர்களுடன் தமது விண்ணப்பங்களை கீழே கையொப்பமிட்டுள்ளவருக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும்.

**தலைவர்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை,**
**தலபத்பிட்டிய, நுகேகொடை.**

# தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை

## பதவி வெற்றிடங்கள்

தேசிய அபாயகரஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையில் காணப்படும் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகிறது:

| | பதவி | | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | பணிப்பாளர் நாயகம் | - | 01 |
| 2. | பணிப்பாளர் (நிர்வாகம்) | - | 01 |
| 3. | பணிப்பாளர் (நிதி) | - | 01 |
| 4. | சபையின் செயளாலர் / சட்ட அதிகாரி | - | 01 |
| 5. | ஆராய்ச்சி அலுவலகர் | - | 05 |
| 6. | உதவி ஆலோசகர் | - | 20 |

**விண்ணப்ப முடிவுத் திகதி: 2023.11.17**

உதவி ஆலோசகர் மற்றும் ஆராய்ச்சி அலுவலகர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக 2021.02.25 ஆம் திகதி வெளியான பத்திரிகை விளம்பரம் மற்றும் 2021.02.25 ஆம் ஆந் திகதிய வர்த்தமானியின்படி விண்ணப்பங்களை அனுப்பிய விண்ணப்பதாரர்கள் மீண்டும் விண்ணப்பங்களை அனுப்பத் தேவையில்லை.

மேலதிக விபரங்களுக்காக 2023.11.03 ஆம் திகதிய வர்த்தமானி மற்றும் **www.nddcb.gov.lk** என்ற இணையத்தளத்தையும் பார்வையிடவும்.

தவிசாளர்
தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை


வாரமஞ்சரி

திருமண சேவைகள்

உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.

உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.

முதல் 15 சொற்களுக்கு 600/- ரூபா

- ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 25 ரூபா
- அதிகூடிய சொற்களின் எண்ணிக்கை 65
- அவ் அறிவித்தலை மிகவும் கவர்ச்சியாக பிரசுரிப்பதற்கு மேலதிகமாக ரூ. 200
- அவ் அறிவித்தலை இன்டர்நெட்டில் பிரசுரிப்பதற்கு மேலதிகமாக ரூ. 200

இலங்கை வங்கி கணக்கிலக்கம் 000000377
(லேக்ஹவுஸ் கிளை)

BOC ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.

011 2 429 342 / 011 2 429 343
classified@lakehouse.lk

SUNDAY OBSERVER Marriage Proposals
Decades of Trusted Service

Best way to fulfil your Future Dreams

Affordable & Attractive Packages for YOU.

077 7 278 948 / 011 2 429 343/ 342 / 011 2 429 383 E-mail -classified@lakehouse.lk


## பெறுகை அறிவித்தல்

# களனி பல்கலைக்கழகத்தின் தலுகம இடப்பரப்பு, ராகம மருத்துவ பீடம் மற்றும் கணனி மற்றும் தொழில்நுட்ப பீடத்திற்கு சுத்திகரிப்புச் சேவைகளை வழங்குதல்

2024ஆம் வருடத்தில் பின்வரும் இடப்பரப்புகளுக்கு சுத்திகரிப்புச் சேவையை வழங்குவதற்கு தகுதி வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து போட்டி ரீதியிலான கேள்வி கோரலின் (NCB) கீழ் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | பெறுகை இலக்கம் | விபரம் | விலைக் கோரல் பிணை முறி (ரூபா) | கேள்விக் கட்டணம் (ரூபா) | கேள்விப் படிவத்தின் செல்லுபடிக் காலம் (நாட்கள்) |
|---|---|---|---|---|---|
| 01 | UK/GA/GA1/ DAL/2024 (களனி பல்கலைக்கழகத்தின் தலுகம இடப்பரப்பு) | தனியார் சுத்திகரிப்புச் சேவை வழங்குதல் | 840,000.00 | 15,000.00 | 2024-02-28ஆம் திகதி வரை |
| 02 | UK/GA/GA1/ RAGA/2024 (மருத்துவ பீடம் - ராகம இடப்பரப்பு) | | 216,000.00 | 4,000.00 | 2024-02-28ஆம் திகதி வரை |
| 03 | UK/GA/GA1/ FCT/2024 (கணனி மற்றும் தொழில்நுட்ப பீடம் - பலுகஹா சந்தி) | | 240,000.00 | 4,000.00 | 2024-02-28ஆம் திகதி வரை |

**தகுதிகள்**

1. அரச அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனங்களுக்கு பாதுகாப்பு சேவைகள் வழங்கியமை தொடர்பில் வியாபாரப் பதிவு நாள் தொடக்கம் குறைந்தபட்சம் 05 வருடங்களுக்குக் குறையாத அனுபவத்தைப் பெற்றிருத்தல் மற்றும் அபகீர்த்தியாளர் (Blacklist) பட்டியல்படுத்தப்படாத நிறுவனமாகவிருத்தல்.
2. செல்லுபடியாகும் வருடாந்த வியாபார அனுமதிப் பத்திரம் இருத்தல் வேண்டும்.
3. 2023-03-31ஆம் திகதிக்கு முன் அண்மைய மூன்று வருடங்களில் பாதுகாப்புச் சேவைகளை வழங்குவதில் பெற்றுள்ள சராசரி வருடாந்த புரள்வு (Average Annual Turnover) பின்வரும் பெறுமதியை விட அதிகமாகவிருத்தல் வேண்டும்.

| தொ. இல. | பெறுகை இலக்கம் | சராசரி வருடாந்த புரள்வு (ரூபா) |
|---|---|---|
| 01 | UK/GA/GA1/ DAL/2024 (களனி பல்கலைக்கழகத்தின் தலுகம இடப்பரப்பு) | 80 மில்லியன் |
| 02 | UK/GA/GA1/ RAGA/2024 (மருத்துவ பீடம் - ராகம இடப்பரப்பு) | 20 மில்லியன் |
| 03 | UK/GA/GA1/ FCT/2024 (கணனி மற்றும் தொழில்நுட்ப பீடம் - பலுகஹா சந்தி) | 20 மில்லியன் |

சகல கேள்விப் படிவங்களுடனும் மேற்கூறப்பட்ட பெறுமதி மற்றும் செல்லுபடிக் காலம் சகிதம் இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள வர்த்தக வங்கியொன்றில் துணைவேந்தர், களனி பல்கலைக்கழகம் எனும் பெயரில் பெற்றுக்கொண்ட கேள்விப் பிணை முறி அல்லது பல்கலைக்கழகத்தின் சிறாப்பருக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுசீட்டின் மூலப்பிரதி இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

கேள்விகளைச் சமர்ப்பிக்கும் நிறுவனங்களுக்கு மேற்கூறப்பட்ட மூன்று கேள்விகளுக்கும் அல்லது ஒரு கேள்விக்கு அல்லது இரண்டு கேள்விகளுக்கு கேள்விகளைச் சமர்ப்பிப்பதற்கு வாய்ப்பு உண்டு.

இது தொடர்பான மேலதிக விபரங்களை உதவிப் பதிவாளர் / பொது நிர்வாகம் அவர்களைத் (0112914477, 0112903116 மற்றும் 0112903117) தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் கேள்விப் படிவங்களை வேலை நாட்களில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

மேற்கூறப்பட்ட சேவைகளுக்கான இடங்களை 2023-11-06ஆம் திகதி முதல் 2023-11-27ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரையில் பரீட்சித்துப் பார்க்கலாம். இது தொடர்பிலான கேள்வி முன்னோடிக் கூட்டம் (Pre-bid meeting) 2023-11-14ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு பல்கலைக்கழகத்தின் நிர்வாகக் கட்டிடத்தின் இரண்டாம் மாடியிலுள்ள பீடாதிபதி குழு கூட்ட மண்டபத்தில் இடம்பெறும் என்பதுடன் கேள்விகளைச் சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கும் சகல நிறுவனங்களும் இந்த கூட்டத்தில் கலந்துகொள்ளல் கட்டாயமாகும்.

சகல கேள்விப் படிவங்களையும் சிங்கள மொழியில் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் இது தொடர்பில் ஆர்வம் காட்டும் கேள்விதாரர்கள் 2023-11-06ஆம் திகதி முதல் 2023-11-27ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரையில் தமது நிறுவனத்தின் கடிதத் தலைப்பில் எழுதப்பட்ட எழுத்துமூல வேண்டுகோள் ஒன்றையும் இந்த பல்கலைக்கழகத்தின் சிறாப்பருக்கு மேற்கூறப்பட்ட மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டையும் உதவிப் பதிவாளர் - பொது நிர்வாகம் அவர்களுக்குச் சமர்ப்பித்து கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்படிவங்களை ஒவ்வொரு இடப்பரப்பிற்கும் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென வெவ்வேறாகக் குறிப்பிட்டு கடித உறையினுள் இட்டு முத்திரைக் குறி பொறித்து மீண்டும் அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து அதன் இடதுபக்க மேல் மூலையில் ''களனி பல்கலைக்கழகத்தின் தலுகம இடப்பரப்பு - 2024, ராகம மருத்துவ பீடம் - ராகம இடப்பரப்பு - 2024, கணனி மற்றும் தொழில்நுட்ப பீடம் - 2024'' எனத் தெளிவாகக் குறிப்பிட்டு முத்திரைக் குறி பொறித்த கேள்விப் படிவங்களை 2023-11-28ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் களனிப் பல்கலைக்கழகத்தின் பொது நிர்வாகப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள பதிவேட்டில் தமது நிறுவனத்தின் பெயர் மற்றும் அதற்கு இயைபான தகவல்களை வழங்கி உறுதி செய்ததன் பின் அப்பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உதவிப் பதிவாளர் / பொது நிர்வாகம் அல்லது அவரின் பிரதிநிதியின் முன்னிலையில் கேள்விப்படிவங்களை உள்ளிடுதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் கேள்விப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவடைந்த உடனடுத்து அவை பல்கலைக்கழகத்தின் நிர்வாகக் கட்டிடத்தில் இரண்டாம் மாடியில் பீடாதிபதி குழு கூட்ட மண்டபத்தில் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் கேள்விதாரர் அல்லது அவரால் முறையாக அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் கலந்துகொள்ளலாம்.

மேற்கூறப்பட்ட கேள்விக்கு இயைபான சகல தகவல்களும் கேள்வி விண்ணப்பத்தில் தரப்பட்டுள்ளன.

திணைக்களப் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

பல்கலைக்கழக நிர்வாகத்திற்குப் புறம்பாக நாட்டினுள் ஏற்படக்கூடிய அவசர நிலைமைகள் காரணமாக மேற்கூறிய திகதிகளில் ஏதாவது மாற்றங்களைச் செய்ய நேரிட்டால் அது தொடர்பான விபரங்களை பல்கலைக்கழகத்தின் www.kln.ac.lk எனும் இணையதளத்தின் மூலம் அறியத்தரப்படும்.

**திணைக்களப் பெறுகைக் குழு,**
**களனி பல்கலைக்கழகம்,**
**தலுகம, களனி.**
**2023-11-05.**

## பெறுகை அறிவித்தல்

### களனி பல்கலைக்கழகத்தின் தலுகமயில் அமைந்துள்ள பிரதான இடப்பரப்பு, ராகம மருத்துவ பீடம் மற்றும் வெளி இடப்பரப்புகளுக்கு (தலுகம இடப்பரப்பு மற்றும் ராகம மருத்துவ பீடம் தவிர்ந்த) பாதுகாப்புச் சேவைகளை வழங்குதல்

2024ஆம் வருடத்தில் பின்வரும் இடப்பரப்புகளுக்கு பாதுகாப்புச் சேவையை வழங்குவதற்கு தகுதி வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து போட்டி ரீதியிலான கேள்வி கோரலின் (NCB) கீழ் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | பெறுகை இலக்கம் | விபரம் | விலைக் கோரல் பிணை முறி (ரூபா) | கேள்விக் கட்டணம் (ரூபா) | கேள்விப் படிவத்தின் செல்லுபடிக் காலம் (நாட்கள்) |
|---|---|---|---|---|---|
| 01 | UK/GA/GA7/SS/DAL/02 (களனி பல்கலைக்கழகத்தின் பிரதான இடப்பரப்பு - தலுகம) | தனியார் பாதுகாப்புச் சேவை வழங்குதல் | 730,000.00 | 12,500.00 | 2024-02-28ஆம் திகதி வரை |
| 02 | UK/GA/GA7/SS/RAG/02 (மருத்துவ பீடம் - ராகம) | | 430,000.00 | 3,500.00 | 2024-02-28ஆம் திகதி வரை |
| 03 | UK/GA/GA7/SS/EXT/02 (களனி பல்கலைக்கழகத்தின் தலுகம இடப்பரப்பு மற்றும் ராகம மருத்துவ பீடம் தவிர்ந்த பல்கலைக்கழகத்திற்கு உரித்தான சகல வெளி இடப்பரப்புகள்) | | 540,000.00 | 12,500.00 | 2024-02-28ஆம் திகதி வரை |

**தகுதிகள்**

1. அரச அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனங்களுக்கு பாதுகாப்பு சேவைகள் வழங்கியமை தொடர்பில் வியாபாரப் பதிவு நாள் தொடக்கம் குறைந்தபட்சம் 05 வருடங்களுக்குக் குறையாத அனுபவத்தைப் பெற்றிருத்தல் மற்றும் அபகீர்த்தியாளர் (Blacklist) பட்டியல்படுத்தப்படாத நிறுவனமாகவிருத்தல்.
2. பாதுகாப்பு அமைச்சின் சிவில் பாதுகாப்புப் பிரிவில் பதிவு செய்துள்ள செல்லுபடியாகும் வருடாந்த அனுமதிப் பத்திரம் இருத்தல் வேண்டும்.
3. 2023-03-31ஆம் திகதிக்கு முன் அண்மைய மூன்று வருடங்களில் பாதுகாப்புச் சேவைகளை வழங்குவதில் பெற்றுள்ள சராசரி வருடாந்த புரள்வு (Average Annual Turnover) பின்வரும் பெறுமதியை விட அதிகமாகவிருத்தல் வேண்டும்.

| தொ. இல. | பெறுகை இலக்கம் | சராசரி வருடாந்த புரள்வு (ரூபா) |
|---|---|---|
| 01 | UK/GA/GA7/SS/DAL/02 (களனி பல்கலைக்கழகத்தின் பிரதான இடப்பரப்பு - தலுகம) | 70 மில்லியன் |
| 02 | UK/GA/GA7/SS/RAG/02 (மருத்துவ பீடம் - ராகம) | 40 மில்லியன் |
| 03 | UK/GA/GA7/SS/EXT/02 (களனி பல்கலைக்கழகத்தின் தலுகம இடப்பரப்பு மற்றும் ராகம மருத்துவ பீடம் தவிர்ந்த பல்கலைக்கழகத்திற்கு உரித்தான சகல வெளி இடப்பரப்புகள்) | 50 மில்லியன் |

சகல கேள்விப் படிவங்களுடனும் மேற்கூறப்பட்ட பெறுமதி மற்றும் செல்லுபடிக் காலம் சகிதம் இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள வர்த்தக வங்கியொன்றில் துணை வேந்தர், களனி பல்கலைக்கழகம் எனும் பெயரில் பெற்றுக்கொண்ட கேள்விப் பிணை முறி அல்லது பல்கலைக்கழகத்தின் சிறாப்பருக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் மூலப்பிரதி இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

கேள்விகளைச் சமர்ப்பிக்கும் நிறுவனங்களுக்கு மேற்கூறப்பட்ட மூன்று கேள்விகளுக்கும் அல்லது ஒரு கேள்விக்கு அல்லது இரண்டு கேள்விகளுக்கு கேள்விகளைச் சமர்ப்பிப்பதற்கு வாய்ப்பு உண்டு.

இது தொடர்பான மேலதிக விபரங்களை உதவிப் பதிவாளர் / பொது நிர்வாகம் அவர்களைத் (0112914477, 0112903116 மற்றும் 0112903117) தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் கேள்விப் படிவங்களை வேலை நாட்களில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

மேற்கூறப்பட்ட சேவைகளுக்கான இடங்களை 2023-11-06ஆம் திகதி முதல் 2023-11-27ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரையில் பரீசித்துப் பார்க்கலாம். இது தொடர்பிலான கேள்வி முன்னோடிக் கூட்டம் (Pre-bid meeting) 2023-11-14ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு பல்கலைக்கழகத்தின் நிர்வாகக் கட்டிடத்தின் இரண்டாம் மாடியிலுள்ள பீடாதிபதி குழு கூட்ட மண்டபத்தில் இடம்பெறும் என்பதுடன் கேள்விகளைச் சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கும் சகல நிறுவனங்களும் இந்த கூட்டத்தில் கலந்துகொள்ளல் கட்டாயமாகும்.

சகல கேள்விப் படிவங்களையும் சிங்கள மொழியில் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் இது தொடர்பில் ஆர்வம் காட்டும் கேள்விதாரர்கள் 2023-11-06ஆம் திகதி முதல் 2023-11-27ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையில் தமது நிறுவனத்தின் கடிதத் தலைப்பில் எழுதப்பட்ட எழுத்துமூல வேண்டுகோள் ஒன்றையும் இந்த பல்கலைக்கழகத்தின் சிறாப்பருக்கு மேற்கூறப்பட்ட மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டையும் உதவிப் பதிவாளர் - பொது நிர்வாகம் அவர்களுக்குச் சமர்ப்பித்து கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்படிவங்களை ஒவ்வொரு இடப்பரப்பிற்கும் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென வெவ்வேறாகக் குறிப்பிட்டு கடித உறையினுள் இட்டு முத்திரைக் குறி பொறித்து மீண்டும் அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து அதன் இடதுபக்க மேல் மூலையில் ''களனி பல்கலைக்கழகத்தின் பிரதான இடப்பரப்பிற்கு பாதுகாப்புச் சேவை வழங்குதல் - 2024, ராகம மருத்துவ பீட இடப்பரப்பிற்கு பாதுகாப்புச் சேவை வழங்குதல் - 2024, வெளி இடப்பரப்புகளுக்கு பாதுகாப்புச் சேவை வழங்குதல் - 2024" எனத் தெளிவாகக் குறிப்பிட்டு முத்திரைக் குறி பொறித்த கேள்விப் படிவங்களை 2023-11-28ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் களனிப் பல்கலைக்கழகத்தின் பொது நிர்வாகப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள பதிவேட்டில் தமது நிறுவனத்தின் பெயர் மற்றும் அதற்கு இயைபான தகவல்களை வழங்கி உறுதி செய்ததன் பின் அப்பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உதவிப் பதிவாளர் / பொது நிர்வாகம் அல்லது அவரின் பிரதிநிதியின் முன்னிலையில் கேள்விப்படிவங்களை உள்ளிடுதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் கேள்விப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவடைந்த உடனடுத்து அவை பல்கலைக்கழகத்தின் நிர்வாகக் கட்டிடத்தில் இரண்டாம் மாடியில் பீடாதிபதி குழு கூட்ட மண்டபத்தில் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் கேள்விதாரர் அல்லது அவரால் முறையாக அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் கலந்துகொள்ளலாம்.

மேற்கூறப்பட்ட கேள்விக்கு இயைபான சகல தகவல்களும் கேள்வி விண்ணப்பத்தில் தரப்பட்டுள்ளன.

திணைக்களப் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

பல்கலைக்கழக நிர்வாகத்திற்குப் புறம்பாக நாட்டினுள் ஏற்படக்கூடிய அவசர நிலைமைகள் காரணமாக மேற்கூறிய திகதிகளில் ஏதாவது மாற்றங்களைச் செய்ய நேரிட்டால் அது தொடர்பான விபரங்களை பல்கலைக்கழகத்தின் www.kln.ac.lk எனும் இணையதளத்தின் மூலம் அறியத்தரப்படும்.

**திணைக்களப் பெறுகைக் குழு,**
**களனி பல்கலைக்கழகம்,**
**தலுகம, களனி.**
**2023-11-05.**

## இலங்கையின்... 

(12ஆம் பக்க தொடர்ச்சி)

புவிசார் அரசி யல் பதட்டங்கள்/அசாதாரண நிலைமை: புவிசார் அரசியல் பதட்டங்களுக்கு வாய்ப்புள்ள மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த பிராந்தியத்தில் இலங்கை அமைந்துள்ளது. இது வணிகங்களுக்கு நிச்சயமற்ற தன்மையையும் உறுதியற்ற தன்மையையும் உருவாக்கலாம்.

காலநிலை மாற்றம்: கடல் மட்ட உயர்வு மற்றும் தீவிர வானிலை நிகழ்வுகள் போன்ற காலநிலை மாற்றத்தின் விளைவுகளுக்கு இலங்கை பாதிக்கப்படக்கூடியது. இது வணிகங்களுக்கு, குறிப்பாக விவசாயம் மற்றும் சுற்றுலாத் துறைகளில் குறிப்பிடத்தக்க அச்சுறுத்தலை ஏற்படுத்தலாம். இலங்கை வர்த்தக சமூகம் அதன் பலவீனங்கள் மற்றும் அச்சுறுத்தல்களை நிவர்த்தி செய்வதற்கு அதன் பலத்தை எவ்வாறு பயன்படுத்த முடியும் என்பதற்கான எடுத்துக்காட்டுகள்:

தொழில்முனைவோர் தங்கள் புத்திக் கூர்மை மற்றும் பின்னடைவை பயன்படுத்தி உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளின் தேவைகளுக்கு ஏற்ப புதிய தயாரிப்புகள் மற்றும் சேவைகளை உருவாக்கலாம். உதாரணமாக, காலநிலை மாற்றத்தின் சவால்களை எதிர்கொள்வதற்கு அல்லது விவசாயத் துறையின் செயல்திறனை மேம்படுத்துவதற்கு இலங்கை தொழில்முனைவோர் புதுமையான தீர்வுகளை உருவாக்க முடியும். வணிகங்கள் இலங்கையிலும் வெளிநாட்டிலும் உள்ள பிற வணிகங்களுடன் நெட்வொர்க்குகள் மற்றும் கூட்டாண்மைகளை கட்டியெழுப்ப தங்கள் வலுவான குடும்ப உறவுகளைப் பயன்படுத்தலாம். இது அவர்களுக்கு நிதி மற்றும் உட்கட்டமைப்புக்கான அணுகல் சவால்களை சமாளிக்க உதவும். புதிய சந்தைகளை அணுகுவதற்கும் வெளிநாட்டு முதலீட்டை ஈர்ப்பதற்கும் வணிகங்கள் இலங்கை புலம்பெயர் வலையமைப்பைப் பயன்படுத்த முடியும். எடுத்துக்காட்டாக, வெளிநாட்டு சந்தைகளில் புதிய தயாரிப்புகள் மற்றும் சேவைகளை அறிமுகப்படுத்த இலங்கை வர்த்தகர்கள் இலங்கை புலம்பெயர் தொழில்முனைவோர்களுடன் கூட்டு சேரலாம். இலங்கையின் வர்த்தகங்கள் தமது பலவீனங்களையும் அச்சுறுத்தல்களையும் நிவர்த்தி செய்வதற்கு எவ்வாறு தமது பலத்தைப் பயன்படுத்துகின்றன என்பதற்கான சில குறிப்பிட்ட எடுத்துக்காட்டுகள் பின்வருமாறு:

பல இலங்கை வங்கிகள் SME களுக்கு சிறப்பு கடன் தயாரிப்புகளை வழங்கி வருகின்றன. SME களுக்கான நிதி அணுகல் சவாலை எதிர்கொள்ள இது உதவுகிறது. இலங்கையின் பல வர்த்தக நிறுவனங்கள் புதுப்பிக்கத்தக்க ஆற்றலில் முதலீடு செய்து வருகின்றன. இது புதைபடிவ எரிபொருட்கள் மீதான அவர்களின் நம்பிக்கையைக் குறைக்கவும், காலநிலை மாற்றத்தின் விளைவுகளுக்கு அவற்றை மேலும் தாங்கக்கூடியதாகவும் மாற்ற உதவுகிறது.

## இஸ்லாத்தின் பார்வையில்...

(07ஆம் பக்க தொடர்ச்சி)

மு ஹம்மத் (ஸல்) அவர்களும் அப்பூமியை தரிசித்துள்ளார்கள். பனூ இஸ்ரவேலர்களின் பல நபிமார்கள் அப்பூமியில் வாழ்ந்துள்ளார்கள். தம் மக்களை நபிமார்கள் ஆட்சி செய்துள்ளார்கள். ஒரு நபி மரணமடைந்தால் தொடர்ந்து இன்னொரு நபி வந்துள்ளார். யூஸூப் (அலை) அவர்களும் இவ்வாறான ஒருவர் என்று ஹதீஸ்கள் குறிப்பிடுகின்றனர். (ஆதாரம் அஹ்மத்)

எனவே முஸ்லிம்கள் அல்குர்ஆனை ஓதும்போது இந்நிலத்துடனான தொடர்பை மனப்பூர்வமாக உணர்கின்றார்கள். நேசிக்கின்றார்கள். சத்தியத்துக்கும் அசத்தியத்துக்குமிடையிலான போராட்டம் கூர்மையடையும் இடமாக இதனை நோக்குகிறார்கள்.

பலஸ்தீனில் பல இடங்களில் நபிமார்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ளதாக நம்பப்படுகிறது. கலீல் என்ற நகரில் உள்ள அல்ஹறம் அல் இப்ராஹிமி என்ற பள்ளியில் இப்றாஹீம் (அலை) அவர்கள் அடக்கப்பட்டுள்ளதாக நம்பப்படுகின்றது என்பது கிறிஸ்தவர்களின் நம்பிக்கையாகும்.

ஸாலிஹ் (அலை) அவர்களுடன் தொடர்பான ஏழு இடங்கள் பலஸ்தீனில் காணப்படுகின்றன. 'துல் கரம்' நகரில் 'இர்தாஹ்' என்ற ஊர் அமைந்துள்ளது.

பலஸ்தீன் இஸ்ரா (இராப் பயணம்) இடம்பெற்ற பூமியாகும். மக்காவிலுள்ள மஸ்ஜிதுல் ஹரமிலிருந்து பலஸ்தீனின் குத்ஸ் நகரத்திலுள்ள மஸ்ஜிதுல் அக்ஸாவுக்கான இராப்பயணம், இப்பூமியில்தான் இடம்பெற்றது. இங்கிருந்துதான் (விண்ணுலக பயணமான) மிஃராஜ் இடம்பெற்றது. இந்த மஸ்ஜிதையும், பலஸ்தீன் பூமியையும் இதன்மூலம் அல்லாஹ் கண்ணியப்படுத்தினான். இந்நிகழ்வின் மூலம் பைத்துல் முக்கதிஸை அல்லாஹ் வானம் பூமிக்கிடையிலான நுழைவாயிலாக ஆக்கினான்.

இப்புனித மஸ்ஜிதில் அல்லாஹ் அத்தினத்தில் நபிமார்களை ஒன்று திரட்டினான். அவர்களுக்கு இமாமாக நின்று நபி (ஸல்) அவர்கள் தொழுகை நடத்தினார்கள். ஆகவே, உலகிலேயே பேசுபொருளாகியுள்ள பலஸ்தீன் விவகாரம் சம்பந்தமாக மிகவும் குறிப்பிடத்தக்க கருத்துக்களை சமகால இஸ்லாமிய சிந்தனையாளர்கள் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளனர். 'பலஸ்தீன் ஒவ்வொரு முஸ்லிமினதும் தாயகம் அது. இஸ்லாத்தின் பூமி மஸ்ஜிதுல் அக்ஸாவைக் கொண்டிருக்கும். அப்பூமிக்கு அல்லாஹ்வினால் அருள் பாலிக்கப்பட்டிருக்கின்றது. அதனால் பலஸ்தீன் விவகாரம் ஒவ்வொரு முஸ்லிமினதும் விவகாரமாக விளங்குகிறது. அங்கு வாழும் மக்கள் எமது சகோதரர்களே. அவர்களுக்கு உதவுவதைத் தடுப்பது அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் எதிரான செயற்பாடாகும். பலஸ்தீன் என்பது முஸ்லிம் உம்மாவின் காயப்பட்ட ஒரு பகுதி. அக்காயம் உள்ளவரை முஸ்லிம் சமுதாயத்தினால் செயற்திறனுடன் இயங்க முடியாது. அதனால் பலஸ்தீன் (அல்அக்ஸாவை) மீட்பதற்காக உழைப்பது ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் கடமையே!

## தீவிரமடையும்...

(12ஆம் பக்க தொடர்ச்சி)

ஆ னால் ஈரான், ரஷ்யா, ஹமாஸ் என்பன இஸ்ரேல், அமெரிக்கா மற்றும் மேற்குலகத்தின் எதிர்த்தரப்பு என்ற அடிப்படையில் அதிக முக்கியத்துவம் மிக்க உரையாடல் நடைபெறுவதற்கான சூழலே அதிகமானது. குறிப்பாக ஆயுததளபாடங்கள் மற்றும் போரை இஸ்ரேலுக்கு மட்டுமல்லாது அமெரிக்காவுக்கும் எதிரானதாக நகர்த்துவது பற்றிய உரையாடல் நிகழ்ந்திருக்கவே வாய்ப்புண்டு. இது ரஷ்யாவுக்கு வாய்ப்பான காலப்பகுதியாகவே தெரிகிறது. உக்ரைனுக்கு பதில் கொடுக்க வேண்டுமாயின் ஹமாஸ் – இஸ்ரேல் போரை ரஷ்யா சரியாக பயன்படுத்திக்கொள்ள வாய்ப்புள்ளது. அதனையே ஹமாஸ் போர்க்களத்தில் நகர்த்துகிறது.

எனவே ஹமாஸ், இஸ்ரேல் போர் முழுநீட்சி பெற்ற போராக மாறுவதற்கான களமே தென்படுகிறது. இஸ்ரேலியர் அதனை மூன்றுமாத காலத்தில் திட்டமிட்டாலும் அதனை தீர்மானிப்பதில் ஹமாஸ், ரஷ்யா, ஈரான் போன்ற நாடுகளும் உள்ளதாகவே தெரிகிறது. இதனால் போர் விரைவில் நிறைவு பெறுவதற்கு வாய்ப்பு குறைவாகவே காணப்படுகிறது. ஆனால் அழிவையும் துயரத்தையும் பாலஸ்தீன பொதுமக்களே எதிர்கொள்ள போகின்றனர். யூதர்கள் போர்ப் பயிற்சியிலும் துப்பாக்கி வைத்திருப்பதிலும் கவனம் கொள்ளத் தொடங்கியுள்ளனர். அனேக யூதர்கள் இஸ்ரேலை விட்டு வெளியேற ஆரம்பித்துள்ளனர். ஆனால் மொஸ்கோ விமான நிலையத்தில் யூதர்களுக்கு எதிராக நிகழ்ந்த சம்பவம் அவர்களை குழப்பத்திற்குள் தள்ளியுள்ளது. இரு தரப்பினரும் நாட்டைவிட்டு வெளியேறுவதில் கவனம் கொள்ளத் தொடங்கியுள்ளனர். இந்தப் போரில் ஹிஸ்புல்லாவின் வருகை அதிக மாற்றத்தை ஏற்படுத்துமென கணிப்பீடுகள் உண்டு.

---

### தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சு

## தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சினால் ஏற்பாடு செய்யப்படும் நிகழ்வுகளை முகாமைத்துவம் செய்வதற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்

2023 டிசம்பர் 01ஆம் திகதி முதல் 2024 டிசம்பர் 31ஆம் திகதி வரையான காலத்திற்கு தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சினால் ஏற்பாடு செய்யப்படும் பல்வேறு வகையான நிகழ்வுகளான கருத்தியல், உருவாக்குதல், செயல்படுத்துதல் மற்றும் நிர்வகிப்பதற்கான சேவைகளை வழங்குவதற்காக தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சில் பதிவு செய்ய விரும்பும் அங்கீகரிக்கப்பட்ட நிகழ்வு முகாமைத்துவ நிறுவனங்களிடமிருந்து இத்தால் விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் அமைச்சு மற்றும் அமைச்சின் கீழ் வரும் நிறுவனங்களின் அனைத்து சேவைகளையும் வழங்கும் "GLOCAL Fair" மொபைல் சேவை மற்றும் மேற்கூறிய காலத்தில் அமைச்சு மற்றும் நிறுவனங்களால் திட்டமிடப்படும் பல்வேறு நிகழ்வுகள் என்பவை இதில் அடங்கும்.

விண்ணப்பப் படிவங்கள் மற்றும் ஏற்புடைய நிபந்தனைகளை 2023-11-05ஆம் திகதி முதல் 2023-11-13ஆம் திகதி வரையான வார நாட்களில் மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் கொழும்பு-05, ''மெஹெவர பியஸ'', 6ஆம் மாடி, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சின் நிர்வாகப் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். மேலதிக விபரங்களுக்கு 011 2368136 எனும் தொலைபேசி இலக்கத்தில் (பெறுகை) உதவிச் செயலாளரைத் தொடர்புகொள்ளவும்.

சகல விண்ணப்பங்களையும் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் '' தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சினால் ஏற்பாடு செய்யப்படும் நிகழ்வுகளை நிர்வகிப்பதற்கான வழங்குநர்களைப் பதிவுசெய்தல்'' எனத் தெளிவாகக் குறிப்பிட்டு 2023 நவம்பர் 14ஆம் திகதி அல்லது அதற்கு முன் மேலதிகச் செயலாளர் (நிர்வாகம்) அவர்களுக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும். 2023 நவம்பர் 14ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது. தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சினால் வழங்கப்படும் விண்ணப்பங்களை மட்டும் பயன்படுத்துமாறு விண்ணப்பதாரர்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

**செயலாளர்,**
**தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சு,**
**7ஆம் மாடி,**
**''மெஹெவர பியஸ'',**
**நாராஹென்பிட்டி,**
**கொழும்பு-05.**

---

POSTGRADUATE INSTITUTE OF ARCHAEOLOGY
University of Kelaniya

## தொல்பொருளியல் பட்டப் பின்படிப்பு நிறுவனம்

### (களனிப் பல்கலைக்கழகம்)

### தொல்பொருளியல்/ அருங்காட்சியகவியல்/ மரபுரிமை/ கலை வரலாறு விண்ணப்பங்கள் கோரல் 2023/ 2024 கல்வி ஆண்டு

**தொல்பொருளியல்/மரபுரிமை/ கலை வரலாறு/ நினைவுச்சின்னங்களின் பாதுகாப்பு மற்றும் மரபுரிமை முகாமைத்துவத்தில் பட்டப் பின்படிப்பு டிப்ளோமா (01 – வருடம்)**

1. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றினால் வழங்கப்பட்ட இளமாணிப் பட்டம் **அல்லது**
2. தொழில்முறை அல்லது வேறு அதுபோன்ற தகைமை (நிபந்தனைகளுக்கு உட்பட்டது) **அல்லது**
3. பாடத்துடன் தொடர்புபட்ட குறிப்பிடத்தக்க அடைவுகளுடன் குறைந்தது 10 ஆண்டுகள் நிலையான செயற்பாட்டு அடிப்படையிலான அனுபவம் (நிபந்தனைகளுக்கு உட்பட்டது).

**தொல்பொருளியல் விஞ்ஞான முதுமாணி பட்டம் (02 வருட கற்கை பணி மற்றும் ஆய்வு நிகழ்ச்சி)**

1. வகுப்பு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டதான தொல்பொருளியல் விசேட இளமாணிப் பட்டம் அல்லது
2. திறமைச் சித்தியுடன் தொல்பொருளியல் பட்டப் பின்படிப்பு டிப்ளோமாவை வெற்றிகரமான பூர்த்தி செய்ததுடன் எந்த ஒரு துறையிலும் இளமாணிப் பட்டம் அல்லது
3. PGIAR மூலம் வழங்கப்படும் தொடர்புடைய பட்டப் பின்படிப்பு டிப்ளோமாவில் திறமைச் சித்தி அல்லது
4. PGIAR மூலம் வழங்கப்படும் தொல்பொருளியல் பட்டப் பின்படிப்பு டிப்ளோமாவில் சாதாரண சித்தி மற்றும் தொல்பொருளியல் அல்லது மரபுரிமை முகாமைத்துவம் அல்லது அருங்காட்சியகம் அல்லது கலாசார சொத்துக்களை பாதுகாத்தலில் (சுவரோவியங்கள் அல்லது கலைப்பொருட்கள்) 03 ஆண்டுகள் தொழில்முறை துறை அனுபவம்.

**தொல்பொருளியல்/ அருங்காட்சியகவியல்/ மரபுரிமை/ கலை வரலாற்றில் (கற்கை பணிகளுடன் ஆராய்ச்சி மூலம்) முதுமாணிப் பட்டம் (02 வருட ஆராய்ச்சி நிகழ்ச்சி)**

1. இயைபுடைய பாடம் ஒன்றில் இளமாணிப் பட்டம் (நிபந்தனைகளுக்கு உட்பட்டது) **அல்லது**
2. PGIAR மூலம் வழங்கப்படும் தொடர்புடைய பட்டப் பின்படிப்பு டிப்ளோமா கற்கையில் சித்தி **அல்லது**
3. தொழில்முறை அல்லது வேறு அதுபோன்ற தகைமை (நிபந்தனைகளுக்கு உட்பட்டது) **அல்லது**

**தொல்பொருளியல்/ அருங்காட்சியகவியல்/ மரபுரிமை/ கலை வரலாற்றில் தத்துவமுதுமாணி (MPhil) பட்டம் (02 வருடங்கள் ஆராய்ச்சி நிகழ்ச்சி)**

1. வகுப்பு இரண்டு மேல் அல்லது அதற்கு மேற்பட்டதாக தொடர்புடைய பாடம் ஒன்றில் விசேட இளமாணிப் பட்டம் (நிபந்தனைகளுக்கு உட்பட்டது) **அல்லது**
2. தொடர்புடைய பாடம் ஒன்றில் இரண்டு ஆண்டு முதுமாணி பட்டம் (ஆராய்ச்சி அல்லது சிந்தனை அல்லது கற்கை பணி மற்றும் ஆராய்ச்சி) (நிபந்தனைகளுக்கு உட்பட்டது) **அல்லது**
3. தொடர்புடைய பாடம் ஒன்றில் இரண்டு ஆண்டு முதுமாணி விஞ்ஞான பட்டம் (கற்கை பணி மற்றும் ஆராய்ச்சி) (நிபந்தனைகளுக்கு உட்பட்டது).

**தொல்பொருளியல்/ அருங்காட்சியகவியல்/ மரபுரிமை/ கலை வரலாற்றில் கலாநிதி (PhD) பட்டம் (03 வருடங்கள் ஆராய்ச்சி நிகழ்ச்சி)**

1. தொடர்புடைய பாடம் ஒன்றில் இரண்டு வருடங்கள் தத்துவமுதுமாணி (ஆராய்ச்சி) பட்டம் (நிபந்தனைகளுக்கு உட்பட்டது) **அல்லது**
2. தொடர்புடைய பாடம் ஒன்றில் இரண்டு வருடங்கள் கலை முதுமாணி (சிந்தனை அல்லது ஆராய்ச்சி அல்லது கற்கை பணி மற்றும் ஆராய்ச்சி) பட்டம் (நிபந்தனைகளுக்கு உட்பட்டது) **அல்லது**
3. தொடர்புடைய துறை ஒன்றில் இரண்டு வருடங்கள் விஞ்ஞான முதுமாணி (கற்கை பணி மற்றும் ஆராய்ச்சி) பட்டம் (நிபந்தனைகளுக்கு உட்பட்டது).

**மொழி ஊடகம்**: சிங்களம் மற்றும் ஆங்கிலம்.
2023.11.15ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்கப்படும்.
விண்ணப்பங்கள் மற்றும் மேலதிக விபரங்களுக்கு www.pgiar.kln.ac.lk என்ற முகவரிக்கு பிரவேசிக்கவும்.

**விசாரணைகள்**: உதவிப் பதிவாளர் (கல்வி), PGIAR/ தொ.: 011-2667885, 011-2694151 நீடிப்பு 205
**மின்னஞ்சல்:** arpgiar@kln.ac.lk

**பணிப்பாளர்**
**தொல்பொருளியல் பட்டப் பின்படிப்பு நிறுவகம்.**

---

## ஹல்தும்முல்லை பிரதேச சபை

### 2024 ஆம் வருடத்திற்கான வரவு – செலவு அறிக்கை வரைவினை பொதுமக்களின் பரிசீலனைக்கான சந்தர்ப்பம் வழங்கல்

1989 இல. 12 எனும் மாகாண சபை (வாய்வாந்தன்மை ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவும் 1987 இல 15 எனும் பிரதேச சபை சட்டத்தின் 223 ஆம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 1987 இல 15 எனும் பிரதேச சபை சட்டத்தின் 184 ஆம் பிரிவில் கிடைக்கப் பெற்றுள்ள அதிகாரங்களின்படி ஊவா மாகாண ஆளுநரால் 2020.10.29ஆம் நாள் வர்த்தமானியின் இல. 2199/25 இன் மூலம் பிரசித்தப்படுத்தப்பட்ட 2020 பிரதேச சபை வரவு - செலவு அறிக்கை தயாரித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல் விதி இல. 10(2) (ஆ) இன்படி 2024ஆம் ஆண்டிற்காக ஹல்தும்முல்லை பிரதேச சபையினால் சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு - செலவு அறிக்கையின் வரைவு 2023.11.06ஆம் நாள் முதல் 07 வேலை நாட்கள் வரை பொதுமக்கள் அலுவலக நேரத்தில் பரீசீலிப்பதற்கு ஹல்தும்முல்லை பிரதேச சபையினால் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**செயலாளர்**
**ஹல்தும்முல்லை பிரதேச சபை.**

---

தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு

## இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

## பெறுகை அறிவித்தல்

### கிளை அலுவலகங்களிலுள்ள புலம்பெயர்வதற்கு முன்னான பயிற்சி கற்கைநெறியில் கலந்துகொள்ளும் பயிற்சியாளர்கள் மற்றும் போதனாசிரியர்களுக்கு சமைத்த உணவு வழங்குதல் - 2024

1. இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் பின்வரும் முகவரியில் அமைந்துள்ள இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் இடப்பரப்பிலுள்ள புலம்பெயர்வதற்கு முன்னான பயிற்சி கற்கை நெறியில் கலந்துகொள்ளும் பயிற்சியாளர்கள் மற்றும் போதனாசிரியர்களுக்கு ஒரு வருட காலத்திற்கு உணவு வழங்குவதற்காக வியாபார பெயர்ப் பதிவு (BRC) சகிதமான நிறுவனங்கள் / நபர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
2. விலைமனுக்களுடன் விலைமனுதாரரின் வியாபாரப் பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன், அது வழங்கப்பட்ட திகதியானது இந்தக் கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் நாளுக்கு முன் 01 வருடத்திற்கு முற்பட்ட திகதியொன்றில் வழங்கப்பட்டதாகவிருத்தல் வேண்டும்.
3. குறித்த துறையில் குறைந்தபட்சம் 03 வருட காலம் அனுபவம் உள்ளதென்பதை ஆவணங்கள் மூலம் உறுதி செய்தல் வேண்டும். ''சிறந்த உற்பத்திக்கான பயிற்சி (GMP)'' சான்றிதழைக் கொண்டிருத்தல் மேலதிகத் தகைமையாகும் என்பதுடன் உணவு வழங்கும் பிரதேசத்திற்குரிய பொது சுகாதார பரிசோதகரின் அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
4. விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும்போது இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் தலைவரின் பெயரில் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட 50,000.00 ரூபாவுக்கான (விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 90 நாட்களுக்குச் செல்லுபடியாகும் வகையில்) விலைக்கோரல் பிணை முறியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
5. எழுத்து மூல விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்து, மீளளிக்கப்படாத 5000.00 ரூபா தொகையை கேள்விக் கட்டணமாக பணியக தலைமை அலுவலகத்தின் நிதிப் பிரிவிற்கு அல்லது பின்வரும் புலம்பெயர் நிலையங்களுக்குச் செலுத்தியதன் பின் அந்தப் பற்றுச்சீட்டைசப் பணியக தலைமை அலுவலகத்தின் பெறுகைப் பிரிவிலிருந்து அல்லது பின்வரும் அலுவலகங்களிலிருந்து 2023-11-27ஆம் திகதி பி.ப. 03.00 மணி வரை விலைக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
6. விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் 2023-11-29ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு நிறைவுறும் என்பதுடன், இந்த வேலைகள் நிறைவடைந்தவுடன் விலைமனுக்கள் திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ள அனுமதி வழங்கப்படும்.
7. ஒவ்வொரு நிலையத்திற்காகவும் விலைமனுதாரரால் சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்களைத் தாங்கிவரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''பயிற்சி நிலையங்களிலுள்ள பயிற்சியாளர்களுக்கு உணவு பானங்களை வழங்குவதற்காக விலைமனுக்கள் கோருதல் (குறித்த பயிற்சி நிலையம்) எனக் குறிப்பிட்டு 2023-11-29ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு முன் பணியகத்தின் இரண்டாம் மாடியிலுள்ள பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் (01ஆம் இலக்க கேள்விப் பெட்டி) உள்ளிடல் வேண்டும்.
8. இந்த பெறுகை தொடர்பிலான இறுதித் தீர்மானத்தை இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

| தொ. இல. | பயிற்சி நிலையம் | முகவரி | தொலைபேசி இலக்கம் |
|---|---|---|---|
| 01 | மேல் மாகாண புலம்பெயர் வள நிலையம் - மத்துகம | பண்டாரநாயக்க மாவத்தை, மத்துகம தோட்டம், மத்துகம | 034-2247188 |
| 02 | வெஹெர பயிற்சி நிலையம் | இல. 208A, கொழும்பு வீதி, வெஹெர, குருநாகல் | 037-2054373 |
| 03 | மத்திய மாகாண புலம்பெயர் வள நிலையம் - கண்டி | இல. 18, ஹீரெஸ்ஸகல வீதி, முல்கம்பொல, கண்டி | 081-2227012 |
| 04 | தம்புள்ள பயிற்சி நிலையம் | இல. 03, நிஸ்ஸங்க மாவத்தை, தம்புள்ள | 066-2284074 |
| 05 | காலி பயிற்சி நிலையம் | இல. 289, மஹமோதர, காலி | 091-2227058 |
| 06 | கிழக்கு மாகாண புலம்பெயர் வள நிலையம் - அம்பாறை | இல. 651, உகன வீதி, அம்பாறை | 063-2222188 |
| 07 | பன்னிபிட்டிய பயிற்சி நிலையம் | இல. 241/1, பழைய வீதி, பன்னிபிட்டிய | 011-2846904 |
| 08 | வடமத்திய மாகாண புலம்பெயர் வள நிலையம் - அனுராதபுரம் | இல. 29, அபய பிளேஸ், அனுராதபுரம் | 025-2223464 |
| 09 | மட்டக்களப்பு பயிற்சி நிலையம் | இல. 12, பய்னியர் வீதி, மட்டக்களப்பு | 065-2050415 |
| 10 | சிலாபம் பயிற்சி நிலையம் | இல. 118, மயிக்குளம், கொழும்பு வீதி, சிலாபம். | 032-2224056 |
| 11 | யாழ்ப்பாண பயிற்சி நிலையம் | தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை செயலகக் கட்டிடம், வனப் பாதுகாப்பு அலுவலக வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம் | 021-2220189 |
| 12 | பொலன்னறுவை பயிற்சி நிலையம் | இல. 63, புதிய நகரம், பொலன்னறுவை | 027-2227499 |
| 16 | திருகோணமலை பயிற்சி நிலையம் | இல. 6978/B, NC வீதி, முருகதுரி, திருகோணமலை | 026-2222107 |
| 17 | வட மாகாண புலம்பெயர் வள நிலையம் - வவுனியா | இல. 25, கித்துள வீதி, குடியிருப்பு, வவுனியா | 024-2225909 |

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு,**
**இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம், இலக்கம் 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, கொஸ்வத்த, பத்தரமுல்ல.**
**தொலைபேசி இல. 011-2880550 (நீடிப்பு - 322)**
**மின்னஞ்சல்.** mgr_procurement@slbfe.lk
**இணையதளம்:** www.slbfe.lk

SLSI SYSTEM CERTIFIED ISO 9001

''அக்கரையில் மாண்புற இக்கரையில் கைகோர்ப்போம்''




## மேஷம்

**(அஷ்விணி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்)**

கேது 6இல் இருப்பதும், சுக்கிரன் 5 இல் இருப்பதும் மிகவும் நல்ல நிலை. சனி பகவானும் ஓரளவு நன்மை தரும் நிலையில் தான் இருக்கிறார். எனவே வருமானத்தில் குறைவு இருக்காது. உறவுகள் கை கொடுக்கும். இராசிநாதன் செவ்வாய் 7இல் இருப்பதும், அவர் தன் இராசியைப் பார்ப்பதும், அவரை குரு பார்ப்பதும் யோகமான அமைப்பு. தொழில் வளம் சிறப்பாக இருக்கும். கொடுக்கல் வாங்கல்கள் சீராக இருக்கும். புதிய தொழில் தொடங்கும் திட்டங்கள் நிறைவேறும். புதிய வருமானங்களும் கிடைக்கும் வழி உருவாகும். உத்தியோகத்தில் பதவி உயர்வு, மேலதிகாரிகளின் ஆதரவு சிறப்பாகவே இருக்கும்.

## ரிஷபம்

**(கார்த்திகை 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், ரோஹிணி, மிருகசீரிடம் 1ஆம் 2ஆம் பாதம் )**

இலாப ஸ்தானத்தில் ராகு இருக்கின்றார். உங்கள் திட்டங்களை அவர் நிறைவேற்றி வைப்பார். சுக்கிரனும் நல்ல அமைப்பில் இருக்கிறார். பலருக்கு சொந்த வீடு அமையும். ஆரோக்கியம் நல்லபடியாக இருக்கும். பொருளாதார நிலை திருப்தி தரும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும் வாழ்க்கைத் துணை வழியே எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். வேலை அல்லது தொழில் வெற்றிகரமாகும். கணவன், மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். அரசாங்க காரியங்கள் சாதகமாக முடியும். கலைத்துறையில் உள்ளவர்களுக்கு புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.

## மிதுனம்

**(மிருகசீரிடம் 3ஆம் 4ஆம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1ஆம் 2ஆம் 3ஆம் பாதம்)**

சுக்கிரன் 3இல் சஞ்சரிப்பதும், குரு பகவான் பார்ப்பதும், குரு இலாப ஸ்தானத்தில் இருந்து உங்கள் பஞ்சம ஸ்தானத்தை பார்ப்பதும் நல்ல அமைப்புகள். வருமானம் நல்லபடியே இருக்கும். நண்பர்கள் உதவுவார்கள். ஆடை, ஆபரணப் பொருட்கள் சேரும். சுப காரிய முயற்சி வெற்றி பெறும். புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும். வெளிநாட்டு முயற்சிகளும் வெற்றி பெறும்.

பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு நல்ல பொறுப்புகள் கிடைக்கும். எந்த பிரச்சினைகளையும் தைரியத்துடனும் சாதுரியமாகவும் சமாளிப்பீர்கள். உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தரும். வீடு கட்டும் பணிகள் விரைவாக முடியும். அஷ்டமத்தில் இருந்து சனி செவ்வாயைப் பார்க்கிறார். அஷ்டம ஸ்தானம் வலுப்பெறுகிறது.

## கடகம்

**( புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)**

சுக்கிரன் வலுப்பெற்று இருக்கிறார். குருவும் அனுகூலமாகவே இருக்கிறார். இராசிக்கு 10ஆம் இடத்தில் அவர் அமர்ந்திருந்தாலும் கூட, சுகஸ்தானத்தைப் பார்ப்பதால் நன்மையே அளிப்பார். ஆரோக்கியம் சீராக இருக்கும். கொடுக்கல் வாங்கல்கள் நல்லபடியாக இருக்கும். திருமணம் முதலிய சுப காரிய முயற்சிகள் செய்வதற்கு சாதகமாக இருக்கின்றது.

சூரியன் துலா இராசியில் நீசம் அடைகிறார். ஆயினும் பரிவர்த்தனை யோகமும் உண்டு. குரு சுக்கிரனை பார்ப்பதும் சுகஸ்தானத்தைப் பார்ப்பதும் நல்ல அமைப்புகள். வெளிநாடு செல்ல விரும்புபவர்களுக்கு நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். செவ்வாய் 4ஆம் வீட்டில் இருப்பதாலும் வீடு வாங்கும் யோகம் நிச்சயம் உண்டு.

## சிம்மம்

**(மகம், பூரம், உத்தரம் 1ஆம் பாதம்)**

எல்லா கிரகங்களும் சாதகமாக இருப்பதால் இவ் வாரம் அதிர்ஷ்டமான வாரம் என்று சொல்லலாம். இராசிநாதன் சூரியன் நீசம் என்று கருத முடியாது. அவர் குருவால் பார்க்கப்படுவதால் யோகம் பெறுகின்றார். அது மட்டுமல்ல சுக்கிரனோடு பரிவர்த்தனை யோகமும் அவருக்கு இருக்கின்றது. நல்ல மனிதர்கள் உங்களுக்கு ஆலோசனை கூறுவார்கள்.

அரசாங்க காரியங்கள் அனுகூலமாக இருக்கும். பொருளாதாரத்தில் சிற்சில தடைகள் இருந்தாலும், பெரிய அளவு பாதிப்பு இருக்காது. குழந்தைகளின் கல்வி முன்னேற்றம் மகிழ்ச்சியைத் தரும். வேலை கிடைக்கும் வாய்ப்பு உண்டு.

வழக்குகள் சாதகமாக இருக்கும். பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு நம்பிக்கைகள் அதிகரிக்கும். ஐ.டி தொழில், பத்திரிகைத் தொழில், ஆடிட்டர் தொழில் செய்பவர்கள் நல்வாய்ப்பு பெறுவார்கள்.

## கன்னி

**(உத்தரம் 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், அத்தம், சித்திரை 1ஆம் 2ஆம் பாதம்)**

புதன் 2ஆம் இடத்தில் இருப்பதாலும், அவரை குரு பார்ப்பதாலும் பொருளாதார சிரமங்கள் இருக்காது. 12ஆம் இடத்தில் சுக்கிரன் இருப்பதால் மனதில் சந்தோஷம்உருவாகும். புதியஉத்தி யோகத்திற்கானவாய்ப்புகள் உண்டு. சனி பகவான் உங்களுடைய சுப காரியங்களை புனிதம் ஆக்குவார். சுக்கிரன் 12இல் இருப்பது நல்லது. அவரை குரு பார்ப்பதால் உங்கள் சந்தோசம் அதிகரிக்கவே செய்யும். தொழில், வணிகம் நன்றாக நடக்கும். பூமி யோகம் உண்டு.

சிலருக்கு இடமாற்றங்களும், வீடு மாற்றங்களும் உண்டு. வேலைச்சுமை அதிகரிக்கும். இராசியில் கேது பகவானும், 7ஆம் இடத்தில் ராகு பகவான் இருப்பதாலும், அஷ்டமத்தில் குரு சஞ்சரிப்பதாலும் கணவன் மனைவி பிரச்சினைகள் தலைதூக்கும்.

## துலாம்

**(சித்திரை 3ஆம் 4ஆம் பாதம், சுவாதி, விசாகம் 1ஆம் 2ஆம் 3ஆம் பாதம்)**

சுக்கிரன் 11இல் இருப்பதும், அவரை குரு பார்ப்பதும் சிறந்த பலன்களைத் தரும். கனவுத் திட்டங்களை நனவாக்கும் உங்களுடைய தயக்கங்கள் ஒரு முடிவுக்கு வந்து வெற்றியை நோக்கி திரும்பும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். குடும்ப முன்னேற்றம் திருப்தியாக இருக்கும்.

சுப காரியங்களும் நடைபெறுவதற்கு வாய்ப்பு அதிகம். லாபாதிபதி சூரியன் இராசியில் நீசம் அடைந்தாலும் கூட, சுக்கிரனோடு பரிவர்த்தனை யோகத்தில் இருப்பதால், பெரும் பலக் குறைவு ஏற்படாது. குரு அவரைப் பார்ப்பதும் நல்ல அமைப்பு. பண வரவு தாராளமாக இருக்கும். வியாபாரத்தை விரிவுபடுத்த நினைப்பவர்கள் அதற்கான முயற்சிகளைத் தொடங்கலாம். அரசாங்க ஆதரவும் உண்டு.

## விருச்சிகம்

**(விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை)**

இராசிநாதன் புதன் 12ஆம் இடத்தில் இருந்தாலும், குருவின் பார்வையைப் பெறுகிறார். ஏழுக்குரிய சுக்கிரன் பத்தாம் இடத்தில் இருந்து குருவின் பார்வையைப் பெறுகின்றார். கணவன் மனைவி உறவுகள் நல்லபடியாக இருக்கும். அதனால் பொருளாதார உயர்வும் உண்டு. நண்பர்களுடைய ஒத்துழைப்பும் கிடைக்கும். கூட்டுத் தொழில் வெற்றிகரமாக நடக்கும். வருமானம் திருப்தியாக இருக்கும்.

ஒப்பந்தங்கள் உங்களுக்கு சாதகமாக அமையும். இடம், வீடு வாங்கும் யோகமும் உண்டு. கலைஞர்களுக்கு சுக்கிரனுடைய பலத்தால் ஆதாயம் உண்டு. சனி பகவான் வக்கிரகதி நீங்கியதால் தோஷத்தைக் கொடுப்பார். எந்த வேலையிலும் தாமதத்தையும் தவிர்க்க முடியாத தடைகளையும் ஏற்படுத்துவார் என்பதால் முன்னெச்சரிக்கையுடன் இருக்கவும்.

## தனுசு

**(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)**

செவ்வாய், சனி என கிட்டத்தட்ட முக்கியமான கிரகங்கள் எல்லாமே உங்களுக்கு சாதகமாக இருக்கின்றன. நிதிப் பற்றாக்குறை வருவதற்கு வாய்ப்பில்லை. பழைய கடன்களும் அடைக்கப்பட்டுவிடும். கணவன் மனைவி உறவும், அன்பும் அதிகப்படும். சனி பகவான் உங்களுக்கு நன்மையை தரும் நிலைக்கு மாறுகிறார். மேலதிகாரிகள் உங்களுக்குச் சாதகமாக நடந்து கொள்வார்கள். மனதில் இருந்த கவலைகள் நீங்கும். எதிர்பார்த்த சலுகைகளும், தொழில் வியாபார முன்னேற்றங்களும் ஏற்படும். சூரியன் இலாப வீட்டில் நிற்பதால் அரசால் சகாயம் உண்டு. புது வீடு கட்டத் தொடங்குவீர்கள். உங்களின் திறமைகள் வெளிப்படும்.

## மகரம்

**(உத்தராடம் 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1ஆம் 2ஆம் பாதம்)**

ஜென்ம இராசியில் இருக்கும் சனி பகவான் வக்கிர கதி நீங்குகின்றார். இது நல்ல மாறுதலை ஏற்படுத்தும். அதைவிட மிக முக்கியமாக 03ஆம் இடமான வெற்றி ஸ்தானத்தில் ராகு அமர்ந்திருக்கிறார். சுக்கிரனும் நல்ல நிலையில் இருக்கின்றார். எதிர்பாராத நிதி உதவி கிடைக்கும். ஆரோக்கியத்தில் முன்னேற்றம் ஏற்படும். அலுவலகத்தில் ஊழியர்களின் ஒத்துழைப்பும் கிடைக்கும். உற்சாகமாக பணியாற்றுவீர்கள். ஊதிய உயர்வுக்கும் வாய்ப்பு உண்டு. சூரியன் 10ஆம் இடம். அங்கே செவ்வாய் இருக்க, குரு பார்க்கின்றார். தொழில், வணிகம் நல்ல படியாக நடக்கும். தாமதங்களும் தடைகளும் நீங்கும். கலைத்துறையினருக்குப் பாராட்டும், வாய்ப்புகளும் கிடைக்கும்.

## கும்பம்

**( அவிட்டம் 3ஆம் 4ஆம் பாதம், சதயம் , பூரட்டாதி 1 ஆம் 2 ஆம் 3ஆம் பாதம்)**

பொருளாதாரப் பிரச்சினைகளைப் பற்றி கவலைப் பட வேண்டாம். 2ஆம் இடத்தில் ராகு இருப்பதால் தொழில் வளர்ச்சியில் நல்ல முன்னேற்றம் இருக்கும். சொத்துப் பிரச்சினைகள் முடிவுக்கு வரும். புதிய தொழில் ஒப்பந்தங்களும் கிடைக்கும். ஆரோக்கியமும் அபிவிருத்தி அடையும். குடும்பத்தாருக்காக நிறைய செலவுகளை செய்ய வேண்டி இருக்கும். முக்கியமான பொருள்களை வாங்கும் வாய்ப்பு உண்டு. சுகாதிபதி சுக்கிரன் 7ஆம் இடத்தில் அமர்ந்து, தன குடும்ப அதிபதியான குருவின் பார்வை பெற்று இராசியைப் பார்க்கின்றார். பாக்யாதிபதி வலுப்பெற்று இருக்கிறார். நினைத்த காரியங்கள் நிறைவேறும். கணவன் மனைவி உறவுகள் அன்பு கொண்டதாக இருக்கும். இராசிநாதனான சனியின் நிலைப்பாடு சம்பாதிக்கும் பணம் பல விஷயங்களில் செலவாவதைக் குறிக்கிறது.

## மீனம்

**(புரட்டாதி 4ஆம் பாதம், புரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி)**

இராசிநாதனான குருபகவான் இரண்டாம் இடத்தில் இருப்பதாலும் அவர் உங்கள் தொழில் ஸ்தானத்தைப் பார்ப்பதாலும், பணப்பிரச்சினைக்கு வாய்ப்பு இல்லை. குடும்ப சூழலும் ஓரளவுக்கு உங்களுக்கு சாதகமாகவே இருக்கும். பூமி வாங்கும் யோகம் உண்டு. உறவினர்களுடன் கருத்து வேறுபாடுகள் நீங்கி அவர்கள் உதவியும் கிடைக்கும். வெளிநாட்டில் பணிபுரிபவர்களுக்கு சாதகமான சில விஷயங்கள் நடக்கும். பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு மக்கள் செல்வாக்கு அதிகரிக்கும். இராசியில் ராகு, 7இல் கேது என கிட்டத்தட்ட கால சர்ப்பத்தின் ஆதிக்கத்தில் அமைந்திருப்பதால் ஏற்ற இறக்கங்கள் மாறி மாறி ஏற்பட்டுக் கொண்டே இருக்கும். தொழில் மாற்றங்களும் இடமாற்றங்களும் உண்டாகும். மனம் ஒரு நிலையில் நில்லாது. புனித பயணங்கள் அதிகரிக்கும்.

# திருமணத் தடையா? இல்லறத்தில் சிக்கலா?

# காரணம் கால சர்ப்ப தோஷம்!

"உங்க பையனுக்கு கால சர்ப்ப தோஷம் இருக்கு. ஆதலால் அதற்குப் பொருத்தமாக அதே தோஷம் இருக்கிற பெண்ணொருத்தியைத் தேடிப் பிடித்து கல்யாணம் பண்ணி வையுங்கள்!" என்று சோதிடர் சொன்னால் கேட்பவர் திகைப்பர். செவ்வாய்தோஷம், சனிதோஷம் என்றுதான் கேள்விப்பட்டிருக்கிறோம். கால சர்ப்ப யோகம் என்றும் அறிந்திருக்கிறோம். அப்புறமென்ன "காலசர்ப்ப தோஷம், புதுசா?" என்று அதன் பிறகுதான் அந்தத் தோஷம் பற்றி அறிய முனைவர்.

கால சர்ப்ப தோஷம் என்பது வேறு. கால சர்ப்ப யோகம் என்பது வேறு. இரண்டையும் ஒன்றாக்கி குழம்பக் கூடாது. எப்போதும் சாதகங்களில் ராகு நிற்கும் ராசிக்கு ஏழாவது ராசியில் தான் கேது சஞ்சரிக்கும். அதுவும் ஒன்றுக் கொன்று எதிர்த்திசையில்! இந்த இரண்டுக்குமிடையேயுள்ள ராசிகளில் இதர கிரகங்கள் அடைபடுவதைத்தான் கால சர்ப்ப யோகமென்று சோதிடம் கூறுகிறது.

ஒரு மனிதனின் Subconscious Mind எனப்படும் நனவிலி மனம் அல்லது அந்தராத்மாதான் ராகு. அதனாலேயே சோதிடத்தில் கனவுகளைப் பற்றிச் சொல்பவராக ராகு சித்திரிக்கப்படுகிறார். Sixth Sense. எனப்படும் ஆறாம் அறிவுதான் கேதுவாகும். இன்னும் விபரிக்கப்போனால் நம்மால் அவ்வளவு எளிதில் உணர முடியாத அல்லது நம்ப முடியாத விடயங்களை உணர்த்துபவர் தான் கேது. உடலுக்கும் மனதுக்கும் அப்பாற்பட்ட நுண்ணிய அறிவைக் கேது அளிப்பார். எல்லோருக்கும் சிந்தனையுண்டு. அந்தச் சிந்தனைகளுக்குத் தூண்டுகோலாகவும் துலக்குகிறவர்களாகவும் விளங்குபவர்கள் ராகுவும் கேதுவும்தான். நவக்கிரகங்கள் ஒவ்வொன்றும் தத்தமக்கென்றுள்ள நீள் வட்டப் பாதையில் சுற்றுகின்றன. ஆனால் இந்த ராகுவுக்கும் கேதுவுக்கும் தனிப்பட்ட பாதைகள் எதுவுமில்லை. ஒரு சாதகத்திலுள்ள பன்னிரு ராசிக்கட்டங்களில் அது அதுக்கென்று தனிப்பட்ட வீடுகளுமில்லை.

இது எதனால்? ராகுவும் கேதுவும் உண்மையிலேயே கிரகங்கள் அல்ல. அவையிரண்டும் தனித் தனியான நீண்ட நிழல்கள். அந்த நிழல்களே கிரகங்களுக்குரிய சக்தியைப் பெற்றிருக்கின்றன. அதனாலேயே அவைகளை சாயாக்கிரகங்கள் என அழைத்தார்கள். அதாவது நிஜமான கிரகங்களைப் போன்ற சாயல்கள் கிரக மாதிரிகள்! அந்த நிழல் போன்ற வடிவம் எப்படி உருவானது?

கிரகங்களின் சுழற்சியின் போதும் அவற்றையொட்டி மின்காந்த அலைகள் போன்ற சக்திகள் உருவாகும் அந்தச் சக்திகளுக்குத்தான் ராகு என்றும் கேது என்றும் பெயர். தன் பாதையில் சுற்றும் கிரகங்களுக்கு இணையான மிகப்பெரிய படலமாக அவை காணப்படும். காற்றில் தரைக் காற்று, மேல்க்காற்று என்று இருப்பதுபோல, அந்தப் படலத்தின் மேலேயுள்ள தொகுதியையே கேது என்றும், கீழ்ப்படலத்தையே ராகு என்றும் அழைக்கிறோம்.

பஸ் ஒன்று நம்மை வேகமாகக் கடந்து சென்றுவிட்ட பிறகும் அவ்விடத்தில் கிளம்பிச் சுழலும் புழுதிப் புயல்தான் ராகுவும் கேதுவும்! அந்தச் அசைவுகள் பாம்பு போன்று வளைந்தும் நெளிந்தும் காணப்படுகின்றன. ஏனென்றால் அந்தச் சக்திகளுக்கு எந்தப் பாதையுமில்லை. நீங்கள் வெயிலில் நின்றால் உங்கள் நிழல் கீழே விழத்தான் செய்யும். ஆனால் அது நீங்கள் அல்ல. அப்படித்தான் ராகுவும் கேதுவும். கிரகணங்கள் கூட நிழலை மையமாக வைத்துத்தான் சொல்லப்படுகின்றன. அந்த நிழலான பாம்பு சந்திரனைக் கவ்வுகிறது என்று எளிமையாக பாமரர்களுக்குச் சொன்னார்கள்.

சனிபோல ராகு, செவ்வாய் போல கேது என்று சோதிடத்தில் சொல்லப்படுகிறது. சனியின் உட்கரு, உள்நிறம் கறுப்பு. வெளி நிறம் நீலம். அதனால் தான் நீலத்தையும் ராகுவோடு இணைத்து கருநாகம் என்றழைத்தார்கள். செவ்வாயின் நிறம் தணல் சிவப்பாக இருக்கும். கேதுவிடம் செவ்வாயின் சாயல் இருப்பதால் செந்நாகம் என்றார்கள். சில விடயங்களை சில நேரங்களில் சில மனிதர்களால் செய்து முடிக்க முடியாது. அப்போது தங்கள் சார்பாக தங்களது சாயலாக (பினாமியாக) வேறு சிலரை அனுப்பிக் காரியங்களை முடித்துக் கொள்வார்கள். அப்படித்தான் இங்கு சனியும் செவ்வாயும் செயல்படுகின்றன. ஏனென்றால் ராகுவும் கேதுவும் சனி மற்றும் செவ்வாயின் சில அம்சங்களுடன் வேலை செய்கின்றன. எனவேதான் சோதிட சாத்திரத்தில் கூட ராகுவின் ஆதிக்கமுடையவர்களாக நிழல் உலக, அதாவது பாதாள உலக தாதாக்களைக் குறிப்பிடுகின்றனர்.

ராகுவின் ஆதிக்கம் மிகுந்தவர்களிடம் முடியாது என்ற வார்த்தைக்கே இடமில்லை. சாதி, மதம், குலம், கோத்திரம் எல்லாவற்றையும் தாண்டி சாதிக்க விரும்புவார்கள். பெரிய குறிக்கோளுடன் திடமான தொலைநோக்கும் இருக்கும். இவர்கள் சொல்வதும் செய்வதும் நடைமுறைக்கே ஒவ்வாததாக நமக்குத் தோன்றும். "பகல் கனவு காண்கிறான் பார்" என்போம். ஆனால் எப்படியோ தாம் நினைத்ததைச் சாதித்தே தீருவார்கள். மெல்லிய உடல்வாகும் சற்று உயரமான தோற்றமும் கொண்டிருப்பார்கள். எதிலும் பொடி வைத்தே பேசுவார்கள். தற்புகழ்ச்சியோடு தமக்குப் பிடித்தமானவர்களை தூக்கி வைத்துப்பேசவும் செய்வார்கள்.

சாதகத்தில் கேது நன்றாக அமைந்திருந்தால் பேச்சில் ஞானம் வெளிப்படும் தத்துவ முத்துக்களை உதிர்ப்பார்கள். வாழ்வில் தொடரும் துன்ப துயரங்கள் அவரை ஒரு முதிர்ந்த வேதாந்தியாக மாற்றும். இரத்தினங்களில் கோமேதகக்கல்லில் ராகுவும் வைடூரியத்தில் கேதுவும் ஒளிர்கிறார்கள். தானியங்களில் ராகு உளுந்தாகவும் கேது கொள்ளாகவும் உள்ளனர். அதேபோல மந்தாரை மலரில் ராகுவும், செவ்வல்லியில் கேதுவும் வாசம் வீசுகின்றனர். பித்தளையை ராகுவும் வெண்கலத்தை கேதுவும் தத்தமது உலோகங்களாகக் கொண்டுள்ளனர். ஆட்டின் மீது ராகு சவாரி செய்கிறார். சிங்க வாகனத்தில் கேது சஞ்சரிக்கிறார். கருமையே தமது அருமையான நிறமென ராகு கூறுகிறார். எல்லா வர்ணங்களிலும் கேது தன்னை வெளிப்




படுத்தியபடி இருக்கிறார். ராகுவின் தேவதையாக பத்ரகாளி விளங்குகிறாள். கேதுவின் அதிபதியாக இந்திரன் இருக்கிறார். இருப்பினும் நமது பாவ புண்ணியங்களைக் குறித்துக்கொண்டு அதன்வழியே எம்மை மறுபிறவிக்கு தயார்படுத்தும் சித்திரகுப்தனை கேதுவுக்கு அதிதேவதையாக சோதிடம் கற்பிக்கிறது. ராகு தந்தைவழி தாத்தா பாட்டி உறவையும் கேது தாய்வழி தாத்தாபாட்டி உறவையும் நிர்ணயிக்கிறார்கள். வளைந்து நெளிந்த கொடிகள் போன்ற அமைப்பே ராகுவின் ஆசனம், தென்மேற்கு ராகுவிற்குரிய திசையாகும். அதற்கு எதிரான வடமேற்கை கேது தனது திசையாகக் கொண்டுள்ளார்.

ஒருவரது சாதகத்தில் ராகு நன்றாக இருந்தால் அவர் நயமாகப் பேசுவார். ஆளறிந்து இடம்பொருள் ஏவலறிந்து பேசிப்புழங்குவார். ராகு சரியான முறையில் அமைந்திராவிடில் அந்நபர் எவரையும் தூக்கியெறிந்து பேசத்தயங்கமாட்டார். ஒரு கூட்டத்தைக் குழப்ப இவர் ஒருவரே போதும். ஒரு நல்ல விடயம் வம்பாக, வசையாக, வதந்தியாக 'பரவுவதற்கு இவரே காரணமாயிருப்பார். எடுத்தேன், கவிழ்த்தேனென்று காரியத்தை முடிப்பார்.

உலகிலுள்ள அனைத்துச் சுகபோகங்களையும் அனுபவிக்கும் யோகத்தைத் தருபவர் ராகு. படிப்பில் அரைகுறையாய் இருக்கும் சிலர் தங்களது அனுபவ ஞானத்தால் மெத்தப் படித்தவர்களையும் தோற்கடிப்பர். இதற்குக் காரணம் அவரது சாதகத்தில் ராகு நல்ல இடத்திலமர்ந்து சுபர்பார்வையும் பெற்றுள்ளதே. அத்தகைய ராகுவானவர் சமய சந்தர்ப்பம் சூழ்நிலைகளை அவதானித்து பக்குவமாய்ப் பேசவைப்பார். நெருக்கடியான தருணத்தில் தோள்தட்டி உற்சாகப்படுத்துவார். அசாத்தியமான தன்னம்பிக்கையை அனாயாசமாக அருளுவார். வெற்றிபெற வேண்டுமென்று தீர்மானித்து விட்டால் தில்லுமுல்லு செய்தாவது வெற்றிபெறவைக்கத் தயங்கமாட்டார். அத்தகைய தருணங்களில் சட்டதிட்டங்கள் இவருக்கு ஒரு பொருட்டே அல்ல!

துறைமுகங்கள், தொழிற்சாலைகள், ஏற்றுமதி இறக்குமதி நிறுவனங்கள், சுரங்கங்கள், மதுபானத் தொழிற்சாலைகள், சூதாட்ட விடுதிகள் என்று இவர் ஆட்சி செய்யும் பிரதேசங்கள் எண்ணிலடங்காதவை, வீதியோரத்தில் போதையில் கிடத்தி வாழ்க்கையைத் தொலைக்கச் செய்பவரும் இவர்தான். அதே தெருவோரங்களில் "லாபாய் லாபாய்' என்று கூவி இரவு பகலென்று வியாபாரம் செய்யும் அங்காடிகள் எல்லாம் ராகுவின் ஆதிக்கத்திற்குட்பட்ட விடயங்கள் தான்.

எத்தனை சுகபோகங்களை அனுபவித்தாலும் அவற்றுக்கு மத்தியில் "காயமே இது பொய்யடா, வெறும் காற்றடைத்த பையடா" என்று நீர்க்குமிழி வாழ்க்கையை உணர்த்திக் கொண்டிருப்பவர்தான் கேது. பூர்வ ஜென்மம், நிகழ் ஜென்மம் என்று ஏழேழு ஜென்ம பாவங்களுக்கும் பரிகாரம் தேடித்தருபவரும் இவர்தான். தனது இராச்சியம் முதல் பெற்ற பிள்ளைவரை அனைத்தையும் இழந்தாலும் சுடலையில் நின்று உண்மை பேசிய அரிச்சந்திரனின் நாவில் இருந்ததும் கேதுதான். வேதங்களையும் மந்திரங்களையும் அறியவைத்து தினசரி வாழ்க்கையில் அவற்றைக் கடைப்பிடிக்க வைப்பவரும் இவர்தான். இறைதூதர்களையும் சித்த புருஷர்களையும் அடையாளம் காட்டுவதில் இவரின் பங்கு மகத்தானது. கடும் விரதமிருக்கும் பக்தர்களின் உள்ளங்களை பக்குவத்தோடு வைத்திருக்கவும் செய்கிறார். இரத்ததானம் முதல் கண்தானம், உறுப்பு தானமென்று செய்வோரின் உள்ளங்களில் உறைந்திருப்பவர் கேதுவெனில் அதுமிகையானதல்ல.

சரி, இப்படிப்பட்ட தன்மையுள்ள ராகுவும் கேதுவும் எப்படி ஒருவருக்கு தோஷத்தைத் தருகிறார்கள்? இன்னும் சற்று உள்ளார்ந்து யோசித்தால், "அத்தனைக்கும் ஆசைப்படு" என்பதுதான் ராகு. "ஆசையே படாதே" என்று அழுத்துவதுதான் கேது. இரண்டும் பாம்புகள் தான். ஆனால் தத்தமது இயல்புகளால் ஒன்றுக்கு எதிராகத்தான் இன்னொன்று நகரும். "ஒருவன் மனது ஒன்பதடா, அதில் ஒளிந்து கிடப்பது எண்பதடா" என்ற கண்ணதாசன் பாடலொன்று உண்டு. அந்த ஒளிந்து கிடக்கும் எண்பதும்தான் ராகுவாகவும் கேதுவாகவும் வெளிப்படுகின்றன.

அத்தனைக்கும் ஆசைப்படுவது மனதின் இயல்பு. அதில் சில சிக்கலான விபரீதமான ஆசைகள் தோன்றுவதும் கூட மனதின் இயல்புதான். ஆனால் யோசித்துப் பார்த்த, அல்லது கண்கூடாகக் கண்ட, விடயங்களை தவறான முறையில் அனுபவிக்கத் தொடங்கும் போது தான் உள்ளிருக்கும் ராகுவும் கேதுவும் தோஷமாக மாறுகின்றன. தவறான எண்ணங்களையும் தர்மமில்லாத தீங்கான காரியங்களையும் செயற்படுத்தினால் அத்தகையவரின் சாதகத்தில் அது மோசமான இடங்களில் அமர்ந்து தோஷமாக தன்னைக் காட்டிக்கொள்கிறது. அப்போது சர்ப்பங்கள் நஞ்சை உமிழத்தான் செய்யும். அதைத்தான் சர்ப்ப தோஷம் என்று சோதிடர்கள் குறிப்பிடுகின்றனர்.

**ராகு கற்பித்த பாடம்**

ராகுகேது சஞ்சாரம் பற்றிச்சொல்லும்போது தனது வடிவழகாலும் நடிப்புத்திறமையாலும் இறுதியில் அரசியல் சாணக்கியத்தாலும் புகழேணியின் உச்சத்துக்கு ஏறி, இறுதியில் மர்மமான முறையில் மாண்டுபோனதாக கற்பிதம் கொள்ளப்படும் தமிழகத்தின் முக்கிய புள்ளியொருவரைப் பற்றிச் சொல்லாவிட்டால் இக்கட்டுரை முழுமை பெற்றதாகாது...

அவர் தான் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா! அவரது வாழ்க்கைப் பயணத்தின் இறுதிக்கட்டத்தில் அவரை வழிநடத்தியது அவரது சாதகத்திலுள்ள ராகு திசையாகும். மிதுன இலக்கினத்தை முதன்மையாகக் கொண்டு பிறந்த ஜெயலலிதாவுக்கு கடைசிவரை கல்யாணம் நடக்கவில்லை. நடக்க குடும்பத்தானத்தில் வக்கிரமடைந்த சனி விடவில்லை. இருந்தாலும் இலக்கினத்திற்கு ஏழாமிடமான களத்திரஸ்தானத்தில் சுபக்கிரகமான வியாழன் ஆட்சிபெற்று வலுவாக அமர்ந்திருந்தபடியால் அவருக்கென்று ஒரு குடும்ப வாழ்க்கை இருந்ததும் அதற்கு அத்தாட்சியாக குழந்தையொன்று பிறந்து மறைவாக பிறிதோரிடத்தில் வளர்வதாகவும் சொல்லப்பட்டது. கடைசிகாலத்தில் அதுவும் வெளிப்பட்டது.

ஜெயலலிதா 2011இல் தமிழக சட்டசபைத் தேர்தலில் அமோக வெற்றியீட்டி தமிழக முதலமைச்சராக ஆட்சி பீடமேறினார். அதற்கு அவரது சாதகப்படி 'இலாபத்தானத்தில் (11ஆம் வீடு) சஞ்சரித்த யோககாரகனான ராகுவின் திசை அவரது சாதகப்படி நடந்ததே காரணமாகும். ஆட்சியில் அவரும், தலையாட்டிப் பொம்மைகளான அவரது அமைச்சர்களும். உடன்பிறவாச் சகோதரியான சசிகலாவும் அவரது உறவுகளும் செய்த அளவிறந்த ஊழல்மோசடிகள் காரணமாக இடைநடுவே அவரது ஆட்சிபறிக்கப்பட்டதும், அவருக்கு 100 கோடிரூபா அபராதமும் 4 ஆண்டுகள் சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டதும் தெரிந்ததே.

அதன்பின் மேன்முறையீடு செய்ததில் அதில் அவர் எப்படியோ விடுதலையாகி 11.05.2015 இல் மறுபடியும் ஆட்சிப்பொறுப்பை ஏற்றார். அதன்பின் படிப்படியாக தன்னைத் திருத்திக் கொண்டு ஆட்சி புரிந்து வருவதாக ஒரு நாடகத்தை அரங்கேற்றி வருகையில், ஒரு தினம் திடீர்ச் சுகவீனமுற்று அப்பல்லோ மருத்துவமனையில் உயிர்நீத்ததாக சசிகலா, இளவரசி கோஷ்டியினரை உள்ளிட்ட தமிழக அரசாங்கம் உலகுக்கு அறிவித்தது. இதன்பின்னாலுள்ள மர்மங்களை யாரறிவார்? அதுதான் அறம் பிழைத்தால் அதுவே கூற்றுவனாகும் என்பதற்கு ராகு பகவான் நமக்குத் தரும் பாடம்!

திருவோணம்



# படித்ததும் பகர்வதும் 165



சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்

## நல்லதை சொல்கிறோம்

### சிறந்த முன்மாதிரி!




அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளன பொன்விழா மாநாடு கடந்த ஞாயிறன்று (29.10.2023) கொழும்பில் வெகு விமர்சையாக நடைபெற்றது. ஏனைய இயக்கங்களின் வருடாந்த மாநாட்டை விட வித்தியாசமான ஒரு விடயத்தை இம்மாநாட்டின் போது அவதானிக்க முடிந்ததை இங்கே பதிவிடுவது பயனுள்ளதாக அமையுமெனக் கருதுகிறேன்.

பொதுவாக, இவ்வாறான பகிரங்க நிகழ்வுகளில், அதிதிகளாக அழைக்கப்பட்டவர்கள் மட்டுமே உரை நிகழ்த்துவதும், அவற்றை வருகை தந்திருப்போர் கேட்டுவிட்டு செல்வதுமே வழக்கம். ஆயினும் வாலிபர்களுக்கான இவ்வமைப்பின், இப்பொன்விழா மாநாட்டில் பல மாவட்டங்களைச் சேர்ந்த வாலிபர்கள் உரையாற்றவும், தமது கருத்துக்களை முன் வைக்கவும் வாய்ப்பளிக்கப்பட்டிருந்தமை விசேடமாகும். பெரும்பாலும் இந்த இளைஞர்கள் இவ்வாறான தேசிய நிகழ்வொன்றில் உரை நிகழ்த்திய முதல் சந்தர்ப்பமாகவும் இது அமைந்திருக்கும் எனலாம்.

இச் சம்மேளனத்தின் 'பத்தாயிரம் வாலிபர்களுக்கான தலைமைத்துவ பயிற்சி' வழங்கும் திட்டத்தின் கீழ், மாவட்ட மட்டத்தில் நடாத்தப்பட்ட தலைமைத்துவப் பயிற்சி முகாம்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட நான்கு மாவட்டங்களைச் சேர்ந்த இளைஞர்கள் தமது பிரதேசத்தின் முக்கிய பிரச்சினை ஒன்றையும், அதற்கான தீர்வுகளையும் சபையோர் முன்னிலையிலும் அதிதிகள் முன்பாகவும் முன்வைத்தனர்.

அனுராதபுர மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தி சகோதரர் என்.எம்.எம். அம்ஜாத், சகோதரி நுஸ்ஹா ஆகியோர் "யானைகள் – மனிதர்கள் முரண்பாடுகள் கிராமிய வாழ்வாதாரத்தில் ஏற்படுத்துகின்ற தாக்கங்களும் அதனால் அனுராதபுரத்தில் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளும்" என்ற தலைப்பிலும் களுத்துறை மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தி சகோதரர் ஹஸ்மத் ஹனிபா, சகோதரி ரிப்கான் பாஸிலா ஆகியோர் "களுத்துறை மாவட்டத்தில் பாடசாலை மாணவர்கள் இடைவிலகலில் ஆண் மாணவர்களின் தொகை அதிகமாக இருப்பது ஏன்" என்ற தலைப்பிலும் கருத்துக்களை முன்வைத்தனர்.

மன்னார் மாவட்டத்தின் சார்பில் சகோதரர் அல் ஹாதிர் "மன்னாரில் மணல் அகழ்வு பற்றியும்" புத்தளம் மாவட்டத்தின் சார்பில் டாக்டர் இல்ஹாம் மரிக்கார், சகோதரிகள் தாஹிரா தஸ்னீம், வை. எப். சாஜியா மூவரும் "புத்தளம் மாவட்டத்தில் வாலிபர்கள் போதை பொருட்களுக்கு அடிமையாதலும், அவற்றுக்கான பொருத்தமான தீர்வுகளும்" என்ற தலைப்பிலும் முக்கிய விடயங்களை முன்வைத்தனர்.

இவர்கள் அனைவரும் தத்தமது பகுதிகளில், ஒரு இனத்துக்கு, அல்லது ஒரு சமூகத்துக்கு மட்டுமே உரித்தான விடயங்களையன்றி, சகலருக்கும் பொதுவான பிரதான பிரச்சினைகளை தேர்வு செய்து, அவை பற்றி சிறப்பாக ஆய்வு செய்து, பொருத்தமான கணனிக் காட்சிப் படுத்தல்களுடன், ஆதாரபூர்வமான விடயங்களை சரியான விளக்கங்களுடன் தெளிவுபடுத்தியதோடு, பிரச்சினைக்கான தீர்வையும் முன்வைத்தமை விசேடமாக குறிப்பிடத்தக்கது. மாநாட்டில் உரையாற்றிய அதிதிகள் அனைவரும் இவர்களது முன் வைப்புகளை கோடிட்டுக் காட்டி, சிலாகித்து உரையாற்றியமை இவ்விளைஞர்களது முயற்சிக்கு கிடைத்த வெற்றியாகும்.

இளைஞர் தலைமைத்துவத்தை வலியுறுத்துகின்ற அனைவரும் தத்தமது நிகழ்வுகளில் இவ்வாறு இளைஞர்களுக்கு பொருத்தமான, முக்கியமான இடமளிப்பதற்கு அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளனத்துடைய இச் செயற்பாடு அழகிய முன்மாதிரியாக அமையும் என உறுதியாகக் கூறலாம்..

## நொறுக்குத் தீனி

**உரியவருக்கு உரிய இடம் எப்போதும் கொடுத்திடுங்கள்**
**உயர்வுகள்தாம் நிச்சயமாய் சேர்ந்து வரும் நம்பிடுங்கள்**
**உரிமைகள் வென்றெடுக்க இளைஞர்க்கு உதவிடுங்கள்**
**உலகத்தில் நன்மைகள் பெருக்கெடுக்கும் காண்பீர்கள்**

## நூலகத்துக்கு ஒரு நூல்

### "அறுவடைக் கனவுகள்"

200 ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கையின் பெருந்தோட்டத் துறையில் வேலை செய்வதற்காக, இந்தியாவிலிருந்து அழைத்து வரப்பட்ட தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வியலை அடிநாதமாகக் கொண்டு எழுதப்பட்டுள்ள நாவல் "அறுவடைக் கனவுகள்". இலங்கையின் பிரபல இலக்கிய ஆளுமை, அண்மையில் இறம்பொடையில் நடைபெற்ற இந்திய பல்கலைகழக பட்டமளிப்பு விழாவில் 'முனைவர்' பட்டமளித்து கௌரவிக்கப்பட்டார் இவர், தமிழ் மாமணி அல் அஸூமத் எழுதி 1984ல் "தினகரன்" நாளிதழில் தொடராக வெளிவந்த இந்த நாவல், மெருகூட்டப்பட்டு 2010ல் நூலாக பிரசுரமாகியுள்ளது.

இன்று பரவலாகப் 'பேசப்படுகின்ற 'மலையகம் 200' எனும் தோட்டத் தொழிலாளர்கள் இலங்கை வந்து 200 ஆண்டுகள் பூர்த்தியாவதைப் பற்றி அதிகம் பேசப்படுகின்ற இக்காலத்தில் இந்நாவலை மீள நினைவூட்டுவது பொருத்தமானது எனக் கருதுகிறேன்.

"இது கதை அல்ல ஒரு வரலாற்றுச் சம்பவம். மலைநாட்டுத் தேயிலைத் தோட்டங்களில் 20ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியின் முன்னும் பின்னும் நடந்த வரலாற்றின் ஒரு துளியாகும். இதைப்




படித்து முடித்தவுடன் 'நல்ல கதை' என்று சொல்வீர்களோ பரவாயில்லை என்று சொல்வீர்களோ அஃதல்ல இங்கே முக்கியம்.

இதை வரலாறு தான் என்று எண்ணி ஒரு பெருமூச்சு விட்டீர்களானால் அதுவே இந்நூலின் வெற்றியாகும். இதை விடவும் கொடுமையான வரலாற்றுச் சம்பவங்களும் சம்பவத் தொடர்களும் எமது மலைநாட்டில் நடந்திருக்கின்றன.

நடந்துகொண்டும் இருக்கலாம். அவை வெளிவருமாகில் இரண்டு நூற்றாண்டுகளின் ஓர் இலக்கியப் பாரம்பரியம் உலா வருவதோடு ஒரு வரலாறும் செம்மையாக நிறுவப்படும்.

மலைநாட்டு இலக்கியம் குருதியும் தசையும் எலும்பும் நிறைந்த உயிருள்ள ஓர் உடம்புதான் என்பதற்கு இதுதான் ஒரே சான்றாகும். மலைநாட்டு இலக்கியம் என்பதைவிட மலைநாட்டுத் துன்பியல் இலக்கியம் என்பதுதான் செம்மையாக அமையும் என்றும் கருதுகிறேன்" என்று இந்நூல் பற்றி நூலாசிரியர் அல் அஸூமத் குறிப்பிட்டுள்ளார்.

"ஒரு எழுத்தாளன் எதைப்பற்றி வேண்டுமானாலும் எழுதலாம். யாரைப்பற்றி வேண்டுமானாலும் எழுதலாம் ஆனால் தான் சொல்லப்போகின்ற விஷயம் பற்றியதான ஒரு பூரண அறிவு அவனுக்கு இருக்க வேண்டும்.

அஸூமத்தைப் பொறுத்த வரை இந்த நாவல் அவருடைய வாழ்க்கை. ஒரு சுயசரிதத்தின் முன் பகுதி அதை எழுத்தில் வடிப்பதற்கான சகல தகுதிகளும் அவருக்குண்டு.

அதிர்வு தரும் நிகழ்வுகள், திடீர்த் திருப்பங்கள், எதிர்பாரா முடிவுகள், வாசகனைக் கிள்ளிவிட்டு அழவைக்கும் உணர்வுக் கோலங்கள் என்று எதுவுமே இல்லாத ஒரு சாதாரண வாழ்க்கையை அதன் நெளிவு – சுளிவுகளை உள் வெளிகளை, அக – புற வலிகளை மிக இலாகவமாக இலக்கியபூர்வமாக ஓர் ஆர்வத்துடனும் அலட்சியத்துடனும் கூறிக் கொண்டே போகும் லாவண்யம் ரசனைக்குரியது.

நாவலை வாசிக்கின்ற போது என்னுள் ஒரு பரவசம் பரவிப் பரவி வரும். அந்த ஆனந்த லயிப்பை இந்த 'அறுவடைக் கனவுக'ளும் தர மறுக்கவில்லை.

வாசித்துக்கொண்டே போகவும் பிறகு நிறுத்திவிட்டு அஸூமத் என்ன சொல்ல முனைகின்றார் என்று யோசிக்கவும் மெய் மறந்து சிரிக்கவும் என்று தொடர்வது இந்த வாசிப்பு." என்று நாவல் பற்றி கருத்துக் கூறியுள்ளார் மலையக இலக்கிய ஜாம்பவான் மறைந்த தெளிவத்தை ஜோசப்.

'தமிழ் வாசகர்களைக் கொண்ட எல்லா நூலகங்களிலும், குறிப்பாக மலையக நூலகங்களில் கட்டாயமாக இருக்கவேண்டிய நூல் இது' என்றால் மிகையல்ல.

நூல்: அறுவடைக் கனவுகள் (நாவல்), ஆசிரியர்: அல் அஸூமத், முதற்பதிப்பு: டிசம்பர் 2010, பக்கங்கள்: xviii + 348 = 366, தொடர்புகளுக்கு: 0774413005

## சிந்தனை செய் மனமே

### ஏமாந்தது யாரோ?

மும்பையின் ஐ. ஐ. ரி நிறுவனத்தில் பரீட்சை காலமது. அதன் நான்கு மாணவர்கள் பரீட்சைக்குத் தயாராகாமல் நள்ளிரவு வரை சீட்டு விளையாடிக் கொண்டிருந்தார்கள். இதனால் அடுத்த நாள் அவர்களால் திட்டமிடப்பட்டிருந்த தேர்வுக்கு படிக்க முடியவில்லை.

காலையில், பரீட்சையைத் தவிக்க அவர்கள் ஒரு திட்டத்தைத் தீட்டினார்கள். அதன்படி, அவர்கள் தங்களை கிரீஸ், சேறு போன்றவற்றால் அழுக்காக்கிக் கொண்டனர்.

பின்னர் அவர்கள் பிரிவுத் தலைவரிடம் சென்று, தாங்கள் முந்தைய இரவு ஒரு திருமணத்திற்கு சென்றதாகவும், திரும்பி வரும்பொழுது அவர்களின் காரின் டயர் வெடித்ததாகவும், அதனால் அவர்கள் காரை தள்ளிக்கொண்டு வந்ததாகவும், ஆதலால் அவர்களால் பரீட்சைக்குத் தயாராக முடியவில்லை எனவும் தமக்கு மற்றுமொரு சந்தர்ப்பம் தருமாறும் கோரிக்கை விடுத்தனர்.

பிரிவுத் தலைவர் அவர்களை நம்பாவிட்டாலும், அவர்களுக்கு ஒரு சந்தர்ப்பத்தை வழங்க தீர்மானித்தார். மூன்று நாட்களுக்கு பிறகு அவர்களுக்காக மட்டும் மீண்டும் பரீட்சையை நடத்தலாம் என்று கூறினார். அவர்கள் நால்வரும் அவருக்கு நன்றி கூறிவிட்டு பரீட்சைக்குத் தயாராக நன்கு படித்தனர்.

பரீட்சை நாளில் அவர்கள் பிரிவுத் தலைவர் முன்




ஆஜரானார்கள். பிரிவுத் தலைவர் அவர்களிடம், "இது உங்களுக்கு தனியாக நடத்தப்படும் பரீட்சை என்பதால், நீங்கள் நான்கு பேரும் தனித்தனி வகுப்பறைகளில் பரீட்சை எழுத வேண்டும்". என்று கூறினார். கடந்த மூன்று நாட்கள் அவர்கள் நன்றாகப் படித்து பரீட்சைக்குத் தயாராக இருந்ததால் அனைவரும் தைரியமாக அதற்கு ஒப்புக் கொண்டனர்.

நால்வருக்கும் தனித்தனி அறைகளில் வினாப் பத்திரங்கள் வழங்கப்பட்டன. தேர்வில் மொத்தம் 100 மதிப்பெண்களுடன் இரண்டு கேள்விகள் மட்டுமே இருந்தன.

கேள்வி 1: குறித்த நாள் அவர்கள் பயணித்த காரின் எந்த டயர் வெடித்தது? (50 புள்ளிகள்)

1) முன் இடது: ________
2) முன் வலது:_________
3) பின் இடது:_________
4) பின் வலது: _________

கேள்வி 2: காரில் யார் யார் எங்கு அமர்ந்திருந்தீர்கள்? (50 புள்ளிகள்)

1) முன் இடது: ________
2) முன் வலது:_________
3) பின் இடது:_________
4) பின் வலது: _________

முக்கிய குறிப்பு: நான்கு கேள்விகளுக்கும் அனைவரும் ஒரே பதிலுடன், சரியாக பதிலளித்தால் மட்டுமே புள்ளிகள் வழங்கப்படும்.

மும்பை ஐ. ஐ. ரி நிறுவனத்தில் 1992ல் நடைபெற்ற ஒரு உண்மை சம்பவமாக இது குறிப்பிடப்படுகிறது. கவனம்! ஆசான்களை ஒருபோதும் எவரும் குறைத்து மதிப்பிடாதீர்கள்!

**இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எவரும் எழுதலாம். "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்எப் (WhatsApp): 0777314207**



# திருவள்ளுவர் எனும் தெய்வீக முகாமையாளர் 60



கே. பத்மானந்தன்

ஒரு தொழிலில் முக்கியமாக உற்பத்தித் துறையில் அல்லது கைத்தொழில் துறையில் தர நிர்ணயம் அல்லது தரக்கட்டுப்பாடு அல்லது தர முகாமைத்துவம் களது நிறுவனத்தில் உற்பத்தி செய்கின்ற பொருட்களின் தரத்தை ஒருபோதும் குறைக்க மாட்டார்கள் என்கிறார் திருவள்ளுவர். உண்மையில் முகாமையாளர்

## திருவள்ளுவத்தில் தர முகாமைத்துவம்

என்பது மிக முக்கியம். தற்போது பாவனையாளர்கள் ஒரு பொருளின் விலையை விட அதன் தரத்திற்கே முக்கியத்துவம் கொடுக்கின்றார்கள். தரமில்லாத பொருட்களை யாரும் கொள்வனவு செய்யமாட்டார்கள் என்ற உண்மையை நிறுவனமும் முகாமையாளரும் உணர்ந்து கொள்ள வேண்டும். தர முகாமைத்துவம் என்பது ஒரு தொழிலைத் திட்டமிடும் போதே ஆரம்பிக்கின்றது. இயந்திரங்களைத் தெரிவு செய்யும் போதும், தொழில் நுட்பங்களைத் தெரிவு செய்யும் போதும், வேலையாட்களைத் தெரிவு செய்யும் போதும், மூலப் பொருட்களைத் தெரிவு செய்யும் போதும், களஞ்சிய வசதிகளைத் தெரிவு செய்யும் போதும் தர முகாமைத்துவம் கவனத்தில் கொள்ளப் பட வேண்டும். பொருட்களின் அல்லது உற்பத்திகளின் தரமானது கெடாதவாறு உற்பத்தி செய்தலும், களஞ்சியப்படுத்தலும் விநியோகம் செய்தலும் முக்கியமென்பதை முகாமையாளர் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இக்கருத்துக்களை திருவள்ளுவர் கீழ்வரும் ஈரடியில் கூறுகின்றார்.

**"ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை ஆஅதும் என்னும் அவர்" (குறள் 653)**

ஒரு தொழிலைத் தொடங்கியபின் அத்தொழிலில் சிறந்து விளங்க வேண்டும். மேலும் மேலும் உயர்வடைய வேண்டும் என்று விரும்புகிற முகாமையாளர்கள் ஒருபோதும் கெட்டுப் போவதற்குரிய செயல்களைச் செய்யமாட்டார்கள். தாங்கள் தங்



என்பவர் ஒரு உற்பத்தியில் குற்றம் வரும் என்று தெரிந்தால் அதைச் செய்யாது விலக்கவேண்டும். அவ்வாறு உறபத்தியில் குற்றங்கள் ஏற்படாதவாறு தரத்தினைக் காப்பதோடு அதற்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்து நிறுவனத்தின் பெயரினையும் புகழினையும் காக்க வேண்டியது முகாமையாளரின் கடமை என்கிறார் திருவள்ளுவர். அதேபோன்று தாங்கள் உற்பத்தி செய்யும் பொருட்களின் தரம் தொடர்பான இரகசியங்களை முகாமையாளர்கள் காக்க வேண்டும் என்ற கருத்தையும் திருவள்ளுவர் கீழ்வரும் ஈரடியில் பதிவு செய்கிறார் .

**" கடைக்கொட்கச் செய்தக்கது ஆண்மை இடைக்கொட்கின் எற்றா விழுமம் தரும்" (குறள் 663)**

ஒரு முகாமையாளர் தாம் உற்பத்தி செய்யும் ஒரு பொருளின் தரம் பற்றி அது தொடர்பான தகவல்களை அதன் உற்பத்தி தொடங்கி முடியும் வரை யாரிடமும் பகிர்ந்து கொள்ளக்கூடாது. அவ்வாறு பகிர்ந்து கொள்வாராயின் அது அவரது நிறுவனத்தின் வியாபாரத்தை பாதிக்கும் என்கிறார் திருவள்ளுவர்.

எனவே ஒரு செயல் நிறைவுற்ற பிறகே அதைப்பற்றிய செய்திகளை முகாமையாளர் வெளியிட வேண்டும். அவ்வாறு செய்தலே அச்செயலினை எந்தவிதமான இடையூறுகளும் இன்றி முடிப்பதற்கான வலிமையைத் தரும். இடையிலேயே எடுத்துக்கொண்ட செயலைப் பற்றியச் செய்திகளை வெளியிடுவதோ கசிய விடுவதோ அந்தச் செயலுக்கு முடிவில்லாத தடைகளை ஏற்படுத்துவதுடன் அச்செயல் முடிவடைய முடியாத நிலையையும் நிறுவனத்திற்கு ஏற்படுத்தி விடும் என்கிறார் திருவள்ளுவர்.

அதேபோன்று ஒரு முகாமையாளர் தாம் உற்பத்தி செய்யும் ஒரு பொருளின் தரம் தொடர்பில் ஏதேனும் பிழைகளை அல்லது குறைகளைக் கண்டுபிடித்தால் அக்குறைகளை ஆரம்பத்திலேயே நீக்கி விட முயற்சிக்க வேண்டும். அவ்வாறு ஆரம்பத்திலேயே நீக்கி விடல் தர முகாமைத்துவத்திற்கு மிகவும் முக்கியமாகும். அவ்வாறு நீக்காவிட்டால் அவை பின்னர் விரும்பத்தகாத பின்விளைவுகளை ஏற்படுத்தக்கூடும். இதன் காரணமாக நிறுவனத்தின் பெயர் கெடுவதுடன் அந்நிறுவனத்தின் உற்பத்திகள் தொடர்பான நம்பிக்கையை மக்கள் இழப்பார்கள். ஈற்றில் நிறுவனம் எதிர்பாரத வியாபார இழப்பை சந்திப்பதுடன் நட்டமும் ஏற்படக்கூடும். இக்கருத்துக்களை கீழ் வரும் ஈரடியில் திருவள்ளுவர் விளக்கியுள்ளார்.

**"இளைதாக முள்மரம் கொல்க களையுநர் கைகொல்லும் காழ்த்த இடத்து" (குறள் 879)**

எம்மை அழிக்க எண்ணும் முள் மரத்தை அது இளையதாக இருக்கும் போதே வெட்ட வேண்டும் அது வளர்ந்து முதிர்ந்து விட்டால் வெட்டுகின்றவரின் கையை காயப்படுத்துவது போல் முகாமையாளர் உற்பத்தி அல்லது தரம் தொடர்பான குறைகளை ஆரம்பத்திலேயே நீக்கி விட வேண்டும் இறுதியில் நீக்க முயற்சிக்கும் போது அது தீங்கையே ஏற்படுத்தும் என்கிறார் திருவள்ளுவர்.

முகாமையாளர் உற்பத்தியில் தரக் குறைபாடு தோன்றாமலே நீக்கிவிடுவது நல்லது. அதையும் மீறிக்குறைபாடு ஏற்பட்டுவிட்டால், அதை முளையிலேயே அவர் கிள்ளி அழிக்க வேண்டும். அக்குறைபாட்டை ஆரம்பத்திலேயே நீக்காதுவிட்டால் அது வளர்ந்து பெரியதாக வந்தபின் நீக்குவது கடினம், என்பதுடன் மட்டும் அல்லாது அது தேவையில்லாத பிரச்சினைகளையும் நட்டத்தினையும் நிறுவனத்திற்கு ஏற்படுத்திவிடும் என்பது திருவள்ளுவரின் கருத்தாகும் .

உற்பத்தியின் தரம் தொடர்பாக ஏதேனும் இணக்கமின்மை( nonconformity ) ஏற்படும் போது முகாமையாளர் அதற்கு எதிர்வினையாற்றவும் அதை கட்டுப்படுத்தவும் சரிசெய்யவும் நடவடிக்கை எடுக்கவேண்டும். அத்தோடு ஏற்படும் விரும்பத்தகாத விளைவுகளைச் சமாளிக்க இணக்கமின்மையானது மீண்டும் நிகழாமல் இருப்பதற்காக இணக்கமின்மைக்கான காரணங்களை அகற்றுவதற்கான நடவடிக்கையின் அவசியத்தை மதிப்பீடு செய்வதுடன் இணக்கமின்மைக்கான காரணங்களைத் தீர்மானிப்பதுடன் ஒரே மாதிரியான இணக்கமின்மைகள் உள்ளதா அல்லது அவை சாத்தியமாகுமா என்பதனையும் கருத்தில் கொள்ள வேண்டும் என்று தரநிர்ணயம் தொடர்பான ISO 9001: 2015 பிரிவு 10 கூறுகின்றது. இக்கருத்துகளைத் திருவள்ளுவர் கீழ்வரும் ஈரடியில் சிறப்பாகக் கூறுகின்றார்.

**. "நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும் வாய்நாடி வாய்ப்பச் செயல்"குறள் .948)**

மருத்துவர் ஒருவர் நோய் இன்னதென்று ஆராய்ந்து, நோயின் காரணம் ஆராய்ந்து, அதைத் தணிக்கும் வழியையும் ஆராய்ந்து, உடலுக்குப் பொருந்தும்படியாகச் செய்யவேண்டும் என்கிறார் திருவள்ளுவர். அவ்வாறே உற்பத்தி தொடர்பான தரக் குறைவு என்ன அதற்கான காரணங்கள் என்ன அவற்றை எவ்வாறு தவிர்க்கலாம் அக்காரணங்களை நீக்கி எவ்வாறு உற்பத்தியின் தரத்தினை நிறுவனத்திற்கு ஏற்ற வகையில் அமைத்துக்கொள்ளலாம் என்பது தொடர்பான தெளிவினை முகாமையாளர் கொண்டிருக்க வேண்டும் என்ற கருத்தினை திருவள்ளுவர் இங்கு வலியுறுத்துகின்றார். எனவே இங்கு பொருட்களின் தரக்குறைவிற்கான காரணங்களை இனம் கண்டு அவற்றை நீக்குவதன் மூலம் பொருட்களின் தரத்தைப் பேணலாம் என்ற கருத்தினை திருவள்ளுவர் முன்வைக்கின்றார்.

(தொடரும் )

## கடந்த வாசிப்பு மாத சிறப்புக் கவிதை



### உள்ளங்கையில் உலகம்

ஓவியமாகிறது
வாழ்க்கை
வாசிப்பு எனும்
தூரிகையால்!

செழித்து வளர்கிறது
சிந்தனைப் பயிர்
புத்தகங்கள் பொழியும்
எழுத்துத் துளிகளால்...

கருத்து வெள்ளம்
கரைபுரளும் போது
உற்சாக கங்கை
உடைப்பெடுத்து
உள்ளமெல்லாம்
பரவுகிறது...

கால்கள்
தரையில் நடந்தால்
உடற்பயிற்சி
விழிகள்
வரிகளில் நடந்தால்
உளப்பயிற்சி!

புத்தகங்கள்
பொக்கிஷங்கள்
கண்களால் அள்ள அள்ள
கிடைக்கும்
நம்பிக்கை ரத்தினங்கள்!

புத்தகங்கள்
நம் இதயத்திற்கு
வகுப்பு நடத்தி
வழிகாட்டுகின்றன...

பூக்களின் வாசம்
சில கணங்களில்
காணாமல் போய்விடும்
புத்தகத்தை
தொட்ட வாசமோ
காலம் முழுவதும்
கூட வரும்

'பந்தி' வைத்துக்
காத்திருக்கின்றன
பத்திரிகைகள்
அறிவுப் பசியாற
உண்ணுவோம்
வாருங்கள்.

பத்திரிகையை
கையினால்
புரட்டும் போது
உள்ளங்கைக்குள்
வருகிறது
உலகம்...

நூல் பிடித்தால்
பட்டம் உயரும்
'நூல்' படித்தால்
வாழ்க்கை உயரும்...

வாசிப்புச் சாலைகளில்
சுற்றி வரும் போது
'வெற்றி ஊருக்கு'
வந்து சேரலாம்
இமயத்திலும்
விரைந்து ஏறலாம்

கவிஞர் எஸ்.ரபீக்

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 87

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | | 05 |
| 06 | | 07 | 08 | | 09 |
| 10 | | 11 | | 12 | 13 |
| | 14 | | 15 | | 16 |
| 17 | 18 | 19 | 20 | | |
| 21 | 22 | | 23 | 24 | 25 |

பெயர் ..................................................

வகுப்பு ..................................................

தொலைபேசி இல ..................................................

பாடசாலை பெயர் ..................................................

வதிவிட முகவரி ..................................................

..................................................

............................ ..................................................

மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

### இடமிருந்து வலம்

(1) ஒளி ஊடுருவக் கூடியதும், நொருங்கக் கூடியதுமான பதார்த்தம். நாம் பயன்படுத்துகின்ற அநேக பொருட்களின் தயாரிப்புக்கு இந்த சிலிக்கன் மூலகம் பயன்படுத்தப்படுகின்றது.

(7) அன்றைய காலத்தில் சிறிய நீளங்களை அளப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட ஒரு அலகு இது. உங்கள் கையிலுள்ள ஐந்து விரல்களையும் நன்கு அகல விரித்துக் கொள்ளுங்கள். அப்போது பெருவிரலுக்கும் சிறிய விரலுக்கும் இடைப்பட்ட நீளம் இது. (தலைகீழான சொல்)

(12) நீர்நிலைகளில் ஒன்று இது. கங்கை, நதி ஆகிய பெயர்களிலும் அழைக்கலாம்.

(17) வீட்டினுள் காற்றும், வெளிச்சமும் வருவதற்காக வைத்துக் கட்டப்படுவது. (தலைகீழான சொல்)

(21) தொடக்கம் என்ற பொருள் தரும் சொல். இதன் எதிர்ப்பதம் அந்தம்.

(23) சரீரம், மேனி, உடல், மெய் என்பதெல்லாம் இந்தச் சொல்லின் ஒத்தபொருள் சொற்கள். (தலைகீழான சொல்)

### மேலிருந்து கீழ்

(1) இலங்கையின் மத்திய பகுதியில் அமைந்துள்ள புராதன நகரம். எமது நாட்டை ஆங்கிலேயர் முழுமையாகக் கைப்பற்றும்வரை இதுதான் இலங்கையின் இறுதி இராச்சியமாக இருந்தது.ட

(3) மூத்த சகோதரனை இவ்வாறும் அழைக்கலாம். (தலைகீழான சொல்)

(4) இதற்குள் பூமரம் வளர்க்கப்படுவதுண்டு. வீடுகளில் அழகுக்காக பூமரங்களை இதற்குள் வளர்ப்பார்கள். (தலைகீழான சொல்)

(5) நாட்டுக்கு வருமானம் ஈட்டித் தருகின்ற துறைகளில் முக்கியமானது இது. வெளிநாடுகளில் இருந்து பயணிகளை ஈர்க்கின்ற துறை இது.

(14) நாள் என்ற பொருள் தருகின்ற சொல். (தலைகீழான சொல்)

(15) குதிரைகளை அடைத்து வைத்துப் பராமரிக்கும் இடம்.

(17) விழுதுகள் விட்டு, கிளைகளை அகலப்பரப்பி வளருகின்ற மரம். (தலைகீழான சொல்)

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 86

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. தாழமுக்கம் 11. ஈராக் 14. கமமம்
18. கம்பு 22. வாள் 24 பல்லி

**மேலிருந்து கீழ்**

01. தாவரம் 03. முழக்கம் 06. நாம்
15. மகள் 17. பஞ்சு 20. புலி

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 85

### பாராட்டு பெறுவோர்

**1. வி. லோஷனி**
தரம் 10, விநாயகர், ம. வித்தியாலயம்,
ஆலங்கேணி கிழக்கு, கிண்ணியா.

**2. எம். அப்லல் அஹமத்**
தரம் 05, நாங்கல்ல மு.ம. வித்தியாலயம்,
இல. 337, மங்கெதர துல்ஹிரிய.

**3. நாதிர் நூரி**
தரம் 10, அல் அஸ்ஹர் மகா வித்தியலயம்,
திஹாரிய.

**4. ஸீனத் தஹானி சாட்**
தரம் 11B, க/ பதியுதீன் மகளிர் கல்லூரி,
இல. 34/12, செமனரிவத்த வீதி,
தென்னக்கும்புர, கண்டி.

**5. ஸீனத்துல் இஸ்மா**
தரம் 06C, களு/ அல் பஹ்ரியா ம.கல்லூரி,
இல. 23, ஏ. இப்றாஹிம் வீதி, தொட்டவத்த,
பாணந்துறை

**6. ஹம்தா மர்யம் முஜாஹித்**
தரம் 03, தாருல் உலூம் ம.ம.வித்தியாலயம்,
இல. 62/3, ஹுரீமலுவ, ரம்புக்கண.

**7. ஏ.எப்.எம். ராபித்**
தரம் 01, ஸாஹிரா கல்லூரி,
இல. 177, நாபாவெள, அவிசாவளை.

**8. கு. துவாரகன்**
தரம் 06C, கமு/ கார்மேல் பற்றிமா கல்லூரி,
இல. 33A, சருவோதய வீதி, பெரியநீலாவணை 01.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 87
**சிறுவர் உலகம்**
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk



**ஊக்கம் உடைமை : உடையர் எனப்படுவ**
**தூக்கமஃ தில்லார் உடைய துடையரோ மற்று.**

**தெளிவுரை :**

ஒருவர் பெற்றிருக்கின்றார் என்று சொல்லத்தக்க சிறப்புடையது ஊக்கமாகும், எதைப் பெற்றிருந்தாலும் அதை உடையவர் ஆவரோ...

# சிந்தித்து செயல்படுங்கள்



ஒரு காட்டில் சிங்கம் ஒன்று அசந்து படுத்து கொண்டிருந்தது. அப்போது அதன் காதுகளில் ஏதோ ரீங்காரம் கேட்டது. சிங்கம் அந்த பக்கம், இந்த பக்கமாய் தலையை திருப்பியது. ஆனாலும் அதன் காதுகளில் விடாமல் அந்த சத்தம் தொல்லை செய்தது. சிங்கம் யாரது என கேட்டதும் ஒரு கொசு சிரித்து கொண்டே நான் தான் என்றது.

சிங்கம் அமைதியாக, நான் ஓய்வு எடுத்து கொண்டிருக்கிறேன் ஆகையால் தொல்லை செய்யாமல் கிளம்பு என்றது. கொசு, சிங்கத்தை விடாமல் தொல்லை செய்தது. உனக்கு என்னதான் வேண்டும் என்றது சிங்கம். நான் இப்படித்தான் தொல்லை செய்வேன் என்ன செய்ய முடியும் உன்னால் என்றது கொசு ஆணவமாக.

என்னால் உன்னை கொல்ல முடியும் தொல்லை செய்யாமல் இங்கிருந்து கிளம்பி விடு என்றது. விடாத கொசு, முதலில் என்னை பிடி பிறகு கொல்லலாம் என்றது. சரி என்றது சிங்கம். முதலில் தனது வாலால் ஒரேடியாக அதை அடித்து விடலாம் என நினைத்து வாலை ஆட்டியது. அதில் தப்பித்த கொசு நக்கலாக அவ்ளோ சுலபமா நான் சிக்கிடுவேனா என சத்தமாக காதுக்குள் ரீங்காரமிட்டது.

சிங்கத்தின் மூக்கின் மேல் ஏறி உட்கார்ந்து கொண்டது கொசு. கோபமான சிங்கம் மரத்தின் மேல் கொசுவை இடிக்க, கொசு தப்பித்து விட்டது. சிங்கத்திற்கு மூக்கில் பலத்த அடி. மீண்டும் கொசு சிங்கத்தின் காதில் ரீங்காரம் விட்டது. காலை தூக்கி காதில் அடித்தது. மீண்டும் கொசு தப்பித்தது. சிங்கத்திற்கு வலி பொறுக்கவில்லை. சோர்ந்து போன சிங்கத்தை பார்த்ததும், கொசு சத்தமாக சிரித்தது. சிங்கத்தின் முகத்தில் ஏறி நின்று அதை சீண்டியது.

அமைதியாக இருந்த சிங்கம், நடந்து சென்றது. இதை பார்த்ததும் கொசு நீ தோற்றதை ஒத்துக்கொள்கிறாயா? எனக் கேட்டது. சிங்கம் எதுவும் பேசிக்கொள்ளாமல் மீண்டும் அமைதியாக நடந்தது. அப்படி எங்குதான் செல்கிறாய் என்றது கொசு. கொசு சற்றும் எதிர்பாராத நேரம் பார்த்து அருகில் இருந்த நதியில் முகத்தை முக்கியது சிங்கம். கொசு மூழ்கி இறந்தது.

ஆகையால் சிறார்களே, நம்மை விட வலிமையானவர்களை ஏளனம் செய்வதால், ஏதோ ஒரு முறை நம்மால் ஜெயித்துவிட முடியும். ஆனால், அது ஒரு சிறந்த செயலாக இருக்காது. அதனால் கண்டிப்பாக நாம் பாதிக்கப்படுவோம். ஆகையால் ஒரு செயலை செய்வதற்கு முன் நன்றாக சிந்தித்து செயல்படுங்கள்.

தருண் ராகுல்



## சத்தமே பலம்

கத்தியைப் போன்ற முதுகுத் துடுப்பைக் கொண்டுள்ள ஜாக் நைப் மீன், உலகிலுள்ள மீன்களிலேயே அதிக சப்தம் மிகுந்தது. மீன்களுக்கு குரல்நாண் கிடையாது. ஆனால், இந்த மீன் தசைகளை அதிரச் செய்வதன் மூலம் சத்தத்தை உருவாக்குகிறது.

தசைகளுடன் இணைந்துள்ள நீந்தும் ஜவ்வுகள் ஒலிபெருக்கியைப் போலச் செயல்பட்டு சத்தத்தை பெரிதாக்குகின்றன.



## சம்பளம் பிறந்த கதை

பழங்காலத்தில் செய்த வேலைக்கு சம்பளமாக நெல்லும் உப்புமாகக் கொடுப்பார்களாம். ஏனெனில், அவை இரண்டும் தான் சாப்பாட்டின் முதன்மையான மூலப்பொருள்கள் என்பதால் நெல் வகைகளில் சிறந்த சம்பாவும் உப்பும் சேர்ந்து "சம்பளம்" ஆயிற்று. அளம் என்றால் உப்பையும் உப்பு விளையும் இடத்தையும் குறிக்கும் காரணப்பெயர் ஆகும்.

எனவே சம்பா அளம் என்பது காலப்போக்கில் "சம்பளம்" என மாறியது. சம்பளம் என்ற சொல் தமிழ் சொல் தான்.

## அறிந்து கொள்வோம்

- ★ அவுஸ்திரேலியாவில் இதய வடிவிலான பவளப்பாறை உள்ளது.
- ★ டொல்பினால் தன்னைத் தானே கண்ணாடியில் அடையாளம் கண்டுகொள்ள முடியும்.
- ★ உருளைக்கிழங்கைப் பயன்படுத்தி பேட்டரி உருவாக்க முடியும்.
- ★ பச்சோந்திகளால் 20 வினாடிகளுக்குள் நிறம் மாறிக்கொள்ள முடியும்.
- ★ பனிக்கட்டியில் ஏறக் குறைய 90 சதவீதம் காற்றுதான்!
- ★ அந்துப்பூச்சிகளால் ஒன்றையொன்று பல கிலோமீற்றர் தொலைவிலிருந்தும் மோப்பம் பிடித்து அறிய முடியும்.



**ரஹ்மா ரிசான்**
தரம் 01, கைரியா மகளிர் கல்லூரி, கொழும்பு - 09



**ஏ.எப்.எம். ராபித்**
தரம் 01, ஸாஹிரா கல்லூரி.

## இவ்வார மழலை



**ரோஹித்**

**செல்வம் – ஜீவரஞ்சனி**

### விடுகதை

முகத்திலே காட்டுவான் முதுகிலே காட்டமாட்டான் அது என்ன?

முகம் பார்க்கும் கண்ணாடி









மொறட்டுவை எகொட உயன அல் இல்ம் பாலர் பாடசாலையில் சிறுவர் தினத்தை முன்னிட்டு, ஏற்பாடு செய்த விளையாட்டு தினம் அண்மையில் பாணந்துறை நகர சபை விளையாட்டரங்கில் நடைபெற்றது.

# கரிபியன் தீவுகள்



மேற்கிந்தியத் தீவுகள் (West Indies) என்பது அட்லாண்டிக் பெருங்கடல், கரிபியன் கடல் பகுதிகளிலுள்ள மண்டலம் ஆகும். அமெரிக்காவுக்கான கொலம்பசின் முதல் கடற்பயணங்களை அடுத்து ஐரோப்பியர்கள் மேற்கிந்தியத் தீவுகள் என்ற இந்தப் பொருந்தாப் பெயரை கிழக்கிந்தியத் தீவுகளிலிருந்து (தெற்கு ஆசியா மற்றும் தென்கிழக்காசியா) வேறுபடுத்திக் குறிப்பிட பயன்படுத்தினர்.

மேற்கிந்தியத் தீவுகள் அல்லது கரிபியன் (Caribbean, டச்சு: Cariben அல்லது Caraiben அல்லது Antillen; பிரெஞ்சு: Caraibe அல்லது Antilles ஸ்பானிஷ் Caribe) அமெரிக்கக் கண்டத்தின் ஒரு பகுதி ஆகும். இது கரிபியன் கடல் மற்றும் அதன் தீவுகள், அவற்றின் கரையோரப் பகுதிகளையும் உள்ளடக்கிய பகுதியைக் குறிக்கும். இப்பகுதி வட அமெரிக்காவின் தென்கிழக்குப் பகுதியையும் மத்திய அமெரிக்காவின் கிழக்குப் பகுதியையும் தென் அமெரிக்காவின் வடக்கு மற்றும் மேற்குப் பகுதிகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

கரிபியன் தீவுகள் என்பது 2,500 மைல்கள் நீளமும் 160 மைல்களுக்கும் குறைவான அகலமும் கொண்ட ஒரு தீவுத் தொடராகும்.

இப்பகுதியில் மொத்தம் 7,000 தீவுகள், சிறு தீவுகள் ஆகியவற்றைக் கொண்டுள்ளன. கரிபியன் கடலை சுற்றிலும் ஒரு தீவு சங்கிலியாக இவை படர்ந்து கிடக்கிறது. அட்லாண்டிக் பெருங்கடலின் குறுக்காக தெற்கே புளோரிடா முதல் வெனிசுலா வரை 4 ஆயிரம் கி.மீ. நீளத்துக்கு தீவுகள் சிதறியிருக்கின்றன. இதில் 11 சுதந்திர நாடுகளும் பிற நாடுகளின் ஆட்சிக்கு உட்பட்ட சில பகுதிகளும் உள்ளன. மேற்கிந்திய தீவில் கியூபா, ஹைதி, டொமினிக்கன் குடியரசு, ஜமைக்கா, பார்படோஸ், பஹாமாஸ், டிரினாட் மற்றும் டொபாகோ, டொமினிக்கா, செயின்ட் கிட்ஸ் நெவிஸ், செயின்ட் லூஸியா, செயின்ட் வின்சென்ட் கிரெனடா, ஆன்டிகுவா, பார்புடா என்ற நாடுகள் சேர்ந்ததே மேற்கிந்திய தீவு. இவற்றில் மிக பெரிய நாடு கியூபா. கரிபியன் கடலில் ஒரு பெரிய தீவையும், ஆயிரத்து 600க்கும் மேற்பட்ட குட்டித் தீவுகளையும் கொண்ட நாடு தான் கியூபா. மேற்கிந்தியாவின் ஒரு பகுதியான ஆன்டிலிஸின் மிக அழகிய தீவு கியூபா. இதனால்தான் இதனை ஆன்டிலிஸின் முத்து என்று அழைக்கின்றனர். அமெரிக்க கடற்படை கேந்திரங்களில் ஒன்றாக விளங்கும் குவன்டனாமா, கியூபாவின் ஆதிக்கத்திற்கு உட்பட்ட பகுதியாகும்.

ஐரோப்பிய மாலுமிகலான வாஸ்கோடகாமா போன்ற நாடுகாண்பயணிகள் இந்தியாவுடன் கடல் வழி வாணிபம் செய்வதற்காக பயணவழி வரையறுத்ததன் விளைவாக இந்த மேற்கிந்திய தீவுகள் கூட்டம் கண்டுபிடிக்கப்பட்டது.

1492இல் ஐரோப்பிய கடற்பயணி கிறிஸ்டோபர் கொலம்பஸ்சே மேற்கிந்திய தீவிற்குதான் முதன் முதலில் வந்தார். தான் வந்து சேர்ந்த இடம் இந்தியா என்று தவறாக நினைத்து இதற்கு மேற்கிந்தியா என்று பெயர் சூட்டினார். இங்குள்ள பல தீவுகளும் ஐரோப்பிய நாடுகளின் காலனி நாடுகளாக மாறியதை தொடர்ந்து ஐரோப்பிய கலாசாரம் இங்கு படர்ந்தது.

மேற்கிந்திய தீவுகள் அமெரிக்க கண்டத்தில் இருந்தாலும் வரலாற்றிலும் சரி, கலாசார அளவிலும் சரி அது ஐரோப்பிய, ஆபிரிக்க, ஆசிய கண்டங்களிலும் மிக அதிகமான தொடர்பு கொண்டது. உலகில் வேறு எந்த பகுதியும் இந்த அளவுக்கு சமூக பொருளாதார, கலாசார வேறுபாடுகளை தன்னகத்தே கொண்டிருக்கவில்லை.

தற்காலத்தில் மேற்கிந்தியத் தீவுகள் எனக் குறிப்பிடப்படுபவை:

பகாமாசின் தீவுகள்
கியூபா
ஜமைக்கா
எயிட்டி
டொமினிக்கன் குடியரசு
புவேர்ட்டோ ரிக்கோ
லீவர்டு தீவுகள் மற்றும் வின்வர்டு தீவுகள்

# விளையாட்டு




# களைய வேண்டிய குழப்பங்கள்

ஒரு முறை விழுந்தால் அதனை விபத்து என்று எடுத்துக் கொள்ளலாம், அதேமாதிரி மீண்டும் விழுந்தால் அதனை விபத்து என்று வகைப்படுத்த முடியாது. உலகக் கிண்ணத்தில் இந்தியாவிடம் இலங்கை அணி 55 ஓட்டங்களுக்கு சுருண்டதை இந்தப் புரிதலோடுதான் எடுத்துக்கொள்ள வேண்டி இருக்கிறது.

அதாவது இலங்கை இந்த அணி ஒருநாள் கிரிக்கெட்டில் 100க்கும் குறைவான ஓட்டங்களுக்கு சுண்டது இது நான்காவது முறை. அதிலும் இந்தியாவுக்கு எதிராக அடுத்தடுத்து இப்படி மண்டியிட்டதை சாதாரணமாக எடுத்துக்கொள்ள முடியாது. கடந்த செப்டெம்பரில் ஆசியக் கிண்ண இறுதிப் போட்டியில் இந்தியாவிடம் 50 ஓட்டங்களுக்கு சுருண்ட இலங்கை மீண்டும் இந்தியாவை சந்தித்தபோதே 5 ஓட்டங்கள் கூடுதலாகப் பெற்று விக்கெட்டுகளை பறிகொடுத்தது.

இந்தியா பெரும் திறமை படைத்த அணி, அதன் பந்துவீச்சாளர்கள் அபாரமானவர்கள் என்று வைத்துக்கொண்டாலும் இப்படி இரண்டு தடவைகள் அதுவும் அடுத்தடுத்த போட்டிகளில் விக்கெட்டுகளை தாரைவார்ப்பதென்பது எந்த ரகத்தில் சேர்ப்பது என்பது புரியவில்லை.

என்றாலும் இந்த சம்பவம் இலங்கைக் கிரிக்கெட்டில் தளம்பலை ஏற்படுத்தி இருக்கிறது என்பது தெரிகிறது. இலங்கை கிரிக்கெட் சபை நிர்வாகிகளை பதவி விலகும்படி விளையாட்டுத் துறை அமைச்சர் கேட்டிருப்பதும், அதனையொட்டி இலங்கை கிரிக்கெட் சபை செயலாளர் மொஹான் டி சில்வா பதவி விலகி இருப்பதும் இதன் நீட்சியே.

இலங்கை அணியின் வீழ்ச்சியை எந்தப் புள்ளியில் இருந்து ஆரம்பிப்பது என்று குறிப்பிட்டுக் கூற முடியாது. என்றாலும் மஹேல ஜயவர்தன மற்றும் குமார் சங்கக்காரவின் ஓய்வுக்குப் பின்னரான கடந்த ஆறேழு ஆண்டு வரலாற்றை சொல்லப்போனால் கதை நீண்டு விடும்.

என்றாலும் அணித் தேர்வு தொடக்கம், வகுக்கப்பட்ட திட்டம், மூலோபாயம் எல்லாமே இந்த உலகக் கிண்ணத்தில் முற்றாக பிழைத்திருப்பது நன்றாகத் தெரிகிறது. பிரமோத்ய விக்கிரமசிங்க தலைமையிலான தேர்வுக் குழு கடந்த இரண்டு, மூன்று ஆண்டுகளாக இளைஞர்களுக்கு வழிவிடுவதாகக் கூறி கணக்கு வழக்கு இல்லாமல் மூத்த வீரர்களை ஓரங்கட்டியது.

இதனால் இன்னும் கிரிக்கெட் ஆட முடியுமாக இருந்த திசர பெரேரா போன்ற வீரர்கள் தனது 30 வயதுகளின் ஆரம்பத்திலேயே ஓய்வு பெற வேண்டி ஏற்பட்டதோடு அஞ்சலோ மத்தியூஸ் மற்றும் தினேஷ் சந்திமால் டெஸ்ட் கிரிக்கெட்டுக்கு மட்டுப்படுத்தப்பட்டார்கள்.

அதிகம் இளைஞர்களுக்கு வாய்ப்பளிப்பது எதிர்காலத்திற்கு ஆரோக்கியமானது என்றாலும் அதனை திடுதிடுப்பென்று செய்திருப்பது உலகக் கிண்ணத்தில் இலங்கை அணியின் அட்டப்போக்கை பார்த்தால் புரிகிறது. சில ஆட்டங்களில் இலங்கை அணி நன்றாக ஆடினாலும் அனுபவக் குறைச்சல் போட்டியில் பெரும் தாக்கம் செலுத்தியது.

காயமடைந்த மதீஷ பதிரணவுக்கு பதில் அணிக்கு அழைக்கப்பட்ட மத்தியூஸின் ஆட்டத்தில் இருக்கும் முதிர்ச்சி எந்த வீரரிடமும் தெரியவில்லை. இந்தியாவிடம் 55 ஓட்டங்களுக்கு சுருண்ட போது கூட மத்தியூஸின் துடுப்பாட்டம் மற்ற வீரர்களிடம் இருந்து மாறுபட்டிருந்தது. அவர் தனது விக்கெட்டை காத்து ஆடுவதற்கு முடிந்த வரை போராடினார்.

உலகக் கிண்ணம் செல்லும் முன்னரும் உலகக் கிண்ணத்திலும் அணி வீரர்கள் அடுத்தடுத்து காயமடைந்தது என்ன மாயமோ மத்திரமோ தெரியவில்லை. ஒன்று வீரர்களை முகாமைத்துவம் செய்வதில் நிர்வாகம் தவறி இருக்க வேண்டும், இல்லையென்றால் துரதிருஷ்டம் கூட இந்த அடுத்தடுத்த காயங்களுக்குக் காரணமாக இருக்கலாம்.

அதனைத் தாண்டி அணித் தேர்வில் ஏகப்பட்ட குழப்பங்கள் இருப்பது சாதாரணமாக கிரிக்கெட் பார்ப்பவர்களுக்கே புரிந்திருக்கும்.

இதில் உலகக் கிண்ணத்தை அண்மித்து நடத்தப்பட்ட லங்கா பிரீமியர் லீக் தொடரில் முன்னணி சுழற்பந்து வீச்சாளர் வனிந்து ஹசரங்க, துஷ்மன்த சமீர என்று பலரும் காயமடைந்தது நேரடியாக இலங்கை கிரிக்கெட் மீது குற்றம் சுமத்த காரணமாகிவிட்டது.

உலகக் கிண்ணத்தில் மோசமான ஆட்டத்திற்கு அணிப் பயிற்சியாளர்களிடம் இலங்கை கிரிக்கெட் சபை விளக்கம் கேட்டிருக்கிறது. என்றாலும் அது தம்மை சுயவிசாரணை செய்ய வேண்டும் என்று பலரும் கூறுகிறார்கள்.

இதில் விளையாட்டுத் துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க மீண்டும் ஒருமுறை இலங்கை கிரிக்கெட் சபை மீது போர்க் கொடி தூக்கியிருக்கிறார். என்றாலும் விளையாட்டு அமைச்சரின் அதிகாரம் இலங்கை கிரிக்கெட்டில் எந்த அளவு செல்லுபடியாகும் என்பது தான் பெரும் கேள்வி.

இலங்கை விளையாட்டுச் சட்டத்தின் படி விளையாட்டு அமைச்சர் என்பவர் இலங்கை விளையாட்டுகளின் மேற்பார்வையாளராகவே இருப்பார். என்றாலும் கிரிக்கெட் என்று வரும்போது அதில் அரசியல் தலையீடுகளை சர்வதேச கிரிக்கெட் கௌன்சில் அனுமதிப்பதில்லை.

இந்த மெல்லிய கோடுகளுக்கு இடையிலேயே இப்போது மோதல் முற்றியிருக்கிறது. கடந்த காலங்களில் லங்கா பிரிமியர் லீக், கிரிக்கெட் சபை நிதியை கையாள்வது, உள்ளூர் கிரிக்கெட் தொடர்கள் என்று ஏகப்பட்ட விவகாரங்களில் இலங்கை கிரிக்கெட்டுக்கும் விளையாட்டுத் துறை அமைச்சருக்கும் இடையே மோதல், இருந்தது இருந்து வருகிறது.

என்றாலும் இந்த சிக்கலை கவனமாகக் கையாளவிட்டால் இலங்கை கால் பந்துக்கு நிகழ்ந்த கதி கிரிக்கெட்டுக்கும் ஏற்படக்கூடும்.

ஒட்டுமொத்தத்தில் இலங்கை கிரிக்கெட் என்பது இப்போது பெரும் வீழ்ச்சியை சந்தித்திருப்பது மாத்திரம் உண்மை. மைதானத்திற்கு வெளியே ஆகட்டும் மைதானத்திற்கு உள்ளே ஆகட்டு சீர்திருத்தங்கள் அவசியப்படுகிறது.

ஆனால் அதனை எப்படி கையாள்வது என்பது தான் தீர்க்கமானது.

இலங்கைக் கிரிக்கெட் மீதான அழுத்தம் அதிகரித்தபோதும் அடிப்படையில் அதனை சட்ட ரீதியான முறையிலேயே முன்னெடுக்க வேண்டி இருக்கிறது.

மறுபுறம் இலங்கை அணியின் திறமையை குறைத்துக் கூற முடியாது. தற்போது அணியில் இருக்கும் பெரும்பாலான வீரர்கள் தனது இருபது வயதுகளின் நடுப்பகுதி அல்லது 30 வயதுகளின் ஆரம்பத்தில் இருக்கிறார்கள். எனவே இந்த அணி பயணிக்க வேண்டிய தூரம் அதிகம். அந்தப் பயணத்தை சரியாக வழி நடத்துவதே முக்கியமாகும்.





# ‘அங்கிள் பெர்சி’ இல்லாத கிரிக்கெட்

பேர்சி அபேசேகர, கிரிக்கெட் தெரிந்த எல்லோருக்கும் பரீட்சயமானவர். மைதானத்தில் கிரிக்கெட் ஆடாவிட்டாலும் அரங்கில் ஒரு கிரிக்கெட் ரசிகராக உலகெங்கும் புகழ்பெற்ற முதலாமவர் இவர்தான். அதாவது கிரிக்கெட்டின் முதலாவது "சியர்லீடர்" என்று குறிப்பிடலாம்.

வயதாக, வயதாக 'பேர்சி அங்கிள்' என்று செல்லமாக அழைக்கப்பட்ட டபிள்யு.டி. பேர்சி கிம்சன் மெண்டிஸ் அபேசேகர இனியும் எம்மிடத்தே இல்லை. எப்போதும் இலங்கை ஆடும் போட்டிகளில் தேசிய கொடியோடு அரங்கில் அங்கும் மிங்கும் சுற்றும் பெர்சியை அண்மைக்காலமாக காணக் கிடைப்பதில்லை.



சுகயீனமுற்றிருந்த அவர் மரணித்ததாக ஒரு மாதத்திற்கு முன்னர் கூட வதந்தி வந்தது. எனினும் இப்போது அது உண்மையாகிவிட்டது. கடந்த ஒக்டோபர் 30 ஆம் திகதி 87 ஆவது வயதில் பெர்சி காலமாகிவிட்டார். இலங்கை கிரிக்கெட் வீரர்கள் தொடக்கம், சர்வதேச கிரிக்கெட் வீரர்கள் வரை அவரின் மரணத்திற்கு அனுதாபச் செய்திகள் குவிந்தன.

இத்தனைக்கும் அவர் ஒரு சாதாரண கிரிக்கெட் ரசிகர் தான். என்றாலும் இலங்கை கிரிக்கெட் பற்றி பேசும்போது அவரை தவிர்ப்பது நியாயம் சேர்ப்பதாக இருக்காது. இலங்கை கிரிக்கெட்டின் ஏற்றத்தாழ்வுகள் அனைத்திலும் ஓர் ஓரமாக அவர் இருந்திருக்கிறார்.

இங்கிலாந்து போகிற வழியில் 1948 ஆம் ஆண்டு சேர் டொன் பிரட்மன் தலைமையிலான அவுஸ்திரேலிய அணி இலங்கை வந்தது அவுஸ்திரேலியாவுக்கு சாதாரணமாக இருந்தாலும் இலங்கை கிரிக்கெட்டுக்கு முக்கியமான தருணம் அது. அதுதான் பெர்சியின் சர்வதேச கிரிக்கெட்டின் முதல் அனுபவம். அப்போது கொழும்பு ஓவல் (சரா மைதானம்) மைதானத்தில் அவுஸ்திரேலிய அணி ஆடியது.

“எனது இரு சகோதரர்களும் காலியில் இருந்து ரயிலில் (கிரிக்கெட் பார்க்க) அழைத்துச் சென்றார்கள். நாம் புற்தரையில் அமர்தோம். ஏழை மக்கள் அங்குதான் செல்வார்கள். டிக்கெட் 25 சதம் இருந்தது. எல்லா இடமும் கொடிகள் இருந்தன" என்று இலங்கை கிரிக்கெட் அணியின் ரசிகராக தனது முதல் அனுபவத்தை கூறுயிருந்தார் பெர்சி.



அது தொடக்கம் பெர்சியின் கிரிக்கெட் ஆர்வம் குறையவே இல்லை. புனித அலோசியஸ் கல்லூரி, அக்கியுனாஸ் பல்கலைக்கழக கல்லூரி மற்றும் ஏ.எம்.டபிள்யு கிரிக்கெட் அணிக்காக தனது இளமைக் காலத்தில் கிரிக்கெட் ஆடி இருக்கிறார்.

1971இல் மைதானத்திற்குள் அனுமதி இன்றி நுழைந்ததற்காக கைது செய்யப்பட்ட பெர்சி பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

1979 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் இரண்டாவது உலகக் கிண்ண போட்டி நடந்தபோது இலங்கை கிரிக்கெட் ரசிகராக கலந்துகொண்டு இலங்கை தேசியக் கொடியுடன் அரங்கில் கொண்டாட்டத்தில் ஈடுபட்டார். அது தொடக்கம் இலங்கை அணியின் வெற்றி, தோல்விகளில் பெர்சி தொடர்ந்து இருந்து வந்தார். இலங்கை கிரிக்கெட்டின் உச்சம் என்று அழைக்கப்படும் 1996 உலகக் கிண்ணத்தை இலங்கை வென்ற போது கூட பெர்சியை பார்க்க முடியும்.

1981 இல் இலங்கை டெஸ்ட் அந்தஸ்தை வென்று அப்போதைய இலங்கை கிரிக்கெட் சபை தலைவராக இருந்த காமினி திசாநாயக்க நாடு திரும்பியபோது கட்டுநாயக்க விமானநிலையத்தில் அவரை வரவேற்றவர்களில் பெர்சி குறிப்பிடத்தக்கவர்.

லோட்ஸ் மைதானத்தில் கொடிகளுக்கு அனுமதியில்லை என்ற நிலையில் 1984 இல் அவரது சிங்கக் கொடி எம்.சி.சியால் பறிமுதல் செய்யப்பட்டது. 1985 இல் கொழும்பில் இலங்கை முதல் டெஸ்ட் வெற்றியை பெற்றபோது அரங்கில் இருந்து கொண்டாடியவர்களில் பெர்சியும் ஒருவர்.

1996 ஆம் ஆண்டுக்குப் பின்னரான இலங்கை கிரிக்கெட்டின் பொற்காலத்தின் உச்சத்தையே அவர் நேரடியாகப் பார்த்தார். அர்ஜுன ரணதுங்க தொடக்கம் அரவிந்த டி சில்வா, சனத் ஜனசூரிய வரையும், 2010இன் நடுப்பகுதியில் ஒருசில ஆண்டுகளில் மஹேல ஜனவர்தன, குமார் சங்கக்கார மற்றும் முத்தையா முரளிதரன் ஓய்வு பெறும்போதும் தேசிய கொடியுடன் அவர் அருகில் இருந்தார்.

“எனது முதல் போட்டி தொடக்கம் கடைசி ஆட்டம் வரை அங்கிள் பெர்சி தொடர்ச்சியாக இருந்தார். இலங்கை கிரிக்கெட் அணிக்காக ஆடை அணிந்தவர்களுக்கு நிகராக அவர் இலங்கை கிரிக்கெட்டுக்கு பங்களிப்புச் செய்திருக்கிறார். அவரது ஆற்றல், அவரது ஆர்வம், அறிவு மற்றும் உற்சாகத்தை உண்மையில் நாம் இழந்துவிட்டோம். அங்கிள் பெர்சியின் ஆத்மா சாந்தியடையட்டும்" என்று சங்கக்கார அவரது மரணத்திற்கு அனுதாபம் தெரிவித்து எக்ஸ் சமூகதளத்தில் குறிப்பிடுகிறார்.

இலங்கை கிரிக்கெட் வீரர்களுக்கு மாத்திரம் அல்ல சர்வதேச கிரிக்கெட் வீரர்களுக்கும் பெர்சி என்றால் அலாதி அன்பு. நியூசிலாந்து முன்னாள் அணித் தலைவர் மார்டீன் குரோ தனது இரு ஆட்ட நாயகன் விருதுகளை பெர்சிக்கு வழங்கினார். கிரிக்கெட் மீதான பெர்சியின் காதல் மற்றும் பக்திக்காக இதனை அர்ப்பணிப்பதாகக் குறிப்பிட்டார்.

அவுஸ்திரேலியாவில் மைதானத்திற்குள் வந்ததற்காக பெர்சி தடுக்கப்பட்டபோது அவருக்காக அடம் கில்கிறிஸ்ட் மற்றும் ரிக்கி பொண்டிங் வாதாடியதை பார்க்க முடிந்தது.

தனது முதலாவது தொடரில் இங்கிலாந்துக்கு எதிராக மூன்று சதங்களை பெற்று பெரும் நம்பிக்கையோடு இலங்கை வந்த மொஹமட் அஸாருதீன் இலங்கைக்கு எதிராக சாதிக்கத் தவறிவிட்டார். அப்போது பெர்சி தனக்கு வசியம் செய்துவிட்டதாக நகைச்சுவையாகக் கூறினார் அஸாருதீன்.

விராட் கொஹ்லி ஒருமுறை அவரை இந்திய அணியின் உடைமாற்றும் அறைக்கு அழைத்துச் சென்றார். சுகவீனமுற்றிருந்த பெர்சியை அண்மையில் இந்திய அணித் தலைவர் ரோஹித் ஷர்மா அவரது வீட்டுக்கே சென்று பார்வையிட்டார்.

அரங்கில் சுற்றித் திரியும் பெர்சியை ஒருமுறை இலங்கை கிரிக்கெட் சபையில் இணையும்படி நிர்வாகம் அழைப்பு விடுத்தது. என்றாலும் அதனை அவர் நிராகரித்துவிட்டார். “முழு உலகிலும் எனக்குப் பிடிக்காத மூன்று விடயங்கள் உள்ளன. ஒன்று அரசியல், மற்றது கிரிக்கெட் நிர்வாகம், மூன்றாவது குடும்பக் கட்டுப்பாடு" என்றார் பெர்சி.

பெர்சியின் கிரிக்கெட் மீதான காதல் நிகரற்றது. இப்போதெல்லாம் பெரும்பாலான கிரிக்கெட் அணிகளுக்கு பெர்சி போன்று கிரிக்கெட் ரசிகர் ஒருவர் இருப்பதை பார்க்க முடிகிறது. ஆனால் பெர்சிதான் அதற்கு முன்னோடி. இப்படி பாகிஸ்தான் கிரிக்கெட் ரசிகரான சூபி அப்துல் ஜலீல் பிரபலமானவர். அவரைக் கேட்டால் தானும் பெர்சியாக மாற விரும்புவதாகக் கூறுகிறார்.



என்றாலும் பெர்சியின் கிரிக்கெட் மற்றும் இலங்கை கிரிக்கெட் மீதான அன்பு ஒப்பிட முடியாதது. கடைசி காலத்தில் அவர் தனது பேரக் குழந்தைக்கு சேர் கார்பில் சோர்பஸை நினைவுபடுத்தும் வகையில் கார்பில் என்றும் சச்சின் டெண்டுல்காரை நினைவுபடுத்தும் வகையில் சசின்க என்றும் வைத்திருப்பது நல்ல உதாரணம்.

எஸ்.பிர்தௌஸ்...

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 நவம்பர் மாதம் 5ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.


Senthooram
செந்தூரம்
2023 நவம்பர் 5 ஞாயிற்றுக்கிழமை

# கேத்தலில் முடிந்த போர்

கேத்தல் யுத்தம் 1784 ஆம் ஆண்டு ஒக்டோபர் 8ஆம் திகதி இப்போதைய ஆஸ்திரியா மற்றும் நெதர்லாந்துக்கு இடையே நடந்த போர். ஆனால் பெரிய போர் ஒன்று வெடிக்கப்போகிறது என்று நம்பி இருந்தவர்களுக்கு ஏமாற்றம்தான் மிஞ்சியது. ஒட்டு மொத்தப் போரும் ஒரே ஒரு சூட்டு சம்பவத்தோடு சப்பென்று முடிந்துவிட்டது. சூப் நிரப்பி வைத்திருந்த கெண்டி ஒன்றே தாக்குதலுக்கு இலக்கானது. அத்தோடு போர் முடிந்து விட்டது தான் பெரும் ஏமாற்றம்.



# மகனுக்கு தந்தை கொடுத்த விலை!



ஏர்னஸ்ட் தொம்சன் செடோன் இங்கிலாந்தில் பிறந்த கனேடிய–அமெரிக்க எழுத்தாளர், வனவிலங்கு கலைஞருமாவார். தனது தந்தையின் கொடுமைகள் தாங்காமல் சிறு வயதில் பெரும்பாலான நேரங்களை வீட்டுக்கு அருகில் இருக்கும் காடுகளில் கழித்ததுதான் அவர் இப்பேர்ப்பட்ட கலைஞராவதற்கு காரணம். அவரது 21 ஆவது வயதில் தந்தை அற்புதமான பரிசு ஒன்றை கொடுத்தார். பிரித்துப் பார்த்தால் பெரிய பட்டியல் ஒன்று இருந்தது. எல்லாவற்றுக்குமே ஒரு விலை. அதாவது செடோன் பிறந்ததில் இருந்து இதுவரை அவருக்காக செலவு செய்த அனைத்து பணத்தையும் கேட்டிருந்தார் தந்தை. அதில் அவரது பிரசவத்துக்கு மருத்துவருக்கு கொடுத்த கட்டணமும் இருந்தது. செடோன் எல்லா பணத்தையும் தந்தைக்கு கொடுத்தார். ஆனால் அதற்குப் பின் தனது தந்தையோடு அவர் பேசவே இல்லை. பெயரைக் கூட மாற்றி ஒட்டுறவை அறுத்துக்கொண்டார்.

# மாயமான தீவு




1846 ஆம் ஆண்டுக்கு முன்னர் இருக்கும் உலக வரைபடங்களை எடுத்துப் பாருங்கள், அதிலே பெர்மிஜா தீவு என்ற பெயர் கொண்ட சிறிய தீவு ஒன்று இருக்கும். மெக்சிகோ வளைகுடாவில் யுகாடன் தீபகற்பத்தின் கரைக்கு அப்பால் இந்த தீவு இருந்தது. 1846 க்கு முன்னர் வரையப்பட்ட எல்ல உலக வரைபடங்களிலும் கட்டாயம் இந்த தீவு இருக்கும். அதுவும் அதே இடத்தில் அதே வடிவத்தில் கச்சிதமாக இருக்கும். என்றாலும், 1846 ஆம் ஆண்டுக்குப் பின்னரான அனைத்து வரைபடங்களிலும் அந்த தீவு மாயமாக மறைந்துவிட்டது. இப்போதிருக்கும் வரைபடங்களை பார்த்தால் அப்படி ஒரு தீவு இல்லவே இல்லை. உண்மையில் அப்படி ஒரு தீவு இல்லாமலேயே அது வரைபடத்தில் சேர்க்கப்பட்டிருக்கலாம் என்பது சிலரின் கூற்று. என்றாலும் அனைத்து உலக வரைபடங்களிலும் அப்படி ஒரு தீவு இருப்பதாக குறிப்பிட்டு அது திடீரென மறைந்து போனது உண்மையிலேயே மர்மமானது.

# மனைவியை மறந்த கணவர்



பூகோள சஞ்சாரம்

பிர்தௌஸ்



மனைவியுடன் வாகனத்தில் செல்லும் கணவன்மார் மறந்து போய் மனைவியை விட்டு விட்டு வாகனத்தை ஓட்டிச் செல்லும் கதைகள் சாதாரணமாக நிகழும் ஒன்று. ஆனால் தாய்லாந்தைச் சேர்ந்த 55 வயது பூன்டொம் செய்மூன் என்ற கணவர் மறந்துபோய் மனைவியை விட்டு விட்டு 100 மைல்கள் தூரம் வாகனத்தை ஓட்டிச் சென்றிருக்கிறார்.

கடந்த ஆண்டு கிறிஸ்மஸ் விழாவுக்காக மாஹா சரகம் மாகாணத்தில் இருக்கும் தமது ஊருக்கு செல்லும்போதே இந்த சம்பவம் நிகழ்ந்திருக்கிறது. 46 வயதான தனது மனைவி அம்னுவாய் செய்மூனுடன் காரில் சென்ற செய்மூன், மனைவி சிறுநீர் கழிப்பதற்காக வாகனத்தை வீதி ஓரத்தில் நிறுத்தியிருக்கிறார். மனைவி வேலையை முடித்து விட்டு வருவதற்குள் வாகனத்தை இழுத்த கணவர் எந்தக் கவலையும் இல்லாமல் அதனை நிறுத்தமால் ஓட்டிச் சென்றிருக்கிறார். மனைவி பின் இருக்கையில் உறங்குகிறார் என்பது அவரின் நினைப்பு.

அப்போது மனைவியிடம் கைபேசி அல்லது பணம் கூட இருக்கவில்லை. அது ஒரு காட்டுப் பகுதி என்பதால் உதவி கேட்டு நடக்க ஆரம்பித்திருக்கிறார். 13 மைல்கள் நடந்து சென்ற மனைவி பொலிஸ் நிலையத்தைக் கண்டு கணவரை கண்டுபிடித்துத் தரும்படி கேட்டிருக்கிறார். ஆனால் கணவனின் தொலைபேசி இலக்கம் தெரியாததால் தனது தொலைபேசிக்கு 20 தடவைக்கு மேல் அழைத்தபோதும் காரை ஓட்டிய கணவருக்கு அது கேட்கவில்லை.

கடைசியில் மனைவி காரில் இல்லை என்பது தெரியும்போது அவர் 100 மைல் தூரம் காரை ஓட்டி வந்துவிட்டார். வேறு வழியின்றி காரை திருப்பிக்கொண்டு வர வேண்டியதாயிற்று.



# பெண்களை பற்றி தெரியுமா?

1989 ஆம் ஆண்டு பிரசுரிக்கப்பட்ட புத்தகம் ஒன்று இன்று வரை பல பதிப்புகளை கண்டுள்ளது. பலரும் கேட்டுக்கேட்டு வாங்குகிறார்கள். அதிலும் ஆண்களிடம் கிராக்கி அதிகம். விமர்சகர்களிடமும் அந்தப் புத்தகம் அதிக பாராட்டை பெற்றிருக்கிறது. ஆங்கிலத்தில் வெளியான அந்தப் புத்தகத்தின் தலைப்பு, "ஆண்களுக்கு பெண்களைப் பற்றி தெரிந்த அனைத்தும்." தலைப்பைப் பார்த்து ஆச்சரியப்பட்டு வாங்கியவர்கள் அதிகம். ஆனால் அந்தப் புத்தகத்தில் 120 பக்கங்களும் வெற்றுக் காகிதங்களாகவே இருக்கும்.




நிருபர் : தீபாவளிக்கு ரிலீசாகுற உங்க படம் பிச்சுக்கிட்டு போகும்ன்னு சொல்றீங்களே,,,,, படத்துக்கு என்ன பெயர்
தயாரிப்பாளர் : "ராக்கெட்டு"
ஜோன்ஸ் : என் ஜாதகப்படி எனக்கு அறிவு ரொம்ப ஜாஸ்தியாம்.
லதா : இப்பவாது தெரியுதா நான் ஏன் ஜாதகத்தை நம்பு றதில்லைன்னு.
மணமகன் : உங்கப்பா காய்கறி வியாபாரியா இருக்கலாம். அதுக்காக இப்படியா பண்றது ?
மணப்பெண் : ஏன் .. .. ? என்னாச்சு.. .. .. ?
மணமகன் : முதலிரவு அறையில் போய் பாரு... பூச்சரத்துக்கு பதிலா புடலங்காயை தொங்க விட்டிருக்கார்
பெண் : உங்களுக்குத் தேவை இல்லாதது ஏதாவது இருந்தால் போடுங்கள். காசு கொடுக்கிறேன்.
ஆண் : ஒரு நிமிஷம் இரு. என் மனைவியைக் கூப்பிடு கிறேன்.
சிவன் : நம்ம படம் B அண்ட் உல மட்டும் ஃபுல்லா ஒடு துன்னீங்க .. .. பின்ன கலேக்ஷனே சரியில்லையே ?
தனம் : B அண்ட் உனு நான் சொன்னது ஏரியா இல்லே சார் .. .. தியேட்டர் வரிசை
டாக்டர் பிரசாத் : ஆப்ரே சன்ல உங்க மாமியார் பிழைச்சிட்டாங்க .
வாணி : ஹீம். உங்களப் போய்கைராசி டாக்டர்ன்னு சொன்னாங்களே !!
ஆசிரியை : எங்கே ஆங்கில எழுத் துக்களை வரிசையா சொல்லு
மாணவன் : பி, சி, டி,எப்
ஆசிரியை : டே! ஏன்டா முதல் எழுது ஏ விட்ட??
மாணவன் : அது வயது வந்த வங்களுக்கு மட்டும் சார்
விமலா : உங்க பையன் கோவிலுக்குப் போனா அதிகமா பொய் பேசறானே, ஏன்?
கமலா : கோவிலுக்குள்ளே போனதும் அவன் மெய் மறந் துடுவான்.
ரமனன் : அந்த மேஜை ரொம்ப வெட்கப்படுது
முராரி : ஏன்?
ரமனன் : அதற்கு டிராயர் இல்லை.
மாலா : அதிரடி மெகா சீரியல் எடுக்கிறீங்களா... என்ன தலைப்பு ?
ராதா : இதுவாடா முடியும்
தோழி 1 : உன் கணவர் உடம் புக்கு முடியாம படுத்த படுக்கையா கிடந்தாரே... இப்ப எப்படியிருக்கார்.
தோழி 2 : ஏதோ பரவாயில்லை... காலைல எந்திரிச்ச தும் காபி மட்டும் போட்டுத் தர்றார்.
ரமணன் : ஃபைனான்ஸ் கம்பெனியில கடன் வாங்கித்தான் அந்தப் படத்தை எடுத்தாங்களாம்
லட்சுமி : அதான் .. .. படம் தியேட்டரைவிட்டு சீக்கிரமா ஒடிடுச்சு

# முத்தமிழ் மாநாடு







அமெரிக்க முத்தமிழ் பேரவை, முத்தமிழ் கூட்டமைப்பு இணைந்து நடத்திய " முதலாவது உலக முத்தமிழ் மாநாட்டின் இரண்டாம் அமர்வு அக்டோபர் 29 ம் திகதி இறம்பொடை தொண்டமான் மண்டபத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் இடம்பெற்ற ஆய்வரங்கில் "குறிஞ்சி " அரங்கில் " மலையக நாவல் இலக்கிய செல்நெறி " எனும் தலைப்பில் நிகர் சமூக கலை இலக்கிய அரங்கத்தின் அமைப்பாளர் அருணாசலம் லெட்சுமணன் உரையாற்றினார். அமர்வில் பங்கேற்ற ஆய்வாளர்கள்.

அரங்கில் பங்கேற்ற ஆய்வாளர்கள், நிகழ்வை தலைமையேற்ற தாழை. இரா. உதயநேசன், பேராசிரியர் குறிஞ்சி வேந்தன் ஆகியோரிடமிருந்து பங்கேற்பு சான்றிதழை பெற்றுக்கொண்டனர்.

முதலாவது உலக முத்தமிழ் மாநாட்டு ஆய்வரங்கில் முன்வைக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகளில் சிறந்த முதல் ஐந்து கட்டுரைகள் தேர்ந்தெடுக்கப்பட்டன. அவ் ஐந்து கட்டுரைகளில் முதலாவது கட்டுரையாக " மலையக நாவல் இலக்கிய செல்நெறி" எனும் தலைப்பில் முன்வைக்கப்பட்ட கட்டுரை தெரிவு செய்யப்பட்டு அதற்கான சான்றிதழை தஞ்சாவூர் தமிழ் பல்கலைக் கழக பதிவாளர், அயல் நாட்டு கற்கைகள் துறைத் தலைவர் பேராசிரியர் குறிஞ்சி வேந்தன் ஆகியோர் வழங்கினர்.









றோயல் இன்ஸ்டிடியூட் (சர்வதேச பாடசாலை) கம்பஹா கிளையின் சிரேஷ்ட ஆசிரியை ஷிஹாரா ஹலால் டீனின் ஏற்பாட்டில் பாலர் பிரிவு மாணவர்களுக்கான இரு நூல்களின் வெளியீட்டு வைபவம் (29) ஞாயிற்றுக்கிழமை மாலை நுகேகொட ரிபல் (Raffles Banquet) வரவேற்பு மண்டபத்தில் நடைபெற்ற போது நூல்களில் முதல் பிரதிகளை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் ஹாசிம் உமர் நூலாசிரியரிடமிருந்து பெறுவதையும் ஏனைய நிகழ்வுகளையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: ருசைக் பாரூக்)

# 'கொலுஷு' நூல் வெளியிட்டு விழா















பிரபல சிங்கள எழுத்தாளரும் கவிஞரும் மத்திய மாகாண விருதுகள் பெற்றவருமான மாத்தளை மாவட்டச் செயலக தகவல்துறை உயர் அதிகாரியுமான காமினி நிஸாந்த கருணாரத்னவின் 'அமல் பிஸோ', 'குருலு பாலுவ' இரண்டு சிறுவர் நூல்களின் வெளியீட்டுவிழா அண்மையில் மாத்தளை மாவட்ட செயலக வீரகெப்படிபொல கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மலையகத்தின் மூத்த எழுத்தாளர்களில் ஒருவரான மாத்தளை மலரன்பன் தமிழாக்கம் செய்து கலை ஒளி முத்தையாபிள்ளை நினைவுகுழு வெளியிட்டுள்ள 'கொலுஷு' பிறமொழிச் சிறுகதைகள் நூல் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. சாலிய குணவர்த்தனவால் ஆங்கிலத்தில் இருந்து சிங்களத்திற்கு மொழிபெயர்த்த 10 கதைகளையும், சிங்கள எழுத்தாளர்களான ஜி.பி. சேனாநாயக்க, தெனகம சிறிவர்தன, கபிலகுமாரகாலிங்க, காமினி நிசாந்த கருணாரத்ன ஆகியோர் சிங்கள மொழியில் எழுதிய நான்கு கதைகளையும் மலரன்பனால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட 14 சிறுகதைகளையும் 'கொலுஷு' பிறமொழிச் சிறுகதைகள் என்றபெயரில் கலைஒளி முத்தையாபிள்ளை நினைவுகுழு வெளியிட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

விழாவிற்கு பிரதம அதிதியாக கலந்துகொண்ட விளையாட்டுத் துறை இராஜாங்க அமைச்சர் ரோகணதிஸாநாயக்காவிடம் கலை ஒளி முத்தையாபிள்ளை நினைவுக்குழு செயலாளர் கலை இலக்கிய ஆன்மீக செயற்பாட்டாளர் எச்.எச்.விக்கிரமசிங்க இந்த நூலை கையளிப்பத்தார். மாத்தளை மாவட்ட மேலதிக செயலாளர்களான நிஸாந்த கருணாதிலக்க, ரிஸ்மினா ரியால்தின் இருவருக்கும் நூலை வழங்கினார்.

# குழந்தைகளை பாதுகாப்போம், அவர்களின் உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிப்போம்



உலக மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பகுதியினர் குழந்தைகள். எனவே அவர்கள் போர்கள், கலவரங்கள் மற்றும் போராட்டங்கள் மற்றும் இயற்கை பேரழிவுகளில் அதிகம் பாதிக்கப்படுகின்றனர் என்று மனித அபிவிருத்தி தாபனத்தின் திட்ட இணைப்பாளர் திருமதி பொ. லோகேஸ்வரி தெரிவித்தார்.

சிறுவர் தினதை முன்னிட்டு மனித அபிவிருத்தி தாபனத்தின் ஏற்பாட்டில் தெல்தோட்டைப் பிரதேசத்தில் நடைபெற்ற சிறுவர் தின வைபவத்தின் போது இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட மனித அபிவிருத்தித் தாபனத் திட்ட இணைப்பாளர் திருமதி பொ. லோகேஸ்வரி இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து பேசுகையில், சில மலையக சமூகத்தில் வருமானம் ஈட்டும் குழந்தைத் தொழிலாளர் குடும்பங்களின் வாழ்வாதாரமாக உள்ளது. எனவே, குழந்தைகளின் வாழும் உரிமை, வளர்ச்சி, பாதுகாப்பு மற்றும் பாகுபாட்டிற்கு எதிராக பாதுகாப்பதற்கான பொறுப்புக்கள் பெற்றோர் அல்லது பாதுகாவலர்கள் மற்றும் அரசிடம் உள்ளது.

மலையக மக்கள் இலங்கைக்கு வந்து 200 வருடமாகின்றது. தற்போது நான்காவது பரம்பரையினரும் லயன் அறையிலேயே வாழ்கின்றனர்.

நாட்டின் ஏனைய சமூகங்களில் உள்ள சிறார்களின் பெற்றோருக்கு காணி மற்றும் வீட்டுரிமை காணபடுகிறது. ஆனால் நாம் லயன் அறையிலேயே வாழ்கின்ற நிலை அல்லது கவலை மலையக சிறுவர்களின் மத்தியில் அவதானிக்க கூடியவிடயமாக உள்ளது. மலையக சிறுவர்கள் குழந்தை தொழிலாளியாக செல்வதற்கு இவ் விடயமும் ஒரு காரணமாக காணப்படுகிறது.

எனவே மனித அபிவிருத்திதாபனம் யுனப்ஸ் விருத்தி வலை பின்னலுடன் அனுசரணையுடன் இணைந்து குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிப்பதற்கான பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

அத்துடன் மனிதஅபிவிருத்தித் தாபனமானது குழந்தைத் தொழிலாளர் முறையை கடுமையாக எதிர்ப்பது மட்டுமன்றி சட்ட ஆலோசனைமற்றும் ஆதரவை வழங்குகிறது என்றும் திட்ட இணைப்பாளர் மேலும் குறிப்பிட்டடார்.

# பாரிஸில் 'இலக்கியத் தென்றல்' கலைஞர் கோவிலூர் செல்வராஜனின் பொன்விழா!










ஈழத்துக் கலையுலகில் மீன்பாடும் தேன் நாடு தந்த கலைஞராக, சிறப்புக்கள் பலவற்றுடன் வலம் வருபவர் கோவிலூர் செல்வராஜன்.

இவர் இலக்கியத்துறையில் செயற்பட ஆரம்பித்து 50 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளார். இதனை மட்டுநகரில் அவரது நண்பர்கள் விழா எடுத்துக் கொண்டாடினார்கள்.

'பொன்விழா' கொண்டாட்டம் மட்டக்களப்பில் ஆரம்பித்து, கொழும்பு தமிழ்ச் சங்கத்திலும் நடைபெற்றது. தொடர்ந்து பிரிட்டன், நோர்வே, ஜேர்மனி என நடைபெற்றன.

ஒக்ரோபர் 29ம் திகதி சனிக்கிழமை பிரான்ஸிலும் நடைபெற்றது.

பாரிஸ் புறநகர் பொண்டி (Bondy) தமிழ்ச்சோலை அரங்கில் நடைபெற்ற விழாவிற்கு, ஈழத்தின் மூத்த எழுத்தாளர் கவிஞர் வி.ரி.இளங்கோவன் தலைமை தாங்கினார்.

விழா, செல்வி தியா ஜெகதீஸ்வரனின் வரவேற்பு நடனத்துடன் ஆரம்பமானது.

கோவிலூர் செல்வராஜனின் பொன்விழாவிற்காகத் தயாரிக்கப்பட்ட 'பொன்விழா' மலருடன், அவர் எழுதிய 'நல்லது நடக்கட்டும்' சிறுகதை நூல், 'கிழக்கிலங்கையில் மறைந்த இலக்கிய ஆளுமைகள்' என்ற நூலும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டன.

'நல்லது நடக்கட்டும்' சிறுகதை நூல் பற்றி தனா பாலசிங்கம் பேசினார். இவர் சிறுகதை நூலின் கதைக்கருவையும், அதனைக் கோவிலூர் செல்வராஜன் கையாண்டுள்ள தன்மை பற்றியும் தெளிவாக எடுத்துரைத்தார்.

'கிழக்கிலங்கையில் மறைந்த இலக்கிய ஆளுமைகள்' என்ற நூல் தொடர்பாக ஒலிபரப்பாளர் நவாஜோதி பேசினார்.

ஒரு நீண்ட இடைவெளிக்குப்பின்னர் இவருடைய பேச்சைக் கேட்பதற்கு ஒரு வாய்ப்புக் கிடைத்தது. நூலில் குறிப்பிடப்பட்ட ஆளுமைகள் சிலரை நேரடியாகத் தெரிந்தவராக, அவர்களோடு பழகியவராகத் திகழ்ந்ததால் புதிய பல தகவல்களை எடுத்துக் கூறியிருந்தார்.

மட்டக்களப்புப் பற்றியும், கலைஞர்கள் பற்றியும் பல விடயங்களைத் தெரிவித்தார். 'மீன் மகள் பாடுகிறாள் வாவி மகள் ஆடுகிறாள்' என்ற பாடலின் முதல் வரிகளை இனிமையாகப் பாடி அந்தப் பாடலுக்கு முதன் முதலில் இசையமைத்த ஜீவன் மாஸ்ரரின் இசைப்பணிகளையும் விளக்கியிருந்தார்.

தலைமைதாங்கிய வி.ரி.இளங்கோவன் 'பொன்விழா' மலரின் உள்ளடக்கங்கள், கோவிலூர் செல்வராஜனின் உலகளாவிய தொடர்புகள், தொடர்ச்சியான செயற்பாடு



எனபவற்றை அழகாக எடுத்துரைத்தார். புத்தகம் அச்சிடுவதும், அவற்றைக் காவித் திரிவதும், இவ்வாறு கூட்டங்கள் நடத்துவதும் ஒரு வெறித்தனமான செயல். இவற்றைச் செய்து கொண்டே இருப்போம் என நகைச்சுவையுடன் எடுத்துக் கூறியிருந்தார்.









ஈழத்தின் மூத்த பத்திரிகையாளர், 'ஈழநாடு' முன்னாள் உதவி ஆசிரியர் எஸ்.கே.காசிலிங்கம் விழாவில் நேரடியாகக் கலந்து கொள்ள முடியாத பொழுதிலும் ஓர் ஆசிச் செய்தியை குறுந்தகவலாக அனுப்பியிருந்தார். அதனைத் தலைவர் அரங்கில் வாசித்தளித்தார். கோவிலூர் செல்வராஜனுக்கு ஆசிரியர் த.பரமேஸ்வரன், ஸ்ரீ பாரதி' அச்சக உரிமையாளர் இரா. ஸ்ரீதரன், சு.கருணாநிதி ஆகியோர் வாழ்த்துரை வழங்கிப் பொன்னாடை போர்த்தி மதிப்பளித்தார்கள். தலைவர், பேச்சாளர்கள், செயற்பாட்டாளர் குலராஜ் , ஒளிப்பதிவாளர் பாபு, நிழல் படப்பிடிப்பாளர் குகன் ஆகியோரும் பொன்னாடை போர்த்தி மதிப்பளித்ததை அடுத்து, அனைவருக்கும் நூல்கள் வழங்கப்பட்டன.

கோவிலூர் செல்வராஜன் ஏற்புரை நிகழ்த்தினார்.

**அசல் கேசரி**

---









இலங்கை வலைப்பந்தாட்ட சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நாடு முழுவதிலும் இடம்பெற்று வருகின்ற Level 0 வலைப்பந்தாட்ட பயிற்றுவிப்பாளர்களுக்கான பயிற்சி நெறி இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் வலைப்பந்தாட்ட பயிற்றுவிப்பாளரும் இலங்கை வலைப்பந்தாட்ட சம்மேளனத்தின் கவுன்சில் உறுப்பினருமான SMB. ஆசாத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டு தென்கிழக்கு பல்கலைக்கழக உள்ளக அரங்கத்தில் நடத்தப்பட்டது. இந் நிகழ்வில், வளவாளர்களாக S. ரெக்ஸ் அருள்நேசன்( மாவட்ட விளையாட்டு பயிற்றுவிப்பாளர் மன்னார்) மற்றும் MRM. ஜெஸ்மின்( மாவட்ட விளையாட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர்மன்னார்) ஆகியோர் கலந்து சிறப்பித்ததுடன் பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை விளையாட்டுப்பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் ஏனைய விளையாட்டு தொடர்பானவர்களும் கலந்து கொண்டனர். இப்பாடநெறியின் இறுதியில் சித்தியடைந்த அனைவருக்கும் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

# 34 வருடங்களாக ஜெர்மனியில் வாழும் பாடகர் நவாலியூர் பாஸ்கரன்



**வணக்கம் உங்களை பற்றிய அறிமுகத்தை தெரிந்து கொள்ளலாமா?**

எனது பெயர் சிறீல் எட்மன் றெஜினோட் பாஸ்கரன் பிறப்பிடம் யாழ்ப்பாணம் நவாலியூர். கடந்த 34 வருடங்களாக ஜெர்மனியை வசிப்பிடமாகக் கொண்டவன்.

நீங்கள் ஐரோப்பிய தேசங்களில் தமிழ் மக்கள் மத்தியில் பிரபல பாடகராக திகழ்கிறீர்கள். இந்த இசைப்பயணம் எப்போதும் ஆரம்பமானது.

சிறுவயது முதலே பாடுவேன். பாடசாலை நிகழ்ச்சிகள் மற்றும் விழாக்களில் பாடுவேன். குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில் எனும் போது 1996 ஆம் ஆண்டு ஜெர்மனியில் இலங்கையின் பிரபல அறிவிப்பாளர் பி. எச். அப்துல் ஹமீது பாட்டுக்கு பாட்டு நிகழ்ச்சி ஒன்றை நடத்தினார். அந்த நிகழ்ச்சியில் நான் சிறந்த பாடகர்களில் ஒருவராகத் தெரிவு செய்யப்பட்டேன். அந்த நிகழ்ச்சியில் இசை வழங்கிய "சூப்பர் பிரின்ஸ் இசைக்குழு" தங்கள் குழுவில் என்னை இணைத்துக் கொண்டனர். அன்று தொடக்கம் ஐரோப்பிய மேடைகளில் பாடும் பணியை தொடர்ந்தேன்.

**அப்படியா? மகிழ்ச்சி! நீங்கள் இசையை முறைப்படி கற்றுள்ளீர்களா?**

இல்லை. கேள்வி ஞானத்துடன் தான் பாடுகிறேன். இது இறைவன் தந்த வரம் என்று தான் சொல்ல வேண்டும்.



**உங்கள் குருவாக நீங்கள் யாரை கூறுவீர்கள்?**

எனது குரு என்று பாடகர் ஹரிகரணையே கூறுவேன்.

காரணம் அவரின் பாடல்களை இறுவட்டுக்களில் (CD) திரும்பத் திரும்ப கேட்டு என்னை வளர்த்துக் கொண்டேன் எனலாம்.

**பல பாடல்கள் பாடியிருந்தாலும் உங்களுக்கு பிடித்த அல்லது அடிக்கடி வாயில் முணுமுணுக்கும் பாடல் எது?**

ம்......... "கொஞ்ச நாள் பொறு தலைவா. அந்த வஞ்சிக்கொடி இங்கு வருவாள்" என்ற பாடல.



**உங்கள் இசைப் பயணத்திற்கு உங்கள் குடும்பத்தினர் எவ்வாறு ஒத்துழைப்பு வழங்குகின்றனர்?**

ஆகா!!! நல்ல கேள்வி என் குடும்பத்தினர் எதிர்ப்பும் தெரிவிப்பதில்லை. இடையூறும் செய்வது இல்லை. இதனால் என் இசைப்பயணம் சுமூகமாக செல்கிறது எனலாம்.

**உங்கள் பாடல் தெரிவுகள் எவ்வகையானது?**

பொதுவாக எல்லா விதமான பாடல்களையும் பாடுவேன். மெல்லிசை பாடலே என் குரலுக்கு அதி பொருத்தமாக இருப்பதால் அவ்வாறானப் பாடல்களையே நான் அதிகம் தேர்ந்தெடுப்பேன்.

**உங்கள் இலங்கை வருகையின் நோக்கம்...... ஏதாவது.... இசை வெளியீடு செய்யும் எண்ணமா?**

இல்லை. இது என் தனிப்பட்ட பயணம். அப்படி பாடல் பாடி வெளியிடும் சந்தர்ப்பம் கிடைத்தால் நிச்சயமாக செய்து முடிப்பேன்.

**ஏன் நீங்கள் திரைப்படத்தில் பாட முயற்சி செய்யவில்லை.**

சிரிப்புடன்

நீங்கள் சொன்னால் நம்ப மாட்டீர்கள். 1998 ஆம் ஆண்டு எனக்கு நடிப்பதற்கு வாய்ப்பு கிடைத்தது. நானே நிராகரித்து விட்டேன். இப்போதே அதன் ஏக்கம் இலேசாக வந்து செல்லும். காற்றுள்ள போதே தூற்றாமை இதுதான்.

**இசைத் துறையில் எதை சாதிக்க ஆசைப்படுகிறீர்கள்?**

எனக்கு சுயாதீன பாடகராக வலம் வர வேண்டும்.

**உங்கள் இசைப் பயணத்தில் நீங்கள் சாதித்த நிகழ்வு எதுவென நினைக்கிறீர்கள்?**

நெதர்லாந்து தொலைக்காட்சியில் பாடகராக அறிமுகமான மூன்று வாரங்களில் நடுவராக பயணிக்க வாய்ப்பு கிடைத்தமை இனிமையான அனுபவம்.1 1/2 வருட பயணம் சிறப்பாக இருந்தது. சொந்த தேவை காரணமாக நான் தொடர்ந்து பயணிக்கவில்லை. அதன் நிறுவனர் சாந்தி ரவீந்திரனுக்கு தொகுப்பாளினி திருமதி சத்தியவாணி இருவருக்கும் இவ்வேளையில் நன்றி தெரிவிக்கின்றேன் மற்றும் முகநூலின் வாயிலாக நண்பன் யோகாபாரதி நடாத்தும் பாடல் நிகழ்ச்சியான தூவானத்தின் "பாடும் வானம் பாடிகள்" நிகழ்ச்சியின் இயக்குனராக பயணிக்கிறேன். இவ் நிகழ்ச்சி பாட ஆசைபடும் பாடகர்களுக்கு ஒரு களமாகவே செயற்படுகிறது.

இதற்கு நடுவராக இலங்கை யாழ் மண்ணைச் சேர்ந்த இசை ஆசிரியை திருமதி ஹேமலதா கண்ணதாசனும் தொகுப்பாளியாக தாமரைச் செல்வியிலும் பயணிக்கிறார்கள். இந் நிகழ்ச்சி பாட ஆசைப்படுகிற உலகம் முழுதிலும் உள்ள பாடகர்கள் பங்கு பற்றலாம். இது சனிக்கிழமை மாலை 7 மணி தொடக்கம் 9 மணிவரை இணைய மெய்நிகர் ஊடாக நடைபெறும் ஒரு நிகழ்வாகும்.

அப்படியா? மகிழ்ச்சி!

**நீங்கள் இந்திய பிரபல பாடகர்களுடன் பாடியதுண்டா?**

ஆம்!

இசையமைப்பாளர் ஆதித்யனுடன் சுவிட்சிலார்ந்து நாட்டில் இசை நிகழ்ச்சியில் பங்கு கொண்டுள்ளேன். அத்துடன் ஐரோப்பியா நாடுகளில் இடம்பெறும். இந்திய பாடகர் நிகழ்ச்சியில் பிரபல பாடகர்களுடன் நானும் சேர்ந்து பாடிய சந்தர்ப்பங்கள் ஏராளம் உள்ளன.

**வளரும் பாடகர்களுக்கும் தங்களின் கருத்து எதுவாக இருக்கும்.**

முதலில் எதுவும் முடிமென தன்னம்பிகை உங்கள் மீது வையுங்கள். உங்கள் குரலுக்கு



ஏற்ற பாடலை தெரிவு செய்யுங்கள். அதிகளவு பயிற்சியை மேற்கொள்ளுங்கள்.

**உங்கள் கனவு நிறைவேறும் வரை ஓய வேண்டாம்.**

அத்துடன் எத்தனை குழுக்களில் பாடினாலும் உங்கள் முன் இன்று அடையாளம் காண்பதற்கு முகநூல் இரசிகர்களே காரணமாக இருந்தனர், இருக்கின்றனர், என்றும் என்னுடன் இருப்பர். அவர்களுக்கு இவ்வேளையில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். அத்துடன் நேர்காணல் செய்த உங்களுக்கும் உங்கள் பத்திரிகை குழுவினருக்கும் மிக்க நன்றி.

முனைவர் கே. ஈஸ்வரலிங்கம் ✍
(அமெரிக்க தமிழ்ப் பல்கலைக்கழகம்)







# முத்தமிழுக்காக வாழும் "முனைவர்" பட்டம் பெற்ற இத்தமிழன் ஈஸ்வரலிங்கம்!

## கையில் ஒலி வாங்கியை எடுத்தால் அரங்கமே அதிரும் இவரின் அறிவிப்பில்



அமெரிக்க முத்தமிழ் பல்கலைக்கழகம் மற்றும் உலக முத்தமிழ்க் கூட்டமைப்பின் நிறுவுநர் முனைவர் தாழை இரா. உதயநேசன், உலக முத்தமிழ்க் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் முனைவர் இரா. குறிஞ்சிவேந்தன் முன்னிலையில், அண்மையில் முனைவர் பட்டம் பெற்று தனக்கான அங்கீகாரத்தை தாமதமாக பெற்றுக் கொண்ட இனிமையான மனிதர். பார்க்க பவ்வியமாக இருந்தாலும் கையில் ஒலி வாங்கியை எடுத்தால் அரங்கமே அதிரும் இவரின் அறிவிப்பில்.

இலங்கையில் 35 வருடங்களுக்கு மேலாக ஊடகத் துறையில் சாதனை படைத்துக் கொண்டு சத்தமின்றி இருக்கும் ஒரு கலைஞர் இவர். பல கலைஞர்களை தன் ஊடகம் மற்றும் சமூக சேவையூடான பயணத்தில் வஞ்சகமின்றி அறிமுகம் செய்து அடையாளம் காட்டும் இவரை இன்று நாம் அடையாளம் கண்டு கொள்வோம்.

பெயர் கந்தையா ஈஸ்வரலிங்கம்.



தினகரன், தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைகளின் ஊடகவியலாளர்.

அரச அங்கீகாரம் பெற்ற மொழிபெயர்ப்பாளர். கவிஞர், சிறுகதை எழுத்தாளர், அறிவிப்பாளர். இவருக்கு ஊடகவியலாளராக 35 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவம் உண்டு.

மேடை நாடக நடிகர், சிறுவர்கள் மற்றும் பெண்கள் தொடர்பான வேலை திட்டங்களில் பங்கெடுத்து வருபவர்.

கலை, இலக்கியவாதிகளையும் கலைஞர்களையும் பத்திரிகை ஊடாக வாரம் தோறும் நேர்காணல் செய்து இலை மறை காயாக இருக்கும் பலரையும் வெளி உலகிற்குக் கொண்டு வந்தவர்.

மேல் மாகாண சபையின் அரச விருதும் இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம் வழங்கிய கலைச்சுடர் விருதும் இவர் பெற்றுக்கொண்ட விருதுகள் ஆகும்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் அகில இலங்கை ரீதியாக நடத்திய அறிவிப்பாளர் போட்டி, கவிதை, சிறுகதை போட்டிகளில் முதலிடம் பெற்று விருதுகள் பல பெற்றுக் கொண்டுள்ளதுடன் பத்திரிகைகளிலும் அவ்வப்போது ஆக்கங்கள் எழுதி வருகின்றமை குறிப்பிடத் தக்கது.

தினகரன் பத்திரிகையில் திங்கள் தோறும் வெளிவரும் சைவ மஞ்சரி பக்கத்தைத் தொடர்ந்து 25 வருடங்களாக நடத்தி வருகின்றமை குறிப்பிடத் தக்கது.

தினகரன் வாரமஞ்சரியின் செந்தூரம் இதழை தொடர்ந்து நடத்தி வருவதும் குறிப்பிடத்தக்கது.





அகில இலங்கை சமாதான நீதவான். அரச ஆவணங்களான பிறப்பு, இறப்பு அத்தாட்சிப் பத்திரம், திருமணச் சான்றிதழ் மொழிபெயர்ப்பு செய்து வழங்குகிறார். சமய அறிவு வளர. சமய வகுப்புகள் நடத்தி வருகின்றார். கலைஞர்கள் மற்றும் ஆளுமைக்கு விருதுகள் வழங்கிட பலரை அடியாளம் காட்டுவது சிறப்பான செயல்களில் ஒன்றாகும். சமய அறிவு வளர அறநெறி போட்டிகளை நடத்தி வருகின்றமை இவரது சமயத் தொண்டுகளில் ஒன்று.

**முனைவர் க. ஈஸ்வரலிங்கத்தை வாழ்த்தும் நாம்**
**சங்கமம் தொலைக்காட்சியின்**
**என்.டி.எஸ்(ஜெர்மனி)**

# டூ பீஸ் நீச்சல் உடையில் பிரியங்கா மோகன்



நடிகை பிரியங்கா மோகன் வெப் சீரிஸ் ஒன்றில் நடிக்க சம்மதம் தெரிவித்திருக்கிறார் என்றும் இந்த வெப் சீரிஸில் முதன்முறையாக டூ பீஸ் நீச்சல் உடையில் நடிக்க இருக்கிறார் என்றும் தகவல்கள் வெளியாகி இருக்கின்றன.

இது ரசிகர்களை வியப்பில் ஆழ்த்தியிருக்கிறது. சினிமாவில் குடும்பப்பாங்கன கதாபாத்திரங்களில் நடித்துக் கொண்டிருந்த நடிகை பிரியங்கா மோகன் வெப் சீரிஸில் நீச்சல் உடையில் நடிக்க சம்மதம் தெரிவித்துள்ளார் என்ற தகவல் இணையத்தில் வைரலாகி வருகின்றது.

தமிழில் டாக்டர், டான் உள்ளிட்ட இரண்டு திரைப்படங்களில் நடித்ததன் மூலம் ரசிகர்கள் மத்தியில் பெருவாரியான வரவேற்பு பெற்றவர் பிரியங்கா மோகன்.

இவருக்கு என தனி ரசிகர் பட்டாளமே இருக்கிறது. தொடர்ந்து எதற்கும் தெரிந்தவன் என்ற திரைப்படத்தில் நடிகர் சூர்யாவுக்கு ஜோடியாக நடித்திருந்தார். தமிழ் தெலுங்கு என இரண்டு மொழிகளிலும் பிஸியான நடிகையாக வலம் வந்து கொண்டிருக்கும் நடிகை பிரியங்கா மோகன் திரைப்படங்களில் அளவான கிளாமர் காட்டி தான் நடித்து வருகிறார்.

தெலுங்கு திரைப்படங்களில் கிளாமரான காட்சிகள் நடித்திருக்கிறார் என்றாலும் கூட இதுவரை நீச்சல் உடையில் நடித்தது கிடையாது.

இந்நிலையில், முதன்முறையாக வெப் சீரிஸ் ஒன்றில் நீச்சல் உடையில் நடிக்க இருக்கிறார் என்று கூறப்படுகிறது. தமிழ் தெலுங்கு ஹிந்தி என மூன்று மொழிகளில் உருவாக உள்ள இந்த வெப் சீரிஸில் இன்னும் சில முன்னணி நடிகைகள் நடிக்க ஒப்பந்தமாகி இருக்கிறார்கள் என்று கூறப்படுகிறது.

கிரைம் திரில்லர் ஜானரில் உருவாக உள்ள இந்த வெப் சீரிஸ் குறித்த அறிவிப்பு விரைவில் வெளியாகும் என்றும் தெரிகிறது.அனல் பறக்கும் இந்த வெப் சீரிஸில் நீச்சல் உடையில் நடிப்பதற்காக பிரியங்கா மோகனுக்கு கோடிகளில் சம்பளம் பேசப்பட்டு இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆனால் இது குறித்து வெப் சீரிஸ் குழுவோ அல்லது பிரியங்கா மோகன் தரப்பு எந்த ஒரு அதிகாரப்பூர்வறிவிப்பையும் இதுவரை வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இது ஒரு பக்கம் இருந்தாலும் நடிகை பிரியங்கா மோகன் நீச்சல் உடையில் பார்க்க வலி மேல் விழி வைத்து ஏக்க பெரு மூச்சு விடுகிறார்கள் அம்மணியின் ரசிகர்கள்.

# சிவகார்த்திகேயனுக்கு கெட்ட பழக்கம் இல்லன்னு நெனச்சேன்.. ஆனால், குற்றாலத்தில்..



நடிகை ஐஸ்வர்யா ராஜேஷ் சமீபத்திய பேட்டி ஒன்றில் நடிகர் சிவகார்த்திகேயன் குறித்து தன்னுடைய அனுபவத்தை பகிர்ந்து இருக்கிறார். சிவகார்த்திகேயன் குறித்து பலரும் அறியாத ரகசியங்கள் உங்களுக்கு ஏதேனும் தெரியுமா என்ற கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு பதில் அளித்த ஐஸ்வர்யா ராஜேஷ் அவரைப் பற்றிய ரகசியம் என்றால் அவர் மது குடிக்க மாட்டார், புகை பிடிக்க மாட்டார். இன்னும் சொல்லப்போனால் சுடு தண்ணீர் கூட குடிக்க மாட்டார்.

ஒரு முறை குற்றாலத்திற்கு படப்பிடிப்பதற்காக சென்றிருந்தோம். அங்கே குளிரான சூழல் நிலவியது. அனைவரும் டீ, காபி குடித்து கொண்டிருந்தோம். சிவாவிடம் வேண்டுமா என கேட்டோம்.. ஆனால் அவர் டீ காபி கூட குடிக்க மாட்டேன் என்று கூறிவிட்டார். நான் ஷாக் ஆகிவிட்டேன். என்னங்க நீங்க குடிக்க மாட்டீங்க.. ஸ்மோக் பண்ண மாட்டீங்க.. இந்த கெட்ட பழக்கம் உங்ககிட்ட இல்லன்னு நெனச்சேன். ஆனா, டீ, காபி கூடவா குடிக்க மாட்டீங்க..? சுடு தண்ணீராவது குடியுங்கள் என்று கேட்டோம் அதுவும் வேண்டாம் என்று கூறி விட்டு கிரீன் டீ மட்டும் குடித்தார். ஒரு நடிகராக போதைப்பழக்கம் கிடையாது புகைப்பழக்கம் கிடையாது.

ஆனால், டீ காபி கூட குடிக்க மாட்டார் என்று அப்போதுதான் எனக்கு தெரியும். தன்னுடைய உடல் நலனில் அக்கறை மிகுந்த ஒரு நபர் சிவகார்த்திகேயன். அதிகமாக இனிப்புகள் சாப்பிடுவார், வாழைப்பழம் அவருக்கு மிகவும் பிடித்த பழ வகை, உணவில் பிரியாணி என்றால் வெளுத்து கட்டுவார்.. உணவுகளை விரும்பி சாப்பிடுவார் ஆனால் அளவாகவே சாப்பிடுவார். இது தான் சிவகார்த்திகேயன் குறித்து எனக்கு தெரிந்த ரகசியம் என்று கூறியுள்ளார் ஐஸ்வர்யா ராஜேஷ்.



# நிமேஷிகா எதிர் கொண்ட தர்ம சங்கடமான சூழ்நிலை



நடிகை நிமேஷிகா ராதாகிருஷ்ணன் பட வாய்ப்புக்காக படுக்கைக்கு அழைக்கும் பழக்கம் குறித்து தான் எதிர் கொண்ட தர்ம சங்கடமான சூழ்நிலை குறித்து சமீபத்திய பேட்டி ஒன்றிய பதிவு செய்திருக்கிறார்.

அவரிடம் சினிமா நடிகைகளுக்கு பட வாய்ப்புக்காக படுக்கைக்கு அழைக்கும் நபர்களின் பிரச்சினை இருக்கிறது என்று பலரும் கூறுகிறார்கள் உங்களுக்கு அப்படி ஏதேனும் பிரச்சனை வந்திருக்கிறதா..? என கேள்வி எழுப்பப்பட்டது.இதற்கு பதில் அளித்த நிமேஷிகா ராதாகிருஷ்ணன் சீரியல்களில் அப்படி பிரச்சனை இருப்பதாக எனக்கு தெரியவில்லை.

ஆனால், வெப் சீரிஸ்கள் திரைப்படங்களில் நடிக்கும் போது அவர்கள் நம்மிடம் அதை எதிர்பார்க்கிறார்கள் என்பது உண்மைதான். முதலில் காஸ்டிங் கவச்ஸ் என்றால் என்ன..? என்று எனக்கு தெரியாது.

நான் எனக்கு பட வாய்ப்பு கொடுப்பதாக கூறிய நபரிடம் கேட்டேன். சார் காஸ்டிங் கவுச் என்றால் என்ன..? எனக்கு புரியவில்லை..? என்று கூறினேன். அதற்கு அவர் நிஜமாகவே உங்களுக்கு தெரியாதா..? உன்னுடைய தோழிகளிடம் அல்லது நண்பர்களிடம் கேட்டுப் பாருங்கள் என்று கூறினார். என்ன இது பொடி வைத்து பேசுகிறார் என்று உடனே என்னுடைய தோழிகளுக்கு அழைத்து இது குறித்து கூறினேன். இதுபோல பட வாய்ப்பு கொடுக்கிறேன் என்று கூறுகிறார்கள் அதற்காக காஸ்டிங் கவுச்சிற்கு சம்மதிக்க வேண்டும் என்று கூறுகிறார்கள்.அப்படி என்றால் என்று வினாவினேன்.. அவர்கள் கூறியதைக் கேட்டு நான் மிரண்டு போய்விட்டேன். பட வாய்ப்புக்காக அவர்கள் உன்னையே கேட்கிறார்கள் என்று கூறினார்கள். எனக்கு ஒரு நிமிடம் தூக்கி வாரி போட்டது.

உடனே அப்படி கேட்ட அந்த இயக்கத்துக்கு போன் செய்து கண்டபடி திட்டினேன். எனக்கு தெரிந்த அனைத்து கெட்ட வார்த்தைகளையும் பயன்படுத்தி பயங்கரமாக திட்டினேன். எவ்வளவு தைரியம் இருந்தால்.. நீங்கள்.. இப்படி என்னிடம் கேட்பீர்கள்.. எங்களுக்கு பட வாய்ப்பு கொடுக்கவில்லை என்றாலும் பரவாயில்லை. இப்படியான விஷயங்களை கேட்காதீர்கள்..? என்று கடுமையாக திட்டிவிட்டேன் என்று கூறியிருக்கிறார் நிமேஷிகா ராதாகிருஷ்ணன்.

# இவரைத்தான் கல்யாணம் பண்ணிக்க போறேன்..!

நடிகை ஸ்ரீதிவ்யா சமீபத்திய பேட்டி ஒன்றில் தன்னுடைய திருமணம் பற்றி வாய் திறந்து இருக்கிறார். அதில் அவர் பேசிய விஷயங்கள் உங்களுக்கு திருமணம் எப்போது நடக்கும்..? அப்படி நடந்தால்.. அது காதல் திருமணமாக இருக்குமா..? அல்லது பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்ட திருமணமாக இருக்குமா..? என்று கேள்வி எழுப்பப்பட்டது. இதற்கு பதிலளித்த நடிகை ஸ்ரீதிவ்யா, என்னுடைய திருமணம் காதல் திருமணமாகத்தான் இருக்கும்.

நான் என்னுடைய காதலனைத்தான் திருமணம் செய்து கொள்ளப் போகிறேன். நிச்சயமாக விரைவில் அதனை உங்களுக்கு அறிவிப்பேன் என கூறியிருக்கிறார். நடிகைகள் பலரும் திருமணம் பற்றி பேச்சு எடுத்தாலே அதனை தவிர்த்து விடும் நிலையில் நடிகர் ஸ்ரீதிவ்யா தன்னுடைய காதலரை தான் திருமணம் செய்து கொள்ளப் போகிறேன் என்று வெளிப்படையாக பேட்டியில் போயிருக்கிறார். கடந்த 2017 ஆம் ஆண்டு சங்கிலி புங்கிலி கதவ தொற என்ற திரைப்படத்தில் நடித்திருந்தார் நடிகை ஸ்ரீதிவ்யா.

அதன் பிறகு பெரிய அளவில் பட வாய்ப்புகள் இல்லை. தற்போது இரண்டு திரைப்படங்களில் நடித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. இதில், தன்னுடைய திருமணம் பற்றிய கேள்விக்கு வெளிப்படையாக பதில் கொடுத்திருக்கிறார் ஸ்ரீதிவ்யா. இவருடைய இந்த பதில் ரசிகர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது.



# எங்க கண்ட்ரோல் எங்ககிட்ட இல்ல பூனம் பாஜ்வா..!



நடிகை பூனம் பாஜ்வா தற்போது வெறும் பிரா அணிந்து கொண்டு இடுப்பில் கை குட்டை போன்ற ஒரு துணியை கட்டிக் கொண்டு அன்ன நடை போட்ட படி தன்னுடைய பின்னழகு முன்னழகு என சகலமும் தெரிய ரிசார்ட் ஒன்றில் இருந்தபடி வெளியிட்டுள்ள வீடியோ காட்சி ரசிகர்களின் தூக்கத்தை கெடுத்திருக்கிறது.

அதிலும் நீல நிறத்திலான டாப்ஸ் அணிந்திருக்கும் நடிகை பூனம் பாஜ்வா தன்னுடைய முன்னழகு பளிச்சென ரசிகர்களின் கண்களுக்கு தெரிய தூக்கம் கெட்டு இருக்கின்றனர் ரசிகர்கள்.

சமீப காலமாக இணைய பக்கங்களில் கிளுகிளுப்பான புகைப்படங்களை வெளியிட்டு வரக்கூடியவர் நடிகை பூனம் பாஜ்வா.

இனிமேல் மறைப்பதற்கு ஒன்றுமில்லை என்று சொல்லும் அளவுக்கு சகலத்தையும் காட்டி ரசிகர்களின் தூக்கத்தை கெடுத்து வருகிறார்.

சரியான பட வாய்ப்புகள் கிடைக்காத காரணத்தினால் சினிமாவில் இருந்து ஒதுக்கி வைக்கப்பட்டு இருக்கிறார் நடிகை பூனம் பாஜ்வா.

சமீபத்தில் இயக்குனர் மற்றும் நடிகருமான நட்டி நடராஜ் நடிப்பில் வெளியான குருமூர்த்தி என்ற திரைப்படத்தில் ஹீரோயினாக நடித்திருந்தார்.

தொடர்ந்து பட வாய்ப்புக்காக முயற்சி செய்து வரும் பூனம் பாஜ்வா இப்படி கிளுகிளுப்பான புகைப்படங்களை இணையத்தில் பதிவு செய்து ரசிகர்களின் கவனத்தை ஈர்த்து வருகிறார்.

இவருடைய இந்த வீடியோ காட்சி ரசிகர்களின் கவனத்தை ஈர்த்து வருகின்றது. இதனை பார்த்து ரசிகர்கள் எங்க கண்ட்ரோல் எங்ககிட்ட இல்ல என்று கருத்துக்களை பதிவு செய்து வருகின்றனர்.

# சித்தார்த் - அதிதி



பிரபல இளம் நடிகர் சித்தார்த் மற்றும் நடிகை அதிதி இருவரும் காதலித்து வருவது அனைவருக்கும் தெரிந்த விஷயம்.

இவர்கள் ஒன்றாக ஊர் சுற்றும் புகைப்படங்கள் மற்றும் வீடியோக்கள் இணையத்தில் வைரல் ஆகின. இந்நிலையில், நடிகை அதிதி ராவுக்கு பிறந்தநாள்.

இதற்கு வாழ்த்துக்களை தெரிவிக்கும் விதமாக நடிகர் சித்தார்த் அதிதியை தன்னுடைய பொண்டாட்டி என குறிப்பிட்டு கவிதை ஒன்றை எழுதி இருக்கிறார்.

மிகவும் அழகான அந்த கவிதை ரசிகர்களின் கவனத்தை ஈர்த்திருக்கின்றது.

இந்த கவிதைக்கு அதித்தி என்ன பதில் கொடுத்திருக்கிறார் என்பதுதான் இதில் சுவாரசியமே.

அப்படி சித்தார்த் என்ன கவிதை எழுதினார் அதிதி அதற்கு என்ன பதில் கொடுத்தார்..? வாருங்கள் பார்க்கலாம். சித்தார்த் எழுதிய கவிதையானது, அவள் அழகானவள் அல்லவா..? பிறந்தநாள் வாழ்த்துக்கள் பொண்டாட்டி.. என்னோடு இருப்பதற்கு நன்றி.. உலகின் ஒவ்வொரு துணுக்கிலும் உன்னுடைய அருள் தூவி பறக்கிறது உன்னுடைய பேச்சுக்களும் சிரிப்புகளும் காற்றை நிரப்புகின்றன.. உன் முகத்தில் சிரிப்பை பார்ப்பதற்காக அனைவரும் காத்திருக்கின்றனர்..

# பிரெஞ்சு நடிகை நடிக்கும் தமிழ்ப் படம்



சஹாரா ஏஷியா புரொடக் ஷன்ஸ் சார்பில் உமா பாலு கதை எழுதித் தயாரித்துள்ள படம், 'எ ஹோம் அவே ஃப்ரம் ஹோம்'. திரைக்கதை, வசனம் எழுதி வெங்கடேஷ் குமார் ஜி இயக்கியுள்ளார். பிரபு ராமகிருஷ்ணன் ஒளிப்பதிவு செய்துள்ள இந்தப் படத்துக்கு எழில் துரை இசை அமைத்துள்ளார். இதில், பிரெஞ்சு நடிகை மனிஷா டெய்ட், அனீஷ், நிழல்கள் ரவி, ஸ்ரீரஞ்சனி உட்பட பலர் நடித்துள்ளனர். படம்பற்றி இயக்குநர் வெங்கடேஷ் குமார் ஜி கூறியதாவது:

தயாரிப்பாளர் உமா பாலு ஆசிய அளவில் நடந்த சிறுகதைப் போட்டிக்குக் கதை ஒன்றை அனுப்பினார். உண்மைச் சம்பவம் ஒன்றின் அடிப்படையில் எழுதப்பட்ட அந்தக் கதைக்கு விருது கிடைத்தது. அதைத் திரைப்படம் ஆக்கலாம் என்று நினைத்தார். திரைக்கதை, வசனம் எழுதி நான் இயக்கி இருக்கிறேன். ஜெர்மனி பல்கலைக் கழகத்தில் இருந்து தென்னிந்தியப் பழங்குடி கிராமம் ஒன்றுக்கு மாணவி ஒருவர் ஆராய்ச்சிக்காக வருகிறார். அங்கு பல மனிதர்களைச் சந்திக்கிறார். அப்போது அவர் வாழ்க்கையில் என்ன மாதிரியான மாற்றங்கள் ஏற்படுகிறது என்பதுதான் கதை. இந்தப் படத்தில் வயநாட்டில் இருக்கிற பழங்குடியினரை நடிக்க வைத்துள்ளோம். தாய்மையைச் சொல்லும் படமான இது, பல்வேறு விழாக்களில் விருதுகளைப் பெற்றுள்ளது. இதில் ஜெர்மனி பெண்ணாக நடித்துள்ள மனிஷா டெய்ட், ஏற்கெனவே 'நட்சத்திரம் நகர்கிறது' படத்தில் நடித்துள்ளார். படம் விரைவில் வெளியாக இருக்கிறது. இவ்வாறு வெங்கடேஷ் குமார் ஜி கூறினார்.

# பிறரை கேஷுவலாக டேட் செய்தேன் என்ற தீபிகா படுகோன்:

## விளாசும் நெட்டிசன்ஸ்

ரன்வீர் சிங்கை காதலித்தபோது பிற ஆண்களுடன் கேஷுவல் டேட்டிங் சென்றதாக கூறிய பாலிவுட் நடிகை தீபிகா படுகோனை சமூக வலைத்தளவாசிகள் விளாசுகிறார்கள். இந்நிலையில் அவர் இன்ஸ்டாவில் வெளியிட்ட வீடியோவுக்கு எதிர்ப்பு கிளம்பியிருக்கிறது.பாலிவுட் நடிகர் ரன்வீர் சிங்கும், தீபிகா படுகோனும் காதலித்து திருமணம் செய்து கொண்டார்கள். திருமணத்திற்கு பிறகு அவரவர் படங்களில் பிசியாக இருந்து வருகிறார்கள். இந்நிலையில் ரன்வீர் சிங், தீபிகா இடையே பிரச்சனை ஏற்பட்டிருப்பதாகவும், அவர்கள் விவாகரத்து பெறக்கூடும் என்றும் வட இந்திய மீடியாக்கள் செய்தி வெளியிட்டுள்ளன.விவாகரத்து பேச்சு அதிகரித்திருக்கும் இந்த நேரத்தில் ரன்வீர் சிங்கும், தீபிகாவும் கரண் ஜோஹரின் காபி வித் கரண் நிகழ்ச்சியில் ஜோடியாக கலந்து கொண்டார்கள். அந்த நிகழ்ச்சியில் தங்களின் காதல், திருமணம் பற்றி இருவரும் பேசியிருக்கிறார்கள்.கரணிடம் தீபிகா படுகோன் சொன்ன ஒரு விஷயம் தான் சமூக வலைதளவாசிகளின் கவனத்தை ஈர்த்திருக்கிறது. அந்த நிகழ்ச்சியில் தீபிகா கூறியதாவது,

சில காலம் சிங்கிளாக இருக்க விரும்பினேன். ஏனென்றால் என் வாழ்க்கையில் சில கடினமான உறவுகளில் இருந்து வெளியே வந்தேன். இனி யாருடனும் நெருக்கமாக இருக்கக் கூடாது, கமிட் ஆகக் கூடாது என்கிற மனநிலையில் இருந்தேன்.

அதன் பிறகு ரன்வீர் வந்தார். அதனால் அவர் ப்ரொபோஸ் செய்யும் வரை நான் கமிட் ஆகவில்லை. அந்த நேரத்தில் நாங்கள் பிறரை டேட் செய்ய அனுமதி இருந்தது. கேஷுவல் டேட்டிங் செய்தோம். இருந்தாலும் மீண்டும் மீண்டும் நாங்கள் ஒன்று சேர்ந்தோம் என்றார்.ரன்வீர் சிங்கை காதலித்த போது பிறரை டேட் செய்ததாக தீபிகா கூறியதை பார்த்தவர்கள் அவரை சமூக வலைத்தளங்களில் விளாசுகிறார்கள். இந்நிலையில் முன்னதாக கடந்த 2013ம் ஆண்டு காபி வித் கரண் நிகழ்ச்சியில் ப்ரியங்கா சோப்ராவுடன் கலந்து கொண்ட தீபிகா படுகோன் தனக்கு கேஷுவல் டேட்டிங்கே பிடிக்காது என்ற வீடியோவை தேடிக் கண்டுபிடித்து ஷேர் செய்து வருகிறார்கள் சமூக வலைத்தளவாசிகள்.முன்னதாக கரணிடம் தீபிகா கூறியதாவது, எனக்கு யாரையும் கேஷுவலாக டேட் செய்யத் தெரியாது. அட்டாச் ஆகாமல் சும்மா டேட் செய்வது எப்படி என எனக்கு தெரியவில்லை. அதென்ன கேஷுவல்னு தெரியவில்லை. அப்படி செய்வது நம் கலாச்சாரத்தில் இல்லை என்றார்.



# நாம் ஒவ்வொருவரும் சமூகத்தில் அக்கறைக் கொண்டு செயற்படுவோம்



கடந்தார தொடர்ச்சி....

அதேபோல், சிலர் தங்களுடைய தோற்றத்தைப் பற்றி சிறிதும் கவனம் கொள்ளாமல் இருப்பர்.

ஏதோ மனதினுள் மருகிக் கொண்டு திரிவார்கள். எதிர்மறை எண்ணங்கள், தனிமையை நாடுதல், மறதி, எதிலும் நாட்டமின்மை, உணவில் விருப்பமின்மை. தூக்கமின்மை, தனிப்பட்ட சுகாதாரத்தில் அக்கறையின்மை, தூக்க மாத்திரைகள் போன்றவற்றை வாங்கிவைத்து ஆயத்தமாக இருத்தல் ஆகியன தற்கொலைக்கான செயல்பாட்டுக் குறியீடுகளாம்.

வெகுநாட்களாக சோர்வாக இருந்த ஒருவர், காரணமின்றி வழக்கத்தைவிட அதீத மகிழ்ச்சியை சொல், செயல் எல்லாவற்றிலும் வெளிப்படுத்தும் போதும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என மனவள ஆலோசகர்கள் ஆலோசனை வழங்குகின்றனர். தன் வாழ்க்கையை முடித்துக் கொண்டால் பிரச்சினைகள் தீர்ந்து விடும் என்ற கற்பித்தத்தோடு அவர்கள் போலியாக மகிழ்ச்சியை வெளிப்படுத்தலாம் என்றும் கூறுகின்றனர் ஆய்வாளர்கள். காய்ச்சல், தலைவலி இன்னும் பிற நோய் அறிகுறிகள் போல் மனச்சோர்வு, மன அழுத்தம், விரக்திப் பேச்சு, விரக்திப் போக்கு என எதை நம்மிடம் உணர்ந்தாலோ அல்லது நம்மைச் சார்ந்தவர்களிடம் கண்டாலோ உடனே விழிப்புடன் செயல்பட்டு மீள்வோம், மீட்போம்.

"உலகளவில் 40 விநாடிக்கு ஒருவர் தற்கொலை செய்து கொள்கிறார். அதுவும் 20 முதல் 40 வயதுடையவர்களே அதிகமாக தற்கொலை செய்து கொள்கின்றனர்.

முன்பு தற்கொலைகளுக்கான காரணம் தனிநபர் சார்ந்ததாக இருந்தது. தனிப்பட்ட உடல் நோய்கள், மன நோய்கள், இன்னபிற குடும்பப் பிரச்சினை சார்ந்ததாக இருந்தது. ஆனால், இன்று தற்கொலைக்கான காரணங்கள் வெவ்வேறாக உருவெடுத்துள்ளன. சமூக வலைதளங்களால் எழும் பிரச்சினைகள், சைபர் பிரச்சினை என்று காரணம் நீள்கிறது.

யார் இந்த சமூக தளத்தின் ஊடாக சிக்கலில் உள்ளனர் என்பது தெரியாத நிலையில் இருக்கிறது. காரணம் சொல்லமுடியாத, பகிர்ந்து கொள்ள முடியாத நிலையில் பாராதூரமான நிலையில் கட்டுண்டு போகின்றனர். வெளியில் கூறினால் அவமானப் பட நேரிடும் அல்லது எல்லோருக்கும் தெரிய வரும் என்கிற பதற்றம்.

இந்த சமூகமும், குடும்பமும் தன்னை வெறுக்கும் என்கிற பயம். அவமானப் படுத்தப்படுவோம் என்கிற திகில்.

அப்படி நடக்கும் பட்சத்தில் தனக்குள் தாங்க முடியாத வேதனையை அனுபவிக்க வேண்டுமென எண்ணி பிரச்சினைகளை எதிர் கொள்ளும் முன்னே பயந்து தங்கள் உயிரை மாய்த்துக் கொள்கின்றனர்.

பலரின் தற்கொலைக்கான காரணம் யாதென தெரியாமலே நிறைவுக்கு வருகிறது. அலசி ஆராய்ந்தால், சமூக பிரச்சினை தான் முன்னணி வகிக்கிறது.

தற்கொலைக்கான தனிப்பட்ட காரணங்கள், சமூகக் காரணங்களாக மாறிய நிலையில் அதற்கான தீர்வும் சமூகத்தில் இருந்து தான் ஏற்பட வேண்டும். அந்த வகையில் தற்கொலைத் தடுப்பைப் பொது சுகாதாரப் பிரச்சினையாக அணுக வேண்டும் என்ற உலக சுகாதார அமைப்பின் வழிகாட்டுதல் சரியானதே. அதற்கான தீர்வு முதலில் குடும்பத்திலிருந்து தொடங்க வேண்டும். மேற்குறிப்பிட்ட வெளிப்பாடுகள் நம்மை சுற்றியுள்ள யாருக்காவது இருப்பதை அறிந்தால் நாம் முதலில் அவர்களை கண்காணிக்க வேண்டும்.

தற்கொலை ஒரு குற்றச்செயல், பாவச் செயல், முட்டாள்தனம் போன்ற வார்த்தைகளால் அறிவுரை சொல்வது தவறு. அவ்வாறு செய்வதால் தற்கொலை சிந்தனை கொண்டவர்கள் இரகசியம் காக்கலாம். அவர்களின் மௌனத்தை உடைக்கும் உளிதான் நம்பிக்கை என்கிற முதல் மருந்து. அந்த உளியாக சமூகத்தில் ஒவ்வொருவரும் ஒரு காலகட்டத்திலாவது இருப்பது அவசியமாகிறது.இதன் மூலமாக தற்கொலை குறைக்க முடியும். நாம் ஒவ்வொருவரும் சமூகத்தில் அக்கறைக் கொண்டு செயற்படுவோம். தற்கொலை சாவுகளை தடுப்போம்.



கவிஞர் நடராஜா தாமரைச் செல்வி...

# அழகு பெருக உதவும் பால்

**பா**ல் நாம் அன்றாட பயன்படுத்தும் பொருளாகும். இவற்றில் இருக்கும் ஊட்டச்சத்துக்கள் நம் உடலுக்கு அதிக ஆரோக்கியத்தை அளிக்கக்கூடியவை என்று அனைவருக்குமே தெரியும்.

தினமும் பால் குடித்து வந்தால் எலும்புகள் வலுவாகும் என்று அனைவருக்கும் தெரியும். ஆனால் பாலை தினமும் முகத்தில் தடவி வந்தால் முகமும் அதிக அழகு பெரும் என்று யாருக்காவது தெரியுமா??

அட ஆமாங்க பாலை தினமும் முகத்தில் தடவி சிலநேரம் மசாஜ் செய்தோம் என்றால் முகம் மிகவும் அழகாகவும், பொலிவுடனும், முகம் மிகவும் மென்மையாகவும் இருக்கும்.

அதுமட்டும் இன்றி முகத்தில் ஏற்படும் கரும்புள்ளிகள், தேமல்கள், அலர்ஜி, வறண்ட சருமம், முகத்தில் தோன்றும் பருக்கள் மற்றும் முக சுருக்கங்கள் ஆகிய பிரச்சினைகளை குணப்படுத்த பால் மிகவும் உதவுகிறது.

சரி வாங்க இன்றைய அழகு குறிப்புகள் தலைப்பில் பாலின் மூலம் அழகுக்கு அழகு சேர்ப்பது எப்படி என்று பார்ப்போம். சருமத்தை இளமையாக வைத்திருக்க அழகு குறிப்புகள் :

சருமத்தை என்றும் இளமையாக வைத்துக்கொள்ள தினமும் பாலை முகத்தில் தடவிவர வேண்டும்.

இதன் மூலம் முகத்தில் தோன்றும் இறந்த செல்களை வெளியேற்றி, புதிய செல்களை பிறக்க வைப்பதுடன் முகம் பளபளக்க செய்யும். முகத்தில் தோன்றும் சுருக்கங்களை அகற்றி முகத்தை என்றும் இளமையாக வைத்துக்கொள்கிறது. வாரத்தில் இரு முறையாவது உடல் முழுக்க பாலை தடவி அல்லது குளிக்கும் நீரில் பாலை கலந்து குளித்து வரலாம். இதன் மூலம் முகத்தில் தோன்றும் எண்ணெய் பசை மற்றும் இறந்த செல்கள் முற்றிலும் அகன்று, முகம் பொலிவுடன் காணப்படும்.



மேலும் உடல் ஆரோக்கியத்திற்கு மிகவும் நல்லது.

முகத்தில் தோன்றும் சுருக்கங்களை கட்டுப்படுத்த தினமும் முகத்தில் பால் தடவ வேண்டும். இது முக சுருக்கத்தை கட்டுப்படுத்த மிகவும் உதவுகிறது.

தினமும் பாலுடன் 1/2 துண்டு வாழைப்பழத்தை சேர்த்து பேஸ்டு போல் அரைத்து முகத்தில் தடவி 15 நிமிடம் கழித்து முகத்தை கழுவ முக சுருக்கங்கள் மறைந்து விடும்.

# சர்வதேச வலையமைப்பின் வருடாந்த நிகழ்வு



சர்வதேச வலையமைப்பின் வருடாந்த நிகழ்வு மிகவும் கோலாகலமாக தாமரைத் தாடக கலையரங்கத்தில் அண்மையில் நடைபெற்றது. சப்புகஸ்கந்தையிலுள்ள York சர்வதேச பாடசாலையின் ஏற்பாட்டில் இந்நிகழ்வு நடைபெற்றதுடன், இதில் சப்புகஸ்கந்தை, வத்தளை, கடவத்தை ஆகிய இடங்களிலுள்ள York சர்வதேச பாடசாலைகளின் மாணவர்கள் கலந்துகொண்டனர். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக KST குழும கம்பனிகளுக்கான தலைவர் கே.எஸ்.ரி.பெரேரா கலந்து கொண்டார். சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் பொது நிர்வாகப் பணிப்பாளர் பிரிகேடியர் ரொஹான் வெத்தசிங்ஹ, சண்டே ஒப்சேவர் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் பிரமோட் டி சில்வா, York பாடசாலை வலையமைப்பின் தலைவர் ரொஹான் பெரேரா மற்றும் திருமதி துஷாரி பெரேரா உட்பட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# அழகுக்கலை யுவதிகளுக்கு விருதுகள்



















(ஏறாவூர் நிருபர்)

அழகுக்கலை, தையல், மருதாணி மற்றும் கேக் தயாரிப்பு போன்ற கலைகளில் பயிற்சிகளைப் பூர்த்தி செய்துள்ள சுமார் என்பது யுவதிகளுக்கு விருதுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு கண்டி கம்பளையில் சிறப்பாக நடைபெற்றது.

மட்டக்களப்பு ஏறாவூர் முன்னா பியூட்டி எக்கடெமியில் இந்த யுவதிகள் பயிற்சி நெறியினைப் பூர்த்தி செய்தவர்களாவர்.

கம்பளை நகர சபையின் முன்னாள் முதல்வர் சமந்த அருண குமார இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டார். ஐக்கிய தேசியக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் முகமட் பிர்தௌஸ் நிகழ்வில் விசேட அதிதியாக கலந்து கொண்டார்.

அழகுக்கலை கலைஞரான ஆயிஷா முனவ்வர், சமூக செயற்பாட்டாளர்களான பைறுசா றாசிக், நஸீறா கபூர் மற்றும் சிரேஷ்ட ஊடகவியலாளர் அப்துல் நாஸர் ஆகியோர் இந்த நிகழ்வில் சிறப்பு அதிதிகளாகக் கலந்துகொண்டனர்.

கம்பளை அல் ஹிக்மா முன் பள்ளி சிறுவர்களது கலை நிகழ்ச்சிகள் இங்கு அரங்கேற்றப்பட்டன. கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம், புத்தளம், திருகோணமலை, அம்பாறை மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்கள் உள்ளிட்ட நாட்டின் அனைத்துப்பகுதிகளையும் சேர்ந்த யுவதிகள் நேரடியாகவும் சூம் தொழில் நுட்பம் வாயிலாகவும் பயிற்சிகளில் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது. கட்டார், குவைத், துபாய், இந்தியா மற்றும் மலேஷியா போன்ற நாடுகளில் தங்கிவாழ்பவர்களும் இந்த நிறுவனத்தில் பயிற்சிகளைப் பெற்றுள்ளனர்.

இந்த நிகழ்வின்போது அதிதிகள் நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். பயிற்சிகளைப் பூர்த்திசெய்துள்ள யுவதிகள் தமது ஆசிரியைக்கு நினைவுச்சின்னம் வழங்கினர்.

நாசர்

# வளமான கவிதைகளால் வலம் வந்த 93 ஆவது வகவ கவியரங்கம்





வலம்புரி கவிதா வட்டம் தனது 93 ஆவது கவியரங்கினை கடந்த பௌர்ணமியன்று நடாத்தியது. கவிஞர்களும் கவிதை ஆர்வலர்களும் குழுமியிருந்த கொழும்பு பழைய நகர மண்டபம் மிகவும் கலகலப்பாக காணப்பட்டது.

ஒவ்வொரு கவியரங்கிற்கும் தலைமை தாங்கும் வாய்ப்பினை வெவ்வேறு கவிஞருக்கு வழங்கி வரும் வகவம் தனது 93 ஆவது கவியரங்கினை தலைமையேற்று நடாத்தும் வாய்ப்பினை வெலிகம மதுராப்புர கவிஞர் கலைமகன் பைரூஸுக்கு வழங்கியது.

தமிழியல் பீ. ஏ. பட்டதாரியான அவர் தமிழில் தனக்கிருக்கும் ஆளுமையை சபை முன்னே நிரூபித்தார். கனதியான கவிதை வரிகளால் ஒவ்வொரு கவிஞரையும் விளித்தார்.

நிகழ்வுகள் வகவத் தலைவர் என். நஜ்முல் ஹுசைனின் நெறிப்படுத்தலில் இடம்பெற்றன. செயலாளர் இளநெஞ்சன் முர்ஷிதீன் வரவேற்புரையும், பொருளாளர் ஈழ கணேஷ் நன்றியுரையும் வழங்கினர்.

நம்மை விட்டும் மறைந்த எமது கவிஞர் தாட்சாயினி சர்மாவின் கணவர் சர்மா, பிரபல அறிவிப்பாளர் கலைநிலா உவைஸ் ஷெரீப் ஆகியோரும் நினைவு கூரப்பட்டனர்.

நூறாவது கவியரங்கினை நோக்கி நகரும் வகவம், அதனை ஒரு விழாவாக கொண்டாட இருப்பதாகவும் அன்றைய தினம் வெளியிடத் தயாராகும் வகவ கவிஞர்களின் கவிதைத் தொகுப்புக்காக கவிதைகளை அனுப்பி வைக்குமாறு வகவ கவிஞர்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

கலைமகன் பைரூஸ் தலைமையில் இடம்பெற்ற கவியரங்கில் கவிஞர்கள் நவரச சுவையுடனான கவிதைகளை கிண்ணியா சபீனா வைத்துள்ளாஹ், வெலிப்பன்னை அத்தாஸ், வாசுகி பி. வாசு, மஸீதா அன்சார், சிங்கள மாணவி சந்திரசேகர தனூஷிகா, கிண்ணியா அமீர் அலி, தமிழ்த் தென்றல் அலி அக்பர், ராஜா நித்திலன், தாட்சாயினி சர்மா, இ. கலைநிலா, சிந்தனைப்பிரியன் முஸம்மில், மினுவன்கொடை ஏ. சிவகுமார், கவிஞர் திலகம் எம். பிரேம்ராஜ், தி. ஸ்ரீதரன், ஆர். தங்கமணி, பர்ஹாத் சித்தீக், வதிரி சி. ரவீந்திரன், எம். எச். எம். நவ்சர் ஆகியோர் வழங்கினர்.

நூருல் அயின் நஜ்முல் ஹுசைன், சு. ஜெகதீஸ்வரன், ஏ. எம். அஸ்கர், ஏ. கே. இளங்கோ, மலாய் கவி டிவாங்ஸோ, ஜொயெல் ஜோன்சன், ரி. என். இஸ்ரா, எம். எம். நவாஸ்தீன், மா. தியாகராஜா, ஜனுல் முப்லியா, எம். எஸ். கே. நஜிமுதீன், கவிதா இளங்கோ, முப்ளியா முஸம்மில், உணர்ச்சிப் பூக்கள் ஆதில், எம். எம். நவாஸ்தீன் போன்றோர் சபையை அலங்கரித்தனர்.

(படங்கள் முஹம்மத் நசார்)

# சாதனைப் பெண்களை கௌரவிக்கும் வனிதாபிமான தேசிய நிகழ்வு





தேசிய ரீதியில் சாதனை பெண்களை கௌரவிக்கும் வனிதாபிமான தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் மட்டக்களப்பு மாவட்டத்திற்கான அங்குரார்ப்பண நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. மட்டக்களப்பு NDB வங்கி வளாகத்தில் இடம்பெற்ற நிகழ்வு மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமாகியதுடன், கடந்த வருடங்களில் இடம்பெற்ற வனிதாபிமான நிகழ்வுகளில் பங்கேற்று வெற்றியீட்டிய சாதனை பெண்மணிகளின் அனுபவ பகிர்வும் இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து சாதனைப் பெண்களின் புகைப்படங்கள் வாகனத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. அவை இலங்கை திருநாட்டின் வரைபடத்தில் ஒட்டப்பட்டதுடன், அவர்களினால் கையொப்பமிட்டதுடன், NDB வங்கியினால் பெண்களை கௌரவப்படுத்தும் வண்ணமாக அன்பளிப்பு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் NDB வங்கியின் மட்டக்களப்பு கிளை முகாமையாளர் உள்ளிட்ட குறித்த கிளையின் உத்தியோகத்தர்களும், கம்மெத்த செயலகத்தின் உத்தியோகத்தர்கள் மற்றும் சாதனைப் பெண்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# காத்தான்குடி ஸாலிஹ் அல் குர்ஆன் மதரஸாவின் "குர்ஆனின் முத்துக்கள்" பரிசளிப்பு கௌரவிப்பு நிகழ்வுகள்





காத்தான்குடி ஸாலிஹ் அல் குர்ஆன் மதரஸாவின் "குர்ஆனின் முத்துக்கள்" பரிசளிப்பு கௌரவிப்பு நிகழ்வுகள் அண்மையில் ஹிஸ்புல்லாஹ் மண்டபத்தில் மதரஸா அதிபர் மௌலவி எம்எஸ்எம் அஸார் தலைமையில் இடம்பெற்றபோது மூத்த உலமா அஷ்ஷெய்க் அப்துல் கபூர் மதனி மற்றும் சமூக மேம்பாட்டிற்கு உழைக்கும் மட்டக்களப்பு ஸலாமா பௌண்டேஷன் தலைவர் அப்துல் ஹமீட் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர். மதரஸா மாணவர்கள் குர்ஆன் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கும் சான்றிதழ் பரிசில்கள் வழங்கப்பட்டன. மௌலவி எஸ்எம்எம் முஸ்தபா பலாஹி மௌலவி எச்எம் சாஜஹான் ஆகியோரும் காணப்படுகின்றனர்.

(படங்கள் புதிய காத்தான்குடி விசேட நிருபர்)

# ஊக்குவிப்பு பேச்சாளராகவும் இளம் எழுத்தாளராகவும் பல்துறை திறமைகளை வெளிப்படுத்தும் அர்சிதா அமீர்

அர்சிதா அமீர், மட்டகளப்பு மாவட்டத்தில் காவத்தமுனை எனும் கிராமத்தில் அமீர் மற்றும் றம்சியா தம்பதியினரின் செல்வப் புதல்வி.

தனது 111 வரையான கல்வியினை மட்/ மம காவத்தமுனை அல் அமீன் வித்தியாலயத்தில் கற்றார். தனக்கான அடித்தளத்தை தனது பாடசாலையில் அரங்கேற்ற விரும்பினார். பேச்சு போட்டி, நாடகப்போட்டி போன்ற பல நிகழ்வுகளில் கலந்து கொண்டார்.அவற்றில் அவர் தொடர் தோல்வியினை கண்ட போதிலும் முயற்சியினைக் கைவிடவில்லை. அதன் விளைவே கோட்ட மட்டம், மாவட்ட மட்டம் மாகாண மட்டங்களில் தன் திறமையினை வெளிகாட்டினார். முதலாம் இரண்டாம் இடங்களை பெற்றுக் கொண்டார். அது மட்டுமன்றி மாணவர் சுகாதார குழு, மாணவர் சமூர்த்தி போன்றவற்றின் உப தலைவராக செயற்பட்டார். மாணவத் தலைவியாகவும் கூட அவர் செயற்பட்டார்.




பின் தனது உயர் தர கல்வியினை ஓட்டமாவடி பாத்திமா பாலிகா மாகா வித்தியாலயத்தில் கற்றார். மாணவத் தலைவியாகவும் அங்கு இல்லங்களுக்கு இடையிலான விளையாட்டு போட்டியில் விளையாட்டுக்களில் தலைவராகவும் பொறுப்பாளராகவும் செயற்பட்டார். அத்தோடு மாவட்ட மட்ட கிரிக்கட் போட்டியில் வெற்றி வாகை சூடினார்.தான் செல்லும் இடங்களில் எல்லாம் தன் பெயரினை பொறித்தார்.

சிறு வயதிலும் பாடசாலை காலங்களிலும் அவர் எழுத்தின் மீது கொண்ட ஆர்வத்தினை விட்டுவிடவில்லை. தொடர்ச்சியாக எழுத்துக்களை தன் வசப்படுத்தினார். அதன் மூலம் துணிந்தெழு, அகரம் போன்ற சஞ்சிகைகள் மற்றும் பிரதேச சபையினால் வெளியிடபட்ட நூல்கள் போன்றவற்றில் அவரின் ஆக்கங்கள் வெளியிடப்பட்டது. தாம் எழுதும் எழுத்துக்களுக்கு உயிரோட்டம் கொடுக்க விரும்பினார். அதனை தன் குரல் மூலம் வெளிப்படுத்தினார் . சமூகம் பற்றிய பல காணொளிகளை வெளியிட்டார்.அதற்கு சில எதிர்ப்புகள் சில வரவேற்புகள் கிடைத்தன. ஆனால் எதையும் பொருட்படுத்தவில்லை. அவரின் பாதையில் அவர் சென்றார். அத்தோடு ஊக்குவிப்பு பேச்சு காணொளிகளையும் சமூக வலையத்தளங்களில் வெளியிட்டார். தனக்கென ஒரு வாசகர் கூட்டத்தை சேர்த்தார்.

தொழி நுட்பம் விண்ணை தொடும் அளவிற்கு வளந்துவிட்டது. நம்மை வளர்ப்பதற்கு மட்டுல்ல அழிப்பதற்கும்.

சமூக வலைத்தளங்கள் என்பது சிலந்தி வலை போன்றது .தன் வலையில் சிக்க வைக்க அது செய்யும் சூழ்ச்சி சூட்சுமமானது. திரைக்கு முன்னாடி சமூக வலைத்தளத்தின் பார்வை வேறு .திரைக்கு பின் பார்வை வேறு. சமூக வலையத்தளங்கள் காட்டுவது விம்பங்கள்தான் உருவங்கள் அல்ல.

பயன் படுத்துவோரின் கைகளிலே அவர்களின் பாதுகாப்பு தங்கி இருக்கும். ஆண் பெண் இருபாலருக்கும் பொருந்தும். ஆனால் பெண் என்றால் சற்றுவித்தியாசமாகவே பார்க்கின்றது. சமூகமும் சரி. சமூகவலையத்தளங்களும் சரி.

**தனது இரண்டாவது நூலான 'வழி மாற்றும் மொழி'யை வாழ்வெங்கும் வழிகாட்டும் தந்தைக்கு சமர்ப்பணம் செய்தார்**

எதனால் இந்த பார்வை என்று அவர் தயங்கி நிற்கவில்லை. தன் எண்ணங்கள் சிறந்தது என்பதை உணர்ந்தார். தன் பயணத்தை தொடர்ந்தார்.

அதற்கு அவரின் பெற்றோரும் பல நல் உள்ளங்களும் ஆதரவாக செயற்பட்டனர்.

தன் தந்தை கற்றுக்கொடுத்தவை. அவரை கட்டியெழுப்பியது. தந்தையின் வார்த்தை தன் வாழ்வை வழி நடாத்தும் வழிகள் என்பதை அவர் மனதில் விதைத்தார்.

அவர் கிராமத்தில் பெண்கள் தன் அங்கீகாரத்தை தேடி கொள்வது எளிதல்ல. இளம் வயது திருமணம் பெண் அடிமைத்துவம் வறுமை போன்ற சவால்களை கடக்க வேண்டும். அது சுலபமல்ல.

கேலி கிண்டல்களுக்கு முகம் கொடுத்தாக வேண்டும். பெண்கள் அடுப்பங்கரையில் மட்டுமே தலைமை தாங்க பிறந்தவள் என்ற எண்ணங்களை மாற்றி அமைக்க முயன்றார்.

தன் குழந்தைகள் தன் சுமையல்ல. அவர்கள் தன் பெயர் சொல்லும் சுடர் என்பதை வெளிகாட்ட முயன்றார்.



அதற்கு தன் பயணத்தை தொடர்ந்தார்.

"தன்னிலை பற்றி அறியா சமூகம் விடியலை நோக்கி நகராது" என்ற தந்தையின் வார்த்தையே தன் கனவுகளை சுமக்க வைத்தது என்றார்.

தமது ஊரின் முதல் பெண் எழுத்தாளராக தன் நாமம் பதித்தார்.

தனது முதல் நூலான பத்து பக்கத்தில் மொத்த வாழ்க்கை எனும் நூலை தமது 19ஆவது வயதிலேயே வெளியிட்டார். அந்நூல் பலரது வரவேற்பை பெற்றது. பலருக்கு தன் வாழ்வை வாழ கற்றுக் கொடுத்தது.பத்து பக்கங்களை கொண்ட நூல் பல கதைகளை சொல்லிட முயன்றது. எதுவும் நிலை இல்லை யாவும் நிஜமில்லை என்ற யதார்த்தத்தை பறைசாற்றியது.

அத்தோடு அவர் நிறுத்தி விடவில்லை தமது இரண்டாவது நூலான 'வழிமாற்றும் மொழி' என்னும் நூலினை அக்டோபர் 12 திகதி ஸ்கை தமிழ் ஊடக அனுசரணையின் ஊடாக Zoom தொழிநுட்பம் வாயிலாக வெளியிட்டார்.




'வழி மாற்றும் மொழி' எனும் நூலானது இரு வேறு விதமான கதைகளை கொண்டமைந்தது. "நான் வியந்த சிறுவன்" என்ற கதையின் ஊடாக ஒரு வறுமை சிறுவன் தனது வாழ்வினை எவ்வாறு மகிழ்ச்சியாய் தன்னிடம் உள்ளவற்றைக் கொண்டு திருப்தியாக வாழ்கின்றான் என்பதை சுவாரசியமாக கூறுகின்றது.

அதேபோன்று "அடிமை அறைக்குள் நான்" என்ற கதை பெண்கள் எவ்வாறான சவால்களை முகம் கொடுக்கின்றனர் .அவர்களின் உரிமைகள் மறுக்கப்படுவதும் மறைக்கப்படுவதும் அதனை அவள் பெற்றுக் கொள்ள எவ்வாறு இன்னல்களுக்கு முகம் கொடுக்கின்றாள் என்பதையும் வெளிக்காட்டுவதாக அமைகின்றது.

இளம் வயதில் எழுத்துத்துறையில் திறமை காட்டி வரும் இவர்தன்னை உருவாக்கி தான் விரல்களுக்கும் குரலுக்கும் உரமூட்டும் தன் தந்தைக்கு இந்நூலை சமர்ப்பணம் செய்துள்ளார். இதுதான் உலகம் என்று தன்னிடம் அறிமுகம் செய்த தந்தையை இவ்வுலகிற்கு அறிமுகம் செய்தார்.



தான் செல்ல விரும்பும் இடத்திற்கு பல வழிகளை கண்டறிந்தார். ஒவ்வொரு வழிகளிலும் முகங்கொடுப்பவற்றை எதிர் கொண்டார். தன்னை அறிந்தவர் தன்னை அன்றி எவருமில்லை என்பதை புரிந்து கொண்டார்.

பெண் என்று கேலி செய்த போதிலும் யார் என்று கேள்வி எழுப்பிய போதிலும் அவர் பதில் அவரின் செயற்பாடாக வெளிப்படுத்தப்பட்டது.

இன்று ஒரு ஊக்குவிப்பு பேச்சாளராக இளம் எழுத்தாளராக குரல் கலைஞராக உள்ளடக்க எழுத்தாளராக நூல் ஆசிரியராக பல படிநிலைகளில் எம் முன் காட்சியளிக்கின்றார். அவர் மென்மேலும் சாதனைகள் படைத்து எமது சமூகத்திற்கும் நாட்டிற்கும் பெருமை சேர்க்க வாழ்த்துவோம்.

தொடர்புகளுக்கு :
றொம்ப பிஸி
எம்.எஸ்.பாஹிம்...
shumsfahim@gmail.com
Whatsap: 0714901181

# பேனா அலகும் புத்தகச் சிறகுகளும்

## வாசிப்பு : உலகத்தில் நுழைவதற்கான வாசல்




புதுநானூறு

வாசிப்பு என்பது வாழ்க்கையைக் கற்றுத் தருமொரு கலை. வாசிக்க வாசிக்க அறிவு மட்டுமன்றி திறனும், ஆற்றலும், மனப்பாங்கும் விருத்தியடையத் தொடங்குகிறது.

அதனால்த்தான் பாடசாலைகள் வாசிப்புக் கலாசாரத்தின் மீது அதீத கவனம் செலுத்த வேண்டியுள்ளது. வகுப்பறைச் சம்பிரதாய வாசிப்புக்கு வெளியே முதிர்வடைய வேண்டும். பாடசாலை நூலகங்கள் மீது அதிக அக்கறை கொள்ள வேண்டும். புத்தகப் பண்பாட்டுணர்வை மாணவரிடையே ஆற்றுப்படுத்தலும் அவசியமாகும். ஒவ்வொரு புத்தகமும் ஒவ்வொரு சூரியன் ஒவ்வொரு நாளும் ஒளி பெற வாசிப்பை ஒவ்வொரு நாளும் தொடராமல் தொடரவும் வேண்டும்.

இந்த விழிப்புணர்வுக்காக ஒக்டோபர் தேசிய வாசிப்பு மாதமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. சர்வதேச புத்தகக் கண்காட்சியொன்று பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடாத்தப்பட்டது. அதன் தொடர்ச்சியாக தேசத்தின் பல பகுதிகளிலும் புத்தகத்திருவிழாக்கள் அரங்கேறுகின்றன.

அவற்றுள் குறிப்பிடும்படியாக பேஜஸ்புக்ஸ் ஏற்பாடு செய்யதுள்ள அக்கரைப்பற்றுப் புத்தகப் பண்பாட்டு அரங்கு அமைகிறது.

புத்தக விற்பனை மட்டுமன்றி நூலறிமுகங்கள், கலை இலக்கிய உரையரங்குகள், கலை நிகழ்வுகளென ஆகர்ஷித்து நிற்பது ஆரோக்கியமானதுதான்.

பாடசாலைகளும் நூலக வார்த்தையும், அதனையொட்டிய விழிப்புணர்வுப் போட்டிகளையும், நூலகப் புத்தாக்கத்தையும் ஒழுக முயல்கின்றன. இதுவொரு ஆரோக்கியமான அணுகுமுறையாகும். கொழும்பு அல்ஹிக்மாவில் 'புத்தகச் சிறகுகள்' மூன்றாவது தடவையாக கடந்த வாரம் கொண்டாடப்பட்டது. புத்தகப் சிறகுகள் பேனாவின் அலைக் தூய்மைப்படுத்தும். எழுத்தும் வாசிப்புப் அறிவின் ஊற்றுக் கண். ஒவ்வொரு மாணவரும் ஒவ்வொரு பறவைதான். தேடல் தொடரட்டும்.

# 4 பேத்திகளின் பொம்மைகளுக்கு தைக்கப்படும் கபன் ஆடை

எரியும் காஸாவின் நிலை கண்டு கவிஞர் பலரும் கவிதையில் துடிக்கின்றனர். அங்கு குழந்தைகளே அதிகமதிகம் காவு கொள்ளப்படுகிறார்கள். பொம்மை விளையாடும் வயசில் கபன் ஆடையால் போர்த்தப்படுகிறார்கள். மேமன்கவியின் இந்தக்கவிதை பலஸ்தீனப் பேத்திகளை நினைவிருத்துகின்றன. நன்றியுடன் முகநூலிலிருந்து தருகிறோம்.

பேரப்பிள்ளைகளை பொம்மைக்
கடைக்கு
அழைத்துச் செல்லத் தயங்குகிறேன்.
உடைந்து குவிந்து கிடக்கும்
பொம்மைகளின் பெட்டி
காஸாவின் மயானமாய்
எனக்குத் தெரிய
அதை
என்ன செய்வது என
வீட்டார் கேட்டார்கள்?
அதை மண்ணில்
புதைத்து விடுங்கள்
என்றேன்
நாளை விளையும்
என்று
உடைந்து போன
பொம்மைக்காய் அழும்
பேத்தியின் மெல்லிய குரல்
காஸா தாயின்
அலறலாய் கேட்கிறது.
தொலைக்காட்சியில்
கார்ட்டூன் படம்
பார்க்கும் பேத்தி
அதன் Remote controlலை
மிதித்து உடைப்பதை
கனவில் கண்டேன்
அந்த மிதிப்பின் சப்தம்
காஸாவின் பீது காட்டு மிராண்டிகள்
கட்டவிழ்க்கும் அட்டூழியங்களுக்கு
எதிராக வீசப்படும் கல்லின்
ஏவப்படும் ஷெல்லின்
சப்தமாய் கேட்கிறது.
இப்பொழுதெலாம்
பேத்திகள்
பொம்மைகளுக்கு
ஆடை தைத்து
விளையாடுவதில்லை
அவற்றுக்குக் கபன் ஆடை
தைப்பதில்தான்
கவனமாக இருக்கிறார்கள்
இப்பொழுதெலாம்
பேத்திகளுக்கு
பொம்மைகள் வாங்கி
கொடுப்பதில்லை.
பொம்மை துப்பாக்கிகள்தான்!




மேமன்கவி

# டீன் கபூர்: கவிதையின் வேரினிடை எழுபவர்




ஈழத்தில் கவிதை சொல்லிகளாக வேர் கொண்டெழும் வனமொன்றைக் காணுகிறோம். இந்த வனத்தில் வேரினிடை பூப்பவராக கிழக்கின் கவி டீன் கபூர், நம்மைக் கண்டடைகிறார். இந்தக்கண்டடைதலுக்கு அவரது குரோட்டன் அழகி, திண்ணைக் கவிதைகள், சொற்களில் சுழலும் பிரபஞ்சம் ஆகிய முன்னைய பிரதிகள் ஆற்றுப்படுத்தின எனலாம். நான்காவது பிரதியாக 2023 மார்ச்சில் வெண்ணிலா கொண்டுவந்துள்ள இந்தப் பிரதி தமிழ், ஆங்கிலக் கவிதைகள் ஐம்பதின் திரட்டு.

சிறீ என் சிறீவத்ஸலா ஆங்கிலப்படுத்திய டீன்கபூரின் தமிழ்/ஆங்கிலக் கவிதைகளின் திரட்சியான பெறுமானம் பெறுகிறது வேரினிடை.

கவிதைகள் குறித்து ஜிஃப்ரி ஹாசன் விரிவாக எழுதுகிறார்.

டீன் கபூர் தனக்கானதொரு மொழிக் கையாளுதலை அழகியல் பிசகாது கவிதையின் வேரெங்கும் படரவிடுகிறார். "கவிஞன் கையாளும் மொழி அழகியலும், அவன் கிளர்ந்தும் உணர்ச்சியும்தான் அந்த ஏதோவொன்று என்று நான் நம்புகிறேன்" எனப் பேசுகிறார் ஜிஃப்ரி. கவிதையை வாசித்து முடிகிறபோது மனசுக்குள் மண்டிக்கிடக்கும் உணர்வு தானே கவிதையின் பெறுமானம். டீனுடைய பல கவிதைகளில் இத்தன்மையை வாசகர் அனுபவிக்கலாம். கவிஞன் முன்னெழுப்பும் அழகியல் அற்புதமானது. டீன் கபூர் நிலவை சுளகு, அரிக்கு மிளாய், உரல், அம்மி என்கிறார். நீதான் கவளம் என்கிற இந்தக்கவிதையை இப்படி முடிக்கிறார் மொழிபெயர்ப்பாளர்.

Dear moon
you only are my moonlight dinner
The aroma lingers
every morsel that my momma fed
நிலவே
நீதானே எனக்கு நிலாச்சோறு

சோறு மணக்கிறது. டீன் கடைசியாக ஒரு வரி வைக்கிறார். அதுதான் கவிதையின் சாரம்.

உம்மா நிலவாகி சிலபோது அதனையும் விஞ்சி நினைவுகளில் ஒரு கவளம் சோறாக இரைமீட்டப்படுகிறாள். அந்த இறுதி வரி இது.

'உம்மா ஊட்டிய
ஒரு கவளமும்'

இப்படி டீன்கபூர் கவிதைகளில் ஓர் உணர்வோட்டம் வேரினிடை பூக்கிறது.

கவிதைகளின் வழியே ஒரு கவிஞனின் மனசை, ஆத்மாவை, அவனது எண்ணாங்களின் சுத்தத்தைக் காணலாம். வாசகர்கள் வேரினிடை கவிதைகளை வாசிக்கும் போது இந்த எண்ணப்பாட்டைக் கண்டடையலாம். வாழ்த்துக்கள் டீன் கபூருக்கு

# கதீஜாவின் கேள்வி ; பொன்மீரா

கூட்டம் தொடங்கி ஒன்பதாவது நிமிடத்தில் ஆப்தீனர் உள்ளே நுழைகிறார்; அதன்பின் மூன்றாவது நிமிஷத்தில் ஆஷிக் உள்ளே வருகிறான்.

கூட்டத்தில் நரை தட்டிய பெரியவர் மூச்சு வாங்கிக் கொண்டிந்தார்.

அவரது பேச்சின் சாரத்தைப் பிழிந்தெடுப்பது கல்லில் நாருரிக்கும் செயல். மூவர் முயன்று கொண்டிருந்தனர்.

மற்றையவர்களில் இருவர் தமது தம்பட்டங்களை அடித்துக் கொண்டிருந்தனர். ஒருவர் மீதொருவர் ஓங்கியடி. முன் வரிசையில் பழையவரின் கொறட்டை தவில் வாசித்தது.

அவருக்கு பக்கத்தில் வழமை போல் கற்பனைக் கடலில் நீந்திக் கொண்டிருந்தாள் நீலசாரியுடுத்த நீலாம்பரி.

இரண்டாவது வரிசையிலிருந்து நான்காவது வரிசைக்கு போன் போட்டு அலப்பறை தொடங்கினான் தொந்தி பெருத்தவன்.அவளும் தொந்தி பெருத்திருந்த காலமிது. இன்னும் மூன்று வாரத்தில் பேற்றுக்கு போய்விடுவாள்.



இவனுக்குத் தொந்தி வற்றுமோ தெரியாது.

பெரிசின் பேச்சுக்கு முற்றுப்புள்ளி கிடையாதென்பது ஏற்கனவே தெரிந்தது. மூன்றாம் வரிசையில் சிவப்புசாரி பிளாஸ்கிலிருந்து தேநீரை ஊற்றுகிறாள்:பக்கத்தில் ஒட்டியிருந்தவன் இருந்தவன் நாவூறுகிறான்.

தேநீர் விடாய்.

பெரிசு ஏதோ சொல்லியிருக்க வேண்டும் கொள்ளென்றொரு

சிரிப்பு.

நேரம் நாற்பது கடந்தது.

பொறுத்திருந்து ஆப்தீனர். செருமிக்கொண்டு பேச்சு தொடங்கினார். ஒன்பது நிமிஷம் பிந்தினதுக்கு காரணம் எல்லோருக்கும் புரியத் தொடங்கியது.

ஆப்தீனர் போஷாக்கு வார வேலைத்திட்டத்தின் பொறுப்பாளர். கச்சிதமாக போஷாக்குணவு குறித்து ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி உணவுக் கலாசாரத்தைப் கட்டியெழுப்ப பெரும்பாடு பட்டார். பணிசும் பராட்டாவும் வரண்ட உணவு கலாசாரத்தின் அடையாளச் சின்னங்கள் . அழிக்க எடுத்த முயற்சிகள் தோற்றுப்போயின.

இன்று ஆரோக்கியம் பற்றிப் பேச ஆரிபா டொக்டர் வந்திருந்தார். அவர் தன் வரலாறு கூறியதில் நேரம் திக்கு முக்காடியது.

சத்துணவு வாங்க காசிலையென்ற கூற்றை முன்மொழிய முடியாமல் விழி பிதுங்கியவர்களையும் டொக்டர் கவனித்ததாகத் தெரியவில்லையென ஆப்தீனர் தெரிந்தார்.

இன்றைக்கு கடலை.

நேற்றுப் பயறு.

நாளைக்கு சிவப்பரிசிச் சோறு. வெள்ளிக்கிழமை மரவள்ளிக்கிழங்கு பட்டியல் சுவரில் தொங்கியது.

ஆரிபா டொக்டர் பெற்றோரோடும் கதைத்தார்.சத்துணவின் அவசியம்.

பிள்ளைத்தாச்சியொருத்தி நான்காவது பிள்ளையாம். ஒல்லியாயிருந்தது அவளது போஷாக்குப் பட்டியல்.

இவளது மூத்தது கதீஜா பெரும் சோகத்திலிருந்தாள். அங்கு சாப்பாட்டுக்கோ குடிநீருக்கோ மருந்துக்கோ எந்த வசதியுமற்றிருக்க இங்கென்ன போஷாக்கு வாரமென அவளது சின்ன மனசு துடித்தது.

குழந்தைகள் கபன் செய்யப்பட்ட பொம்மைகளாக பெற்றோர் தூக்கிச் சென்றதை எப்.பியில் பார்த்து விட்டுத் தூக்கம் வராமல் துடித்ததை ஆதிரா சொன்னாள். அவள் கொண்டுவந்த சத்துணவைப் பரிமாறினாள். கதீஜாவுக்கு உணவு இறங்குதில்லை.

அவள் கெட்டிக்காரப்பிள்ளை. ஹய்யா பற்றிய செய்தியொன்றை வாசித்திருந்தாள். ஹய்யா தன்னிடமிருந்த இனிப்பு, பொம்மை, விளையாட்டு பட்டம் எல்லாவற்றையும் மற்றோருக்கு உயிலெழுதி விட்டுத் தயாரானாலாம்.

ஆப்தீனர் ஒவ்வொரு பிள்ளைகளதும் முகம் நுழைந்து மீண்டார்.

வாசிப்பு மாதத்தை முடித்து விட்டு வந்த ஆஷிப்பை குறுக்கிட்டு கதீஜா கேட்ட கேள்விகளால் வெடுவெடுத்துப்போனான்.

அதைக்கூட்டத்தில் சொல்ல பதின் மூன்றாவது தடவையாக முயன்றும் தோற்றுப் போனான்.பெரியவர் பேச்சு முடிகிறது எனச் சொன்ன பதினெட்டாவது நிமிடத்தில் தான் அவருக்கு ஞாபகத்தில் வந்தது சேதி.

# மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்—30



சத்தியராஜையோ அவரது குடும்பத்தையோ முன் அறிமுகமில்லாமல் அவர்களின் குடும்ப திருமணவிழாவிற்கு கோயம்புத்தூருக்கு எம்.ஜி.ஆர் தன் மனைவியுடன் சென்று இரண்டு நாட்கள் அங்கேயே தங்கி வேறு எந்த வித நிகழ்ச்சியையும் வைத்துக்கொள்ளாமல் அந்த திருமணத்திற்கு சென்று வந்தது. அதுவும் தமிழ் நாட்டு முதல் அமைச்சர் என்றெல்லாம் ஆச்சரியமாக சினிமாத்துறை அரசியல்துறையினர் பரவலாக பேசினார்கள்.

திருமணம் முடிந்த பிறகு ஒரு நாள் நடிகர் சத்தியராஜ் தனது மனைவியுடன் ராமாபுரம் தோட்டத்திற்கு முதலமைச்சர் எம்.ஜி.ஆரை சந்திக்க நேரத்தை தெரிந்து கொண்டு காலை 8.30 மணிக்கு சென்றார். தோட்டத்திற்கு சென்றதும் சத்தியராஜும் அவரது மனைவியும் வந்திருக்கும் தகவல் எம்.ஜி.ஆருக்கு தெரிவிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து எம்.ஜி.ஆரும் ஜானகி அம்மையாரும் கீழே இறங்கி வந்து பார்த்து குடும்ப நலனை விசாரித்தார்கள். சத்தியராஜ் எனது தங்கைகளின் திருமணத்திற்கு நேரில் வந்து வாழ்த்தி சென்ற உங்களுக்கு எனது குடும்பத்தினர் சார்பில் நானும் எனது மனைவியும் நன்றி சொல்ல வந்திருக்கிறோம் என எம்.ஜி.ஆரையும் ஜானகி அம்மையாரையும் நோக்கி கூறினார். எம்.ஜி.ஆர் சத்தியராஜை நோக்கி வீட்டிற்கு வந்தது சந்தோஷம் வாழ்த்துகிறேன். தம்பி உனக்கு வேறு ஏதாவது உதவி தேவை என்றால் கேள். எதுவாக இருந்தாலும் செய்கிறேன். என்றார். சத்தியராஜ் அன்புடன் சிரித்துக் கொண்டு எம்.ஜி.ஆரை நோக்கி அண்ணே! நான் இப்போது நிறைந்த வசதியுடன் இருக்கிறேன். எனக்கு உங்களுடைய உடற்பயிற்சிப் பெருட்களில் இருந்து ஏதாவது ஒன்றைத் தாருங்கள். அதை எடுத்து நான் உங்களுடைய ஞாபகமாக தினமும் உடற்பயிற்சி செய்கிறேன் என்றார். உடனே எம்.ஜி.ஆர். சற்று யோசித்து விட்டு அருகில் நின்று கொண்டிருந்த மாணிக்கத்திடம் மேலேயுள்ள என்னுடைய கர்லா கட்டையில் ஒன்றை எடுத்துக் கொண்டு வா என்று சொன்னார்.. உடனே கர்லா கட்டையை தன்னுடைய கைபட கொடுத்தார். அத்துடன் தினமும் காலையில் உடற்பயிற்சி செய்ய வேண்டும். உடற்பயிற்சி செய்தால்தான் உடல் ஆரோக்கியம் இருக்கும் உடல் ஆரோக்கியமாக இருந்தால்தான் உழைக்க முடியும். உழைப்பால் உயர்வதே முக்கியம் என்று அறிவுரை சொல்லி வாழ்த்தி அனுப்பினார். இதை மறக்காமல் சத்தியராஜ் தினமும் காலையில் உடற்பயிற்சி செய்து வருகிறார். மேலும் சத்தியராஜ் தனது வீட்டில் எம்.ஜி.ஆருடைய புகைப்படத்தை வைத்து வணங்கி வருகிறார். எம்.ஜி.ஆருடைய அரசியல் வாழ்க்கையை அலசுவோம். எம்.ஜி.ஆர் அரசியல் வாழ்க்கையில் 1947 முதல் 1953 வரை காங்கிரஸ் கட்சியில் காமராஜரை குருவாக ஏற்று கதர் வேட்டி, கதர் ஜிப்பா அணிந்து கட்சிக்காக உழைத்ததார்.

கலைஞர் கருணாநிதியின் தூண்டுதலில் அறிஞர் அண்ணாவின் திராவிட முன்னேற்ற கழகத்தில் (தி.மு.க) 1954 இல் இணைந்து அறிஞர் அண்ணாவின் அன்பைப் பெற்றார். அறிஞர் அண்ணாவின் தி.மு.க அரசியல் மேடைகளிலும் மாநாடு மேடைகளிலும் முக்கிய பேச்சாளரானார். 1967 இல் பரங்கிமலை காங்கிரஸ் கோட்டையை பிடித்த எம்.ஜி.ஆர் அதிலிருந்து அரசியல் கொடியை தமிழ் நாடு எங்கும் ஏற்றி வந்தார். அரசியலில் புரட்சி தலைவர் என்றும் மக்களால் அழைக்கப்பட்டார். 1969இல் அறிஞர் அண்ணா மறைவுக்கு பின்னர் திராவிட முன்னேற்ற கழகத்தில் (தி.மு.க) அரசியல் வாதிகளிடையே கருத்து மோதல் ஏற்பட்டது. இதன் விளைவாகவே 10.10.1972இல் எம்.ஜி.ஆர் திராவிட முன்னேற்ற கழகத்திலிருந்து (தி.மு.க) நீக்கப்பட்டார். தி.மு.கவிலிருந்து எம்.ஜி.ஆர் நீக்கப்பட்ட செய்தியை தினத்தந்தியும் மாலைமுரசும் வெளியிடவில்லை. இந்து, இந்தியன் எக்ஸ்பிரஸ், தினமணி ஆகியவை எம்.ஜி.ஆர் தி.மு.க விலிருந்து நீக்கப்பட்ட செய்தியை பெரிது படுத்தாமல் நான்கு வரியில் வெளியிட்டன. "அலை ஓசை" எனும் தினசரி பத்திரிகை மாத்திரமே முதல் பக்கத்தில் தலைப்பு செய்தியாக வெளியிட்டது. மேலும் அலைஓசை எம்.ஜி.ஆரை தி.மு.க விலிருந்து நீக்கியது நியாயம் இல்லை என்றும் குறிப்பிட்டிருந்தது. அலை ஓசை செய்தித்தாள் தமிழகம் முழுவதும் பரபரப்பை ஏற்படுத்தியது. அன்று முதல் அலை ஓசையின் விற்பனையும் கூடிக்கொண்டேயிருந்தது. அப்போது அலை ஓசையின் விலை 12 சதம். அலை ஓசை செய்தியை படித்த மக்கள் பரபரப்படைந்தனர். தமிழகம் எங்கும் எம்.ஜி.ஆரை பார்க்க மக்கள் லொறிகளில் வந்து சத்யா ஸ்டுடியோவில் நாள்தோறும் குவியத் தொடங்கினர். தமிழகம் முழுவதும் ஒரு பிரளயமே ஏற்பட்டுவிட்டது. இந்த சந்தர்ப்பத்தில் எம்.ஜி.ஆரும் அலை ஓசை தினசரி பத்திரிகையாளர் வேலூர் நாராயணனும் சந்திக்க வாய்ப்பு கிடைத்தது. எம்.ஜி.ஆர் அலை ஓசை பத்திரிகையாளர் வேலூர் நாராயணன் அவர்களை கட்டிப்பிடித்துக்கொண்டு அழ ஆரம்பித்துவிட்டார். அழுகையை எம்.ஜி.ஆரால் நிறுத்த முடியவில்லை. வேலூர் நாராயணன் எவ்வளவு ஆறுதல் சொல்லியும் தேம்பி தேம்பி அழுது கொண்டேயிருந்தார். ஆலை ஓசை பத்திரிகையாளர் வேலூர் நாராயணன் எம்.ஜி.ஆரை நோக்கி 'தைரியமாக இருங்கள், தமிழ்நாடே உங்கள் பின்னால் நிற்கிறது' என்று ஆறுதல் கூறினார். இதன் பிறகுதான் எம்.ஜி.ஆர் அண்ணாவின் பெயரில் தனிக்கட்சி அ.தி.மு.கவை ஆரம்பித்தார். எம்.ஜி.ஆர் கட்சியின் கொடியில் அண்ணாவின் உருவம் பதித்த கொடியை அமைத்தார். அ.தி.மு.க கட்சியை ஒரு நிலைக்கு கொண்டு வர எம்.ஜி.ஆர் எடுத்துக்கொண்ட சிரமங்களுக்கு அளவே இல்லை. அ.தி.மு.க.கட்சி ஆரம்பிக்கப்பட்டது 1972இல்தான். மூன்று மாதங்கள் கழிந்தபின் 1973இல் திண்டுக்கலில் பாராளுமன்ற இடைத்தேர்தல் நடைபெறும் திகதி அறிவிக்கப்பட்டது. எம்.ஜி.ஆரின் அ.தி.மு.க வேட்பாளரா? கருணாநிதியின் தி.மு.க வேட்பாளரா? வேற்றி பெற்றார் என்பதை அடுத்தவாரம் பார்ப்போம்...

(தொடரும்)



கலாபூஷணம்
பரீட் இக்பால்...
யாழ்ப்பாணம்

# அவள் பிறப்பாள், இறப்பாள், இறப்பாள், பிறப்பாள்... அவள் அப்படித்தான்!

தமிழ் சினிமாவில் வணிக ரீதியாக வெற்றி பெறவில்லை என்றாலும் இப்போது வரை பேசப்பட்டுக் கொண்டிருக்கும் படம், 'அவள் அப்படித்தான்'! ருத்ரய்யா இயக்கிய இந்தப் படம் இன்று வரை பேசப்படுவதற்குக் காரணம், பெண்ணின் பார்வையில் சொல்லப்பட்ட நேர்மையான கதையும் ஆழமான உரையாடல்களும். திரைக்கதை, உரையாடலை, எழுத்தாளர் வண்ணநிலவன், சோமசுந்தரேஸ்வர் (இயக்குநர் கே.ராஜேஷ்வர்), ருத்ரய்யா எழுதியிருந்தனர். ஒளிப்பதிவை நல்லுசாமி, ஞானசேகரன் செய்திருந்தனர். திரைப்படக் கல்லூரியில் ஒளிப்பதிவு முடித்து வெளிவந்த இருவரும் யாரிடமும் பணிபுரியாமல், நேரடியாகக் களமிறங்கிய படம் இது.

ஆவணப்பட இயக்குநர் அருண் (கமல்ஹாசன்), விளம்பர நிறுவனம் நடத்தும் அவர் நண்பன் தியாகு (ரஜினிகாந்த்), தனது வாழ்வில் நடந்த தொடர் தோல்விகளால் ஆண்கள் மீது நம்பிக்கையற்று இருக்கும் மஞ்சு (ஸ்ரீபிரியா), இவர்களைச் சுற்றி நடக்கும் கதைதான் படம். மஞ்சுவை மையாகக் கொண்டு இயல்பாக அமைந்திருந்த இந்தப் படத்தின் திரைக்கதையும், பெண்ணிய பார்வையும் பிரியாவின் நடிப்பும் படத்துக்குப் பலமான அமைந்தன. ஸ்ரீப்ரியா, கமல், ரஜினி மூன்றுபேரும் அந்தக் கதாபாத்திரத்துக்கான நியாயத்தைச் செய்திருப்பார்கள். கிளைமாக்ஸில் சரிதா, கமலுக்கு மனைவியாக வருவார். இந்தப் படத்தில் ரஜினியின் சிறப்பான நடிப்பைப் பார்க்கும் போதும், அவர் கையில் துப்பாக்கியையும் கத்தியையும் கொடுத்து தமிழ் சினிமா வீணடித்துவிட்டது என்று தான் தோன்றுகிறது.

படத்தின் அறிமுகக் காட்சியில் இருந்து இறுதிவரை ஸ்ரீப்ரியாவின் கதாபாத்திர வடிவமைப்பும் எழுத்தும் அபாரம். அவருக்குச் சிறந்த நடிகைக்கானத் தேசிய விருது கிடைத்திருக்க வேண்டும் என்று அப்போது கூறப்பட்டது. ஆனால், தமிழ்நாடு அரசின் சிறந்த படத்துக்கான இரண்டாவது பரிசும் சிறந்த ஒளிப்பதிவுக்கான விருது நல்லுசாமி, ஞானசேகரனுக்கும், சிறந்த நடிகைக்கான சிறப்பு விருது ஸ்ரீப்ரியாவுக்கும் கிடைத்தது.



படம் வெளியாகி இத்தனை வருடங்களானாலும் இதுபோன்ற கதாபாத்திரங்கள் இப்போதும் சமூகத்தில் உலவிகொண்டு தான் இருக்கின்றன. அதுதான் இந்தப் படத்தின் வெற்றியும் கூட. இதன் கிளைமாக்ஸ் ஹைலைட்டான விஷயம். யாரும் யூகிக்க முடியாத ஒரு நவீனச் சிறுகதையின் முடிவை போல அமைத்திருப்பார்கள்.

இருபதே நாளில் எடுக்கப்பட்ட இந்தப் படத்தின் பாடல்களுக்கு இளையராஜா இசை அமைத்திருந்தார். கே.ஜே. ஜேசுதாஸ் பாடிய 'உறவுகள் தொடர்கதை', எஸ். ஜானகி பாடிய 'வாழ்க்கை ஓடம் செல்ல', கமல் குரலில் 'பன்னீர் புஷ்பங்களே' பாடல்கள் வரவேற்பைப் பெற்றன.

"எரிந்து போன வீடு, முறிந்துபோன உறவுகள், கலைந்துபோன கனவுகள், சுமக்க முடியாத சோகங்கள், மீண்டும் ஒரு முறை மஞ்சு இறந்துபோனாள். இந்தச் சாவை சகித்துக்கொள்ள மஞ்சுவால்தான் முடியும். அவள் பிறப்பாள், இறப்பாள், இறப்பாள், பிறப்பாள், அவள் அப்படித்தான்" என்று கமல் குரலில் வரும் வசனத்தோடு படம் முடியும்போது, ஒரு பெரும் சோகம் மனதைக் கவ்வி நிற்கும். அப்போதே, பெண்ணுரிமை, முற்போக்குச் சிந்தனையோடு பல விஷயங்களைப் பேசிய இந்தப் படத்தை ரசிகர்கள் கண்டு கொள்ளாமல் விட்டது துரதிர்ஷ்டம்தான்! பிறகு பல பகுதிகளில் இந்தப் படம் ரீ ரிலீஸ் செய்யப்பட்டது. 1978ம் ஆண்டு இதே தேதியில்தான் வெளியானது 'அவள் அப்படித்தான்' அவள் பிறப்பாள், இறப்பாள், இறப்பாள், பிறப்பாள்...அவள் அப்படித்தான்!.

அதிக ஆங்கில வசனம் ஏன்?: இந்தப் படம் பற்றி வண்ணநிலவனிடம் கேட்டோம். "இந்தப் படத்துக்குள்ள ரஜினி, கமல்ஹாசன், ஸ்ரீப்ரியா வந்ததுக்குக் காரணம் அனந்து சார்தான். கே.பாலசந்தரோட இருந்த அவர், ருத்ரய்யாவுக்கு நல்ல நண்பர். இந்தக் கதையை கேட்டுட்டு அவரே ரஜினி, கமலுக்கு ஃபோன் பண்ணி நடிக்க வச்சார். இதுக்காக அவங்களுக்கு அதிக சம்பளமும் கொடுக்கலை. அந்த காலகட்டத்துல மூனு பேருமே பிஸி. ரஜினி கால்ஷீட்டே இல்லை. மற்ற படங்கள்ல நடிச்சு முடிச்சுட்டு, ராத்திரி ஒரு மணி, ரெண்டு மணிக்கெல்லாம் வந்து நடிச்சுட்டுப் போவார். இந்தப் படத்துல வேலை பார்த்த எல்லோருமே பணத்துக்காக பண்ணலை. நட்புக்காகத்தான்.

படத்துல, ஏன் அதிகமான ஆங்கில வசனம்னு கேட்கிறீங்க. ஏன்னா, இந்தக் கதையில வர்ற முக்கிய கேரக்டர்கள், 'எலைட்'டானவங்க. அதனால அப்படி வசனம் இருந்தது. அது திணிக்கப்படலை. இயல்பா வந்ததுதான். நான் பிளாஷ்பேக் காட்சிக்கு வசனம் எழுதினேன், சோமசுந்தரேஸ்வர் ஒன்லைன் எழுதினார். படத்துக்கு பின்னணி இசை அமைச்சது, எல்.வைத்தியநாதன். வெறும் 4 நாளே நாள்ல முடிச்சுக் கொடுத்தார். இதுல வரும் 'பன்னீர் புஷ்பங்களே' பாடலை நான்தான் எழுதறா இருந்தது. எனக்கு டியூனுக்கு சரியா எழுத வரலை. அப்புறம் அந்தப் பாடலை கங்கை அமரன் எழுதினார்.

படம் ரிலீஸ் ஆன பிறகு, பிரபல டைரக்டர் மிருணாள் சென் சென்னைக்கு வந்திருந்தார். அவர் சென்னை புளூடைமண்ட் தியேட்டர்ல படத்தைப் பார்த்துட்டு, சிலாகிச்சுப் பேட்டி கொடுத்தார். அந்தப் பேட்டி, படத்துக்கு இன்னும் கவனத்தைக் கொடுத்தது. அந்த காலகட்டத்துல, ஆக்ஷன் படங்கள் அதிகமாக வந்ததால இந்தப் படத்தை ரசிகர்கள் சரியாகக் கண்டுக்கலைன்னு நினைக்கிறேன். இப்பவரைக்கும் 'அவள் அப்படித்தான்' பேசப்படறதுக்கு எக்காலத்துக்கும் பொருந்துற அதோட கதைதான் காரணம்".



எஸ்.கனேசன் ஆச்சாரி சதீஷ்...
கம்பளை

# அ.இ முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளன பொன்விழாவில் கௌரவிப்பு



கடந்த அக்டோபர் 29ம் திகதி கொழும்பு 7 இல் உள்ள விளையாட்டு அமைச்சின் ‘டங்கன்வைட்’ மண்டபத்தில் நடைபெற்ற, அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளன ஐம்பதாவது வருட பொன் விழா மாநாட்டில் அதன் முன்னாள் தேசிய தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் உடுதெனிய ரஷீத் எம். இம்தியாஸ், அவரது சிறந்த சமூகப் பணிகளுக்காகவும், சம்மேளனத்துக்கான பங்களிப்புகளுக்காகவும் கௌரவிக்கப்பட்டுள்ளார். எதிர்க்கட்சித் தலைவர் சார்பில் இப்பொன்விழாவில் கலந்து கொண்ட, பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமசிங்க ரஷீத்எம். இம்தியாஸுக்கு விசேட கேடயம் வழங்குவதையும், சம்மேளனத்தின் தேசிய தலைவர் லுக்மான் சஹாப்தீன், ஜனாதிபதி சட்டத்தரணி எம். எம். சுஹைர், புதிய தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ள எம்.என்.எம். ஷாம் நவாஸ் ஆகியோர் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# நுவரெலியாவில் சிறுவர் விழிப்புணர்வு நிகழ்வு

















பாவரசா நர்த்தனாலயத்தின் நடன ஆசிரியை கலாவிபூஷண ரேணுசஹானா செட்டியார், நுவரெலியா சமர்ஹில் சமூகமட்ட அமைப்புடன் இணைந்து நுவரெலியா ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் சிறுவர் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வொன்றை நடாத்தினார். தினகரன், தினகரன் வாரமஞ்சரி, சங்கவி பிலிம்ஸ் நிறுவனம் நுவரெலியா ரொட்டரி கழகம் ஆகியவற்றின் அனுசரணையுடன் இந்நிகழ்வு நடைபெற்றது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 நவம்பர் மாதம் 5ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.